# எழில் கொஞ்சும் எறும்பியூர்

31213



கழக வெளியீடு

**டாக்டர் இரா. கலைக்கோவன்**

எம்.பி.பி.எஸ்., டி.ஓ.

# எழில் கொஞ்சும் எறும்பியூர்

ஆசிரியர்

டாக்டர். இரா. கலைக்கோவன், எம். பி. பி. எசு., டி. ஓ.

திருநெல்வேலி தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

154, டி. டி. கே. சாலை, சென்னை-18.

© டாக்டர் இராசமாணிக்கனார் கலைக்கோவன் (1948)

1987 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS, PUBLISHING SOCIETY, TINNEVELLY LIMITED,

கிளைகள் :

சென்னை-108 திருநெல்வேலி-6 மதுரை-1
கோயமுத்தூர்-1 கும்பகோணம்-1
திருச்சிராப்பள்ளி-2 சேலம்-1

கழக வெளியீடு : கஅுகூ

முதற்பதிப்பு : திசம்பர் 1987

NA: 441
N87

EZHIL KONJUM ERUMBIYUR

அப்பர் அச்சகம், சென்னை-600108

# பதிப்புரை

எழில் கொஞ்சும் எறும்பியூர் - என்னும் இந்நாலில் 'எழில் கொஞ்சும் எறும்பியூர்' என்னும் கட்டுரை முதல் 'கல்வெட்டுகளில் இசைக்கருவிகள்' என்னும் கட்டுரை வரை பல்வகையான கட்டுரைகள் உள்ளன. இவையனைத்தும் முதலாம் இராசராசன் காலத்திலும் அக்காலத்துக்கு முன்னும் பின்னும் தமிழகத்தில் எழுப்பப்பட்ட திருக்கோயில்களின் அமைப்பு முறைகளையும் மக்களிடத்தில் நிலவிய சமூகப்பழக்கவழக்கங்களையும் விளக்குகின்றன.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பெற்ற கல்வெட்டுகளையும் அவற்றில் காணப்படும் செய்திகளையும் விளக்குவதும் இந்நூல் மேற்கொண்ட கோட்பாடாகும். 'சவந்தாங்கு தோளான்' என்னும் தேவார அடியின் உண்மைக் கருத்தையும் இந்நூல் விளக்குகிறது. திருமுறைகளை ஓதிய வழக்கமும் அதனால் மக்களிடத்தில் தோன்றிய சிறப்பு உணர்ச்சிகளும் இந்நூலில் காணப்படுகின்றன. பரதரின் நாட்டிய நூல் நூற்றெட்டுக் கரணங்களை வரிசைப்படுத்துகிறது. இவற்றுள் முப்பத் தொன்பதாவது கரணமாகக் காட்டப்படுவதுதான் சதுரம்.

லலித கரணத்தில் ஒரு பாதம் முழுவதுமாய்த் தரையில் ஊன்றியிருக்கும். மறுபாதத்தின் முன்பகுதி தரையில் ஊன்றியிருக்கும். குதிங்கால் உயர்ந்திருக்கும். இது எந்தப் பாதமாகவும் இருக்கலாம். இவ்வாறு இந்நூல் நாட்டியம் பற்றிய பல்வேறு இன்றியமையாச் செய்திகளை நன்கு ஆய்ந்து விளக்குகின்றது.

இத்தகைய அருமையான செய்திகள் அடங்கிய நூலை உருவாக்கியளித்த டாக்டர் கலைக்கோவன் அவர்கட்குக் கழகத்தின் நன்றியுரியதாகும். அவர் இதற்கு முன்னரே கழக வழியாகக் 'கலை வளர்த்த திருக்கோயில்கள்' என்னும் நூலை

யும், 'காட்டுக்குள் ஒரு கலைக்கோயில்' என்னும் நூலையும் எழுதி வெளியிட்டமை தமிழுலகம் நன்கு அறியும். இவ்வாசிரியரின் தமிழ்த் தொண்டு மேலும் வளர வாழ்த்துகிறோம். தாம் மேற்கொண்டுள்ள கண் மருத்துவப் பணிகட்கிடையில் தம் தந்தையாரான பல்கலைச் செல்வர் டாக்டர். மா. இராசமாணிக்கனாரைப் போன்று வரலாறு, கல்வெட்டு, சிற்பம், நாட்டியம் போன்ற பல துறைகளில் ஈடுபட்டு ஓய்வு நேரம் முழுவதையும் இத்தகைய வரலாற்று ஆய்வுப் பணிக்கே ஒதுக்கிப் பெரும் பணி ஆற்றிவரும் நூலாசிரியரை மனமுவந்து பாராட்டுகிறோம்.

இத்தகைய அரிய கலை, வரலாற்று ஆய்வு நூல்களைத் தமிழ் மக்கள் நன்கு படித்துப் பயன் பெற வேண்டுமென்று விரும்புகிறோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்

# முன்னுரை

அந்த நாள் இன்றும் என் நினைவில் பசுமையாக நிற்கிறது. எம், ஏ. வரலாற்று ஆய்வேட்டிற்கு எந்தப் பொருளைத் தேர்ந்து கொள்வது என்ற கேள்வியுடன், சீதாலட்சுமி ராமசாமி மகளிர் கல்லூரி வரலாற்றுத் துறை மாணவியர் மூவர் என் மருத்துவ மனைக்கு வந்தனர். திருச்சிக்கு அருகிலுள்ள கோயில்களைத் தலைப்பாகக் கொண்டு ஆய்வு செய்ய விழைந்தனர். 'கோயில்களைப் பற்றி ஏதாவது தெரியுமா?' என்ற என் கேள்விக்கு 'இனிமேல் தெரிந்துகொள்வோம்' என்ற அழகான பதில் வந்தது. 'தெரியாது' என்று எதிர்மறையாகச் சொல்லாமல், 'தெரிந்து கொள்வோம்' என்று அவர்கள் சொன்ன விதம் எனக்கு மிகவும் பிடித்துப்போயிற்று. செல்வி. வளர்மதி வயலூர்க் கோயிலையும், செல்வி. சரசுவதி அப்போது நாங்கள் வெளிப்படுத்தியிருந்த அழுந்தியூர்க் கோயிலையும், செல்வி. நளினி எறும்பியூர்க் கோயிலையும் தலைப்புகளாய்க் கொண்டனர்.

இம் மூன்று கோயில்களில் வயலூர் ஏற்கனவே நான் ஆய்வு செய்த கோயில். அழுந்தியூர் வரலாற்றுலகிற்குக் கன்னிக் கோயில். அதனால் வளர்மதி. சரசுவதி இருவரின் பணியும் எளிதாயிற்று. திரு எறும்பியூரோ எனக்குப் புதிது. நளினி முன்பின் அக் கோயிலைப் பார்த்தது கூட இல்லை. இந் நிலையில்தான் எறும்பியூர் ஆய்வு தொடங்கியது. தொடக்கம் முதலே அக் கோயில் பல சுவையான சிக்கல்களையும், சுந்தரமான அநுபவங்களையும் எங்கட்குத் தந்தது. கல்வெட்டுகளைச் சரி பார்க்கச் சென்ற ஒரு சமயம், மையக் கல்வெட்டுத் துறையால் படியெடுக்கப்படாத நான்கு புதிய கல்வெட்டுகளை நளினி கண்டுபிடித்தார். முதல் ஆய்விலேயே, அதுவும் பல பேரறிஞர்கள், பெருமக்கள் ஏற்கனவே கண்டு ஆய்வு செய்த ஒரு கோயிலில், புதிய கல்வெட்டுகளைக் கண்டு பிடித்தல் என்பது ஒரு சுவையான அநுபவம்! இந்த அநுப

வத்தில் கிடைக்கும் மகிழ்வும், பெருமிதமும் நிறைவும் **அநுபவித்தவர்களுக்குத்தான்** விளங்கும்.

மூன்று திங்கள் கடுமையான உழைப்பும், பல்முறை நடந்த கள ஆய்வுகளும் எழில் கொஞ்சும் எறும்பியூர், திரு எறும்பியூர் கல்வெட்டுகள் என்னும் இரு கட்டுரைகள் உருவாகக் காரணமாக அமைந்தன. இவ் விரண்டனுள் இந் நூலில் 'எழில் கொஞ்சும் எறும்பியூர்' முதல் கட்டுரையாக இடம் பெற்றுள்ளது.

தாட்சாயணி ஒரு புதுமையான வார்ப்பு வடிவம். முதன் முறைபார்த்த போது, இந்தத் திருமேனிபற்றியகட்டுரையை மிக எளிதாக அமைத்து விடலாம் என்றுதான் கருதினேன். ஆனால் இறைவன் உயிரற்ற இறைவியின் உடலைத் தன் தோளில் தாங்கியிருக்கும் நிலைக்கான ஆதாரங்களைத் தேட அரும்பாடுபட வேண்டியிருந்தது. கிடைத்த புராணங்கள் அனைத்தையும் வாங்கிப் படித்தும், அறிஞர் பெருமக்கள் பலருடன் கலந்துரையாடியும் பயனில்லை. ஏறத்தாழ நான்கு திங்கள் காலம் என் உள்ளத்திலேயே ஊறிக் கிடந்த இந்தக் கட்டுரை முதன் முதல் இந்தியன் 'எக்ஸ்பிரஸ் இதழிலும்' பிறகு தினமணிக் கதிரிலும்வெளியாயிற்று. கதிரில் வெளியான போது கடிதங்கள் இரண்டு வந்தன. அந்தக் கடிதங்களையும் இங்கு இணைத்து அவற்றிற்கு உரிய மறுமொழிகளையும் கூறியுள்ளேன்.

பெருமை மிகு தருமபுர ஆதீனத்தார் நடத்தி வரும் ஞானசம்பந்தம் இதழில் சைவ சித்தாந்தப் பாடங்கள் தொடர்ந்து வருகின்றன. இந்த வரிசையில் 'சமுதாயத்தில் திருமுறைத் தாக்கம்' என்னும் தலைப்பில் நானும் ஒரு கட்டுரை எழுத வேண்டுமென்று, திருமடத்தைச் சார்ந்த அனைத்துலக சைவ சித்தாந்த ஆய்வு மைய இயக்குநர் டாக்டர் ஜெயச்சந்திரன் அவர்கள் கேட்டிருந்தார்கள். திருமுறைகளில் ஆழ்ந்தும் தோய்ந்தும் உள்ள அறிஞர் பெருமக்களின் கை வண்ணங்களால் சீர் பெற்று வரும் அந்தத் தொடரில் என் கட்டுரையா என்று பெரிதும் தயங்கினேன், தருமபுர

ஆதீன குருமகா சந்நிதானம் அருள்தவத்திரு சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் அருளாசியாலும், டாக்டர் ஜெயச்சந்திரன் அவர்கள் தந்த உற்சாகத்தாலும் கட்டுரை குறைவின்றி அமைந்தது. இக் கட்டுரை உருவாகப் பெரிதும் உதவிய நூல்கள் என் அருமைத் தந்தையார் எழுதிய சைவ சமய வளர்ச்சியும், பெரிய புராண ஆராய்ச்சியும்தான். இணையற்ற இவ் விரண்டு இலக்கியங்களும் சைவத்திற்கும், தமிழுக்கும் கிடைத்த அரிய கருத்துப் புதையல்கள் எனலாம்.

சதுரமும் லலிதமும் ஒரு தொடர்கதை. வயலூரில் இக் கதை தொடங்கிய விதத்தை என் முதல் நூலான கலை வளர்த்த திருக் கோயில்களில் விவரித்துள்ளேன். வயலூரில் தொடங்கிய அநுபவம், கொடுமுடியிலும், திருப்பரங்குன்றத்திலும் வளர்ந்து, தில்லி அருங்காட்சியகத்தில் நிலை பெற்றது. பல திருமேனிகளையும், சிற்பங்களையும் பலமுறை நேரில் கண்டும், உரிய நூல்களைத் தேடிப் பிடித்துப் படித்தும் உருவாக்கிய கட்டுரை இது. பல இதழ்களில் பல்வேறு தலைப்புகளில் வெளிவந்த அத்தனை கட்டுரைகளையும் இணைத்து ஒரு கட்டுரையாக்கி உள்ளேன். இந்த ஆய்வு முற்றுப் பெற்று விட்டதாக நான் கருதவில்லை. இது இனியும் தொடரும்.

'தாமரைத் திருவடிக் கீழ்' கட்டுரை அமையக் காரணமாக இருந்தவர் காரைக்கால் அம்மையார். அருள்மிகு பூலோக நாதசாமி திருக் கோயிலில் பார்த்த இந்த அழகுத் திருமேனி ஓர் ஆய்வுக் கட்டுரைக்குத் தளம் போட்டுத் தந்தது. பிற கோயில்களில் காண முடியாத அரிய திருமேனி இது.

தமிழக மருத்துவர்களின் 1985 ஆம் ஆண்டுக்குரிய தமிழக மருத்துவ மாநாடு திருச்சியில் நடந்தது. அந்த மாநாட்டையொட்டி திருச்சி மருத்துவ மன்றம் ஒரு மலரை வெளியிட இருந்தது. அம்மலரில் திருச்சி வரும் தமிழக மருத்துவர்களுக்குத் திருச்சியின் கலைப் பெருமைகளை விளக்குமாறு ஒரு கட்டுரை அமைய வேண்டுமென அப்போது செயலாளராக இருந்த உளவியல் மருத்துவ அறிஞர்

திரு. க. கோபால கிருட்டிணனும், மருத்துவ மன்றத்தின் மூத்த உறுப்பினரும், எங்கள் வழிகாட்டியுமான மருத்துவ அறிஞர் திரு. அர. கணேசன் அவர்களும் விரும்பி அந்தப் பொறுப்பை என்னிடம் தந்தார்கள். ஆய்வுக் கட்டுரையாக எழுதிவிடாமல் அறிமுகக் கட்டுரையாக எழுதுங்கள் என்று என் வாழ்வரசி குறிப்பு காட்டினார். அந்தக் குறிப்பை வேத வாக்காகக் கொண்டு எழுதிய கட்டுரைதான் 'வாருங்கள் வலம் வருவோம்.' மருத்துவ நண்பர்கள் பலரும் படித்து இரசித்து மகிழ்ந்து போற்றிய இக் கட்டுரை மீண்டும் மருந்து விற்பனையாளர்கள் மாநாட்டு மலரில் இடம் பெற்றது. திருச்சி மாவட்டக் கலைப் பெருமைகளை ஒரு பறவைப் பார்வையாக இதில் பார்க்கலாம்,

புனித சிலுவைக் கல்லூரி இளங்கலை வரலாற்று மாணவியர் ஒன்பதுபேர் ஒரு குழுவாக ஆய்வு செய்ய விழைந்த நிலையில், 'இவரலாது இல்லையோ பிரானார்' கட்டுரை பிறந்தது. திருவாசியிலுள்ள அருள்மிகு மாற்றுரை வரதீசுவரர் திருக்கோயில்தான் கட்டுரைப் பொருள். ஒன்பது புதிய கல்வெட்டுகளைக் கண்டுபிடிக்கவும், பாம்பின் மீதாடும் பரமனை வெளிப்படுத்தவும் வாய்ப்பு தந்த களம் இது. இங்குள்ள அரவத்தின் மீதாடும் அண்ணலைப் பற்றி எனக்கு முதன் முதல் செய்தி தந்தவர் திருச்சி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகக் கிளையின் மேலாளர் திரு. காளத்தீசுவரன் அவர்கள் தாம். ஒரு புதிய படைப்பைத் தமிழகம் அறிந்து மகிழ வாய்ப்பளித்த அவருக்கு என் நன்றி உரியது.

நவகண்ட நடுகற்களில் ஒன்பது சிற்பங்களைப் பற்றி எழுதியுள்ளேன். இவற்றுள் உய்யக்கொண்டான், வாளாடி நடுகற்கள் பற்றித் தகவல் தந்தவர் சோமரசம்பேட்டை மேனிலைப் பள்ளித் தமிழாசிரியர் திரு. தமிழகன். குளித்தலை நடுகற்கள் பற்றித் தகவல் தந்தவர் முசிறி அரசினர் கலைக் கல்லூரி வேதியல் துறைப் பேராசிரியர் திரு. அமர் ஜோதி. நாங்களாகக் கண்டறிந்தவை மூன்று. இவற்றுள் புதையுண்டிருந்த நடுகற்களை அகழ்ந்தெடுத்துத் திருச்சி

அருங்காட்சியகத்திற்குக் கொணரப் பல்லாற்றானும் உதவிய அப்போதைய திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமிகு வ. விசுவநாதன் அவர்களின் அன்பும், நேயமும், எளிமையும் என்றென்றும் எங்கள் நெஞ்சில் நீங்காதிருக்கும். இந்தப் பணியில் ஒத்துழைத்த அரசு அலுவலர்கள், தொல்பொருள் ஆய்வுத்துறைப் பதிவு அலுவலர் திரு. அ. அப்துல் மஜீது, உதவியாளர் திரு. ச. நடராசன், கி. ஆ. பெ. விசுவநாதம் மேனிலைப் பள்ளி நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள், அவர்தம் ஆசிரிய அலுவலர் திரு. இரா. இராசேந்திரன் ஆகியோருக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

திருச்சி பிஷப் ஈபர் கல்லூரித் தமிழ்த்துறையில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வரும் முனைவர் கோபிநாத், தமிழிசையில் ஈடுபாடும், ஆய்வு நோக்கும் கொண்ட இனிய நண்பர். அவரது தூண்டுதலாலும், பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை சுந்தரேசனார் அவர்களால் நிறுவப்பட்ட நாடுகாண் குழுவினரின் வேண்டுதலாலும், திருத்தவத் துறைத் திருக்கோயிலில் நடந்த கருத்தரங்கம் ஒன்றிற்காக நான் தயாரித்த கட்டுரைதான் கல்வெட்டுகளில் இசைக் கருவிகள். ஆழமான தலைப்பு. என்னால் இயன்ற வரையில் செய்துள்ளேன். இக் கட்டுரை உருவாக இசைத்தமிழ்ப் பேரறிஞர் முனைவர் வீ. ப. கா. சுந்தரனார் அவர்கள் திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய அறக் கட்டளைச் சொற்பொழிவும், திருச்சி வானொலியில். தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் பதிவு அலுவலர், திரு. கி. ஸ்ரீதரன் ஆற்றிய இசைக்கலை பற்றிய ஆய்வுரையொன்றும் பெரிதும் உதவின என்பதை நெஞ்சு நிறைந்த நன்றியுணர்வுடன் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். அதிலும் குறிப்பாக இசைத்தமிழ்ப் பேராசிரியர் வீ. ப. கா. சுந்தரனார் அவர்கள்தாம் அரும்பாடுபட்டு, சேர்த்து வைத் திருந்த பல அரிய ஆய்வுக்குறிப்புகளை அப்படியே என்னிடம் தந்து 'பயன்படுத்திக் கொள்ளுங்கள்' என்று வாழ்த்திய மகத்தான நொடிகளை என்றும் நினைத்திருப்பேன். அப்

பெருமகனாரின் அன்பார்ந்த உள்ளத்திற்கு நான் என்ன கைம்மாறு செய்யவல்லேன்?

'கோயிலடி மக்களின் கோபம் என்ன?' கட்டுரை அமையக் காரணமாய் இருந்தவர் கோயிலடியைச் சேர்ந்த திரு. வசந்தன். எங்கள் ஊர்க் கோயிலைப் பற்றி எழுதுங்கள் என்று என்னை அரியாய் அரித்து, அழைத்துச் சென்று இந்தக் கட்டுரையை வரவழைத்துவிட்டார். ஊர்மக்களின் அரவணைப்பற்ற ஒரு கோயில் என்ன நிலைக்கு ஆளாகும் என்பதற்கு திவ்ய ஞானேசுவரர் கோயில் ஒரு திவ்யமான எடுத்துக்காட்டு.

தற்போது திருநெல்வேலி வானொலி நிலையத்தில் பணியாற்றிக்கொண்டிருக்கும் 'அருமை நண்பர் திரு. ஈ. ச. சுந்தரமூர்த்தி அவர்கள் திருச்சி வானொலி நிலையத்தில் நிகழ்ச்சிப் பொறுப்பாளராக இருந்தபோது கல்வெட்டுகள் தொடர்பாக ஓர் உரைத்தொடர் அமைக்கலாமென விரும்பினார்கள். அவர்கள் விருப்பப்படியே எளிய மக்களுக்கும் விளங்கும் வண்ணம் கல்வெட்டுச் செய்திகளைப் பல தலைப்புகளின்கீழ்ப் பிழிந்தெடுத்துப் பல அறிஞர்களைக் கொண்டு ஆய்வுரைகளாக்கித் தந்தோம். அவற்றுள் 'சமுதாயம்-ஒரு பார்வை' என்பது ஒரு தலைப்பு. கி. ஆ. பெ. விசுவநாதம் மேல்நிலைப்பள்ளித் தமிழாசிரியரும், என் இனிய நண்பருமான திரு. இரா. இராசேந்திரன் அத் தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்தினார். அதில் சமுதாயத்தின் நல்ல பக்கங்களையே அவர் பார்த்திருந்தார். அவ்வளவிற்குத்தான் நேரமும் இருந்தது. இருந்தாலும் மக்களுக்கு முழு உண்மைகளையும் தருவதுதான் பொருத்தமாக அமையுமென்ற நிலையில், 'சமுதாயம்-மறு பார்வை' என்ற தலைப்பில் திரு. ஈ. ச. சுந்தரமூர்த்தி அவர்களின் ஒப்புதலுடன் நான் பேசினேன். இந்தக் கட்டுரையை உருவாக்க முனைந்தபோதுதான் இருட்டடிப்பு செய்யப்பட்டிருக்கும் பலப் பல வரலாற்றுச் செய்திகளில் நான் இடற நேர்ந்தது. முழுமையான தமிழக வரலாறு இன்னும் நமக்குக் கிடைக்கவில்லை என்பதையும் உணர நேர்ந்தது. இக் கட்டுரையில் சொல்லப்பட்டிருக்கும்

செய்திகள் மிகக் குறைவு. விரிக்கின் அதுவே தனி நூலாகும் தன்மையது. எதிர்காலத்தில் 'கல்வெட்டுகளில் சமுதாயம்' என்றே ஒரு தனி நூல் அமைக்கும் எண்ணமுண்டு. இறையருள் கூடிவரின் அதைச் செயலாக்கி மகிழ்வேன்.

திருவரங்கம், குடமுழுக்கு ஏற்பாடுகளில் மகிழ்ந்து கொண்டிருந்தபோது, இந்தியன் எக்ஸ்பிரஸ் திரு. கோபாலன் அவர்கள், தினமணியில் குடமுழுக்குச் சிறப்பு மலர் வர இருப்பதாகவும், அதற்கு ஒரு கட்டுரை தர வேண்டுமென்றும் விரும்பிக் கேட்டார்கள். மிகுந்த மகிழ்வோடு நான் உருவாக்கிய கட்டுரைகளுள் ஒன்று 'திசை விளக்காய்த் திகழ்கின்ற திருவரங்கம்'. இக் கட்டுரைக்காகத் திருவரங்கம் கோயிலை முழுமையாக நான் பார்க்கவும், படங்கள் எடுக்கவும் அனுமதியளித்து உதவிய கோயில் தக்கார் மருத்துவர் கோபிநாத், இணை ஆணையர் திரு. சீனிவாசன் ஆகியோர்க்கும், திருவரங்கம் கல்வெட்டுத் தொகுதியைத் தந்துதவிய திரு. அ. அப்துல்மஜீது அவர்கட்கும், எனக்கு நேர்முகமளித்து ஆசி வழங்கிய தவத்திரு ஜீயர் சுவாமிகள் அவர்களுக்கும், ராஜகோபுரப் பணி பற்றிய தகவல்களைத் தந்துதவிய திரு. தேசிகர் அவர்கட்கும், என் நன்றி உரியது. இக் கட்டுரைக்காகச் சென்றிருந்தபோதுதான் ஆனந்தத் தாண்டவ விஷ்ணுவைக் கண்டுபிடித்து வெளிப்படுத்தினேன். திருமால் படிம வரலாற்றில் இது ஒரு புரட்சிப் படைப்பாகும்.

கோயில்களைப் பார்க்கச் செல்லும் நேரங்களில் பழக நேரும் எத்தனையோ மனிதர்களுடன் ஏற்படும் அனுபவங்களைத் தனி நூலாகவே எழுதலாம். அவர்களுள் பலர் மறக்க முடியாத உதவிகளைச் செய்துள்ளனர். அப்படியொரு பேருதவியைச் செய்த அன்புக்குரியவர்தாம் பட்டீசுவரத்து சித்தநாத குருக்கள். இளைஞரான இவரின் சுறுசுறுப்பும், பழையாறைக் கோயில்களைப் பற்றிய அனுபவ அறிவும், சிறந்த பண்பு நலன்களும் என்றும் நினைவில் நிற்பவை. இவரது குடும்பமே இனியதொரு பல்கலைக் கழகம். கும்பகோணம் செல்லும்போதெல்லாம் தவறாமல்

இவர் இல்லம் சென்று வருவேன். இந்த இனிய மனிதரால் எனக்கு அறிமுகப்படுத்தப்பட்ட கோயில்தான் பஞ்சவன் மாதேவீச்சரம். தன் சிற்றன்னை பஞ்சவன் மாதேவிக்கு முதலாம் இராசேந்திர சோழன் எடுத்த அழகான பள்ளிப் படைக் கோயில் இது. தமிழகத்திலேயே, எனக்குத் தெரிந்த வரை ஒரு தாய்க்குத் தனயன் எடுத்த கோயில் இது ஒன்று தான். இந்த நினைவாலயம் இன்றிருக்கும் நிலையைப் பார்க்க நெஞ்சு நோகிறது! காதல் மனைவிக்கு மணாளன் எடுத்த தாஜ்மகாலை உலகே கொண்டாடுகிறது. தாய்க்கு மகன் எடுத்த இந்த நினைவாலயத்திலோ வௌவால்கள் தாம் குடிகொண்டுள்ளன. பாதுகாத்துப் போற்றப்பட வேண்டிய இத் திருக்கோயிலின் கண்ணீர்க் கதைக்குக் காலந் தான் முடிவு சொல்ல வேண்டும்.

இந்த நூலிலுள்ள கட்டுரைகள் அனைத்துமே பல்வேறு இதழ்களில் வெளிவந்தவை. இவற்றை வெளியிட்டு என் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்த செந்தமிழ்ச் செல்வி ஆசிரியர் திரு. இரா. முத்துக்குமாரசாமி, தினமணிக் கதிர் ஆசிரியர் திரு. கி. கஸ்தூரி ரங்கன், கலைமகள் துணை ஆசிரியர் திரு. எஸ். வி. ரமணி, அமுதசுரபி ஆசிரியர் டாக்டர் திரு. விக்கிரமன், மாலைமுரசு செய்தியாசிரியர் திரு. அசோகன், இளமையின் குரல் ஆசிரியர் பேராசிரியர் மா. ரா. அரசு, இந்தியன் எக்ஸ்பிரஸ் திரு. ஏ. கோபாலன், திருக்கோயில் ஆசிரியர் கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், நுண்கலை ஆசிரியர் கே. பாலசுப்பிரமணியம், தமிழ்க் கா. சு. நூற்றாண்டு விழா மலர் பதிப்பாளர் டாக்டர் திரு. இளமுருகு பொற்செல்வி, மருத்துவ மாநாட்டு மலர் பதிப்பாளர் மரு. க. கோபாலகிருட்டிணன், முப்பத்தைந்தாவது கண் மருத்துவ மாநாட்டு மலர் பதிப்பாளர் மரு. சாம்பமூர்த்தி, தருமபுர ஆதீன குருமகா சன்னிதானம் அருள் தவத்திரு சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் அவர்கள், இயக்குநர் டாக்டர் ஜெயச்சந்திரன் ஆகியோருக்கு என் நெஞ்சார்ந்த நன்றி உரியது.

இந்நூல் முழுமையடைய பல்லாற்றானும் உதவிய அன்பு நெஞ்சங்களை நினைத்துப் பார்க்கிறேன். கோயில் களின் அறங்காவலர்கள், நிர்வாக அதிகாரிகள், சிவாச்சாரி யார்கள், தமிழன்பர்கள் இப்படிப் பலர் பல விதங்களில் உதவியுள்ளார்கள். குறிப்பாகத் தமிழ்நாடுஅரசு தொல் பொருள் ஆய்வுத் துறையின் திருச்சி மாவட்டப் பதிவு அலுவலர் திரு. அ. அப்துல் மஜீது, தம் பல்வேறு பணிகளுக் கிடையில் எனக்காற்றிய உதவிகளையும், வழிகாட்டலையும் என்றும் நினைத்திருப்பேன். அழைத்தபோதெல்லாம் வந்துதவிய இனிய நண்பர் திரு. ச. நடராசன் மறக்க முடியாதவர்.

இந்தக் கட்டுரைகளை எழுதும் காலத்தில் பல அரிய நூல்கள் தேவைப்பட்டன. கேட்டதும் தந்ததுடன், கிடைக் காத நூல்களையும் தேடிக் கிடைக்கச் செய்த நல்ல உள்ளங் களை எப்படி மறப்பது? தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி நூலகர் திரு. அருள், தூய வளனார் மேனிலைப் பள்ளி நூலகர் திரு. சவரிராஜ், திருச்சி மாவட்ட மைய நூலகத்தின் பொறுப்பாளர் திரு. சண்முகசுந்தரம், பிஷப் ஈபர் கல்லூரிப் பேராசிரியர் திரு. சுபாஷ் சந்திரபோஸ், தேசியக் கல்லூரி எம். ஃபில். மாணவர் திரு. இளங்கோ, கலைக்காவிரி நாட்டியப் பள்ளியின் இயக்குநர் அருள்தந்தை ஜார்ஜ் அடிகளார், நூலகர்கள் திருமதி. வித்யா, திருமதி. பிரபா, தொல்பொருள் ஆய்வுத்துறையின் திருச்சி மாவட்டப்பதிவு அலுவலர் திரு. அ. அப்துல் மஜீது ஆகியோ ரின் ஒத்துழைப்பும், அன்புணர்வும் எனக்குக் கிடைத்தது பெரும் பேறே. இவர்களின் கருணையால் எந்தவித இடை யூறுமின்றி என் ஆய்வு தொடர்ந்தது. நூல்களைத் தந்து காலத்தால் உதவிய இந்தக் கனிந்த நெஞ்சங்களையும், சொன்ன போதெல்லாம் போய்ச் சோர்வு கொள்ளாமல் நூல்களை வாங்கி வந்து தந்துதவிய அன்புத் தம்பி திரு. இரா. கண்ணையனையும் கைகூப்பி வணங்குகிறேன்.

என் கீழ் ஆய்வு செய்துவரும் எம். ஃபில் மாணவியர் செல்வி. இரா. வளர்மதி, செல்வி. மு. நளினி இருவரும்

கட்டுரைகளைப் படியெடுப்பதில் கருத்தாய்த் துணை நின்றனர். வழக்கம்போல் டாக்டர் ஆறுமுகம் எல்லாமுமாய் இருந்து என் கட்டுரைகள் உருவாக உதவியிருக்கிறார். இப்படித்தான் என்று இனம் பிரிக்க முடியாதபடி, என் கட்டுரைப் பயணங்களின் உயிர் மூச்சாய் விளங்கி உதவிகளாற்றி வரும் இந்த மாமனிதருக்கு என் நெஞ்சில் என்றென்றும் நிறைந்த இடமுண்டு.

என்னால் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுச் செய்திகள், சிற்பங்கள், பிற செய்திகள் எல்லாவற்றையும், அவை மக்களைப் போய்ச்சேரவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் தங்கள் செய்தியிதழ்களில் வெளியிட்டு, என்னை நாளும் பொழுதுமாய் உற்சாகப்படுத்தி வரும் அன்பு நிறைந்த நண்பர்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ் திரு. ஏ. கோபாலன், இந்து திரு. ராமன் அரசு, தினத்தந்தி செய்தியாசிரியர் கலைமாமணி கவிஞர் திலகம் திருச்சி பாரதன், மாலைமுரசு செய்தியாசிரியர் திரு. அசோகன், மாலைமலர் திரு. சுப்பிரமணியன் ஆகியோர் என் நெஞ்சில் நிறைந்தவர்கள். அவர்களுக்கு என்றென்றும் என் நன்றி உரியது.

இறுதியாக என் வாழ்வரசி. ஒரு நல்ல மனைவிக்குரிய அத்துணை இலக்கணங்களும் பொருந்திய இந்த இனிய சிநேகிதியின் இதமான அன்பில்தான் என் பணிகள் முழுமையடைகின்றன. செம்புலப் பெயல் நீராய் என்னுள் இணைந்திருக்கும் இவர்களுக்கு நன்றி கூறுவது பொருளற்றதாகும் என்பதால், இப்படியொரு இனிய உள்ளத்தை என் வாழ்வில் இணைத்த இறைவனுக்கு நன்றி சொல்வேன்.

கட்டுரை எழுதக் கற்றுக்கொண்டிருந்த காலத்திலேயே என் முதல் கட்டுரையை வெளியிட்டு என்னைப் பெருமைப் படுத்தியவர் செந்தமிழ்ச் செல்வியின் ஆசிரியர் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள். இந்தத் துறையில் என் வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணமாய் அமைந்தவர்களுள் அப் பெரியார் முதன்மையானவர். என் கட்டுரைகளைத் தொகுத்துக் கலை வளர்த்த திருக்கோயில்கள், காட்டுக்குள்

ஒரு கலைக்கோயில் என்னும் நூல்களாக்கி வெளியிட்டு, அவற்றின்வழி என்னை இலக்கிய உலகிற்கு அறிமுகப் படுத்திய பெருமை அவர்களையே சாரும். தொடர்ந்து செந்தமிழ்ச் செல்வியில் என் ஆய்வுக் கட்டுரைகளை வெளி யிட்டு என்னை ஊக்குவித்து வரும் அவர்களுடைய அன்புக்கு அளவே யில்லை. மீண்டும் ஒரு நூலை வெளியிடலாமென்று கருத்துத் தெரிவித்ததுடன், அவ்வப்போது கடிதங்கள் வாயி லாகத் தொடர்ந்து உற்சாகப்படுத்தி, இந்நூல் உருவாக முக்கிய காரணமாய் அமைந்த அவர்கட்கு நன்றி சொல்ல என் தமிழுக்கு வலிமையில்லை.

அறிவியல் சார்ந்த வரலாற்று நோக்குடன் எழுதப்பட்ட இந் நூலைத் தமிழ் ஆர்வலர்களின் பார்வைக்கு வழங்குவதில் நிறைவு கொள்கிறேன். இந் நூலைப் படித்துப் பார்க்கும் பெரியவர்கள், என்னையும் மீறி இந் நூலில் குறைகள் இருந் தால் அவற்றைப் புலப்படுத்தின், அடுத்து வரும் நூல்களில் தவிர்த்துக்கொள்ள வாய்ப்பாக இருக்கும்.

C. 87. பத்தாவது குறுக்குச் சாலை,
தில்லைநகர் மேற்கு,
திருச்சிராப்பள்ளி-620018

அன்புடன்
இரா. கலைக்கோவன்

அறிவார்ந்த சிந்தனைகளும்
ஆற்றல்நிறைந்த செயற்பாடுகளுமாய்
வாழ்ந்து வழி நடத்திய
எங்கள் பெரிய மாமா
புலவர். பு. செல்வராசன் அவர்களுக்கு

—இரா. கலைக்கோவன்

# உள்ளுறை

பக்க எண்


| | | |
|---|---|---|
| 1. | எழில் கொஞ்சும் எறும்பியூர் | 1 |
| 2. | தாட்சாயணி | 30 |
| 3. | சமுதாயத்தில் திருமுறைத் தாக்கம் | 43 |
| 4. | சதுரமும் லலிதமும் | 56 |
| 5. | தாமரைத் திருவடிக்கீழ், | 70 |
| 6. | வாருங்கள், வலம் வருவோம் ! | 76 |
| 7. | இவரலாது இல்லையோ பிரானார் ? | 89 |
| 8. | நவகண்ட நடுகற்கள் | 124 |
| 9. | கல்வெட்டுகளில் இசைக்கருவிகள் | 134 |
| 10. | கோயிலடி மக்களின் கோபம் என்ன ? | 148 |
| 11. | கல்வெட்டுகளில் சமுதாயம்—மறு பார்வை | 158 |
| 12. | திசை விளக்காய்த் திகழ்கின்ற திருவரங்கம் | 185 |
| 13. | ஒரு காலக் கனவின் கண்ணீர்க் கதை | 202 |
| | துணைநூற் பட்டியல் | 212 |


## கட்டுரைகள் வெளிவந்த இதழ்கள்


1. எழில் கொஞ்சும் எறும்பியூர்
—செந்தமிழ்ச் செல்வி, அக்டோபர் 1986-சனவரி 1987.

2. தாட்சாயணி
—Indian Express 1-6-85.
—*தினமணி கதிர்*, 9-11-86.

3. சமுதாயத்தில் திருமுறைத் தாக்கம்
—ஞானசம்பந்தம், நவம்பர் 1986.

4. சதுரமும் லலிதமும்
[பல கட்டுரைகளின் இணைப்பு]
—இளமையின் குரல், 1-6-83 (வயலூரில் ஒரு வடிவழகன்)
—தினமணி கதிர், 6–5-84 (சதுர தாண்டவப் பெருமான்)
—Indian Express, 11-12-84(Vayalur chathuran)
— நுண்கலை, சனவரி 1985 (திருப்பரங்குன்றத்துப் பேரழகன்)
—Indian Express, 10-5-86 (chathuran of parankunram)
—செந்தமிழ்ச் செல்வி மணிவிழா மலர் 1987 (சதுரமா? லலிதமா?)
— 35th Madras state Ophthalmic Conference souvenir, 1987 (கண்வழி கவிதைகள் பருகிட....)

5. தாமரைத் திருவடிக் கீழ்
—Indian Express, 23-11-85 (At The Lotus feet)
—திருக்கோயில், டிசம்பா 1986.

6. வாருங்கள், வலம் வருவோம்
—39th Tamil Nadu State Medical Conference Souvenir, 1985

7. இவரலாது இல்லையோ பிரானார் ?
—செந்தமிழ்ச் செல்வி, மார்ச் 1987–ஆகஸ்டு 1987.

8. நவகண்ட நடுகற்கள்
—தமிழ்க் கா. சு. நூற்றாண்டு விழா மலர், 1987

9. கல்வெட்டுகளில் இசைக்கருவிகள்
—அமுத சுரபி, தீபாவளி மலர் 1986.

10. கோயிலடி மக்களின் கோபம் என்ன ?

—கலைமகள், மே 1987.

11. கல்வெட்டுகளில் சமுதாயம்—மறு பார்வை

—திருச்சி வானொலி ஒலிபரப்பு, 22-9-1985.

12 திசை விளக்காய்த் திகழ்கின்ற திருவரங்கம்

[இரு கட்டுரைகளின் இணைப்பு]

—மாலை முரசு தீபாவளி மலர், 31-10-86 (அரங்கனின் காதலிகள்)

—தினமணி குடமுழுக்கு விழாச் சிறப்பிதழ், 25-3- 987.

13. ஒரு காலக் கனவின் கண்ணீர்க் கதை

—மாலை முரசு தீபாவளி மலர், 20-10-87

(தாய்க்குக் கோயில் கட்டிய மாமன்னன் இராசேந்திரன்)

# 1. எழில் கொஞ்சும் எறும்பியூர்

மலைக் கோயில் என்றால் மால்மருகன் முருகனின் நினைவுதான் முதலில் தோன்றும். குன்று கண்ட இடமெல்லாம் குமரன் நின்ற இடமென்பது தமிழ் வழக்கு. ஆனால் திருச்சிராப்பள்ளி இதற்கு விதிவிலக்கு. திருச்சியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள மலைக்கோயில்களில் பெரும் பான்மையன சிவபெருமானின் சிறப்புமிக்க தலங்களாய் அமைந்திருப்பது ஒரு புதுமையாகும். திருச்சி நகரின் மையத்தில் அமைந்திருக்கும் தாயுமானவர் மலைக்கோயில், வயலூர் சாலையில் உள்ள திருக்கற்குடி மகாதேவர் திருக்கோயில், முசிறியை அடுத்துள்ள திரு ஈங்கோய் நாதர் திருக்கோயில், மணப்பாறையை அடுத்த அய்யர் மலையில் உள்ள இரத்தின கிரீசுவரர் கோயில், திருத்திய மலையில் இடம்பெற்றுள்ள ஏக புஷ்ப பிரியநாதசாமி கோயில், கொல்லி மலையிலுள்ள அறப் பளீசுவரர் திருக்கோயில், திரு எறும்பியூர் மலைமீது இருக்கும் எறும்பீசர் கோயில் என எங்கு நோக்கினும் மலைமகளின் மணாளன் கோயில்கள்தாம். இவற்றுள் அமைக்கப்பட்டிருக்கும் விதத்தாலும், பழமையின் சிறப்பாலும், சிற்பம் கல்வெட்டுகள் போன்றவற்றின் இருப்பாலும் வரலாற்றுப் பெருமை பெறும் நிலையில் முதலிடம் பெறுவது திரு எறும்பியூர்த் திருக்கோயில்தான்.

திருச்சி-தஞ்சை சாலையில், திருச்சியிலிருந்து பத்து கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள வயல்வளம் கொழிக்கும் அழகிய சிற்றூரே திருஎறும்பியூர். பார்க்கும் இடமெல்லாம் பசுமையும் வளமையுமாய், வாழைத்தோப்புகளும், நெல் வயல்களும் நிறைந்து நிற்கும் இத் திரு எறும்பியூருக்கு அருகில்தான் இந்தியாவின் புகழ்பெற்ற உயர் அழுத்தக் கொதிகலன் உற்பத்தி நிறுவனம் (B. H. E. L.) அமைந்துள்ளது. திருச்சியிலிருந்து திருஎறும்பியூர் செல்லும் எவரும் இம் மலைக் கோயிலைக் காணாது செல்ல முடியாது.

எறும்பியூரை நெருங்க ஒரு கிலோ மீட்டர் தொலைவு இருக்கும் போதே, தொடுவானத்தைத் தொடமுயலும் தொல்பழங் கவிதையாய், மலைக் குன்றின் மேலமைந்த மகத் தான மனித சாதனையாய், நீலவானப் பரப்பிலோர் கருங்கற் காவியமாய் நிற்கும் எறும்பியூர் இறைக்கோயில், பயணம் செய்வோர் விழிகளில் படமாகி, அவர்தம் நெஞ்சப் பேரேடு களில் நிலையான ஓவியமாய் உறைந்து போகும். அழகும் எடுப்புமாய் நிற்கும் இத் திருக் கோயிலை அடைய திருச்சி தஞ்சைப் பெருவழியிலிருந்து இடப்புறம் திரும்பும் கிளைச் சாலையில் அரை கிலோ மீட்டர் தொலைவு செல்ல வேண்டும். மலையின் அடிவாரத்தில் மிகப் பெரிய குளமொன்று, நிழல் தரும் மரங்கள் சுற்றிலும் அமைந்திருக்க, வியப்புக்குரிய நிலையில் தூய்மையாகவும், நிறைந்த நீருடனும் காட்சி தருகிறது. மலைக்கோயிலுக்குச் செல்லும் அடிவார வாயி லருகே அழகான தேரொன்று கவனிப்பாரற்ற கொடுமை யால், கலைச் சிறப்பு மிக்கிருந்தும், களையிழந்து உருக்கு லைந்து நிற்கிறது. சக்கரங்கள் சிதைவுற்றதால் பல ஆண்டு களாய் ஓடமுடியாத நிலையில், இருந்த இடத்திலேயே காட் சிப் பொருளாக்கப் பட்டிருக்கும் இத்தேரிலுள்ள சிற்பங்கள் பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகலாம். மராட்டிய உடையமைப்பில் தேரில் காணப்படும் வீரர் சிற்பங்கள் இக்காலக் கணிப்பிற்குத் துணையாகின்றன.

தேரின் மேற்பகுதியை நான்கு புறங்களிலும் மூன்று அடுக்குகளாக்கிச் சிற்ப வரிசைகளைப் பொருத்தியுள்ளனர். கீழ்வரிசையில் மேற்குப்புறம் பூத கணங்களும், வடபுறம் சிவபெருமானின் பல்வகைத் தோற்றங்களும் சிறப்பாக வடிக் கப்பட்டுள்ளன. இப்பூதகணங்களுள் ஒன்றின் ஆண் உறுப்பை அதன் காதுத்துளை வழியே நீண்டு தொங்கும் பாம்பொன்று தன் வாயால் கவ்வியுள்ளது. இச் சிற்பம் இதுவரை பார்த்தி ராத அபூர்வப் படைப்பாய் உள்ளது. மேல் வரிசையில் திரு மாலின் பத்துத் திருத்தோற்றங்களையும் காணலாம். மைய வரிசையில் பலதெய்வத் திருமேனிகள் சிற்பங்களாகியுள்ளன.

இவ் வரிசையின் மேற்குப்புறம் முப்புரம் எரித்தவரும், யானையை அழித்த மூர்த்தியும் காட்சி தருகின்றனர். வட புறத்தில் நந்திகேசுவரர், திருமால், ஆடவல்லான், நான்முகன், காளி ஆகியோரின் திருவடிவங்கள் உள்ளன. கிழக்குப் புறத் தில் மார்க்கண்டேயர் வாழ்வியலும், கண்ணப்ப நாயனார் கண் தந்த கதையும் அழகுற வடிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் யானையை அழித்த மூர்த்தியின் மரச்சிற்பம் எழில் கொஞ்சும் வடிப்பாகும். எட்டுத் திருக்கைகளுடன், தன்னை எதிர்த்து வந்த யானையின் தோலை உரித்து, இறைவன் ஆடும் இத்திருத்தாண்டவம், எத்தனையோ கோயில்களில் கற்சிற்பங்களாகவும், மரச்சிற்பங்களாகவும், செப்புத் திருமேனிகளாகவும் காணப்படுகின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்க அழகுடனும், கலைநயத்துடனும் அமைந்த வற்றுள் இம்மரச் சிற்பமும் ஒன்றெனலாம். வலக் கைகளில் கீழிருந்து மேலாக முத்தலை ஈட்டி, கத்தி, உடுக்கை கொண் டுள்ள இறைவனின், வலமேற்கையும் இடமேற்கையும் யானையின் தோலைப் பற்றியுள்ளன. இடக் கைகளில் கீழி ருந்து மேலாகத் தலையோடு, கேடயம், பாசம் முதலியவற் றைக் கொண்டுள்ளார். வலக்கால் முழங்கால் அளவில் மடக் கப்பட்டு உயர்த்தப்பட்டுள்ளது. இடக்கால் யானையின் தலைமீது பொருந்தியுள்ளது. 12''×9'' அளவுள்ள சிறு மரப் பலகைத் துண்டொன்று, இப்படியொரு அழகுக் காவியமாக மாறியிருப்பதை நினைக்கும் போது, அக்காலத்துச் சிற்பி களின் செதுக்குத் திறன் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

மைய வரிசையின் வடபுறம் இருக்கும் நந்திகேசுவரர், திருமால், ஆடவல்லான், நான்முகன், காளி ஆகிய ஐவருமே ஆடல் திருக்கோலங்களில் அமைந்துள்ளனர். நடுவில் ஆடவல் லான் ஊர்த்வ தாண்டவத் திருக்கோலத்தில் காட்சி தர, வலப் புறம் நந்திகேசுவரரும் திருமாலும் அவ்வாடலின் அபிநயங் களுக்கேற்ப இசைக் கருவிகளை இசைக்க, இடப்புறம் நான்முகனும் காளியும் இசையிலும் ஆடலிலும் பங்கேற்கும் விதத் தில் வடிக்கப்பட்டுள்ளனர்.

நந்திகேசுவரர் இறைவனின் ஆடலில் மெய்மறந்தவராய் தோளில் கட்டித் தொங்கும் மத்தளத்தை, இடமுன் கை முழக்க, வலமுன்கை, 'ஆகா ! அற்புதம் ! அற்புதம்!' என்று அதிசயித்து அகமகிழும் மெய்ப்பாட்டில், மேலே வியப்பு முத்திரை காட்டி உயர்ந்து நிற்க, இடப் பின்கையில் மானும் வலப் பின் கையில் அங்குசமும் ஏந்தித், தானும் கால்களை அகற்றி, வலக்கால் குட்டிதமாக, இடக்காலைத் தரையில் ஊன்றி, இறைவனுடைய ஆட்டத்தின் இதமான போக்கில் தன்னையிழந்தவராய், ஆடியபடியே மத்தளமிசைக்கும் அழகை என்னென்பது !

அவரை அடுத்து நிற்கும் விஷ்ணுவும், ஆடவல்லானின் ஆடலைக் கண்டு களித்தவராய்த், தனையிழந்து அதில் ஈடு பட்டவராய், இடமுன்கை உடுக்கையைப் பற்றியிருக்க, வலமுன் கை அதில் இசையெழுப்ப, வலப் பின்கையில் சக்கர மும், இடப் பின்கையில் சங்குமாய் ஆடற்கோலத்தில் அகமகிழ்ந்து நிற்கிறார்.

ஆடவல்லானின் இடப்புறம் நான்முகன். முன் கைகள் இரண்டும் இறைவனின் திருப்பாதம் தரையில் தட்டி எழுப்பும் ஒலிநயத்திற்கேற்ப, ஒழுங்கு முறையுடன் தாளமிசைக்க, பின் கைகளில் அக்க மாலையும், குண்டிகையும் கொண்டபடி, விரித்த விழிகளில் வியப்பும், பெருமிதமும் பொங்கக் கங்கையை ஏற்றவரின் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தவராய்க் களித்து நிற்கிறார்.

பத்துத் திருக் கைகளுடன் காட்சியளிக்கும் காளிதேவி யின் கைகளில் சில வெயிலாலும், மழையாலும் பொரிந்து போயுள்ளதால், சில கைக்ளில் உள்ள கருவிகளையே இனம் கண்டுகொள்ள முடிகிறது. வலக்கைகள் ஐந்தில், ஒரு கை பூவையும், மற்றொரு கை கத்தியையும் ஏந்தியுள்ளன. இடக் கைகள் ஐந்தில், நான்கு கைகள் முறையே உடுக்கை, தலை யோடு, கேடயம், பாம்பு முதலியவற்றைக் கொண்டுள்ளன. பட்டாடை உடுத்திப் பாங்காகக் காட்சியளிக்கும் காளிதேவி யின் திருமுகத்தில் காட்டப்பட்டிருக்கும் சினக்குறிப்பு சிற்பி யின் திறமைக்குச் சான்றாகும்.

இந்த நால்வருக்கும் இடையில் 'பதினாறு திருக்கரங்களுடன் நடுநாயகமாக நிற்கிறார் ஊர்த்வ தாண்டவர். முன்னிரண்டு கைகளில் இடமுன்கை உடுக்கையைப் பற்றியிருக்க, வல்முன்கை அதில் தட்டி இசையெழுப்புகிறது. மேலிரண்டு கைகளும் மேலே உயர்த்தப்பட்ட நிலையில் உள்ளன. இருபுறமும் அமைந்துள்ள ஏழாவது கைகளில் இருக்கும் கருவிகளை இனம் கண்டு கொள்ள முடியவில்லை. முதலும், ஏழாவதும் எட்டாவதும் தவிர, ஏனைய வலக்கைகளில் கீழிருந்து மேலாகக் காளைக் கொடி, இன்னதென்று சொல்ல முடியாத பொரிந்து போன நிலையிலுள்ள கருவியொன்று, சுத்தி, பரசு, பாசம் ஆகியவை உள்ளன. இடக்கைகளில் மணி, தலையோடு, கேடயம், உடுக்கை, மான் முதலியவை உள்ளன, இடப்பாதம் முயலகனின்மீது ஊன்றியிருக்க, வலக்கால் முழுவதுமாய் மேலே உயர்த்தப்பட்டுள்ளது. பதஞ்சலி முனிவரும், வியாக்கிர பாதரும் இறைவன் திருவடிகளின் இருபுறமும் கூப்பிய கைகளுடன், சொல்லொணாப் பேரின்பப் பெருவெள்ளத்தில் மூழ்கித் திளைத்தவர்களாய்க் காட்சி தருகின்றனர். இச் சிற்பத் தொகுதியின் சிறப்பே இத் திருவுருவங்களின் முகக் குறிப்பு தான்! ஒவ்வொரு தெய்வத் திருமேனியின் முகத்திலும் மாறுபட்ட உணர்வுகளை வெளிப்படுத்திக் காட்டியிருக்கும் மாண்பு நம்மை மலைக்க வைக்கிறது. மரத்தில் கூடவா இத்தனைக் கலைவண்ணம் என்று மகிழ்ந்து போகிறோம். இப்படிச் சிறப்பு மிக்க சிற்பங்களால் நிறைந்திருந்தும் இந்தச் சின்னத் தேரை நகர்த்தும் எண்ணமோ, வலம் வர வைக்கும் ஆவலோ யாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. எத்தனை கொடுமையான துன்பம்! இந்தச் சிற்றூரிலும், பக்கத்துக் கொதிகலன் தொழிலகக் குடியிருப்புகளிலும் வாழும் மக்கள் ஆளுக்கு ஐந்து ரூபாய் அளித்தால் போதும், இந்தத் தேருக்கு இனிய வாழ்வு பிறந்து விடும்.

திருஎறும்பியூர், பிரமபுரம், லட்சுமிபுரம், மதுவனபுரம், ரத்னகூடம், குமாரபுரம், பிப்பிலீசுவரம், தென் கைலாயம் என்று பல பெயர்களைக்[1] கொண்டு வழங்கும் இத்தலத்துக்குத் திரு எறும்பியூர் என்ற பெயர் ஏன் வந்தது என்று கேட்ப

வர்களுக்காகவே இவ்வூரார் ஒரு கதை வைத்திருக்கிறார்கள். கரன், திரிசிரன், தூசனன் என்னும் மூன்று அரக்கர்களும் உடன் பிறந்தவர்கள். ஒருநாள் இவர்களுள் ஒருவனான கரன் எறும்பியூர்க் கோயில் இறைவனை வழிபட்டுக்கொண்டிருந்த போது, தேவர்கள், இந்திரன், தலைமையேற்க அங்கு வந்தார்கள். இறைவனை வழிபட விரும்பி வந்த அவர்கள் கருவறையில் கரனைக் கண்டதும் அஞ்சி நடுங்கினார்கள். யாது செய்வதென அறியாது மயங்கிய நிலையில், நான்முகனை வேண்ட; அவர் தேவர்களை எறும்பு வடிவம் எடுத்து இறைவனை வணங்குமாறு வழிகாட்ட, தேவர்களும் எறும்புகளாகிச் சிவலிங்கத்தை வழிபட்டு மகிழ்ந்தனர். தேவேந்திரன் சிவலிங்கத்தின் மீதேறி உச்சியை அடைய முடியாது தவித்த போது, சிவலிங்கமே சற்றுச் சரிந்து கொடுத்து தேவேந்திரன் உச்சியை அடைய உதவியதாகவும், அதனாலேயே இத்திருத்தலம் திரு எறும்பீசர் திருக்கோயில் என்று வழங்கப்படுவதாகவும் இக்கதை தெரிவிக்கிறது.[2] இன்னொரு கதை தேவர்களும் இந்திரனும் எறும்பு வடிவில் வழிபட்டதாகவும், அசுரர்களில் ஒருவனான கரனும் எறும்பு வடிவில் வழிபட்டதாகவும் மாற்றிக் கூறுகிறது.[3]

நூற்று இருபதடி உயரமுள்ள குன்றின் மீது அமைக்கப்பட்டிருக்கும்[4] இக்கோயிலின் அடிவார நுழைவாயில், குன்றின் கிழக்குப் புறத்தில் அமைந்துள்ளது. இதன் இடப்புறத்தில் செல்வ விநாயகருக்கென்று ஒரு சிறு தனிக் கோயிலும், வலப்புறத்தில் ஆஞ்சநேயருக்கென்று ஒரு சிறு கோயிலும் உள்ளன. மலைக்கோயிலின் அடிவார வாயில் ஒரு மண்டபமாய் அமைக்கப்பட்டுள்ளது. இங்கிருந்துதான் மலையேறிச் செல்ல வாய்ப்பாகப் படிக்கட்டுகள் தொடங்குகின்றன. இவ்வாயிலின் வெளியே உள்ள அறிவிப்புப் பலகை, இக்கோயில் பாதுகாக்கப்பட்ட பழங்கோயிலாக மைய அரசின் தொல்பொருள் துறையினரால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் செய்தியை உணர்த்துகிறது. இம் மண்டபத்தின் மேற்குப் புறச் சுவரின் சுண்ணாம்புப் பூச்சில் மறைந்திருந்த அரியப்ப உடையாரின் மிக நீளமான கல்வெட்டொன்று டாக்டர்

மா. இராசமாணிக்கனார் வரலாற்றுப் பேரவையைச் சேர்ந்த செல்வி மு. நளினி அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.[5] இதுவரை படியெடுக்கப்படாத இக்கல்வெட்டு பல செய்தி களைத் தருகிறது.[6]

இந்த அடிவார வாயிலில் நுழைந்து நூற்றுப் பதினைந்து படிகள் ஏறினால் குன்றின் உச்சியை அடையலாம். மலைப் பாதையின் நடுவே களைப்பாறவும் இளைப்பாறவும் சிறு மண்டபமொன்று உள்ளது. இளங்காலைப் போதும் அந்திப் போதும் அள்ளித் தெளிக்கும் ஆயிரமாயிரம் அழகுகளைக் காண விரும்புவோர், அந்த நேரங்களில் இந்தக் குன்றின் மீதேறினால் மகிழ்ச்சிக் கொள்ளையில் திளைத்துப் போவார் கள். எத்தனை சுகமான காற்று! தழுவும் தென்றலையும் அள்ளித் தூக்கும் ஆவேசக் காற்றையும் ஒரு சேர அனுபவிக்க லாம். சுற்றிலும் பார்த்தால் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஓவியக் காட்சிகள். எந்த ஓவியனும் தீட்ட முடி யாத அற்புத அழகுகள்! இவற்றையெல்லாம் சொல்லில் விளக்கிக்கொண்டிருப்பது இயலாத செயல் மட்டுமன்று; தேவையற்றதும் கூட, பார்த்து மகிழத்தானே, பாடுபட்டு இம்மலைமேல் கோயில் எழுப்பியிருக்கிறார்கள். வெறும் மலையென்றால் ஏறமாட்டார்கள் என்றுதானே, இறைவனை வணங்க வேண்டுமென்பதற்காகவாவது இவர்கள் மலை மீது ஏறி, உடலுக்கும் பயிற்சி தந்து, உள்ளத்துக்கும் மகிழ்வு பெறட்டுமென்று கோயிலை மலைமீது கட்டியிருக்கிறார்கள். ஆனாலும் என்ன பயன்? இறைவனை வணங்கவும். இயற் கையை இரசிக்கவும் கூட மலையேற விரும்பாத மகானுபவர் கள் நம்மில் எண்ணிக்கையில் அதிகமாகவே இருக்கிறார்கள்.

மலைக்கோயிலை நெருங்கும் இடத்தில், இதன் வட புறத்தே குன்றின் மீது, சீர் குலைந்து சின்னா பின்னமான நிலையில், ஒரு கட்டடச் சிதைவு காணப்படுகிறது. அடித் தளமும், தாங்குதளமும் சில தூண்களை மட்டும் வைத்துக் கொண்டு, அக்கால நினைவுகளைப் பகிர்ந்துகொள்ளும் ஆவலுடன் பரிதவித்து நிற்கின்றன. அருகே சென்று பார்த் தால் வீழ்ந்திருக்கும் தூண்களும், விரிசல் விட்ட பலகைகளும்

இறைந்து கிடக்கும் பாறைகளும், மண்டிக் கிடக்கும் புதர்களுமாய், அந்த இடமே ஒரு வரலாற்றுப் புதையலாய் விளங்குவதை உணரலாம். இதன் மேற்குப் புறத்தில், இடிந்த மதிலின் எச்சங்களை இன்றும்காணலாம். இது இக்கட்டடத்தின் வடபுறச் சுவரின் தொடர்ச்சி. இத்தொடர், கோயிலின் வடபுற மதில் வரை நீள்கிறது. இந்தக்கட்டடச் சிதைவு இக்கோயில் கல்வெட்டுகளில் குறிக்கப்படும் சத்திரமாக இருக்கலாம். கோயிலைச் சேர்ந்த சிலர், இது அம்மன் கோயிலாக இருந்ததாகவும், இது சிதைந்த பின்னரே, மலைக்கோயில் வளாகத்தில் புதிய அம்மன் கோயில் எழுப்பப்பட்டதாகவும் கூறுகிறார்கள். இது பொருத்தமாக இல்லை. இன்று எஞ்சி நிற்கும் சிதைவுகளைக் கொண்டு பார்க்கும்போது, இது ஒரு செவ்வகக் கூடமாக இருந்திருக்க வேண்டுமென்றுதான் தோன்றுகிறது. கோயிலுக்குரிய அமைப்பு முறைகளே இல்லாத இந்தக் கட்டடத்தைக் கல்வெட்டுகள் குறிக்கும் சத்திரமாகக் கொள்வதுதான் பொருந்தும். மேலும் மலைக் கோயில் வளாகத்திலேயே சத்திரம் அமைந்திருந்தமைக்கான வேறு சான்றுகள் இல்லாமையாலும், பல கல்வெட்டுகள் குறிக்கும் இச் சத்திர அமைப்புக்கான சுவடுகள், இக் குன்றின் வேறெந்த இடத்திலும் தென்படாமையாலும், இக் கட்டடச் சிதைவையே திருமலை மேல் ஒரு காலத்தில் அமைந்திருந்த சத்திரமாகக் கொள்ளலாம்.

இந்தச் சத்திரத்திற்குச் சற்றுக் கீழே, வடபுறத்தே சிறிய கற்றளியொன்று அமைந்துள்ளது. இதை வட கைலாசம் என்று குறிப்பிடுகிறார்கள். பிற்பட்ட காலத்துக் கட்டட அமைப்பில் இருக்கும் இக் கோயிலில் கல்வெட்டுகள் ஏதுமில்லை. கிழக்கு நோக்கியிருக்கும் இதன் முன்மண்டபம் மிகச் சிறியது. மகா மண்டபத்தில் தெற்கு நோக்கிய நிலையில் அம்மன் திருமுன் அமைந்துள்ளது. வட கைலாசத்து அம்மன், பார்வதியம்மன் என்ற பெயர்களுடன் இத்தேவி விளங்குவதாக சிவாச்சாரியார்கள் குறிப்பிட்டனர். கருவறையில் இறைவன் லிங்கத் திருமேனியராய்க் கைலாசநாதர் என்ற திருப்பெயருடன் எழுந்தருளியுள்ளார்.

எறும்பீசர் திருக்கோயில், குன்றின் உச்சியில், கம்பீரத் தோற்றத்துடன், பெரிய மதில் சுவருக்குள் பாதுகாப்புடன் அமைந்துள்ளது. வடபுறத்தே உள்ள வாயில், மலைக் கோயில் வளாகத்துள் நம்மை அழைத்துச் செல்கிறது. உள் நுழைந்ததும் வலப்புறம் மையக் கோயிலும், இடப்புறம் அம்மன் திருக்கோயிலும் அமைந்திருப்பதைக் காணலாம். அம்மன் கோயில் அண்மையில் சீரமைக்கப்பட்டுள்ளது. தெற்கு நோக்கி அமைந்துள்ள இக்கோயிலின் மகாமண்டபத்தில் சிதைவுற்ற அம்மன் திருமேனியும், உள்மண்டபத்தை அடுத்த கருவறையில் புதிய அம்மன் திருமேனியும் காணப்படுகின்றன. நறுங்குழல் நாயகி என்ற நல்ல தமிழ்ப் பெயருடன் காட்சி தரும் கருவறைத் தேவியின் இரு பின் கைகளும் மலர் மொட்டு கொண்டிருக்க, வல முன் கை, காக்கும் முத்திரையிலும் இட முன்கை அருள் முத்திரையிலும் காட்டப்பட்டுள்ளன. சடாமகுடத்துடன் இருக்கும் இத்தேவியின் உள்மண்டபத்தில் சிறியதொரு பிள்ளையார் வடிவமும் காணப்படுகிறது. இக்கோயில் புறச்சுவர்களின் வடிப்பழகு சிறப்பாக உள்ளது. பிற்காலத்திய அமைப்பென்றாலும், கட்டடக்கலை நுணுக்கங்கள் கவினுற அமைந்துள்ளன. சிகரம் நாகரமாய் உள்ள இக்கோயிலின் கிழக்குப் புறத்தில் சண்டேசுவரருக்கென்று ஒரு சிறு கோயிலும் உள்ளது. அதையொட்டிய மதிலுக்கருகே பட்டுப்போன வில்வமரமொன்றும், அதன் அடியில் கல்வெட்டுச் செய்திகளுடன் சிதறிக் கிடக்கும் கற்பாறைகளும் இக்கோயிலின் பழமைக்கும், சரியான பராமரிப்பின்மைக்கும் சான்றுகளாய் விளங்குகின்றன.

கிழக்கு மதிலில் ஒரு சாளரம் அமைந்துள்ளது. இதன் வழியே திரு எறும்பியூரின் பரபரப்பான நீகழ்வுகளையும், சற்றே வடபுறம் கண்களைத் திருப்பினால் எழில் கொஞ்சும் காட்சிகளையும் காணலாம். கொடித்தூண், பலிபீடம், சிறு மண்டபத்துள் நந்தி ஆகியவை மையக் கோயிலுக்கு முன்னால் அமைந்துள்ளன. வெளித் திருச்சுற்று புல் முளைத்து நடப்பதற்குச் சற்று அருமைப்பாடு உடையதாய் உள்ளது. இத்

திருச்சுற்றில் உள்ள கோயிலின் தென்புறச் சுவரில், இதுவரை படியெடுக்கப்படாத மூன்றாம் இராசராசனின் முப்பத்தெட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றையும், மேற்குப் புறச் சுவரில் அதே மன்னனின் முப்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டையும், மாறவர்மன் திரிபுவனசக்கரவர்த்தி சுந்தர பாண்டியனின் பதினெட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டையும் செல்வி. மு. நளினி கண்டுபிடித்தார்.[7] இவை உடனே படிக்கப்பட்டுப் படியெடுக்கப்பட்டன.

படியெடுக்கப்பட்ட இக் கல்வெட்டுகள் தவிர, மேற்குப் புறச் சுவரின் மேல்மட்டத்தில் அமைந்துள்ள கற்களிலும் பல கல்வெட்டுச் செய்திகள் துணுக்குகளாகக் காணப்படுகின்றன. உயரம் காரணமாக இவற்றைப் படிக்க முடியவில்லை. சீரமைப்பின் போது கற்கள் மாற்றியமைக்கப்பட்டமையால் தொடர்பின்றிக் காணப்படும் இக் கல்வெட்டுத் துணுக்குகளைப் படித்தால் இக்கோயிலைப்பற்றிய செய்திகள் மேலும் சில கிடைக்கலாம்.

மையக் கோயிலின் நுழைவாயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. சாலை அமைப்புடன் கூடிய முப்பதடி உயர கோபுர நுழைவாயில் கோயிலின் முகமண்டபத்திற்குள் நம்மை எதிர்கொண்டழைக்கிறது. இம் மண்டபத்தின் தொடர்ச்சியே மையக்கோயிலின் உள் திருச்சுற்றாய் அமைந்துள்ளது.

இம் முகமண்டபத்தில் நுழைந்ததும், நமக்கு இடப்புறம் மேற்குப் பார்த்த நிலையில் முருகரைக் காணலாம். வல முன் கை காக்கும் குறிப்பு காட்ட, இட முன் கை கட்யவலம்பிதமாய் அமைய, வலப் பின் கையில் பரசுவா, அங்குசமா என்று இனம் பிரித்தறிய முடியாத நிலையில் பொரிந்து போயுள்ள கருவியொன்று இருக்க, இடப் பின்கையில் அக்கமாலை கொண்டுள்ளார். மண்டபத்தின் வலப்புறம், உள் திருச்சுற்றின் தென்பால் மடைப்பள்ளிக்குச் செல்லும் வாயில் அமைந்துள்ளது. இவ்வாயிலுள் நுழையும் நம்மை மடைப்பள்ளியும் சுரங்கமொன்றும் எதிர்கொள்கின்றன. சுரங்கத்தில் சில

படிகள் கீழிறங்கினால், குன்றினுள் குடைந்து அமைக்கப்பட்டிருக்கும் இரு செவ்வகமான கூடங்களைக் காணலாம். முன் கூடம் சற்றுச் சிறியதாகவும். உள் கூடம் சற்றுப் பெரியதாகவும் உள்ளன. இரு கூடங்களிலுமே, கூரைகளைத் தாங்க வாய்ப்பாகத் தூண்கள் செதுக்கப்பட்டுள்ளன. திறப்புகள் ஏதும் இல்லாமையால் இக் கூடங்கள் இருளில் மூழ்கியுள்ளன. இவை இக் கோயிலின் பண்டார அறைகளாக இருந்திருக்க வேண்டும். சாளர அமைப்புகளோ வேறுவிதத் திறப்புகளோ இருந்திருப்பின் இக் கூடங்களைக் 'குகைகள்' என்ற பெயரில் வழங்கப்பட்ட மடங்களாகக் கூடக் கருதலாம்.[8] ஆனால் ஒரு வழி அமைப்பு மட்டும் கொண்டு குடையப்பட்டிருக்கும் இக் கூடங்கள், பண்டாரப் பயன்பாட்டுக்கன்றி வேறெதற்கும் உதவியிரா என்பது உறுதி. பொன்னும், பொருளும், ஓலைச் சுவடிகளும் நிறைத்து வைக்கப்பட்டிருந்த இக்குகை மண்டபங்கள் இன்று வெளவால்களின் வாழிடங்களாக மாறியுள்ளன.

மையக் கோயிலின் மகாமண்டபம். கருவறை இவற்றின் புறச்சுவர்களில் கோட்டப் பஞ்சரங்கள் அழகுபட அமைந்துள்ளன. உள் மண்டபத்துத் தேவ கோட்டங்களில் தென் புறம் ஆடும் கோலத்தில் பிள்ளையாரும், வடபுறம் கொற்றவையும் இடம் பெற்றுள்ளனர். கருவறைப் புறச்சுவர் தேவ கோட்டங்களில் தென்புறம் ஆலமர் அண்ணலும், மேற்குப் புறம் அரி அரரும், வடபுறம் நான்முகனும் காட்சியளிக்கின்றனர். தென்புறக் கோட்டத்து ஆலமர் அண்ணல் அண்மையில் நிறுவப்பட்டவர். இவரது திருமேனிக்குப் பின்னால் பழைய சிற்பமொன்று காணப்படுகின்றது. மேற்குக் கோட்டத்து அரி அரர் சோழர் காலத்துச் சிற்ப அற்புதம், வலப் புறம் சிவபெருமானும், இடப்புறம் திருமாலுமாய், இரு பெரும் இறைத் தத்துவங்களை ஒரே கல்லில் வடித்து, கடவுள் தோற்றத்துக்கே ஓர், அதிசயப் பொருளை அமைத்துத் தந்திருக்கும் அழகிய வடிவமிது. சிவனாருக்குரிய வலக் கைகளில் முன்கை சிதைந்துள்ளது. இக் கை காக்கும் குறிப்பில் இருந்திருக்க வேண்டும். பின்கையில் பரசு உள்ளது.

திருமாலுக்குரிய இடக் கைகளில் பின் கையில் சங்கு உள்ளது. வலக்கை கட்ய வலம்பிதமாய் உள்ளது. வலப்புறத்தில் அரையாடையும், இடப்புறத்தில் கணுக்கால் வரை நீண்ட பட்டாடையும் அணிந்துள்ள இச்சிற்பத்தின் ஆடையணிவகைகள் நுணுக்கமாகச் செதுக்கப்பட்டுள்ளன. முகப் பொலிவிலும் வலப்புறம் இடப்புறம் சிறுசிறு வேறுபாடுகள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அம்மையப்பர், அரி அரர், அல்லூர் நக்கன் கோயிலில் காணப்படும் கதிர்நிலவர் (சூரிய சந்திரர்)[9] போன்ற தெய்வத் திருமேனிகள் சமய ஒருமைப் பாட்டுணர்வுக்கும், ஆண் பெண் ஒன்றென்ற உயரியநோக்கிற்கும் அடித்தளமாய் அமைக்கப்பட்டவை. ஆழமான சிந்தனையோட்டத்தின், ஆக்கபூர்வமான இப் படைப்புகளைச் சமுதாயக் கண்ணோட்டத்திலும், அறிவியல் பார்வையிலும் ஆராயப்புகின், தத்துவமும் வாழ்வியலும், சிற்பாசிரியர்களால் எப்படிப் பின்னிப் பிணைக்கப்பட்டுப் புதுப்பிறப்பெடுத்துள்ளன என்பதைத் தெள்ளிதின் உணரலாம். கால ஓட்டத்தின் கடுமையில், கருத்து வேறுபாடுகள் மனித சிந்தனைகளை மண்மூடிப் போகச் செய்து விடக்கூடாது என்ற ஆன்ம வேகத்தில் எழுந்த அருமையான ஆன்மிகப் படைப்புகள் இவை. வெறும் சிற்பங்களாகவே இவற்றைக் காண்பதும், இவற்றைச் சுற்றி வளைத்துச் சில கதைகளை மட்டுமே சுழல விடுவதும், இவ்வரிய சிற்ப வடிவங்களைப் பிறப்பித்த சிந்தனையாளர்களின் உள்ளப் பாங்குகளை நாம் உணராமற் போனமையினால்தான், சமய உண்மைகளையும், சிற்பப் படிமங்களையும் அறிவியல் அடிப்படையில், வாழ்வியலுக்கு வளமூட்டக்கூடிய வகைகளில் ஆராய வேண்டிய அவசியம் நேர்ந்துள்ளதை இன்னமும் கூட நாம் விளங்கிக்கொள்ளாமல் இருப்பதுதான் வேதனையைத் தருகிறது. காலக்கனிவு இதற்கொரு முடிவு கட்டும் என்று நம்புவோமாக.

சுற்றாலைத் தெய்வங்களாக எழுவர் நங்கையர் தென்புறத் திருச்சுற்றிலும், பிள்ளையார், காசி விசுவநாதர், வள்ளி தெய்வானையுடன் கூடிய முருகர், யானைத் திருமகள் மேற்குத் திருச்சுற்றிலும், சண்டேசுவரர் வடபுறத் திருச்

சுற்றிலும் இடம் பெற்றுள்ளனர். முகமண்டபத்தின் வடகிழக்குப் பகுதியில் பிள்ளையார், சந்திரன், லிங்கத் திருமேனி, பைரவர், ஒன்பான் கோள்கள் முதலிய சிற்பங்களும், ஆடவல்லானுக்குத் தனி உட்கோயில் ஒன்றும் உள்ளன. இங்குள்ள சந்திரன் திருமேனியைக் கோயிலார் கதிரவன் என்கிறார்கள். இக்குழப்பம் பல கோயில்களில் உள்ளது. கதிரவன் திருக்கைகளில் மலர்ந்த தாமரைகளும், நிலவின் கைகளில் மலர் மொட்டுகளும் காட்டப்படுமென்பது ஆகம வரையறை. 10
ஆகம வரையறைப்படி அமைந்த அழகான கதிரவன் சிற்பங்களைத் தஞ்சைப் பெரிய கோயில், தில்லைக் கோபுர அடித்தளம், குடந்தை நாகேசுவரர் கோயில், பழுவூர் அவனி கந்தர்ப்ப ஈசுவரம் போன்ற பல இடங்களில் காணலாம். என்ன காரணத்தாலோ, சில கோயில்களில், ஆகம அடிப்படைகளைச் சரியாக விளங்கிக்கொள்ளாத சிலர் சிற்பங்களை இனம் பிரித்தறிய மயங்கித் தவறான அறிவிப்புப் பலகைகளைக் கடவுள் திருமேனிகளுக்கருகே வைத்துவிடுகிறார்கள். பொது மக்களும் தவறாகவே புரிந்துகொண்டு வணங்கும் துன்பநிலை தொடர்கிறது. சிவாச்சாரியார்களும், கோயில் அதிகாரிகளும் இணைந்து இத்தகு தவறுகளைக் களைதல் மிகமிக இன்றியமையாத செயலாகும். நாம் வணங்கும் தெய்வம் இதுதான் என்பதைக்கூடப் பிழையறத் தெரிந்துகொள்ளாமல் வணங்கும் அறியாமை எத்தனை துன்பமானது!

ஆடவல்லான் கோயிலில் அம்மையும், ஆனந்தத் தாண்டவரும் அழகுறக் காட்சியளிக்கின்றனர். முயலகன் படுத்த நிலையில் இருக்க, இறைவனின் வலக்கால் முயலகனின் முதுகின் மீது அழுத்த, இடக்கால் வலப்புறமாய் வீசப்பட்ட நிலையில் ஆனந்தத் தாண்டவம் அரங்கேறும் அழகைக் காணலாம். இறைவனின் வல முன்கை காக்கும் கையாக, இட முன்கை வேழமுத்திரை காட்டுகிறது. பின்கைகளில் வலப்புறம் துடியும், இடப்புறம் தீச்சுடரும். வல முன்கையில் பாம்புக் கங்கணம், கொக்கிறகும் ஊமத்தம்பூவும் சூட்டப்பட்ட தலைமுடிகள் காற்றில் பறக்க, இடையாடை ஆட்ட வேகத்தில் அசைந்தாடித் திருவாசியைத் தொடுவது போல

இத்திருமேனியை வார்ப்பறிஞர் உருவாக்கியிருக்கிறார். ஆடவல்லான் முகத்தில் மின்னும் அமைதிப் புன்னகையும், கருணை பொலிந்த அருட்பார்வைக் குறிப்பும் அநுபவித்து மகிழத் தக்கவை. இறைவனின் இடப்புறத்தே, வலக்கை கடக முத்திரையில் இருக்க இடக்கையைத் தொங்கும் கையாகக் கொண்டு, அம்மை காட்சி தருகிறார். தம் நெஞ்சாளும் தலைவரின் ஆடலழகில் தம்மையே பறிகொடுத்த மயக்கத்தில், தளும்பும் பெருமித மகிழ்வுடன் இந்தத் தலைவி குழைந்து நிற்கிறார். இருவரையும் போற்றிப் பரவும் திருவாசக மணிவாசகப் பெருமானும் செப்புத் திருமேனியராய் உடன் நிற்கிறார். இவர்களுடன் பிள்ளையார், அதிகாரநந்தி, சந்திரசேகரர், வள்ளி தெய்வானையுடன் முருகர், இப்படிப் பல திருமேனிகள் செப்புப் படிமங்களாய் இங்குள்ளன.

இறைவன் திருமுன்னையடைய முகமண்டபத்திலிருந்து மகாமண்டபத்துக்குள் நுழைய வேண்டும். இக்கோயிலின் எழில் மிக்க செப்புத் திருமேனிகளை இங்குக் காணலாம். உள் மண்டபத்து நுழைவாயிலின் இருபுறமும் நிற்கும் வாயிற் காப்போர் சிற்பங்கள் முற்காலச் சோழர்களின் சிற்பக்கலைத் திறனுக்குச் சிறப்பான எடுத்துக் காட்டுகளாய் விளங்குகின்றன. வலப்புறமிருக்கும் வாயிற் காப்போனின் வலக்கை சுட்டு முத்திரையிலும், இடக்கை கதையொன்றைப் பிடித்த படியும் உள்ளன. வலக்கால் மட்டும் சற்று உயர்த்திய நிலையில் கதையின் மீது ஊன்றியுள்ளது. கால்களை வீரக் கழல்கள் அணி செய்கின்றன. விரிந்த தலைமுடிச் சுருள்களில் இடப்புறம் ஒரு பாம்பு காட்டப்பட்டுள்ளது. செவியிரண்டிலும் ஆந்தைக் குண்டலங்கள் ஆட, கடுமையான முகத்தில் இலேசான கவர்ச்சிப் புன்னகையும் சிந்தி நிற்கும் இச் சிற்பத்தின் திருமேனியில் பல அணிகளைக் காணலாம். இடப்புறம் இருக்கும் வாயிற்காப்போனின் வலக்கை கதையின் மீதிருக்க, இடக்கை வியப்பு முத்திரை காட்டுகிறது. இடக்கால் உயர்ந்து கதையின் மீது ஊன்றப்பட்ட நிலையில், கோரைப் பற்களும் இலேசான நகைப்புமாய் நிற்கும் இச் சிற்பமும், இதன் வலப்பக்கத் துணையும் கருவறையின்

காவலராய் நின்று, காலம் காலமாய் ஊழியம் செய்து வரும் உன்னதக் கலைப்படைப்புகள்.

கருவறையில் இறைவன் அருள்மிகு எறும்பீசராய், உளி படாத திருமேனியராய், இலிங்கவடிவில், இடப்பக்கம் சற்றே சாய்ந்த நிலையில் காட்சியளிக்கிறார். இலிங்கத்திருமேனியின் உச்சியில் சிறு பிளவொன்றும், குழிந்த பகுதியும் காணப்படுகின்றன. திருமுழுக்காட்டுகள் ஆவுடையாருக்கே செய்யப்படுவதாகக் கோயிலார் கூறுகின்றனர்.

இக்கோயிலில் இருந்து மைய அரசின் கல்வெட்டுத் துறையினரால் நாற்பத்தொன்பது கல்வெட்டுகளும்,[11] டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றுப் பேரவையினரால் நான்கு புதிய கல்வெட்டுகளும் படியெடுக்கப் பட்டுள்ளன.[12] இந்த ஐம்பத்து மூன்று கல்வெட்டுகளும் முதலாம் ஆதித்தன் காலந்தொட்டு, அரியப்ப உடையார் காலம் வரை, இக்கோயிலிலும், இக்கோயிலைச் சார்ந்து வாழ்ந்த சமுதாயத்திலும் நிகழ்ந்த நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

## அரசியல் செய்திகள்

முதலாம் ஆதித்தனின் பதினெட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, இக்கோயிலைக் காவிரியின் தென்கரையிலுள்ள ஸ்ரீகந்த சதுர்வேதி மங்கலத்து மலை மேல் அமைந்திருக்கும் தென் கைலாயத்து மகாதேவர் கோயில் என்று அறிமுகப் படுத்துகிறது.[13] முதலாம் இராசராசனின் இருபத்தைந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, இக்கோயில் தென்கரை பாண்டி குலாசனி வளநாட்டிலுள்ள, விளாநாட்டைச் சேர்ந்த பிரம்ம தேயமான ஸ்ரீகந்த சதுர்வேதி மங்கலத்தில் இருப்பதாகக் குறிப்பிடுகிறது.[14] மூன்றாம் இராசராசன் காலத்தில் மலாரி என்றழைக்கப்பட்ட இச்சதுர்வேதி மங்கலம்,[15] சோழப் பேராட்சிக் காலம் முழுமையும் பிரம்மதேயமாகவே இருந்து வந்ததைப் பல கல்வெட்டுகளால் அறியலாம். இச்சதுர்வேதி மங்கலம் அமையப்பெற்றிருந்த வளநாட்டின் பெயரும்

அரியப்ப உடையார் காலம் வரையிலும் எம்மாற்றமும் அடையாமல் தென்கரை பாண்டி குலாசனி வளநாடாகவே அழைக்கப்பட்டு வந்துள்ளது.[16] இக்கோயில் அமையப் பெற்றிருந்த நாட்டின் பெயர் மட்டும் விளாநாடு,[17] கவிர நாடு,[18] மீகோலை நாடு[19] எனப் பல பெயர் மாற்றங்களைப் பெற்று விளங்கியதை முதலாம் இராசேந்திரன், மூன்றாம் இராசராசன் ஆகியோரின் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. இக்கோயில் இறைவனுக்குத் தென் கைலாயத்து மகாதேவர், திரு எறும்பியூர் ஆழ்வார், மலைமேல் மகாதேவர், திரு எறும்பியூர் உடைய நாயனார், ஆழ்வார் திரிபுவன சுந்தரர் என்று பல பெயர்கள், பல பேரரசர்களின் காலங்களில் வழங்கியதை அறிகிறோம்.[20]

ஸ்ரீகந்த சதுர்வேதி மங்கலத்தைத் தவிர, வேறு மூன்று சதுர்வேதி மங்கலங்களின் பெயர்களும் திருஎறும்பியூர்க் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று உத்தமசீலி சதுர்வேதி மங்கலம் கண்டராதித்தனுடையதாகக் கருதப்படும் ராசகேசரிவர்மனின் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு உத்தமசீலி சதுர்வேதி மங்கலத்திலிருந்த முருக்கூர் என்னும் சிற்றூரைக் குறிப்பிடுகிறது.[21] உத்தமசீலி முதற் பராந்தகனின் மகன் என்பதும், கண்டராதித்தரின் தமையன் என்பதும் இங்கு நினைவு கொள்ளத்தக்கன. இந்த உத்தமசீலி சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் நடந்த போரில் வீரபாண்டியனால் கொல்லப்பட்டதாக அறிஞர்கள் கருதுவர்.[22]

புதிதாகப் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளால் எதிரிலிச் சோழ சதுர்வேதி மங்கலமும், சோழமாதேவி சதுர்வேதி மங்கலமும் அறிமுகமாகின்றன,[23] எதிரிலிச் சோழன் என்ற பெயரில் சோழப் பேராட்சியில் இரு பெருமைக்குரியவர்கள் வாழ்ந்திருக்கின்றனர். ஒருவர் எதிரிலிப் பெருமாள் என்ற இயற்பெயரைக் கொண்டிருந்த இரண்டாம் இராசாதிராசன்.[24] மற்றொருவர் இரண்டாம் இராசாதிராசனின் சிற்றரசராக இருந்த செங்கேணி அம்மையப்பர் எதிரிலிச் சோழச் சம்புவரையர்.[25] இவ்விரு

வருள் இரண்டாம் இராசாதிராசன் பெயரே இச் சதுர்வேதி மங்கலத்திற்கு வழங்கப் பட்டிருக்க வேண்டும். இதே பெயரில் திருமழபாடிக்கருகே ஒரு சதுர்வேதி மங்கலமும்[26] அம்பர் நாட்டில் ஓர் ஊரும் கோயிலும்[27] இருந்ததைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. திருச்சிக்கு அருகிலுள்ள புலிவலத்தில் காணப்படும் சுப்பிரமணியசாமி கோயில் கல்வெட்டொன்றும் 'எதிரிலிச் சோழனவன் வளமலை செய்ய' என்ற சொற்றொடரைக் கொண்டிருப்பது இங்கு நினைக்கத் தகுந்தது.[28] சோழமாதேவிச் சதுர்வேதி மங்கலம் மூன்றாம் இராசராசன் கல்வெட்டுகளில் காணப்படுவதால், இது அம்மன்னனின் தேவியின் பெயரால் ஏற்பட்டதாகக் கொள்ளலாம்.

இக் கோயிலுக்குக் கொடைகளை அள்ளிக் கொடுத்த வள்ளல் பெருமகனாய்க் கல்வெட்டுகள் கொண்டாடிப் போற்றும் செம்பியன் வேதிவேளான், கிளியூர் நாட்டிலுள்ள சிறுதாவூரைச் சேர்ந்தவராகக் குறிக்கப்படுகிறார்.[29] இவருடைய கொடைகளைச் சுட்டும் கல்வெட்டொன்றால் பெருவேங்கூர்[30] என்றொரு சிற்றூரின் பெயரும் நமக்குக் கிடைக்கிறது. இப் பெருவேங்கூர் திருஎறும்பியூருக்கும், கல்லணைக்கும் இடைப்பட்ட பகுதியில் இன்றும், வேங்கூர் எனப்பெயர் சிதைந்து மிகச்சிறிய ஊராய்க் காட்சியளிக்கிறது.

பாண்டிய மன்னன் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, தென் களவழி நாட்டிலுள்ள எருமைக்குளம் என்னும் சிற்றூரைக் குறிக்கிறது[31] இதே கல்வெட்டு, இவ்வூரை விழாவொன்றிற்குக் கொடையாக வழங்கிய போது பாண்டிய மன்னன், தன் பள்ளியறையிலுள்ள மழவராயன் என்னும் அரியணையில் வீற்றிருந்த சுவையான தகவலைத் தருகிறது. கல்வெட்டறிக்கையில் அரியணை மனித வடிவம் எடுத்துள்ளது. அதாவது பாண்டியனின் ஆணையை மழவராயன் நிறைவேற்றியதாகக் கல்வெட்டறிக்கை கூறுகிறது.[32] இந்தக் கல்வெட்டை நேரில்

சென்று படித்த பிறகுதான் கல்வெட்டறிக்கையின் பிழை புரிந்தது.

இராசராசதேவனின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, பாண்டி மண்டலத்துத் திருநெல்வேலியை அறிமுகம் செய்கிறது. இவ்வூரைச் சேர்ந்த கொடையாளி ஒருவர் இக்கோயிலுக்கு விளக்குநிலை ஒன்றை வழங்கியுள்ளார்.[33]

இக்கோயில் கல்வெட்டுகளால் எறும்பியூரில் ஊரவை அமைப்பும், ஸ்ரீகந்த சதுர்வேதி மங்கலத்தில் பெருங்குறி சபையும் இருந்து ஆட்சி நடத்திய பாங்கு தெரிய வருகிறது.[34] ஊரவை உறுப்பினர்கள் எறும்பியூர் கிராமத்தைச் சேர்ந்தவர்களாகவும், ஸ்ரீகந்தசதுர்வேதி மங்கலத்தில் வாழ்ந்த அந்தணர்கள் பெருங்குறி சபை உறுப்பினர்களாகவும் இருந்தனர்.[35] வழக்கமான அலுவல்களை இரு அவைகளும் தத்தம் போக்கில் செய்து வந்ததையும், பிரச்சினைக்குரிய நிகழ்வுகளை இரு அவைகளும் கலந்து பேசி முடித்து வைத்ததையும் கல்வெட்டுகளால் அறிகிறோம். கோயிலுக்குரிய சொத்துக்களின் மீது வரி விதிக்கக்கூடாது என்று ஊரவை நிறைவேற்றிய தீர்மானத்தை இராசகேசரிவர்மனின் ஐந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு உணர்த்துகிறது.[36] ஊரிலிருந்த திருச்சித்திர கூடம் என்ற மன்றில் கூடி, ஊரின் செயல் பாடுகளை விவாதித்து, ஊரவை முடிவெடுத்தமையை இருகல் வெட்டுகளும்,[37] சில போதுகளில் திருமேற்கோயில் ஆழ்வார் திருக்கோயிலில் கூடியிருந்து ஊரவை செயல்பட்டமையை இருகல்வெட்டுகளும் எடுத்துரைக்கின்றன.[38]

முதலாம் இராசராசனின் இருபத்தேழாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு அவ் வேந்தனின் சுற்றுப் பயணமொன்றையும், அது போழ்து இக்கோயில் கணக்குகள் கலி ஆதித்தன் என்பவரால் தணிக்கை செய்யப் பட்டதையும் கூறுகிறது.[39] ஊராட்சி அமைப்புகளை, அரசு மேலாண்மை அவ்வப்போது மேற்பார்வையிட்ட நிலையும், அதே நேரங்களில் கோயில் பண்டாரங்களும், கணக்கு வழக்குகளும் சரியாக உள்ளனவா

என்பதை அரசு அலுவலர்கள் தணிக்கை செய்த முறையான போக்குகளும் நம்மை வியக்க வைக்கின்றன.

இக்கல்வெட்டுகளால் வலவூர், கிளியூர், சிறுதாவூர், பேரளத்தூர், காவனூர், திருவாய்ப்பாடி, திருவெள்ளறை, மழபாடி, நெற்குன்றம், எருமணம், திம்மிக்குடி, திருவரங்கம், கூத்தப்பார், வேம்பற்றூர், பெருநல்லூர், கோட்டையூர், ஆதனூர், கண்டியூர், வங்கிபுரம், புள்ளமங்கலம், துறையூர், ஆத்தூர் என்னும் ஊர்ப் பெயர்கள் நமக்குக் கிடைக்கின்றன.[40] இவற்றுள் பெரும்பாலான ஊர்ப் பெயர்கள் இன்றும் அப்படியே சிதையாது வழங்குவது குறிப்பிடத்தக்கது. காவிரி, பாலாறு, வரடாறு என்னும் ஆற்றின் பெயர்களும், பல வாய்க்கால்களின் பெயர்களும், கல்வெட்டுகளில் காணக்கிடகின்றன. இவ் வாய்க்கால்களுள் கிளியூர் வாய்க்காலும், ஸ்ரீகந்த வாய்க்காலும், சிறப்பிடம் பெறுகின்றன. பல கோயில் சொத்துகளின் எல்லைகளாக இவ் வாய்க்கால்களே பலமுறை குறிப்பிடப்பட்டுள்ளன.[41]

திருவாய்ப்பாடியில் கிருஷ்ணன் கோயிலொன்று இருந்த செய்தியையும்,[42] எறை, எச்சோறு, வெட்டி வேதி, குடிவாரம், வண்ணாரப் பாறை[43] போன்ற பல வரிகள் தண்டப்பட்ட செய்தியையும் சில கல்வெட்டுகளால் அறிகிறோம். நிலவிற்பனைகள் நடந்த முறைகளும், அவை எவ்வாறு பதிவு செய்யப்பட்டன என்பது குறித்த விளக்கமான செய்திகளும், விலை ஆவணங்கள் ஆவணக் களரியில் பாதுகாப்பாக வைக்கப்பெற்ற நிலைகளும் இக்கல்வெட்டுகளில் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளன.[44]

## சமுதாயச் செய்திகள்

திரு எறும்பியூர்க் கல்வெட்டுகளில் பல, மலைமேலிருந்த சத்திரமொன்றைக் குறிக்கின்றன. இச் சத்திரத்தில் உணவிடுவதற்காகப் பலர் கொடையளித்துள்ளனர். இராசகேசரிவர்மனின் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று, இரண்டு அந்தணர்களுக்கும், மூன்று சிவ யோகியர்க்கும் இச் சத்திரத்

தில் உணவிடுவதற்காக நிலக் கொடை தரப்பட்டதையும்,[45] முதலாம் இராசராசனின் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஈழதரையன் புகழ்விப்ப வரகுண்டன் வீரசோழன் என்பாரால் வேதம் வல்ல அந்தணர் அறுவர்க்கு மலைமேல் உள்ள சத்திரத்தில் உணவிடும் பொருட்டுப் பணக்கொடை தரப்பட்டதையும்,[46] இராசகேசரிவர்மனின் ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் இரண்டு வேதம் வல்ல அந்தணர்கட்கு இங்கு உணவிட நிலங்கள் கொடையளிக்கப்பட்டதையும்[47], விக்கிரமசோழனின் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இச் சத்திரத்தில் நாள்தோறும் புதியவர் ஐவர்க்கு உணவிட நிலமளிக்கப்பட்டதையும்[48] எடுத்துக் கூறுகின்றன.

இச் சத்திரத்தில் உணவருந்திய ஒவ்வொருவருக்கும் இரு நாழி அரிசியும், ஒரு காய்கறியும், புளிங்கறி ஒன்றும், புழுக்குக்கறி ஒன்றும், நெய் மற்றும் தயிர், பாக்கு, வெற்றிலை முதலியனவும் வழங்கப்பட்டன. இச் சத்திரத்தைக் கட்டிய பெருமகனாராகக் கல்வெட்டுகள் செம்பியன் வேதி வேளான் என்னும் அறச் சிந்தனையாளரைச் சுட்டுகின்றன. இவர் இக்கோயிலுக்கு ஆற்றிய அருந்தொண்டுகளைப் பின்னால் பார்ப்போம்.

நிலங்களை அளப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட மாளிகைக் கோல், காலக் கோல் என்ற நீட்டலளவைகளைப் பற்றி முதலாம் இராசேந்திரனின் ஐந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும், இராசகேசரிவர்மனின் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் குறிப்பிடுகின்றன.[49] மா, முக்காணி, முக்குறுணி என்னும் நில அளவைகளைப் பற்றியும் சில கல்வெட்டுகள்குறிக்கின்றன[50]. அறக்கட்டளைக்குத்தரப்பட்ட பொன் 'ஊராடு கல்' என்னும் நிறுத்தலளவயால் மதிப்பிடப்பட்டதை ஒரு கல்வெட்டும்,[51] துளைப்பொன், திப்பொக்குச் செம்பொன் உரையும் துளையும் வழுவாச் செம்பொன், என்னும் பொன் வகைகளைப்பற்றி இன்னொரு கல்வெட்டும் எடுத்துரைக்கின்றன.[52] தூயபொன்னைத் துளையும் உரையும் வழுவாச் செம்பொன் என்று குறித்தனர் போலும்.

இராசகேசரிவர்மனின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று, தூணிக் கொள்ளிக் குடத்தினால் ஆற்றிலிருந்து நீர் கொணரப்பட்டு, இறைத்திருமேனிக்கு முழுக்காட்டுகள் நடத்தப்பட்ட செய்தியைத் தருகிறது.[53] பல கோயில் கல்வெட்டுகளில் குறிக்கப்படும் இத் தூணிக் கொள்ளிக்குடம் தெய்வத் திருமேனிகளின் திருமுழுக்காட்டுக்கு நீர் கொணரவே பயன்பட்டது போலும். நெல்லை அளக்கப் பயன்பட்ட தூணிப்பதக்கு என்னும் முகத்தலளவையும், சம்பன் பணம் என்ற நாணயமும் அரியப்ப உடையாரின் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளன.[54]

உழவுத் தொழிலை நம்பியிருக்கும் நாடுகளின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் நீர்ப்பாசன வசதிகள் மிகவும் இன்றியமையாதவையாகும். அதனால்தான் தமிழகத்தை ஆண்ட வேந்தர்கள் பலரும் பொருள் செலவைக் கருதாது, ஏரிகள் வெட்டுவதிலும், குளங்கள் அமைப்பதிலும் கவனம் செலுத்தினர். தமிழகத்துத் திருக்கோயில் கல்வெட்டுகளுள் பல அரசும், ஊரவைகளும் அமைத்த நீர்ப்பாசன வசதிகளைப் பட்டியலிட்டு மகிழ்கின்றன. திருஎறும்பியூர்க் கல்வெட்டுகளும், இச் சிற்றூரிலும் அதைச் சுற்றிலுமாய் வெட்டப்பட்ட வாய்க்கால்களைப் பற்றிக் கூறுகின்றன.[55] இவற்றால் பயன் பெற்ற நிலங்கள் பற்றியும் விளக்கமான செய்திகள் கல்வெட்டுகளால் அறியக் கிடக்கின்றன.

அற்றைநாள் சமுதாயத்தில் மகளிர்க்கிருந்த உரிமைகள் பற்றிச் சில கல்வெட்டுகளால் அறிந்து மகிழ்கிறோம். திம்மிக்குடியைச் சேர்ந்த அந்தணப் பெண்ணொருத்தி மலைமேல் ஆதித்த பட்டாரகருக்குக் கோயில் எழுப்பியதையும், அத்திருமேனிக்குரிய வழிபாட்டிற்கும் விளக்கிற்குமாய் நிலக் கொடை அளித்ததையும், ராசகேசரிவர்மனின் பத்தொன்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு எடுத்துரைக்கிறது.[56] கங்கை கொண்ட சோழபுரத்து, உய்யக் கொண்டான் தெரிஞ்ச திருமஞ்சனத்து வேளத்தைச் சேர்ந்த பணிப்பெண் இக்கோயிலில் விளக்குத் தண்டு ஒன்று அமைப்பதற்காகப் பணக்கொடை அளித்ததை முதலாம் இராசேந்திரனின் ஐந்

தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால் அறிகிறோம்.[57] இக் கோயில் இறைத் திருமேனியை முழுக்காட்டுவதற்கு நாள் தோறும் ஒரு குடம் நீர் கொணரவும், இங்கு விளக்கொன்று எரிக்கவும், திருவரங்கத்தைச் சேர்ந்த சேந்தன் செய்யவாய் மணி என்னும் தேவரடியாள் பத்துக் கழஞ்சு பொன் கொடை யாகத் தந்ததை ராசகேசரிவர்மனின் நான்காம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு களிப்புடன் தெரிவிக்கிறது.[58]

இம்மூன்று கல்வெட்டுகளும் மகளிருக்குச் சமுதாயத்தில் சொத்துரிமை இருந்ததையும், அவற்றை அவர்கள் தம் விருப்பம்போல் பயன்படுத்தும் வழிவகைகள் நிலவியதையும் தெளிவாக்குகின்றன. அரண்மனைப் பணிப்பெண்கள் கொடை யளிக்கும் வகையில் செல்வச் செழிப்புடன் விளங்கியமையும், அவர்கள் பெண்டாட்டி என்னும் சொல்லால் அழைக்கப் பட்டமையும் வியப்பூட்டும் செய்திகளாம். இப்போது பெண் டாட்டி என்னும் சொல் மனைவியைக் குறிக்கப் பயன்படு வது நோக்கத்தக்கது. சொல்லும் பயன்பாடும் காலச் சுழற்சியில் எப்படியெல்லாம் மாறுபாடு அடைகின்றன என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கோயிலுக்கு அள்ளித் தருவதில் மக்கள் குறிப்பாக இருந் தனர் என்பதை இங்குள்ள அத்தனை கல்வெட்டுகளும் தெள்ளத் தெளிவாய் எடுத்துரைக்கின்றன. இக்கோயிலில் விளக்குகள் எரிப்பதற்குச் சிலரும், விளக்கு நிலைகள் அமைக்கச் சிலரும், இரண்டுக்குமாய்ச் சேர்த்துச் சிலரும், ஆடவரும் பெண்டிருமாய் அள்ளிக் கொடுத்திருக்கும் நிலக்கொடைகளும் பொற்கழஞ்சுகளும், ஆடுகளும் கணக் கிலடங்கா.[59] உள்ளூர் வாசிகள் மட்டுமல்லாமல், பாண்டி மண்டலத்துத் திருநெல்வேலியில் இருந்து கூட ஒருவர் இக் கோயிலுக்குக் கொடையளித்திருப்பதை நோக்கும் போது தமிழகத்தின் தென்முனைவரை இக்கோயிலின் பெருமையும் புகழும் பரவியிருந்ததை உணர முடிகிறது.

இக்கோயில் கல்வெட்டுகளால், பல ஊர்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்களின் பெயர்களை நம்மால் அறிய

முடிகிறது. பெரும்பான்மையான பெயர்கள் அப்பெருமக்கள் சார்ந்திருக்கும் ஊர்களின் பெயர்களோடு இணைந்திருப்பதுடன்,[60] நக்கன் என்றோ அல்லது பட்டன் என்றோ தான் முடிகின்றன. அழகிய மணவாளன் அருள்மறை நம்பி,[61] காரிநக்கன்,[62] வெள்ளைச் சேந்தன்,[63] சேந்தன் செய்யவாய் மணி[64] போன்ற மிகச்சில பெயர்களே நல்ல தமிழ்ப் பெயர்களாக உள்ளன. பிற பெயர்கள் அனைத்தும் வடமொழிக் கலப்புள்ள பெயர்களாகவே விளங்குகின்றன.

## செம்பியன் வேதி வேளான்

சோழர் காலத்தில் செல்வர் பலர், நாட்டுக்குப் பயன்படும் பழமரங்களாய் வாழ்ந்தமைக்குப் பல கோயில் கல்வெட்டுகள் சான்றாகின்றன; அப்படி பிறர்க்காய் வாழ்ந்த பெருந்தகைகளுள் ஒருவரைத் திருஎறும்பியூரும் பெற்றிருந்தது. இராசகேசரிவர்மனின் ஒன்பது கல்வெட்டுகள் வேளான் வீரநாராயணனான செம்பியன் வேதிவேளான் என்னும் இப் பெருந்தகையின் போற்றற்குரிய கொடைகளையும், செயற்கரிய செயல்களையும் வரிசைப்படுத்தி மகிழ்கின்றன. கிளியூர்நாட்டுச் சிறுதாவூரைச் சேர்ந்த இப் பெருமகனார் இராசகேசரிவர்மனின் மூன்றாம் ஆட்சியாண்டில் இக்கோயிலுக்கு நிலக்கொடை அளித்திருப்பதை ஒரு கல்வெட்டும்,[65] ஊராரிடமிருந்து விலைக்கு வாங்கிய நிலமொன்றை, இக்கோயிலில் உடுக்கை, தாளத்துடன் திருப்பதியம் விண்ணப்பிக்கும் திருப்பணிக்குத் தந்தமையை இன்னொரு கல்வெட்டும் உணர்த்துகின்றன.[66] இராசகேசரிவர்மனின் ஐந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் இப்பெரியார் எறும்பியூர் மலைமீது பதினைந்து அந்தணர்களை உண்பிக்கும் பொருட்டுச் சத்திரமொன்றை எழுப்பியதையும்,[67] பெருவேங்கூர் ஊரவையாரிடமிருந்து நிலமொன்றை வாங்கியதையும் சுட்டுகின்றன.[68] கோயில் ஊழியர்களுக்காக, ஸ்ரீ கந்த சதுர்வேதி மங்கலப்பெருங்குறி சபையாரிடமிருந்து நிலம் வாங்கி, மடவிளாகமொன்றை இவ்வேளார் எழுப்பியதை இராசகேசரிவர்மனின் ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு எடுத்துரைக்கிறது.[69]

இராசகேசரிவர்மனின் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் நான்கு இப்பெருமகனார் இக்கோயில் விமானத்தை எழுப்பியதையும்,[70] கோயிலில் வாயிற்காப்போன் ஒரு ஒருவனைப் பணிக்கமர்த்த நிலக்கொடை தந்ததையும்[71] பெருவேங்கூர் ஊரவையாரிடமிருந்து பெறப்பட்ட நிலங்களுக்கு நீர் பாய்ச்சி, ஸ்ரீ கந்த சதுர்வேதி மங்கலத்து ஏரியிலிருந்து வாய்க்கால் ஒன்று வெட்ட நிலம் வாங்கி அளித்ததையும்,[72] ஏரியொன்று வெட்ட இப்பெருமகனார்க்குக் குறிப்பிட்ட அளவு நெல்லை நில உரிமையாளர்களிடமிருந்து வரியாகப் பெறும் உரிமையை ஸ்ரீ கந்த சதுர்வேதி மங்கலப் பெருங்குறி சபையார் விற்றுக்கொடுத்ததையும்[73] விளக்குகின்றன.

மேற்கண்ட கல்வெட்டுகளால் செம்பியன் வேதிவேளான் என்னும் இக்கொடை வள்ளல் கோயில் விமானத்தை எழுப்பியதையும், மலைமேல் உணவிடும் சத்திரமொன்றை நிறுவியதையும், கோயில் ஊழியர்க்குக் குடியிருப்பு அமைத்ததையும் அறிகிறோம். கோயில் நிலங்களைப் பாதுகாப்பதிலும், அவற்றில் சரியான விளைச்சல் உண்டாக நீர்நிலைகளை அமைத்துக் கொடுப்பதிலும், கோயில் செலவுகளைச் சரிக்கட்ட நிலங்களைப் புதிதாக வாங்குவதிலும், கோயில் பண்டாரத்தைப் பாதுகாக்க மெய்காவலரைப் பணிக்கமர்த்தியதிலும் இப்பெருமகனார் காட்டிய ஈடுபாடும் அக்கறையும் பெருமைக்குரியதாகும். கோயில்களைப் போற்றவும், பாதுகாக்கவும், அவற்றின் நடைமுறைகளில் உரிய பங்கேற்கவும் செம்மாந்த சான்றோர் பலர் அக்காலத்தில் முனைப்புடன் இருந்தமையை எண்ணும் போது உள்ளம் இறும்பூதெய்துகிறது.

### கோயில் பற்றிய செய்திகள்

சோழர் காலத்தில் கோயில்களின் நிர்வாகம் சில இடங்களில், ஊராட்சி அமைப்புகளாலும், சில இடங்களில் தனியர்களாலும், சில இடங்களில் மடத்துத் தலைவர்களாலும், வேறு சில இடங்களில் சில தனிப்பட்ட குழுக்களாலும் மேற்

கொள்ளப்பட்டிருந்தது. திருஎறும்பியூர்க் கோயிலின் நிர்வாகம் ஊரின் ஆளுங் கணத்தாரிடம் இருந்ததையும், அவர்கள் கோயிலில் கூடி நிர்வாகச் செயல்பாடுகளைக் கவனித்ததையும் கல்வெட்டுகளால் அறிகிறோம்.[74] பொன், நிலம், பணம், ஆடுகள்எனப் பல வகையான கொடைகள் கோயிலின் முதன்மைத் தெய்வத்திற்கும், பிற தெய்வங்கட்குமான வழிபாட்டிற்கும், திருமுழுக்காட்டிற்கும், படையலுக்கும், திருமுன் விளக்குகளுக்குமாய்த் தனியராலும், குழுக்களாலும், ஊரவையாலும் தரப்பட்டன.[75] இதனால் கோயில் தொடர்பான பணிகள் தளர்வின்றித் தொடர்ந்தன. கோயில் வளாகத்தில் உணவிடும் சத்திரமும், கோயிலையொட்டிப் பணியாளர் குடியிருப்பும் அமைந்தன. கோயிலுக்குக் காவலர் இருந்தனர்.

இக்கோயிலில் சேத்திர பாலருக்குத் திருமேனி இருந்ததையும், அதற்குத் தனியே வழிபாடுகள் நிகழ்ந்ததையும் ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது.[76] முதற்பராந்தகனின் முப்பத்தாறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, சிறுவாலி நாட்டைச் சேர்ந்த சாத்தன் தணக்கன் என்பவர் இக்கோயிலில் உமா பட்டாரகிக்குத் திருமேனி எழுந்தருளுவித்ததைக் கூறுகிறது.[77] இந்த உமா பட்டாரகி என்ற தொடர் முதன்மைத் தெய்வத்திற்குரிய மையக்கோயிலின் உள் மண்டபத்தில் நிறுவப்பெறும் உமையன்னையின் செப்புத் திருமேனியையே குறிக்கும். இப்போதும் கூட பல கோயில்களின் உள்மண்டபத்தில் உமையன்னையின் செப்புத் திருமேனிகளைக் காணலாம். இவற்றை இப்போது போக சத்யாம்பாள் என்கிறார்கள்.

மாறவர்மன் சுந்தரபாண்டியனின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு பிள்ளையார் பகவதி ஆழ்வாருக்காக எடுக்கப்பட்ட விழாவொன்றிற்கு மன்னர் ஓர் ஊரையே கொடையாகத் தந்த செய்தியைக் குறிப்பிடுகிறது.[78] இக் கல்வெட்டால் திருஎறும்பியூர்க் கோயிலில் விழாக்கள் சிறப்பாக நடைபெற்றதையும், பகவதி ஆழ்வார் என்ற பெயரில் ஒரு தெய்வத் திருமேனி இருந்ததையும் உணரலாம்.

இக்கோயிலில் உடுக்கை தாளத்துடன் திருப்பதியம் ஓதப் பட்டமையும், திருப்பதியம் விண்ணப்பித்தவர்க்குச் செம்பியன் வேதிவேளான் என்னும் அறச்சிந்தனையாளர் நிலக்கொடை தந்ததையும் முன்பே கண்டோம். முதலாம் இராசராசன் திருமுறை தொகுத்த நிகழ்வுக்கு முன்பே கோயில்களில் திருப்பதியம் ஓதப்பட்டமைக்குத் திருஎறும்பி யூரும் ஒரு சான்றாய் நிற்கிறது.

இக்கோயிலில் உள்ள துண்டுக் கல்வெட்டுகளையும் முயற்சியெடுத்துப் படித்தால் இன்னும் பல செய்திகள் நமக்குக் கிடைக்கலாம். ஏறத்தாழ எண்ணூறு ஆண்டுகளுக்கும் மேலாக மன்னர்களாலும் மக்களாலும் மகிழ்வோடு புரக்கப் பட்ட இக்கோயில், இன்று மைய அரசுத் தொல்பொருள் துறையின்கீழ் பாதுகாக்கப்பட்டு வருகிறது. 'எறும்பியூர் மலையான் எங்கள் ஈசனே,' என்று அப்பரடிகளால் பாடப் பெற்ற[79] பேறுடைய இக்கோயிலின் நிர்வாகம், வழிபாடு முதலியவற்றைத் தமிழக அரசின் அறநிலைய ஆட்சித்துறை மேற்கொண்டுள்ளது. 'திரளான மக்கள் கூட்டம் திரு எறும்பியூர் கோயிலுக்குத் தினமும் வருவதில்லைதான் என்றாலும், அவ்வப்போதாவது மனித முகங்களை இங்குக் காண முடிவதே நமக்குப் பெரு மகிழ்வுதான்.

— — —

1. S. R. Balasubramanyam, Early chola Art part I, 1966., p. 114.

2. M. Nalini, Thiru Erumbiyur Thirukkoil, Dissertation subimtted to Bharathidasan University, 1986, p. 15.

3. N. Sethuraman, Early cholas, 1980, p. 25.

4. Census of India, vol IX, 1961, p. 201.

5. மாலைமுரசு நாளிதழ், 9-7-86.

6. M. Nalini, Thiru Erumbiyur thirukkoil, Dissertation submitted to Bharathidasan University, 1986, p. 40.

7. மாலைமுரசு நாளிதழ் 9–7-86

8. டாக்டர் மா. இராசமாணிக்கனார், சைவ சமய வளர்ச்சி, 1972, பக். 223.

9. டாக்டர் இரா. கலைக்கோவன், காட்டுக்குள் ஒரு கலைக் கோயில், கழக வெளியீடு, 1986, பக் 3.

10. காசியப சிற்ப சாத்திரம், தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு, 1960, பக். 49.

11. A. R. E. 100, 101 of 1892 and 96-142 of 1914.
12. Indian Express, dt., 13-7-1986.
13. A. R. E. 119 of 1914.
14. A. R. E. 97 of 1914.
15. A. R. E. 136 of 1914.
16. A. R. E. 97, 99, 100, 107, 120, 136 of 1914.
17. A. R. E. 100 of 1914.
18. A. R. E. 99 of 1914.
19. A. R. E. 120 of 1914.
20. A. R. E. 111, 108, 117, 135, 113 of 1914,
21. A. R. E. 104 of 1914.
22. N. Sethuraman, Early Cholas. 1980. p–71.

23. M. Nalini, Thiru Erumbiyur Thirukkoil, Dissertation submitted to Bharathidasan University, 1986. p. 33.

24. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, 1974, பக். 373.

25. மேற்படி., பக். 391.

26. எஸ். இராமச்சந்திரன், திருமழபாடி, தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1978, பக். 95.

27. டாக்டர். இரா. கலைக்கோவன், திரு அம்பர்ப்பெருந்திருக் கோயில், செந்தமிழ்ச் செல்வி, செப்டம்பர் 1982, பக். 24.

28. டாக்டர் இரா. கலைக்கோவன், முள்ளிக்கரும்பூர் ஒரு வரலாற்று விடியல், செந்தமிழ்ச் செல்வி, டிசம்பர் 1985, பக். 148.

29. A. R. E. 103 of 1914.
30. A. R. E. 104 of 1914.

31. A. R. E. 141 of 1914.

32. A. R. E. 141 of *1914*.

33. A. R. E. 135 of 1914.

34. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், *1966*, பக். *110*.

35. M. Nalini, Thiru Erumbiyur Thirukkoil, Dissertation submitted to Bharathidasan University, 1986, p. 34-35.

36. A. R. E. 133 of 1914.

37. A. R. E. 127, 130 of 1914.

38. A. R. E. 133, 137 of 1914.

39. A. R. E. 109 of 1914.

40. S. I. I vol. XIII., INS. NOS., 50, 51, 110, 113, 162-164, 166, 283, 286, 287.

41. Ibid., ins. Nos., 138, 139, 163, 166.

42. Ibid., ins. No., 162.

43. Ibid., ins. Nos., 164, 110, 114.

44. S. I. I. vol. XIII, INS. nos., 51, 138, 162, 164, 165.

45. A. R. E. *101* of *1914*.

46. A. R. E. 116 of 1914.

47. A. R. E. *127*, *130* of *1914*

48. A. R. E. 138 of 1914.

49. S. I. I vol. XIII., ins. No. 163.

50. Ibid., ins. Nos., 162, 110, 165, 286, 111, 283, 138.

51. Ibid., ins. No. 165.

52. Ibid., ins. Nos., 164, 165.

53. Ibid., ins., No. 88

54. M. Nalini, Thiru Eriumbiyur Thirukkoil, Dissertation submitted to Bharathidasan University, 1986, p. 40.

55. A. R. E. 96, 102 of 1914

56. A. R. E. 118 of 1914.

57. A. R. E. 121 of 1914.

58. S. I. I. vol, XIII, Ins. No. 88.

59. S. I. I. vol xiii, ins. Nos., 124, 126, 114, 97, 117, 118, 110, 108, 111, 100, 121.

60. Ibid., ins. No. 110.

61. Ibid., ins No. 110.

62. Ibid., ins. No. 139.

63. Ibid., ins. No. 139.

64. Ibid., ins. No. 88.

65. A. R. E. 123 of 1914.

66. A. R. E. 129 of 1914.

67. A. R. E. 103 of 1914.

68. A. R. E. 134 of 1914.

69. A. R. E. 131 of 1914.

70. A. R. E. 104 of 1914.

71. A. R. E. 112 of 1914.

72. A. R. E. 102 of 1914.

73. A. R. E. 105 of 1914.

74. A. R. E. 137 of 1914.

75. A. R. E. 97, 98, 109-111, 114, 117-119, 121, 124, 126, 132, 135 of 1914.

76. A. R. E. 107 of 1914.

77. A. R. E. 108 of 1914.

78. A. R. E. 141 of 1914.

79. ஐந்தாம் திருமுறை, தருமையாதீனப்பதிப்பு, 1961, பக். 417.

# 2. தாட்சாயணி

அண்மையில் அருங்காட்சியகம் ஒன்றில் புதுமையான செப்புத் திருமேனியொன்றைக் காண நேர்ந்தது. தாட்சாயணியைத் தோளில் தாங்கியவராய், நின்ற கோலத்தில் காட்சியளிக்கும் சிவபெருமானின் இந்தச் செப்புத் திருமேனியை முதன் முறை பார்த்தபோது, இதனருகில், வார்ப்பறிஞரின் விளக்கக் குறிப்பு ஒன்றும், திருமேனிக்குரிய பெயரட்டை ஒன்றும் காணப்பட்டன. விளக்கக் குறிப்பில் வார்ப்பறிஞர் இவ்வடிவத்தைத் தாட்சாயணி என்று பெயரிட்டிருக்க, பெயரட்டையோ, 'உருத்திர தாண்டவம்' என்று காட்டியது. இம் மாறுபாடு வியப்பைத் தந்தது. இத்திருமேனியைப் பற்றிய என் ஆய்வுக் கட்டுரை 'தாட்சாயணி' என்றதலைப்பில் இந்தியன் எக்ஸ்பிரஸில் வெளியான பிறகு[1] அவ் அருங்காட்சியகம் சென்றிருந்தேன். அப்போது பெயரட்டை மாறியிருந்தது. 'தாட்சாயணி' என்று வார்ப்பறிஞர் தந்திருந்த பெயரே, பெயரட்டையிலும் இருந்தது. நம்மை வியப்பிலும் மலைப்பிலும் மூழ்க வைக்கும் இந்தப் புதுமைத் தோற்றம் அண்மைக்காலத்து வார்ப்பறிஞர் ஒருவரின் அழகிய கைவண்ணம்.

தாமரைத் தளத்தில் ஊன்றிய நிலையில் காட்டப்பட்டுள்ள சிவபெருமானின் வலக்காலைச் சதங்கையும், வீரக்கழலும் அழகு செய்கின்றன. இடக்கால் அமர்ந்த கோலத்தில் உள்ள முயலகனின் தலையிலும், மேலே தூக்கியிருக்கும் அவனுடைய இடக்கையிலுமாய்ப் பதிந்த நிலையில் பாங்காய் வடிக்கப்பட்டுள்ளது. எட்டுக் கைகளுடன் காட்சியளிக்கும் இறைவனின் வலப்புறக் கைகளில் மேலிருந்து கீழாக முறையே மழு, அம்பு, கத்தி முதலியகருவிகள் காட்டப்பட்டுள்ளன. வல முன் கை காக்கும் கையாக அருள் செய்கிறது. இடப்புறக் கைகளில் மேலிருந்து கீழாக மான், வில், கேடயம் முதலியன காட்டப்பட்டுள்ளன. இட முன் கை இறைவனின்

தோளில் சாய்க்கப்பட்டிருக்கும் இறைவியின் இடுப்பையும், வயிற்றுப் பாகத்தையும் தாங்கியபடி வடிக்கப்பட்டுள்ளது.

வலச்செவியில் மகர குண்டலமும், இடச்செவியில் பனையோலைக் குண்டலமும் அணிந்துள்ள இறைவனின் சடாமகுடம் அழகுபட வடிக்கப்பட்டுள்ளது. கழுத்தில் அணிகள், கைகளில் வளைகள், யாளிமுக வாகுவளையம் முதலியன காட்டப்பட்டுள்ளன. இறைவனின் இடப்புறத் தோளில் இறைவியின் வடிவம் சாய்க்கப்பட்ட நிலையில் வார்க்கப்பட்டுள்ளது.

குதிங்கால்கள் இறைவனின் வலத் தொடையில் ஊன்ற, முதுகுப்புறம் இறைவனின் தோளில் பதிய, மல்லாந்த நிலையில் காணப்படும் இறைவியின் இடுப்பை, இறைவனின் முன் கை தாங்கிப் பிடித்துள்ளது. நான்கு கைகளும் புறப்படும் இறைவனின் இடத் தோளில், இறைவியின் மேலுடல் சாய்ந்துள்ளது. இரண்டு கைகளும் முழுவதும் நீட்டப்பட்டு, இறைவனின் முதுகுப்புறத்தில் தொங்குவது போல் இருக்கும் இறைவியின் தலையைக் கரண்ட மகுடம் அணி செய்கிறது. மூடிய விழிகளும், விறைத்த உடல் தோற்றமுமாய், இறைவி உயிரற்ற நிலையில் இருப்பது இயல்பாகவே உள்ளது. உயிரற்ற இறைவியின் உடலைத் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு இறைவன் நிற்பது போல் இத்தோற்றம் அமைந்துள்ளது. இறைவியின் இறந்த உடலைத் தாங்கியபடி இறைவன் நிற்கும் இந்தக் காட்சியை நமக்குத் தெரிந்த வரையில் எங்கும் படித்ததாகவோ, கேள்விப்பட்டதாகவோ நினைவில்லை.

இந்த அதிசமான கற்பனை எப்படித் தோன்றியது? தக்கனின் கதைதான் பதில் சொல்ல வேண்டும். தக்கன் நடத்திய யாகமும், அதை வீரபத்திரர் அழித்த வேகமும் பல புராணங்களில் சொல்லப்படுகின்றன. ஒவ்வொரு புராணத்திலும் இக்கதை சிற்சில மாறுபாடுகளுடன் காணப்படுகிறது. முதலில் கதையைப் பார்ப்போம்.

தக்கனுக்குச் சிவபெருமானின் மீது தாங்க முடியாத கோபம். அதற்குப் பல காரணங்கள் இருந்தன. ஒன்று, தக்கன் மகளைத் திருமணம் செய்துகொண்ட பிறகு இறைவன் தன்னை மறைத்துக்கொண்டது.[2] இரண்டாவது. தவமியற்றிய தேவியை யாருக்கும் தெரியாமல் தூக்கிச் சென்றது.[3] மூன்றாவது தக்கன் சாபமிட்டுத் தேய்த்த திங்களைத் தன் முடியில் சூடி, அவனுக்கு வாழ்வு தந்தது.[4] நான்காவது, நான்முகன் வேள்வியில் நந்திக்கும் தக்கனுக்கும் மூண்ட சச்சரவினால் தக்கன் பெருங்கோபம் கொண்டது.[5] ஐந்தாவது காரணம்தான் தக்கனின் சினத்தைப் பெரிதும் தூண்டிவிட்டதாகப் புராணங்கள் பேசுகின்றன. ஒரு முறை தக்கன் இறைவனையும் இறைவியையும் காணக் கயிலை சென்றான். அவனை வாயிலிலேயே நிறுத்திவைத்து பூத கணங்கள் திருப்பி அனுப்பிவிட்டதாகக் கந்த புராணமும்,[6] உள்ளே சென்று உமையைக் கண்டபோது, அவள் தக்கனைச் சிறப்பு மரியாதைகளோடு வரவேற்காமையினால் சினமடைந்து தக்கன் திருப்பியதாகச் சிவ மகாபுராணமும் கூறுகின்றன.[7]

எது எப்படியோ, சினங்கொண்ட தக்கன், சிவபெருமானை அழைக்காமலேயே வேள்வி நடத்தவும், சிவபெருமானுக்கு அளிக்க வேண்டிய அவிர்பாகத்தைத் தராமலேயே வேள்வியை முடிக்கவும் எண்ணங் கொண்டு, சிவனைத் தவிர பிற தேவர்கள் அனைவர்க்கும் அழைப்பு அனுப்பினான். தன் மூத்த மகளும், சிவபெருமானின் தேவியுமான தாட்சாயணியைக் கூட அழைக்க மறுத்தான். தக்கனின் சினத்திற்கஞ்சித் தேவர்கள் அனைவரும் அவன் வேள்விச்சாலையில் கூடினர். முனிவர்களும் ஞானிகளும் வந்து நிறைந்தனர்.

திருக்கயிலையில், தேவி, தந்தை நடத்தும் வேள்விக்குச் செல்ல வேண்டுமெனப் பாசத்தால் தவித்தாள். சிவபெருமானோ தன்னை மதியாது, அழைக்காது விடுத்த தக்கனின் வேள்விச் சாலைக்குத் தன் தேவி போவதாவது என்று வெறுப்புக் கொண்டார். தேவியின் பிடிவாதம் அதிகமாக இருக்கவே, 'கணவன் சொல் மீறி, அவன் மதிப்பு தன் மதிப்பென்று கருதாது, வாயிற்படி கடந்து செல்லத் துடிக்கும் நீ



தாட்சாயணி முன்புறத் தோற்றம்
பக். 31



தாட்சாயணி முன்புறம்

பக். 31



ஆடல் காணீரோ !
திருவிளையாடல் காணீரோ !

பக். 61

(வயலூர் சதுரன்)



சதுர கரணரின் ஆடலில் மயங்கி நிற்கும் இறைவியும் பிறரும்
(திருப்பரங்குன்றம்) பக். 66



ஆடல் வல்லானின் கீழே காரைக்கால் அம்மையார்



காரைக்காலம்மையார்

[பக். 74

இவ் விடத்திலிருந்து அகன்ற அந்த நொடிப்பொழுதிலிருந்தே என்னிலிருந்தும் நீங்கி விடுவாய். அதுவே உன் இறுதி முடிவாகும், என்று சினத்தோடு உரைத்தார். இதன் பிறகும் பாசப் பிணைப்பால் தாக்குண்ட தேவி, கயிலை நீங்கித் தக்கனது வேள்விச் சாலைக்குள் நுழைந்தாள். அங்கிருந்த அனைவர்க்கும் இறைவியின் வருகை வியப்பையும், கலக்கத்தையும், அச்சத்தையும் தந்தது. தக்கனோ அவளை ஏறெடுத்தும் பார்க்காது தன் பணியில் முனைந்தான். அதைக் கண்ட தேவிக்குப் பெருஞ்சினம் தோன்றியது.

'தந்தையே, நீங்கள் என்னை மதிக்காவிட்டாலும் பரவாயில்லை. இந்த உலகின் முதல்வராம் இறைவனை மதிக்காது இருக்கலாமா? அவரை அழைக்காமல், அவருக்குரிய அவிர்பாகத்தைத் தராமல் நடத்தப்படும் இந்த வேள்வியால் என்ன பயன் விளைந்துவிடும்? இந்த வேள்விக்குத் தலைவர் யாரோ அவரையும், அவர் தேவியான என்னையும் மதியாமல், என் பேச்சையும் கேளாமல் இப்படி நடப்பது உங்களுக்கு அழகாகுமா?' என்று சினந்தாள்.

'என்னை மதியாத சிவனை, சுடுகாட்டில் ஆடும் சாம்பல் பூசிய அந்தக் கூத்தனை, பித்தனை நான் விரும்பி அழைப்பதாவது? அவனுக்காகப் பரிந்து பேச வந்திருக்கிறாயே, நீயா என் மகள்? அவனோடு சேர்ந்து உனக்கும் அறிவு மழுங்கி விட்டது போலும்! உனக்கு இங்கு இடமில்லை. நீ போகலாம்,' என்று தரக்குறைவாக நாகரிகமற்ற முறையில், நயமற்ற சொற்களால் தாட்சாயணியை அவமானப்படுத்தினான் தக்கன்.

தாங்க முடியாத சினமும், தாள முடியாத அவமானமும் உற்ற தாட்சாயணி, இனி தக்கன் மகளாக இவ்வுடலோடு இருப்பதில் பொருளேயில்லை என உணர்ந்தாள். இனி இந்த முகத்தோடு இறைவனைக் காணச் செல்லேன் எனக் கூறித்,

தக்கன் மூட்டிய வேள்வித் தீயினும் மேலான, தானே மூட்டிய யோக நெருப்பில் தன்னையே மாய்த்துக் கொண்டாள்.[8]

இந்த இடத்தில் புராணங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் கதையை மாற்றிக் கூறுகின்றன. கந்தபுராணம், உமாதேவி தக்கனால் அவமானப்படுத்தப்பட்டதும் வேள்விச் சாலையை நீங்கிக் கயிலையை அடைவதாகக் கூறுகிறதே தவிர, இறப்பதாகக் காட்டவில்லை.[9] தக்கன் யாகத்தையே கருவாகக் கொண்டு ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்ட தக்க யாகப் பரணியும் இதே முறையைப் பின் பற்றுகிறது.[10] மகா புராணமோ, இறைவி தீயில் கருகியதும், சிதைவுற்ற தாட்சாயணியின் உடலைப், பல பாகங்களாகச் சிதறுண்டு போகும்படி திருமால், தன் சக்கரத்தை விட்டதாகவும், அப்படிச் சிதறுண்ட இறைவியின் உடல் பாகங்கள் விழுந்த அறுபத்து நான்கு இடங்களே, இந்நிலவுலகில் சக்தி தளங் களாகத் திகழ்வதாகவும் மாற்றிக் கூறுகிறது.[11] சிவமகா புராணம், இறைவி தன் தட்ச சம்பந்தமான உடலை மாயா சம்பந்தமாக ஒழித்தாளென்று கூறுகிறது.[12]

ஆனால், மேற்கண்ட எந்தப் புராணத்திலும், இலக்கியத் திலும் தாட்சாயணியின் உயிரற்ற உடலைச் சிவபெருமான் தோளில் போட்டுக்கொண்டு உருத்திர தாண்டவமாடிய காட்சி காணப்படவில்லை. எனவே இச் செப்புத் திருமேனியின் தோற்ற அமைப்பு, கதையும் கற்பனையும் கலந்த அடிப் படையில் விளைந்ததென்றே கருத வேண்டியுள்ளது. தன்னை மீறித் தக்கன் வேள்விக்குச் சென்று, அவமானப்பட்டுத், தாங்கொணாத் துன்பத்திற்காளாகித் தன் முகத்தில் மீண்டும் விழிக்க விருப்பமற்றுத் தன்னையே அழித்துக்கொண்ட தன் ஆருயிர்த் தேவியின் உயிரற்ற உடலை, ஒரு மானுடன் போல் இறைவன் தோளில் சுமந்துகொண்டு நிற்கும் இந்தக் காட்சி நெஞ்சை நெகிழ்விக்கிறது. இறைவனின் முகக்குறிப்பில் இலேசான சோகம் இதமாக இழையோடும்படி செய்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். பழைய கதையின் புதிய கற்பனையாய் வடிக்கப்பட்டிருக்கும் இந்த அழகிய செப்புத் திருமேனி, வாழ்க்கைக்குத் தேவையான படிப்பினைகள் பல

வற்றைக் கற்றுத் தருவதோடு, வார்ப்புக்கலை இன்னும் தமிழகத்தில் உயிரோடிருக்கிறது என்பதற்கும் சான்றாய்த் திகழ்கிறது.

கட்டுரை இத்துடன்தான் முடிகிறது: ஆனால் இக் கட்டுரை தினமணி கதிரில் வெளியானதைத் தொடர்ந்து சுவையான சில வாதங்கள் எழுந்தன. அவை பல கருத்து விளக்கங்களுக்கு வழி வகுத்தன. அவற்றை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்தில் பின் இணைப் பாக இங்குத் தந்துள்ளேன்.

கட்டுரை வெளியான ஒரு திங்கள் சென்று, திண்டுக் கல்லைச் சேர்ந்த அன்பர் திரு. சி. பி. சத்தியமூர்த்தியின் கடிதமொன்று 'அந்தச் சிற்பமே வேறு' என்ற தலைப்பில் கதிரில் வெளியானது.[13] அக்கடிதத்தை அப்படியே கீழே தந்துள்ளேன்.

'கதிர், 9-11-86 இதழில் 'தாட்சாயணி' என்ற தலைப்பில் டாக்டர். இரா. கலைக்கோவன் அவர்கள் தனது அதிகப்படியான புலமையை விளக்கியுள்ளார். ஆனால் தன் குழப்பத்தையே முடிவாகத் தந்திருக்கிறார். அவரது முடிவு தவறு, எனது சிற்றறிவுக்கு எட்டிய வரை,

(1) சிற்பம் ருத்ரதாண்டவத்தைத்தான் குறிக்கிறது: தாட்சாயணி என்று மாற்றியது அருங்காட்சியகத்தினரின் அறியாமையைத்தான் அருமையாக விளக்குகிறது:

''அபினகாளி தானாட அவளோடன்று
அதிர வீசி வாதிடும்
விடையில் ஏறுவாராட
காதும் உக்ர வீர பத்ரகாளி வெட்க
மகுடம் ஆகாசம் முட்ட வீசிவிட்ட காலர்''

எனும் திருப்புகழ் அடிகள்குறிக்கும்சிவன் சிவை இருவருடைய போட்டி நடனத்தில் சிவனாரது காதணி கழன்று விழ, ஒரு காலைத் தூக்கி அதை மாட்டிக்கொண்டார். பெண்மையின் காரணமாக வெட்கப்பட்டார் காளி. சிற்பி, தோல்வியைத்

தழுவியவள் உடலால் சிறுத்துப் போனதாகக் கற்பித்துக் கொண்டார். மயங்கி விழுந்தவரைத்தான் தாங்கியிருக்கிறார். சக்திக்கு ஆதாரம் சிவன்தான். சிற்பி பாராட்டுக்குரியவர்.

(2) தாட்சாயணி பஸ்மமானதால்தான் அதை உடலெங்கும் பூசிக்கொண்டார். காகபுசுண்டி முனிவரிடம் ராமாயணம் கேட்டு மனநிம்மதி பெற்றார் சிவனார்.'

இக்கடிதத்திற்கு மறுப்பும் விளக்கமுமாக நான் எழுதி யனுப்பிய பதில் கடிதமும் தினமணி கதிரில் வெளியாயிற்று.[14] அதன் முழுமையான வடிவத்தைப் பார்ப்போம்.

இக்கட்டுரையில் என் அதிகப்படியான புலமையை விளக்கியுள்ளதாகத் திண்டுக்கல் திரு. சி. பி. சத்தியமூர்த்தி எழுதியுள்ளார். பல்வேறு புராணங்கள் தாட்சாயணி பற்றிக் கூறும் முடிவுகளைத்தான் காட்டியுள்ளேன். இது அதிகப் படியான புலமையென்று எனக்குத் தோன்றவில்லை. இருக்கும் உண்மைகளை அப்படியே எடுத்துத் தருவதுதான் ஒரு நேர்மையான ஆய்வாளனின் கடமை.

'தன் குழப்பத்தையே முடிவாகத் தந்திருக்கிறார்' என்று திரு. சத்தியமூர்த்தி என் முடிவைப் பற்றிக் கூறியுள்ளார். என் கட்டுரையின் முடிவில் எந்தக் குழப்பமும் இல்லை. பல் வேறு பட்ட முடிவுகளைக் காட்டி இவற்றில் எதுவும் இந்த வார்ப்புத் திருமேனிக்குப் பொருந்தாமையின், 'இது சிற்பியின் கற்பனை நிறைந்த முடிவாகத் தோன்றுகிறது' என்று மிகத் தெளிவாக என் கருத்தைக் கூறியுள்ளேன்.[15]

'சிற்பம் ருத்ர தாண்டவத்தைத்தான் குறிக்கிறது' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறும் திரு. சத்தியமூர்த்தி, ருத்ர தாண்டவம், ஊர்த்வ தாண்டவம் இரண்டையும் குழப்பிக்கொண்டுள்ளார். காளியும் சிவனாரும் ஆடிய போட்டியில், சிவனார் தன் வலக்காலை வானுக்காய் உயர்த்தி ஆடி காளியை வெட்கச் செய்தது, ஊர்த்வ தாண்டவம். இது நடந்த இடம் திருவாலங்காடு. அன்பரின் திண்டுக்கல்லுக்கு அருகிலேயே தாடிக்கொம்பு என்று ஓர் ஊர் உள்ளது.

அங்குள்ள திருக்கோயில் மண்டபத்தில் ஊர்த்வதாண்டவரும், உடன் ஆடிய காளியும் நெடிய சிற்பங்களாய் அழகு பொலியக் காட்சி தருகின்றனர். திருவாலங்காட்டு ஊர்த்வ தாண்டவம் பற்றிய, கலையறிஞர் திரு. பாஸ்கரத் தொண்டைமானின், 'வேங்கடம் முதல் குமரி வரை' என்னும் நூலும் இது குறித்துப் படிக்கத்தக்கது.[16] ஊர்த்வ தாண்டவத்தைத் திரு. சத்தியமூர்த்தி, ருத்ரதாண்டவமென்று தவறாகக் குழப்பிக் கொண்டதோடு, வெட்கிச்சிறுத்த காளி மயங்கி விழுவ தாகவும், அவளை இறைவன் தாங்கியதாகவும் புதுக்கற்பனை செய்து அதைச் சிற்பியின் மீதேற்றிக் கூறுவது விந்தையாக உள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக இச் செப்புத் திருமேனி பற்றிய வார்ப்பறிஞரின் விளக்கக் குறிப்பே, இறைவன் தாட்சாயணி யைத் தோளில் தாங்கியிருப்பதாய்க் கூறுகிறது. தாட்சாயணி சவம் என்பதற்காக விழிகள் மூடப்பட்டு, கை, கால், உடல் விறைத்த நிலையில் காட்டப்பட்டுள்ளது என்ற விளக்கமும் உள்ளது. இந்த விளக்கக் குறிப்பு இதை உருவாக்கிய வார்ப்பறிஞரே தந்ததென்று அறிகிறேன். உருவாக்கியவரே, இறைவன் தோளில் இருக்கும் வடிவம், தாட்சாயணிதான் என்கையில், அதைக் காளியாகக் கொள்வது தவறல்லவா; மேலும் காளியின் தலைமுடி 'சுடர்முடி' அமைப்பில் இருக்கும்: இங்குள்ள இறைவியின் தலையை மகுடம் அழகு செய்வது காண்க.

சினக்குறிப்போடு, உலகே செயலிழக்குமளவு சிவனார் ஆடிய கடுமையான தாண்டவம் ருத்ரதாண்டவம். அருங் காட்சியகத் திருமேனியில் எங்கிருக்கிறது தாண்டவக் குறிப்பு? இறைவன் காக்கும் கை காட்டி, உமையைத் தோளில் ஏந்தி நின்று கொண்டல்லவோ காட்சி தருகிறார்.

இத் திருமேனியின் பெயரை மாற்றியது அருங்காட்சியகத் தினரின் அறியாமையல்ல. உண்மையைத் தெரிந்த நிலையில், அறியாமல் நடக்கும் தவறுகளைக் களைவது பெருந்தன்மை. அதைத்தான் அருங்காட்சியகத்தினர் செய்துள்ளனர்.''

இந்த விளக்கத்திற்குப் பிறகு, பிப்ருவரி மாத தினமணி கதிர் இதழில் ஆடுதுறை திரு. வே. மகாதேவன் ஒரு கடிதம் எழுதிச் சில கேள்விகளை எழுப்பி அவரே பதிலளித்திருந் தார். 'சவந்தாங்கு தோளான்' என்ற தலைப்பில் இக்கடிதம் வெளியாகியிருந்தது.[17]

''தினமணி கதிரில் 9-11-86 இல் வெளியான டாக்டர். திரு. கலைக்கோவன் அவர்களுடைய தாட்சாயணி என்ற கட்டுரையையும், அது தொடர்பான வாதப் பிரதிவாதங் களையும் படித்தேன். அக்கட்டுரையில் குறிக்கப்பட்டுள்ள திருமேனி திருநாவுக்கரசரால் குறிக்கப்பட்டுள்ள 'சவந்தாங் கும் தோளான்' என்னும் வடிவமாகலாம்.

'தலை ஏந்து கையானை என்பு ஆர்த்தானை
சவம் தாங்கு தோளானை சாம்ப வானை'

என்பது அப்பர் சுவாமிகள் அருளிச்செய்த கஞ்சனூர்த் திருத் தாண்டகம். சிவபெருமான் பிணத்தைத் தோளில் தாங்கிய நிலைக்கு, இத்தகையதொரு தொன்மையான ஆதாரமிருக்க வும், கட்டுரையாசிரியர் இவ்வடிவினைச் சிற்பியின் கற்பனை என்றும், புராணத்திலும், இலக்கியத்திலும் ஆதாரமில்லை என்றும் தம் கட்டுரையில் கூறுதல் எனக்குப் பெரு வியப்பூட்டு வதாக உள்ளது.

தேவாரத் திருமுறைகளில் மட்டும் சில திருமேனிகள் கூறப்படுவதுண்டு. அவை ஆகம, சில்ப சாஸ்திரங்களுள் இல் லாமலும் இருப்பதுண்டு. 'உமாதேவியைப் பிரிந்து இலங்கிய சிவபெருமான், நான்கு முனிவர்க்கு ஆகமம் உபதேசிக்கும் திருக்கோலம் தட்சிணாமூர்த்தி திருக்கோலம். ஆந்திராவில் சிவபெருமான் பள்ளிகொண்ட சேத்திரமான சுருட்டபள்ளி சிவாலயத்தில் தட்சிணாமூர்த்தி இருக்கவேண்டிய இடத்தில் ஓர் அபூர்வமான திருவுருவம் உள்ளது. தட்சிணாமூர்த்திக் குள்ள எல்லா லட்சணங்களும் உடைய இத்திருவுரு உமா தேவியுடனும், நந்தியுடனும் அமைக்கப்பட்டுள்ளது. திரு ஞானசம்பந்தர் தேவாரம் கூறும்,

'மதிநுதல் மங்கையோடும் வடபால் இருந்து
மறையோதும் எங்கள் பரமன்'

என்னும் தொடர்க்குரிய திருமேனி இது எனலாம்.

தேவாரத் திருமுறைத் தொடர்களில் ஆய்வும் தோய்வும் மிக்கிருந்த பழங்காலச் சமயச் சான்றோர், அத்தொடர் அடிப்படையில் திருமேனிகள் எழுந்தருளுவித்ததைச் சோழர் காலக் கல்வெட்டுகள் காட்டுகின்றன. 'நாடகம் ஆடும் பெருமாள்' 'தத்தா நமரே காண் என்ற மிலாடுடையார்' போன்றவை இவ்வாறு ஆலயங்களில் எழுந்தருளுவிக்கப்பட்டனவற்றுட் சில.

அருங்காட்சியகச் செப்புத்திருமேனி, கட்டுரையாசிரியர் கருதுவது போன்று கற்பனை கலந்த வடிவமன்று. திருநாவுக்கரசர் தேவாரத்தமைந்த சவந்தாங்கு தோளான் என்னும் தொடர்ச் செய்திக்களித்த தெய்வக் கலை வடிவம்.''

திரு. வே. மகாதேவனின் இந்த விளக்கத்திற்கும் தாட்சாயணிக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென, அவரது 'சவந்தாங்கு தோளானுக்கு'ப் பதிலளித்து நான் எழுதிய கடிதம், நாள் கடந்த நிலையால், தினமணி கதிரில் வெளியாக முடியாது போயிற்று. அக்கடிதத்தை இங்கு இணைத்துள்ளேன்.

''திரு. வே. மகாதேவன் அப்பரின் கஞ்சனூர்ப் பதிக வரியாகிய, 'சவந்தாங்கு தோளானைச்' சுட்டிக்காட்டி, சிவபெருமான் தன் தோளில் பிணத்தைத் தாங்கியமைக்கு இலக்கிய ஆதாரம் இருக்கையில், இதைச் சிற்பியின் கற்பனை என்று எப்படிக் கூறமுடியும் என்று கேட்டிருக்கிறார்.

என்னுடைய கட்டுரையில், சிவபெருமான் தன் தோளில் பிணத்தைத் தாங்கியதற்கு இலக்கிய ஆதாரம் இல்லையென்று எங்கும் குறிப்பிடவில்லை. இறைவியின் உயிரற்ற உடலைத் தோளில் தாங்கி நிற்கும் கோலத்திற்குத்தான் ஆதாரம் கிடைக்கவில்லை என்று எழுதியுள்ளேன்.

''இறைவியின் இறந்த உடலைத் தாங்கியபடி இறைவன் நிற்கும் இந்தக் காட்சியினை நமக்குத் தெரிந்த வரையில் எங்கும் படித்ததாகவோ கேள்விப்பட்டதாகவோ நினைவில்லை.'' [கதிர் 9-11-86, பக். 29]

''ஆனால் மேற்கண்ட எந்தப் புராணத்திலும், இலக்கியத்திலும் தாட்சாயணியின் உயிரற்ற உடலைச் சிவபெருமான் தோளில் போட்டுக்கொண்டு உருத்திரதாண்டவமாடிய காட்சி காணப்படவில்லை.'' (கதிர் 9-11-86, பக். 31)

திரு. வே. மகாதேவன் கூறியிருப்பது போல் நாவுக்கரசர் 'சவந்தாங்கு தோளான்' என்று பாடியிருப்பது உண்மை. இறைவன் பிணமொன்றைச் சூலத்தில் ஏந்தித் தன் தோளில் சுமந்ததைப் புராணங்களும் ஆகமங்களும் காட்டுகின்றன. உண்மைதான். ஆனால் அது இறைவியின் திருமேனியன்று. தன்னால் கொல்லப்பட்ட திருமாலின் வாயிற் காப்போரான விஷ்வக்சேனரின் இறந்த உடலைத்தான் இறைவன் அவ்வாறு தாங்கிச் சென்றதாக அவை கூறுகின்றன். இறைவனின் இந்தத் திருக்கோலத்தைக் கங்காளமூர்த்தி என்பார்கள். இவ்வரலாறு திரு. டி. ஏ. கோபிநாதராவ் அவர்களின் நூலில் தெளிவாகத் தரப்பட்டுள்ளது.[18] இந்து சமயக் கடவுள்களின் திருவுருவங்கள் என்னும் நூலிலும் இவ்வடிவ விளக்கம் செவ்வையாகத் தரப்பட்டுள்ளது.[19] எல்லாவற்றிற்கும் மேலாகத் தருமபுர ஆதீனம் வெளியிட்டுள்ள ஆறாம் திருமுறையில் 'சவந்தாங்கு தோளான்' என்பதற்கான விளக்கத்தை எழுதும்போது, 'சவம் என்றது பிரமவிட்டுணுக்களின் எலும்புக் கூட்டினை; கங்காளம் எனப்படுவன இவையே' என்று உரைக்குறிப்பு தந்துள்ளார்கள்.[20]

இந்நிலையில் என் கட்டுரைக்கும், 'சவந்தாங்கு தோளான்' பதிகவரிக்கும் திரு. வே. மகாதேவன் தொடர்பு படுத்தியிருப்பது எப்படிப் பொருந்தும்? தன் மனைவியின் இறந்த உடலைத்தோளில் தாங்கியிருக்கும் சிவபெருமானைப் பற்றிய கட்டுரை தாட்சாயணி. இந்த நிலைக்குத்தான் ஆதாரம் கிடைக்கவில்லை என்று எழுதியுள்ளேன்;

திரு. மகாதேவன் காட்டியிருக்கும் இலக்கிய ஆதாரம் விஷ்வக்சேனரின் சவத்தைத் தாங்கிய கங்காளமூர்த்திக் கோலத்தைக் குறிப்பதாகும். இது தாட்சாயணிக்குப் பொருந்தாது.

எனவே தாட்சாயணித் திருக்கோலத்துக்கு, நூல்களில் தேடிய வரையில் கேள்விப்பட்ட வரையில், இதுநாள் வரைக்கும் இலக்கிய ஆகம ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை என்பதையும், அப்படியொரு சரியான சான்று கிடைக்கும் வரையில், இத்திருமேனியை வார்ப்பறிஞரின் கற்பனையென்று கொள்வது தவறில்லையென்றும் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

தாட்சாயணி கட்டுரையைத் தொடர்ந்து வெளியான கடிதங்களையும் அவற்றிற்கான விளக்கங்களையும் இங்கு இணைத்திருப்பது, ஒரு புதுமையான படைப்பைப் பற்றி எழுதப்படும் ஆய்வுக் கட்டுரை எத்தனை கவனத்துடன் எழுதப்பட வேண்டும் என்பதை உணர்த்தவும், இத்தகு கட்டுரைகள் எத்தனை ஆர்வலர்களை ஆய்வரங்கிற்கு இழுத்து விடுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகவும் தான்.

---

1. Dr. R. Kalaikkovan, Dakshayani, Indian Express 1-16-1985.

2. சு. அ. இராமசாமிப் புலவர், கந்தபுராணம் வசனம், கழகப் பதிப்பு, பக். 370.

3. மேற்படி., பக். 369-370.

4. நடராஜதாசன், சித்தியருளும் சக்தி வழிபாடு, நர்மதா பதிப்பகம், பக். 98.

5. சு. அ. இராமசாமிப் புலவர், கந்தபுராணம் வசனம், கழகப் பதிப்பு, பக். 373-374.

6. மேற்படி., பக். 371

7. துர்காதாஸ் எஸ். கே. சாமி, சிவமகாபுராணம், மூன்றாம் பாகம், பிரேமா பிரசுரம், பக். 118.

8. நடராஜதாசன், சித்தியருளும் சக்தி வழிபாடு, நர்மதா பதிப்பகம், பக். 39.

9. சு. அ. இராமசாமிப் புலவர், கந்தபுராணம் வசனம், கழகப் பதிப்பு. பக். 412.

10. தக்கயாகப் பரணி, உ. வே. சாமிநாதய்யர் உரை, 1930, பக். 122.

11. நடராஜதாசன், சித்தியருளும் சக்தி வழிபாடு, நர்மதா பதிப்பகம், பக். 40.

12. துர்காதாஸ் எஸ். கே. சாமி, சிவமகாபுராணம், மூன்றாம் பாகம், பிரேமாபிரசுரம், பக். 120.

13. சி. பி. சத்தியமூர்த்தி, கடிதங்கள், தினமணிகதிர் 14-12-86, பக். 2.

14. இரா. கலைக்கோவன், கடிதங்கள், தினமணிகதிர் 4-1-87. பக். 2.

15. இவ்விரண்டு பத்திகளும் கதிரில் வெளியாகவில்லை.

16. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், பாலாற்றின் மருங்கினிலே, வேங்கடம் முதல் குமரி வரை, 1964, பக். 133-134.

17. வே. மகாதேவன், கடிதங்கள், தினமணிகதிர் 1-2-87, பக். 2,

18. T. A. Gopinatha Rao Elements of Hindu Iconography, vol II, part I, 1985, p. 295-297.

19. தி. இராசமாணிக்கம், இந்து சமயக் கடவுள்களின் திருவுருவங்கள், கழக வெளியீடு, பக். 11.

20. நாவுக்கரசர், ஆறாம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1963, பக். 653.

# 3. சமுதாயத்தில் திருமுறைத் தாக்கம்

திருமுறை என்ற பெயர் சூட்டல் பிற்காலத்தில் நிகழ்ந்த தென்றாலும், தேவாரத் தொடர்களின் தாக்கம் கி. பி. ஏழாம் நூற்றாண்டிலேயே சமுதாயத்தை அசைக்கத் தொடங்கிவிட்டதெனலாம். பக்தி இயக்கம் என்றும், சமய மறுமலர்ச்சிக் காலம் என்றும், வரலாறு கொண்டாடிப் போற்றும் கி. பி. ஏழு, எட்டாம் நூற்றாண்டுச் சமுதாயத்தை ஓரளவு உணர்ந்தால்தான், இந்த எழுச்சியையும் ஏற்றத்தையும் விளங்கிக்கொள்ள முடியும்.

## கி. பி. 300 - கி. பி. 600

வரலாற்றின் வெற்றிடமாய் ஆராய்ச்சியாளர்கள் தள்ளி வைக்கும் கி. பி. முந்நூறுக்கும் கி. பி. அறுநூறுக்கும் இடைப் பட்ட மூன்று நூற்றாண்டுகளில் தமிழகம் களப்பிரர் கைகளில் தளர்ந்திருந்தது. சின்னஞ்சிறு ஒளிக்கீற்றுகளாய் இலக்கிய வரிகளும், அங்கொன்றும் இங்கொன்றுமாய்க் கிடைக்கும் கல்வெட்டுத் தொடர்களும், இந்த முந்நூறு ஆண்டுக்கால சரித்திரத்தை நம் பார்வைக்குச் சற்றே காட்டு கின்றன. இன்னும் தெளிவாய்ப் புரியாத நிலையில், கிடைத் திருக்கும் சில சான்றுகளின் வெளிச்சத்தில், இந்த நூற்றாண் டுகளில், பௌத்தம், சமணம் என்னும் இரு புறச்சமயங்களின் பிடியில்தான் தமிழகம் இருந்தது என்பதையும், இப் பிடி தனைத் தளர்த்தி, சைவ வைணவ சமயங்களைச் செழிக்க வைக்கும் பெருமுயற்சிகளில் கோச்செங்கட் சோழன் போன்ற பெரு வேந்தர்களும்,[1] சமயப் பெரியவர்களும் முனைப்பாய் ஈடுபட்டிருந்தனர் என்பதையும் நம்மால் உணர முடிகின்றது.

இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோள் ஈசற்குத் திருக்குலத்து வளச்சோழன் கோச்செங்கணான் எழில் மாடம் எழுபது செய்து போற்றிய பெரும் பண்பைத் திருமங்கையாழ் வார் கூற[2], அதைச் சம்பந்தரும்[3], சுந்தரரும்[4] தங்கள் பாடல்

களால் வழிமொழிய, தம் திரு அடைவுத் திருத் தாண்டகத்தால் அப்பரும் உடன்படுகிறார்.[5] சமயப் போர்களில் சிக்கியிருந்த தமிழகத்தில், வைதிகச் சடங்குகளின் மீதிருந்த வெறுப்பால், பௌத்தமும் சமணமும் காட்டிய நெருக்க நேய உணர்வுகளில் தமை மறந்து ஈடுபட்டிருந்த தமிழகத்து மக்களைத் திசை திருப்பவும், அந்த மயக்க நிலைகளிலிருந்து மீட்கவும் புதுமுயற்சிகள் தேவைப்பட்டன.

## ஆட்சி மாற்றமும் விளைவுகளும்

இந்தச் சூழலில்தான் தமிழக அரசியலில் பெரும் மாற்றத்தைத் தெற்கே கடுங்கோனும், வடக்கே சிம்மவிஷ்ணுவும் தங்கள் பேராற்றலின் விளைவால் உண்டாக்கினர். களப்பிரரின் ஆட்சி மறைந்து வடதமிழகத்தில் பல்லவர் ஆட்சியும், தென் தமிழகத்தில் பாண்டியர் ஆட்சியும் மலர்ந்தன. முதலாம் மகேந்திரவர்மனின் சைவத் தழுவலும், நின்றசீர் நெடுமாறனின் உளமாற்றமும் அன்றைய சமுதாயக் கூட்டமைப்பில் சைவத்தின் நிலையை உயர்த்தின. அரசியல் மாறுதல்களும், சமுதாய மாறுதல்களுமே பக்தி இயக்கத்திற்கு வித்திட்டன. மூன்று நூற்றாண்டுக்காலச் சமயப் போர்களின் உச்சமாகப் பிறந்த பக்தி இயக்கமே ஒரு சமுதாயத் தாக்கம் தான்.

புறச்சமயங்களில் மூழ்கியிருந்த மக்களைத் தட்டியெழுப்பவும், இருளில் புதைந்திருந்த சமுதாய நல்லுணர்வுகளை வெளிக் கொணர்ந்து விளங்க வைக்கவும் பாடுபட்ட சமயத் திருவாளர்களுள் முதலிடம் பெறுபவர்கள் சம்பந்தரும், அப்பரடிகளும் ஆவர். பிள்ளைச் செல்வராய் இளையவர் இவரும், முதிர்ந்த வயதும் முற்றிய ஞானமுமாய்ப் பெரியவர் அவரும், தமிழகத்துத் திருமண்ணின் திசையளந்த நிலைகளில் தான், தேவாரத் திருவரிகள், பூட்டிய கதவுகளாய் இருந்த மக்கள் உள்ளங்களை மெல்லத் திறந்தன. அருந்தமிழ் மக்களை அழுத்தமாய்ப் பிணைத்திருந்த சடங்குச் சங்கடங்களையும், சம்பிரதாயச் சங்கிலிகளையும் உடைத்தெறிய இவ்விருவரும் அரும்பாடு பட்டனர். தீண்டத் தகாதவர், தள்ளி

வைக்கப்பட்டவர் என்றெல்லாம் சமுதாயம் காட்டிய வேற்றுமைகள் கீறல் விடத் தொடங்கின. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற சங்கப் புலவனின் செந்தமிழ் நாதம் முதன் முறையாக மக்கள் மையத்தில் நடைமுறைக்கு வந்தது. அரசியல், சமுதாய மாறுதல்களின் மாபெரும் தாக்கமாய் மலர்ந்த பக்தி இயக்கம், தன்னளவில் தமிழ்ச் சமுதாயத்தில் தோற்றிய மாறுதல்களும் மலர்ச்சிகளும் கணக்கிலடங்கா. சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர் வரலாறு இந்தச் சமுதாயத் தாக்கங்களைப் படம் போட்டுக் காட்டுவதும், பல்லவ, சோழப் பெருவேந்தர்களின் கற்றளிக் கல்வெட்டுகள் இந்தப் படக்காட்சிக்குத் துணையாய் நிற்பதும் சரித்திர உண்மைகளாம்.

## முதலாம் இராசராசனுக்கு முற்பட்ட காலத்தில்

சம்பந்தரும் அப்பரும் கோயில்கள் இருந்த ஊர்களை நாடி, ஆங்குறையும் இறைவனைப் பாடி மேற்கொண்ட பயணங்களில் பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண்டதையும், அவர்கள்தம் திருவடிபட்ட ஊர்களில் எல்லாம் மக்களின் மகத்தான வரவேற்பும், அரவணைப்பும் அவர்கட்குக் கிட்டியதையும் சேக்கிழார் புலப்படுத்துகிறார். மனிதனுக்கெட்டாத தொலைவில் இருந்த கடவுள் வழிபாடு, மனிதனை நெருங்கிவந்த காலமிது! ஒரு சிலர் தவிர பிறர் நெருங்கக் கூடாதென ஒதுக்கி வைக்கப்பட்ட தெய்வப் படிமங்களை பக்தி வயப்பட்ட யாரும் நெருங்கித் தொழுது வணங்கலாமென்ற நிலை தேவார யுகத்தில் புதிதாய்ப் பிறந்தது. ஆடலும் பாடலுமாய், ஆசையும் பரிவுமாய்ப் பலரும் கூடிக் கோயில்களைக் கொண்டாடும் பக்குவச் சூழல்கள் பாங்காய் மலர்ந்தன. அதன் விளைவாய், விளங்காத மொழிகளில் நடந்த வழிபாடுகளுக்கிடையே, விருப்பமூட்டும் தமிழிசைப் பாடல் ஒலிகளும் கோயில்களின் தாழ்வாரங்களில் கேட்கத் தொடங்கின. இனிய எளிய தமிழில் இன்பம் நிறைத்துப் பிறந்த சம்பந்தர், அப்பர் பாடல்களைத் தமிழகத்து மக்களின் வாய்கள் முணுமுணுக்கத் தொடங்கின;

என்ன பாடுகிறோம், எதைப் பாடுகிறோம், யாரைப் பாடுகிறோம், எதற்குப் பாடுகிறோம் என்பதைச் சங்க காலத்திற்குப் பிறகு முதன் முதலாக மக்கள் அறிந்து செயல்படத் தொடங்கினர். இதனால் கோயில்கள் மீதும், இறைமீதும் வழிபாடுகள் மீதும் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. நல்ல தமிழ்ப் பெயர்களால் இறைவடிவங்கள் போற்றி வணங்கப்பட்டன. தங்கள் கோயில், தங்கள் சமயம் என்ற எண்ணம் முளை விட்டது. பல்லவர் காலக் கல்வெட்டுகளில் கோயில்களுக்குத் தரப்பட்ட கொடைகளைப் பற்றிய செய்திகள் இரண்டாம் நரசிம்மவர்மனுக்குப் பிறகே அதிகமாகக் காணப்படுகின்றன.

மக்கள் இறையடியார்களை நேசித்தனர். அவர்களிடம் அளப்பரிய பக்தியும் ஈடுபாடும் கொண்டனர். தங்களால் இயலாத பல அருஞ்செயல்களை அப்பெருமக்கள் செய்வது கண்டு போற்றி அவர்கள் பால் தளராத மதிப்பு வைத்தனர். திருநாவுக்கரசரைத் தெய்வமாய்ப் போற்றித் தம்மைச் சார்ந்த அத்தனை பொருள்களுக்கும், தம் மகனுக்கும் கூட அவர் பெயரையே சூட்டி, அதில் எல்லையற்ற இன்பம் கண்டு வாழ்ந்த அப்பூதியடிகள் ஒரு காவியச் சான்றென்றால், கல்வெட்டுகள் இன்னும் பல சான்றுகளை அடுக்குகின்றன.

இறையடியவர் மீதிருந்த அன்பின் பெருக்கால், மக்கள் அவர்தம் பெயர்களைத் தங்கள் பிள்ளைச் செல்வங்கட்கு வைத்து மகிழ்ந்தனர். கலிப்பகை, புகழ்த்துணை விசையரையன், மாறன் பாவையார், கஞ்சாறன் அமர்நீதி, நந்தி நிறைமதி போன்ற பல பெயர்களைப் பல்லவர் காலக் கல்வெட்டுகள் சுட்டுகின்றன.[6] பரவை நங்கையார், நக்கன் பரவை, திருவெண்காட்டு நங்கை, கண்ணப்பதேவர், புகழ்த்துணை அடிகள், ஏனாதி கிழான், காரி ஆசான், முனையதரையன், அமரபுயங்கனான கோட்புலி, ஆரூரன் பொன்னன், தண்டி அடிகள், நமிநந்தி, இளையான்குடி கிழவன், கலயன் மாணிக்கம் என்னும் பெயர்களைச் சோழர் காலக் கல்வெட்டுகள் வரிசைப்படுத்துகின்றன.[7]

திருமுறைகள் எனப் பெயரிடப்பெற்று, தேவாரத் திருப் பாடல்கள் தொகுக்கப்பட்டதாகக் கருதப்படும் முதலாம் இராசராசன் காலத்திற்கு முன்னமேயே, இப்பாடல்கள் திருப்பதியம் என்னும் பெயரில் கோயில்களில் பாடப் பெற்றன. இதற்கான கல்வெட்டுச் சான்றுகள் பல்லவர் காலத்தில் தொடங்குகின்றன. மூன்றாம் நந்திவர்மனின் திருவல்லம் கோயில் கல்வெட்டு, திருப்பதியம் ஓதுவாரைப் பல பணி செய்வாருள் ஒரு வகையினராய்க் குறிக்கிறது.[7A] அப்பரும் சம்பந்தரும் கோயில் கோயிலாய்ச் சென்று பாடிய நிலையில், ஆங்காங்கு உள்ள இறையடியார்களும், சமயத் தொண்டர்களும் அப்பாடல்களைக் கேட்டு மகிழ்ந்ததுடன், பின் தொடர்ந்து பாடி, உள்ளத்திலேற்றி, பிறகு அவற்றைக் குறித்து வைத்திருக்க வேண்டும். அந்நிலையில் அப்பாடல்கள் தொடர்ந்து, அப்பருக்கும் சம்பந்தருக்கும் பிறகும் கூட அக்கோயில்களில் பாடப்பெற்றிருக்கும் என்பது ஒப்புக் கொள்ளக் கூடியதே. 'தங்கள் கோயிலைப் பெரியவர்கள் பரவிப் பாடிய பாடல்கள் இவை' என்ற புகழ் நோக்கமும், எளிய, இனிய தமிழ்ப்பாடல்களில் மக்களுக்கு ஏற்பட்ட மயக்கமுமே இதற்குக் காரணங்களாகும்.

முதலாம் இராசராசனுக்கு முற்பட்ட சோழமன்னர்கள் சிலருடைய கல்வெட்டுகளால் திருக்கோயில்களில் திருப் பதியங்கள் தொடர்ந்து ஓதப்பட்ட செய்தியை அறிகிறோம். கண்டராதித்தரின் கல்வெட்டு, திருஎறும்பியூர்க் கோயிலில் உடுக்கை, தாளங்களுடன் திருப்பதியம் ஓதப்பட்டதையும்[8], முதற்பராந்தகனின் கல்வெட்டு குமார வயலூரில் சந்திரசேகர அரமைந்தன் என்பவரால் திருப்பதியம் ஓத மூன்று பெண்கள் கொடையாகத் தரப்பட்டதையும்[9], அதே முதற்பராந்தகரின் திருத்தவத்துறைக் கல்வெட்டு, அவ்வூர்க் கோயிலில் நாளும் மூன்று வேளையும் திருப்பதியம் ஓதப்பட்டதையும்[10], திரு ஆவடுதுறைக் கல்வெட்டு அவ்வூர்த் திருக்கோயிலில் திருப் பதியம் ஓத இருவர் இருந்ததையும்[11] எடுத்துரைப்பது போலவே, திருப்பழூரில் திருப்பதியம் ஓதுவார்க்கு நிலம் ஒதுக்கப்பட்டதை ஒரு கல்வெட்டும்[11A], அந்த நல்லூர்த்

திருக்கோயிலில் திருப்பதியம் ஓதுப்பட்டதை இன்னொரு கல்வெட்டும்[12] தெளிவாக்குகின்றன.

இக்கல்வெட்டுகள், மக்களுக்குத் தேவாரப் பாடல்களில் ஏற்பட்ட அளவற்ற ஈடுபாட்டையும், அவற்றைக் கோயில்களில் பாடவைப்பதில் அவர்கள் பெற்ற நிறைவையும் எடுத்துக் காட்டுகின்றன. தேவாரங்கள் திருமுறைகளாக வடிவெடுக்கும் முன்னரே மக்கள் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்று விட்டதை இக்கல்வெட்டுகள் மெய்ப்பிக்கின்றன. பாடல்கள் விளங்கும் மொழியில், செவிக்கினிமையாக அமைந்தது இதற்குத் தலையாய காரணமென்றால், பாடிய அடியவர்களின் எளிமையும், அவர்களை யாரும் எப்போதும் காணமுடியும், கலந்துரையாடி மகிழமுடியும் என்ற அணுகுமுறைப் பாங்குகளும், அப்பெரியவர்கள் மக்களிடையே பழகி மகிழ்ந்த இனிய உறவு நுணுக்கங்களும், அவர்கள் ஆற்றிமகிழ் வித்த அற்புதங்களும் துணைக் காரணங்களாகும். துன்பம் கண்ட இடங்களில், தாங்களே முன்னின்று அத்துன்பங்களை நீக்கும் முயற்சிகளில், அப்பெருமக்கள் ஈடுபட்டது மக்கள் நெஞ்சங்களை நிறைத்தது.

கொல்லி மழவன் மகள் நோயைத் தீர்த்தது, பூம்பாவையை உயிர்த்தெழச் செய்தது, திருமருகலில் வணிக மைந்தனுக்கு நஞ்சு நீக்கியது போன்ற சம்பந்தரின் அருட் செயல்களும், அரவம் தீண்டி மாண்ட அப்பூதியடிகளின் மகனை மீட்டும் உயிர்த் தெழச்செய்த அப்பரின் அருஞ் செயலும், முதலையுண்ட பிள்ளையை அவிநாசியில் மீட்டுத் தந்த சுந்தரரின் திருவருளும் மக்கள் நெஞ்சில் ஆழமாய் நிறைந்தது. சமணத் துறவிகளின் மந்திர தந்திரங்களில் மக்களுக்கு இருந்த மயக்கம், நின்றசீர் நெடுமாறனின் வெப்பு நோய்க்குப் பிறகு மறையத் தொடங்கியது. மங்கையர்க் கரசியார், காரைக்காலம்மையார், திலகவதியார் போன்ற பெண் தெய்வங்களின் வாழ்க்கை, மகளிர் மையத்தில் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தன. அன்பால் உலகையும் வெல்லலாம் என்ற இனிய தத்துவம் குடும்பங்களில் குலவிடத் தொடங்கியது.

சம்பந்தருக்கும் சமண, புத்தத் துறவிகட்கும் இடையே நடந்த வாதங்களும் அவற்றால் கிளைத்த சமய உண்மைகளும் மக்களுக்கு அறிவுத் தெளிவை உண்டாக்கின. ஆறை வடதளி போன்ற சிவன் கோயில்களைச் சமணர்கள் பாழிகளாக்க, அவற்றை உண்ணா நோன்பெனும் அறப்போர் வழி, மீட்டும் சிவன் கோயிலாக்கிய அப்பரடிகளின் அறநெறிகளும்[13], கோயில் கோயிலாய்ச் சென்று தள்ளாத மூப்பினோடேயும் அப்பெருமானார் ஆற்றிய உழவாரப் பணிகளும் மூடிக்கிடந்த மக்கள் கண்களைத் திறந்தன. எங்கோ உயரத்தில் இருந்துகொண்டு சமயக் கருத்துகளைத் திருவாய் மலர்ந்தருளிய நிலையில் இல்லாமல், மக்களோடு மக்களாய்க் கலந்து உறவாடிய இப்பெருமக்களால் சமுதாயக் கொடுமைகள் பல களையப்பட்டன. திருநீல நக்கர், யாழ்ப் பாணரைத் தம் இல்லத்தின் மையக் கூடத்தில் வைத்து விருந்தூட்டியதும், திருவீழிமிழலையில் உற்ற வற்கடத்தில் அடியவர்களுடன் அமர்ந்து அப்பரும், சம்பந்தரும் அந்தப் பஞ்சத்தையும், அதன் விளைவாய் வளர்ந்த துன்பங்களையும் பகிர்ந்துகொண்டதையும் சேக்கிழார் வரிகளில் படிக்கும் போது[14], சமுதாயத்தில் இந்தச் சம்பவங்கள் எப்படிப் பட்ட தொரு தாக்கத்தை உண்டாக்கியிருக்க முடியுமென்பதை முற்றிலுமாய் உணரமுடிகின்றது.

## முதலாம் இராசராசனுக்குப் பிற்பட்ட காலம்

முதலாம் இராசராசன் காலத்தில்தான் திருமுறைகள் தொகுக்கப்பட்டன. முதல் மூன்று சம்பந்தர் பாடல்களாலும், அடுத்த மூன்று அப்பர் பாடல்களாலும், ஏழாம் திருமுறை சுந்தரர் பாடல்களாலும் நிறைவு செய்யப்பட்டன. இத்திருமுறைத் தொகுப்பு வரலாற்றுச் சிறப்புடைய நிகழ்வாகும். எங்கெங்கோ கோயில்களில் சிதறிக் கிடந்த பாடல்களைத் தொகுப்பதென்பது எளிதில் இயலக்கூடிய செயலன்று. யாரோ பெயர் தெரியாப் பெருமகனார் ஒருவர் இவற்றைச் சேகரித்துத் தில்லையில் வைக்க, அதை நம்பியாண்டார் நம்பி, முதலாம் இராசராசன் காலத்தில் அப்பெரு வேந்தனின்

தளரா முயற்சியால் திருமுறைகளாய்த் தொகுத்தார். இத் தொகுப்பு ஏற்கனவே சமுதாயத்தில் இருந்த விழிப்புணர்வை மேலும் பெருக்கியது. சமய உணர்வுகளைச் செழிக்கச் செய்தது. சோழர் காலத்துக் கல்வெட்டுகள் நூற்றுக் கணக்கில் தேவாரப்புகழ் பாடுகின்றன. முதலாம் இராசராசன், தஞ்சைப் பெருங்கோயிலில் தேவாரப் பதிகங் களைப் பாடி, இறைவனையும் மக்களையும் மகிழ்விக்கும் நோக்கில் பிடாரர்கள் நாற்பத் தெண்மரை அமர்த்தினான் என்று கல்வெட்டுகளால் அறிகிறோம்[15]. விழியொளி இழந் தவர்கள்கூடத் தேவாரப் பதிகங்கள் பாடுவதில் ஆர்வம் காட்டியதுடன், அப் பணிக்கென அமர்த்தப்பட்டதை இரண்டாம் குலோத்துங்கனின் திருஆமாத்தூர்க் கோயில் கல்வெட்டொன்று எடுத்துரைக்கிறது[16].

அதிக அளவில் கோயில் நடைமுறைகள் மீது மக்களுக்கு ஆர்வமேற்பட்டதைச் சோழர்களின் பல்நூறு கல்வெட்டுகள் தெளிவாய் எடுத்துரைக்கின்றன. கோயில்களில் பல வகை யான விளக்குகள் எரிப்பதற்கும், கோயில்களின் அன்றாட வழிபாடு, படையல் முதலான பலவகைச் செலவுகளுக்கும், அங்குப் பணியாற்றும் பலபணி நிவந்தக்காரர்களின் வாழ்க்கை வசதிகட்கும், ஊதிய வகைகட்கும், இறைத் திருமேனிகளை நிறுவவும், நிறுவிய திருமேனிகளைத் தொடர்ந்து காப் பாற்றவும், திருக்கோயில் மண்டபங்களில் சொற்பொழிவுகள், பாடங்கள் நிகழ்த்தவும், பயணிகள், அபூர்விகள், துறவிகள், புதியவர்கள் போன்றோர்க்கு உணவிட்டுக் காக்கவும், எளிய மக்களிலிருந்து பேரரசர்கள் வரை தத்தம் சக்திக்கேற்ப அறக்கொடைகளை நிறுவி மகிழ்ந்தனர். இறையடியார்களின் செப்புத் திருமேனிகளும் சிற்ப வடிவங்களும் திருக்கோயில் களில் இடம் பெறத் தொடங்கின. மக்களில் ஒருவர் என்ற நிலைமாறி, கடவுளின் அடியார்களாய் அவர்கள் தொழுது வணங்கப்பட்டனர். முதலாம் இராசராசன் காலத்தில் நம்பி ஆரூரர், நங்கை பரவையார், திருநாவுக்கரசர், சம்பந்தர் முதலியோரின் உருவப் படிமங்கள் பெருங்கோயிலுக்குத் தென்னவன் மூவேந்த வேளானால் செய்தளிக்கப்பட்டன.

முதலாம் இராசராசன் காலத்தில் திருமுறைகள் தமிழகத்தில் மலர்வித்திருந்த மாறுதல்களுக்கு இன்னொரு எடுத்துக் காட்டு, தஞ்சைக் கோயிலின் விமான உட்சுவர்களில் காணப் படும் சுந்தரர் வாழ்வு விளக்க ஓவியம்.

இத்திருமுறைகள் மக்கள் நெஞ்சை அதிகம் கவர்ந்தமை யால்தான் முதலாம் இராசேந்திரன் காலத்தில், கோயில் களில் தேவாரம் ஓதுவாரை மேற்பார்வையிடவும், முறை யான தேவாரப் பயிற்சிக்கு வழிவகுக்கவும், தேவார நாயகம் என்ற பொறுப்பில், தேவார அறிஞர்கள் அமர்த்தப்பட்டனர். மானம்பாடி நாகநாதசாமி கோயில் கல்வெட்டொன்று நாங்கூரைச் சேர்ந்த மாறைக் காடன் பதஞ்சலி பட்டாரர் என்பவர் இப்பொறுப்பை வகித்ததாகக் குறிப்பிடுகிறது.[17] இராசேந்திர சோழனின் பல கல்வெட்டுகள் தேவாரம் பாடியவர்க்கு அளிக்கப்பட்ட பல்வேறு நிவந்தங்களையும், திருக்கோயில்களில் நிறுவப்பட்ட திருத்தொண்டர்களின் திருமேனிகளையும் பட்டியலிட்டுக் காட்டுகின்றன.

முதல் ஏழு திருமுறைகள் முதலாம் இராசராசன் காலத்தில் தொகுக்கப்பட்டன. அடுத்த ஐந்தும் எப்போது முறைப்படுத்தப்பட்டன என்பதற்குச் சரியான சான்றுகள் இல்லை. பன்னிரண்டாம் திருமுறையான பெரியபுராணம் இரண்டாம் இராசராசனுக்கு முற்பட்டது. இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் சேக்கிழார் இதைப் பாடியதாகப் பல பேரறிஞர்கள் கருதுகின்றனர்.[18] இது சாலப்பொருத்த மாகும். ஏனெனில் இரண்டாம் இராசராசனின் ஐராவ தேசுவரர் திருக்கோயில் புறச்சுவர்களில்தான் திருத் தொண்டர்களின் வாழ்க்கை விளக்கச் சிற்பங்கள் சிற்றுருவத் தொகுதிகளாய் மிக நுணுக்கமாக, நிறைந்த கவனத்துடன் முழுமையாகச் செதுக்கப்பட்டுள்ளன. இதற்கு முன் எழுந்த எக்கோயிலிலும் இதுபோல் தொடர்வடிவில் தொகையடியார் களின் வாழ்க்கை வரலாற்றுச் சிற்பங்கள் இடம் பெறவில்லை என்பது இங்குக் கருதத்தக்கது. நரலோக வீரன் என்னும் முதற் குலோத்துங்கனின் படைத்தலைவன் திருவதிகையிலும் தில்லையிலும் செய்ததிருப்பணிகளுள், தேவாரப் பாடல்,

களைச் செப்பேடுகளில் பதியச்செய்து போற்றி வைத்தது தலையாய செயலாகப் புகழப்படுகிறது.[19] திருமுறைகளிடத்தும் அத்திருமுறைகளைக் கண்ட தெய்வாசிரியர்களிடத்தும், மக்களும் மன்னர்களும் மற்றவர்களும் கொண்டிருந்த மகத்தான ஈடுபாடும் பக்தியும் இதனால் விளங்குதல் ஒருதலை.

திருமுறைகளின் சமுதாயத் தாக்கத்தால் நிகழ்ந்த மற்றொரு குறிப்பிடத்தக்க செய்தி திருமடங்களின் தோற்றமும், வளர்ச்சியும், எண்ணிக்கைப் பெருக்கமுமாகும். பிற்பட்ட பல்லவர் காலத்தில் தோன்றிய இவ்வளர்ச்சி, சோழர்கள் காலத்தில் பல்கிப் பெருகிற்று. நூற்றுக்கணக்கான மடங்களைப் பற்றிக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. அவை இறைவன் பெயர்களைத் தாங்கியும், அடியார் பெயர்களைத் தாங்கியும், அரசர் சிற்றரசர் பெயர்களைத் தாங்கியும், வேறு பல பெயர்களைக் கொண்டும் விளக்கமுற்றிருந்தன.

திருநீல விடங்கன் மடம், கூத்தாடு நாயனார் மடம், அழகிய திருச்சிற்றம்பலம் உடையான் மடம், அருண்மொழித் தேவன் மடம், இராசேந்திர சோழன் மடம், தில்லை வாழ் அந்தணர் மடம், சம்பந்தர் திருமடம், திருநாவுக்கரசர் மடம், எழுநூற்றுவன் மடம், நாலாயிரவன் திருமடம் எனப் பல பெயர்களில் மடங்கள் தொண்டாற்றின.[20] அண்மையில் திருச்சிக்கு அருகில் உள்ள அழுந்தியூரில் டாக்டர். மா. இராசமாணிக்கனார் வரலாற்றுப் பேரவையினரால் கண்டுபிடிக்கப் பட்ட கல்வெட்டொன்றில் பிச்சியார் மடம் என்ற குறிப்பு காணப்படுகிறது.[21] இது சைவப்பெண் துறவியர் மடமாக இருந்திருக்குமோ என்ற ஐயப்பாடு அறிஞர்கள் மையத்தில் எழுந்துள்ளது.[22]

இத்திருமடங்கள் திருமுறைகளின் பரவலுக்குப் பெரும் காரணமாய் அமைந்தன. சில மடங்கள் திருமுறைகளைப் படியெடுத்துப் பாதுகாப்பாய் வைத்தன. குறுக்கை திருஞான சம்பந்தன் குகை, திருவிடைவாய் திருத்தொண்டத் தொகையான் குகை, தோணிபுரத்துத் தேவாரச் செல்வன் குகை

முதலிய பாதுகாப்பான இடங்களில் திருமுறைகள் வைத்துப் பாதுகாக்கப்பட்டன.[23] பல கோயில்களில் திருமுறைகளைப் பாதுகாத்தல், அழிந்தவற்றைப் புதுப்பித்தல், பிறர்க்குக் கற்பித்தல் இவற்றைச் செய்யத் தமிழ் விரகர் எனப்படும் அறிஞர் பெருமக்கள் இருந்தனர்.[24] இவர்கள் திருமடங் களுடன் இணைந்து செயலாற்றினர்.

சுருங்க நோக்கின் தேவாரப் பாடல்கள் அரசியல், சமுதாய மாற்றங்களால் ஏற்பட்ட சமயத் தாக்கம் எனலாம். இச்சமயப் புரட்சியால் மக்கள் உள்ளங்களிலும், சமுதாயக் கூட்டமைப்பிலும், கோயிலாட்சியிலும் நிகழ்ந்த மாற்றங் களைத் திருமுறைகளால் நேர்ந்த சமுதாயத் தாக்கமெனலாம். இவ்விரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாய், ஒன்றுக்குள் ஒன்று உறவு கொண்டதாய், ஒன்றை ஒன்று சார்ந்ததாய் அமைந்தவையாகும்.

சோழர்களுக்குப் பின் விசயநகர நாயக்கர் ஆட்சியிலும், பின்வந்த ஆங்கிலேயர் ஆட்சியிலும் திருமுறைகள் சற்றே செல்வாக்கிழந்தன. மக்களோடு மக்களாய் ஒன்றியிருந்த சமயப் பெரியவர்கள், பல்வேறு காரணங்களால் மக்களிட மிருந்து விலகி, வழிகாட்டுதலை விடுத்து ஒதுங்கிக்கொண்ட தால், சரிந்த செல்வாக்கைச் சரிக்கட்டுதல் இயலாததாயிற்று. வாழ்க்கை வேகங்களும் அறிவியல் முன்னேற்றங்களும், அறநெறிகளில் மக்களுக்கிருந்த ஆர்வம் குறையக் காரண மாயின. திருமுறைகளை ஓதி மகிழ்ந்த பிள்ளைச் செல்வங்கள், 'பா, பா பிளாக் ஷீப்' என்று நர்சரிப் பாடல்களை ஆங்கில மொழியில் அரற்றத் தொடங்கின. இன்றைய நிலையில் சமயமும் சமுதாயமும் துருவங்களாகி நிற்கின்றன. மேற் போக்கான சமயப் பூச்சுகளைத் தவிர, அடிமட்ட உணர்வு களை அடையாளம் காண முடியாதபடி, சமுதாயத்தில் சமயம் ஒதுங்கிப்போனது. இந்த நிலை மாற வேண்டுமாயின், திருமுறைகளின் சமுதாயத் தாக்கம் மீண்டும் செழிப்பாகிச் செயல்பட வேண்டுமாயின், மக்கள் மையத்தில் மலரும்படி சமயத்தைக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். இதைத்

தான் இன்றைய திருமடங்கள் தலையாய பணியாய்க் கொண்டு முனைந்துள்ளன. அம்முயற்சிகள் வெல்ல வேண்டுமாயின், சமயம் அறிவியல் நோக்கோடு அமைய வேண்டும். மக்களுக்கு விளங்கும் வகையில், புரியும் மொழியில் சமய நெறிகள் எளிமைப்படுத்தப்பட்டு, அவர்தம் அன்றாட வாழ்வின் ஓரங்கமாகும்படி தரப்பட வேண்டும். அப்போது தான் புதிய சமுதாயத்தை மலர்விப்பது கைகூடும்.

---

1. டாக்டர் இரா. கலைக்கோவன், கோச் செங்கணான் யார்? செந்தமிழ்ச் செல்வி, நவம்பர் 1982–மே 1983.

2. நாலாயிர திவ்வியப் பிரபந்தம், பெரிய திருமொழி, திருநறையூர்ப் பதிகம், பக். 146, பா. எண். 1505.

3. மூன்றாம்திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1955 பக். 85, 87.

4. ஏழாம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1964, பக். 798.

5. ஆறாம் திருமுறை தருமபுர ஆதீன வெளியீடு .1963, பக். 521

6. டாக்டர் மா. இராசமாணிக்கனார், பெரியபுராண ஆராய்ச்சி, 1978. பக். 111 - 112.

7. மேற்படி., பக், 146 - 162.

7A. S. I. I. Volume, III, ins. 43, p. 93-94.

8. A. R. E. 129 of 1914.

9. A. R. E. 149 of 1936.

10. A. R. E. 99 of 1928 – 29.

11. A. R. E. 111, 139 of 1924-’25.

11A. A. R. E. 349 of 1918, S. I. I. xiii, ins. no. 141.

12. S I. I. vol iii, ins. no. 139.

13. டாக்டர் இரா. கலைக்கோவன், கலைவளர்த்த திருக்கோயில்கள், கழகவெளியீடு 1984, பக். 9-26.

14. புலவர் அரசு, பெரியபுராண வசனம், கழக வெளியீடு, 1979, பக். 214, 220–222.

15. டாக்டர் இரா. நாகசாமி, தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1969, பக். 48-53.

16. S. I. I. Volume, viii, ins. no. 749.

17. டாக்டர் இரா. கலைக்கோவன், கலைவளர்த்த திருக் கோயில்கள், கழக வெளியீடு, 1984, பக். 4.

18. டாக்டர் மா. இராசமாணிக்கனார், பெரியபுராண ஆராய்ச்சி, 1978, பக். 39.

19. டாக்டர் மா. இராசமாணிக்கனார், பெரியபுராண ஆராய்ச்சி, 1978 பக். 134.

20. டாக்டர் மா. இராசமாணிக்கனார், சைவசமய வளர்ச்சி, 1972, பக். 206-209.

21. Dr. R. Kalaikkovan, Archaeological discoveries at Azhundur, Indian Express, 1-3-86.

22. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் திருமிகு. வி. ஐ. சுப்பிரமணியம் அவர்கள் என்னிடம் நேரிடை யாகவே இதுபற்றிப் பேசினார்கள்.

23. டாக்டர் மா. இராசமாணிக்கனார், சைவசமய வளர்ச்சி, 1972, பக். 223-224, 199.

24. மேற்படி., பக். 200.

# 4. சதுரமும் லலிதமும்

தமிழர்களின் வாழ்வோடு இயைந்துபோன பல்வேறு கலைகளுள் ஆடற்கலையும் ஒன்று. சங்க இலக்கியங்களின் பக்கங்களிலும், காப்பிய ஏடுகளிலும் செழித்து வளர்ந்த ஆடற்கலைக்குக் கல்லில் வடிவம் தந்தவர்களுள் பல்லவர்கள் முதன்மையானவர்கள். பல்லவர்களின் கலைமுறையை வளப்படுத்திக் கல்லில் மட்டுமன்றிச் செம்பிலும் கலைப் படைப்புகளை உருவாக்கி, ஆடற்கலையில் அழகின் சிகரத்தைத் தொட்டவர்கள் சோழப் பேரரசர்கள். சோழர் காலத்துச் செப்புத் திருமேனிகள் வார்ப்புக் கலையின் வடிவழகுச் சாதனைகள். 'ஆடவல்லான்' என்று முதலாம் இராசராச னால் அன்போடு அழைக்கப்பட்ட நடராசரின் அழகுத் திரு மேனிகளைப் பெற்றிராத சைவத் திருக்கோயில்களைத் தமிழ் நாட்டில் காண்பது கடினம். இந்த ஆடவல்லான் திருமேனி கள் பொதுவாக ஆனந்தத் தாண்டவத் திருக்கோலத்திலேயே அமைந்துள்ளன என்றாலும், சில கோயில்களில் அருமையாக, மாறுபட்ட ஆடல் தோற்றங்களிலும் காணக் கிடக்கின்றன. இத்தகு அற்புதப் படைப்புகளுள் ஒன்றுதான் திருவரங்குளம் அரதீர்த்தேசுவரர் திருக்கோயிலில் இருந்து எடுத்துச் செல்லப் பட்டு இப்போது புது தில்லி அருங்காட்சியகத்தை அழகு செய்துகொண்டிருக்கும் புதுமையான ஆடவல்லான் திருமேனி. இதைச் சதுர கரணம் என்று திரு. சிவராம மூர்த்தி அவர்கள் தம்முடைய நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.[1]

பரதரின் நாட்டிய நூல் நூற்றெட்டுக் கரணங்களை வரிசைப்படுத்துகிறது. இவற்றுள் முப்பத்தொன்பதாவது கரணமாகக் காட்டப்படுவதுதான் சதுரம்.[2] சதுர கரணம் எப்படியிருக்க வேண்டும் என்பதை நாட்டிய நூல் மிக அழகாக வரையறை செய்கிறது.

''அஞ்சிதஹ சியாத் கரோ வாமஹ ஸவ்யயஷச் துரு ஏவது
தட்சிணஹ குட்டிதஹ பாதஹ சதுரம் தத்ப்ரக்கீர்த்திதம்''[3]

இதன் ஆங்கில மொழிபெயர்ப்பைப் பின் வருமாறு தாண்டவ லட்சணம் தருகிறது.

''The left hand is in Ancita, the right hand in Catura and the right leg in Kuttita. The Ancita action is the same as Alapallava''[4]

டாக்டர் மனோ மோகன் கோஷ், பரதரின் நாட்டிய நூலுக்குச் செய்திருக்கும் ஆங்கில உரையில், மேற்கண்ட வாறே சதுர கரணத்தை வரையறுக்கிறார். 'The right foot in Kuttita' என்னுமிடத்தில் அடைப்புக் குறிக்குள் உத்கட்டி தம் என்று குறிப்பிடுகிறார்.[5]

உத்கட்டிதம் என்பதற்கு டாக்டர் பத்மா சுப்பிரமணி யம் தம்முடைய பரதக்கலை கோட்பாடு என்ற நூலில் மிக அழகாக விளக்கம் தருகிறார். முன் பாதத்தைத் தரையில் படிய வைத்துக் குதிங்காலை மட்டும் உயர்த்தித் தட்டுதல் உத்கட்டிதம் அல்லது குட்டிதம் எனப்படும்.[6]

இதன்படி சதுரகரணத்தில் வலக்கை சதுர முத்திரை யிலும், இடக்கை அலபல்லவ முத்திரையிலும் இருக்க வலக் கால் குட்டிதமாகக் காட்டப்பெற வேண்டும்.[7]

இப்போது திருவரங்குளம் செப்புத் திருமேனியைப் பார்ப்போம். புன்னகை பொலிந்த அழகுத் திருமுகம்; நான்கு கைகள். இவற்றுள் வல முன்கை காக்கும் குறிப்பு காட்ட, இட முன்கை வேழ முத்திரையில் இருக்க வலப் பின்கையில் துடியும், இடப் பின்கையில் தீச்சுடரும் உள்ளன; அர்த்த மண்டலம் எனப்படும் அரை மண்டியில் கால்கள் உள்ளன. வலப்பாதம் முயலகன் மீது முழுவதுமாய்ப் பொருந்திய நிலையில் பக்கவாட்டில் வலப்புறமாய்த் திருப் பப்பட்டுள்ளது. வலக் குதிங்காலை ஒட்டி இடப்பாதம் உள்ளது. இதன் விரல்களும் முன் பாதமும் முயலகன் மீது ஊன்றியிருக்க, குதிங்கால் உயர்த்தப்பட்டுள்ளது. இப் பாத நிலையே உத்கட்டிதம்,

பரதரின் கட்டளைப்படி சதுர கரணத்தில் வலக்காலே குட்டிதமாக (உத்கட்டித நிலலயில்) இருக்க வேண்டும். ஆனால் இத் திருமேனியில் இடக்கால் குட்டிதமாக உள்ளது.

பரதரின் கரண விளக்கச் சிற்பங்கள் தஞ்சைப் பெரிய கோயிலிலும், குடந்தை சாரங்கபாணி கோயிலிலும், தில்லை அம்பலக் கூத்தன் கோயிலிலும் உள்ளன. இங்குள்ள சதுர கரணச் சிற்பங்களிலும் வலக்காலே குட்டிதமாய்க் காட்டப் பட்டுள்ளது. திரு. சிவராமமூர்த்தி தஞ்சையிலும், தில்லை யிலும் உள்ள சதுர கரணச் சிற்பங்களைப் பற்றிக் குறிப் பிடும்போது, 'the text Dakshina Kuttita padah, Which is Very important in Chatura pose is Clear in both' என்று எழுதுகிறார்.[8] இருந்தும் இடக்கால் குட்டிதமாய் உள்ள திருவரங்குளம் திருமேனியைச் சதுரமென்று குறிப்பிட்டுள் ளார்.

கரண வடிவங்களைச் செப்புத் திருமேனிகளாய்ச் செய்தபோது கைகளுக்குரிய முத்திரைகளில் வார்ப்பறிஞர் கள் அதிகக் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. ஆனால் காலமைப்பில் கருத்து கொண்டார்கள். அதனால் தான் தில்லை, தஞ்சைக் கோயில் கரணச் சிற்பங்களில் உள்ள அலபல்லவமோ, சதுரமோ, திருவரங்குளம் வார்ப் புத் திருமேனியின் கைகளில் இல்லை. எனவே நாம் கைளை மறந்துவிடுவோம். காலமைப்பை மட்டும் பார்ப் போம். இங்கு இடக்கால் குட்டிதமாக, அஃதாவது உத்கட் டிதமாக உள்ளது. சதுர கரணத்தில் வலக்கால் அல்லவா குட்டிதமாக இருக்க வேண்டும்? இந்நிலையில் இத் திருமேனி எப்படிச் சதுரமாகும்?

பரதரின் நூற்றெட்டுக் கரணங்களில் காலமைப்பில் சதுரத்தோடு நெருங்கிய தொடர்புடைய மற்றொரு கரணம் லலிதம். இது கரணவரிசையில் முப்பத்து மூன்றாவது இடத் தைப் பெறுகிறது.[9]

"கரிஹஸ்தோ பவேது வாமோ தக்ஷிணச்ச விவர்த்திதஹ
பஹுஷஹ குட்டிதஹ பாதோ ஞேயந்த லலிதம் புதைஹ"

என்பது பரதரின் லலித கரண வரையறை.[10]

"The left hand is in Karihastha, the right in Aparvartita and the leg repeatedly in Kuttita" என்று இவ் வரையறையைத் தாண்டவ லட்சணம் ஆங்கிலத்தில் கூறும்.[11]

இதையே டாக்டர் மனோ மோகன் கோஷ், 'The left hand with karihastha gesture, the right one to be again turned aside Aparvartita, the feet to be moved up and down' என்பார்.[12]

திரு T. A. கோபிநாத ராவ் அவர்களும் தம்முடைய நூலில் இதையே குறிப்பிடுகிறார்கள்.[13] குட்டிதம் என்பதற்கு நாட்டிய வேத விருத்தி தரும் விளக்கமாக,

'If one leg rests firmly on the ground and the other resting upon the toe, strikes the ground with heel the leg pose is Called Nikuttlitam' என்பார் திரு. கோபிநாதராவ்.[14]

இங்கும் நாம் கைகளை மறந்துவிடலாம். ஏனென்றால் வார்ப்புத் திருமேனிகளில் வேழ முத்திரையில்லாத (கரி அஸ்தம்) ஆடவல்லான் திருமேனிகள் மிக மிகக் குறைவு. அதனால் ஓர் ஆடவல்லான் திருமேனியை இன்ன கரணம் என்று கணிப்பதற்குக் காலமைப்பு கொண்டு பார்ப்பதே பொருந்தும்.

லலித கரணத்தில் ஒரு பாதம் முழுவதுமாய்த் தரையில் ஊன்றியிருக்கும். மறு பாதத்தின் முன்பகுதி தரையில் ஊன்றியிருக்கக் குதிங்கால் உயர்ந்திருக்கும். இது எந்தப் பாதமாகவும் இருக்கலாம்: வலமாகவும் இருக்கலாம். இடமாகவும் இருக்கலாம். இன்னபாதமென்று நாட்டிய நூலில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

இப்போது மீண்டும் திருவரங்குளம் திருமேனியைப் பார்ப்போம். இதில் இடக்கால் குட்டிதமாக உள்ளது. இது திரு. சிவராமமூர்த்தி குறிப்பது போல் சதுரமா? அல்லது லலிதமா?

சதுரத்தில் வலக்கால்தான் குட்டிதமாக இருக்க வேண்டும் என்று நாட்டிய நூல் வரையறுத்துக் கூறும் நிலையில், தில்லையிலும், தஞ்சையிலும், குடந்தையிலும் உள்ள சதுர கரணத் திருமேனிகள் அனைத்தும் வலக்காலைக் குட்டிதமாய்க் கொண்டிருக்கும் நிலையில், இடக்கால் குட்டிதமாக அமைந்துள்ள இந்தத் திருவரங்குளம் திருமேனியை எப்படி சதுரராய்க் கொள்வது? ஐயத்திற்கிடமின்றி இது லலிதம்தான்.

வலக்காலைக் குட்டிதமாய்க் கொண்ட ஆடவல்லான் வடிவங்கள் குமாரவயலூரிலும்[15], கொடுமுடியிலும்[16] செப்புத் திருமேனிகளாகவும், பரங்குன்றத்தில் புடைப்புச் சிற்பமாகவும்[17] இடம் பெற்றுள்ளன. இவற்றை ஒவ்வொன்றாய்ப் பார்ப்போம்:

வயலூர் இறைவன் கொக்கிறகும், பிறையும், ஊமத்தம் பூவும், பாம்பும் நிறைந்த சடாமகுடத்துடன் காணப்படுகிறார். தலையின் பின்புறம் சடைகள் புரிகளாக முடிந்து முதுகின் பரப்பில் அழகுபடத் திகழ்கின்றன. நெற்றிக் கண் உட்பட மூன்று கண்களிலுமே கனிவு கொஞ்சுகிறது. வலச் செவி நீள்செவி. இடச்செவியில் பத்ரகுண்டலம். வயிற்றுக்குச் சற்று மேலே இடுப்புக் கட்டு. அழகுக்கு அழகு சேர்ப்பது போல் கழுத்தில் புலித்தாலி உட்படப் பல அணிகலன்கள். வலக்கையின் மேற்புறம் பாம்பு வளையம், இப்பாம்பின் தலை வலத்தோளின் வழியே எட்டிப் பார்ப்பது போல் செதுக்கப்பட்டிருக்கும் நயம் நம்மை மயக்குவதாகும்.

நான்கு கைகளில் வலமுன்கை காக்கும் குறிப்பு காட்ட, இடமுன்கை வேழ முத்திரையில் வலப்புறம் வீசப்பட்டுள்ளது. பின்கைகளில் வலப்புறம் உடுக்கை. இடப்புறம் தீயகல். இடையில் ஆடுவதற்கு வாய்ப்பாக மடித்துக் கட்டப்பட்ட ஆடை.

வழக்கமாக இறைவனின் திருவடிக் கீழ் காணப்படும் முயலகன் இங்கில்லை. அதற்குப் பதிலாக இறைவனின் இரண்டு கால்களும் தாமரைத் தளத்தின் மீதிருக்கின்றன.

இடப்பாதம் தளத்தின் மீது முழுவதுமாய் ஊன்றி இலேசாகப் பக்கவாட்டில் திரும்பியிருக்க, வலப்பாதம் இடப்பாதத்தின் அருகே உத்கட்டித அமைப்பில் காணப்படுகிறது.

வயலூரில் இறைவனுக்கருகே உமையும் உள்ளார். கரண்ட மகுடத்துடன் அழகு பொலிந்த தேவியாய், வலக்கை கடக முத்திரையில் இருக்க, இடக்கை தொங்கும் கையாய் அமைய, மிக எளிய கோலத்தினராய்ப் பார்வைகளில் பரிவும், புன்சிரிப்பில் பொலிவும் தேக்கி, இறைவன் ஆடலில் தனை யிழந்த நிலையில் ஒசிந்து நிற்கும் உமையின் வடிவம் சோழர் கால வார்ப்பறிஞர்களின் இமயச்சாதனை.

இந்த வயலூரானைத் திரு. தண்டபாணி தேசிகர் சதுரர் என்கிறார்.[18] ஆனால் திரு. சிவராமமூர்த்தியோ லலிதர் என்கிறார்.[19]

பெரியார் மாவட்டத்தின் பெருமைக்குரிய கோயில்களுள் ஒன்று கொடுமுடியிலுள்ள அருள்மிகு மகுடேசர் திருக்கோயில். காலப் பழமையாலும், கல்வெட்டுப் பெருமையாலும், சிற்பச் சிறப்பாலும், வரலாற்றுப் பெட்டகமாய், வணக்கத்துக்குரிய இறைக் கோயிலாய்த் திகழும் இத்திருக்கோயிலில்தான், சிவபெருமானின் உலகப் புகழ் பெற்ற ஆடற் கோலமொன்று வார்ப்புத் திருமேனியாய் வடிவம் கொண்டுள்ளது.

இந்த வனப்பான திருமேனியின் வடிவழகு பார்ப்போம்: தலையின் சடைமுடிகளைத் தூக்கிச் சேர்த்து அழகான தொரு மகுடமாய் முடிந்த நிலை, உருண்டை முகம் : எடுப்பான நாசி. இலேசாய் மலர்ந்த விசார்க இதழ்கள். சரப்பளி, கண்டிகை எனப் பல்வகைக் கழுத்தணிகள். இடுப்பில் அழகிய அரையாடை. அதன் முடிச்சு வளையத்தொங்கலாய் இரு கால்களுக்கும் இடையில் அழகு ஊஞ்சல் ஆடுகிறது. கால்களில் சதங்கை, கைகளில் வளைகள், கங்கணம், பாம்பு வளையம்; வலக்கை காக்கும் குறிப்பு காட்டி ஆறுதல் படுத்த, இடக்கை வலப்புறம் வீசிய யானைத் துதிக்கை போல் வேழ முத்திரையில் நிலவ வலப்பின்கை துடியுடன்; இடப் பின்கையில் தீ

யகல். எழிலார் இந்தத் தோற்றத்தானின் முகப்பொலிவு பாருங்கள். கருணையும், கனிவும் கொஞ்சும் எழில் முகம். பெருமிதமும், புன்சிரிப்பும் அலையாடும் கரையோரமாய்க் காந்தப் பார்வை. காண்போரின் கண்களை மலர்த்தி, அவர் தம் கனிந்த நெஞ்சில் கற்பனை மலர்களைக் கோடி கோடியாய் மணக்கவிடும் இந்த ஒல்காப் பேரழகின் உச்சந்தான் முக்தியா?

இனிய இப்பெருமானின் இரு கால்களும் பார்ப்போம். இடப்பாதம் தளத்தில் முழுவதுமாய் ஊன்றிய நிலையில்; வலக்காலை விரல்களால் ஊன்றிக் குதிங்காலை உயர்த்தியிருக்கிறார். இதுதான் குட்டிதம். வலக்கால் குட்டிதமாயிருக்கும் இந்த அற்புத ஆடல் நிலையைத்தான் பரதர் சதுரம் என்கிறார். பரதரின் வரையறுப்பால் இப்பேரழகுப் பெருமான் சதுர கரணராய்ப் புகழ் பெறுகிறார். ஆனால் இந்தக் கொடு முடிக் கோமகனைத் திரு. சிவராமமூர்த்தி லலிதர் என்கிறார்.[20]

இனி பரங்குன்றத்தாரைப் பார்ப்போம். சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்ததாகப் போற்றப்படும் மதுரை மாநகருக்குத் தென் மேற்கில் ஐந்து கல் தொலைவில் அமைந்துள்ள அழகிய குன்றமே திருப்பரங்குன்றம். ஏறத்தாழ முந்நூறு அடி உயரமுள்ள இக்குன்றில் இரண்டு குடைவரைக் கோயில்களும், சமணர் குகைத் தளமும் உள்ளன. இக் குடைவரைக் கோயில்கள் மலைக்குத் தென்புறமொன்றும், வடபுறமொன்றுமாக அமைந்துள்ளன. இவ்விரண்டனுள் இன்று வழிபாட்டில் இருக்கும் கோயில் பாண்டியப் பெருவேந்தன் பராந்தக நெடுஞ்சடையனின் ஆறாவது ஆட்சியாண்டில் அவனுடைய சாமந்த பீமனாகிய சாத்தன் கணபதி என்பவனால் தோற்றுவிக்கப்பட்டது.[21] இங்குக் காணப்படும் கிரந்தக் கல்வெட்டில் இக் கோயில் சிவபெருமானுக்காகத் தோற்றுவிக்கப்பட்டதாகக் குறிக்கப்பட்டுள்ளது. எனினும் இக்கோயிலில் சிவபெருமானோடு திருமால், முருகன், கொற்றவை, பிள்ளையார் ஆகிய நான்கு தெய்வங்களும்

நிறைந்திருப்பதைக் காணலாம். தொடக்க காலத்தில் சிவபெருமானுக்காகவே எடுப்பிக்கப்பட்ட இக்கோயில் பிற்காலத்தில் முருகப் பெருமானின் முக்கியத் தலங்களுள் ஒன்றாகப் புகழ் பெற்றது. இங்குச் சிவபெருமான் கோயில் கொண்டிருப்பதே பலருக்குத் தெரியாது.

வடக்கு நோக்கியுள்ள இக் கோயிலில் சிவபெருமானுக்குரிய கருவறை கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. சதுர வடிவமான இக்கருவறையில் இறைவன் பரங்கிரிநாதர் என்ற பெயரில் இலிங்கத் திருமேனியராய் எழுந்தருளியுள்ளார். கருவறையின் உட்புறச் சுவரில் கந்தனை உடன் கொண்ட இறைவனும், இறைவியும் சோமாஸ் கந்த மூர்த்தியாய்க் காணப்படுகின்றனர்.

இக் கருவறையின் வெளிப்புறமுள்ள சுவரில் சிவபெருமானின் ஆடல் தோற்றமொன்று புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. இங்கு இறைவன் சடா மகுடத்துடன் காணப்படுகிறார். தலை சற்றே வலப்புறம் சாய, முகம் இடப்புறம் திரும்பிய நிலையில், கருணையும் களிப்பும் பொலியும் கம்பீரத் தோற்றப் பேரெழில், காண்போர் பார்வைகளைப் பரவசப்படுத்துகிறது. கழுத்திலுள்ள மாலை, முப்புரிநூல், தோள் வளையம் அனைத்தும் முற்காலப் பாண்டியரின் கை வண்ணத்திற்குச் சான்றுகளாய் அமைந்துள்ளன. இடையில் ஆடுவதற்கு வாய்ப்பாக மடித்துக் கட்டப்பட்ட ஆடை, இரு கால்களின் நடுவில் இந்த இடுப்பு ஆடையிலிருந்து அழகிய விரிப்பொன்று அளவாய்த் தொங்குகிறது.

இறைவனின் நான்கு திருக்கைகளில் வலமுன்கை கடக முத்திரையில் அமைந்துள்ளது. இதை ஆகூய வரதம் என்று திரு. செ. போசு,[22] திரு. சி. சிவராமமூர்த்தி[23] ஆகியோரும், அபயம் என்று திரு. தண்டபாணி தேசிகரும்[24] தத்தம் நூல்களில் குறித்துள்ளனர். இக் குறிப்புகள் முற்றிலும் தவறாகும். ஆகூய வரதம் எப்படி அமைந்திருக்க வேண்டும் என்பதைத் திரு. கணபதி ஸ்தபதி மிக அழகுபடப் படம் போட்டு விளக்கியுள்ளார்.[25] இதை அழைத்து வழங்கும்

கையென்றும் அவர் குறிக்கிறார். அபயத்தைத் தலைகீழாகப் பிடிப்பின் அது வரதம். இதில் விரல்கள் கீழ் நோக்கியனவாய் அமையும்.[26] அந்த வரதக் கையில் நடுவிரலும், அணிவிரலும் சற்று முன் நோக்கி மடங்கிய நிலை, ஆகூய வரதம்.

கைச் சுட்டு விரல் முதல் சிறு விரல் வரை உள்ள நான்கு விரல்களையும் ஒன்றோடொன்று ஒட்டியமைத்து, கைத்தலத்திற்குச் சம மட்டத்தில் செங்குத்தாக மேல் நோக்கி நிறுத்தி, பெருவிரலைச் சுட்டு விரலோடு சேர்த்து மேல் நோக்கி அமைத்துப் பிடிக்கும் கை அமைதி அபயம்.[27]

பரங்குன்றத்து ஆடவல்லானின் வல முன் கையின் அமைப்பு ஆகூய வரத விளக்கத்திற்கோ அல்லது அபய முத்திரைக்கான விளக்கத்திற்கோ சிறிதும் பொருந்தாமல் உள்ளது.

இனி கடக முத்திரைக்கான விளக்கத்தைப் பார்ப்போம்: கைத்தலத்திலிருந்து பெருவிரலை நீட்டி, உள்முகமாகச் சிறிது வளைத்து, நடுவிரலையும் அணிவிரலையும் ஒன்றோடொன்று இணைத்து, முன்னோக்கி வளைத்து, சுட்டு விரலையும் சிறு விரலையும்தமது இடங்களில் நிறுத்தி, மேற்கணுக்களைச் சிறிது வளைத்துப் பிடிக்கும் கை கடகக்கை. இதில் நடுவிரலின் நுனியானது அணிவிரல் நுனியிலிருந்து சிறிது முன்னோக்கி அமைதல் வேண்டும். சிற்ப வடிவங்களில் பாசம், அங்குசம், தண்டம் முதலியவற்றைப் பிடிக்க இப்பிடி பயன்படுகிறது. கருவிகள் இல்லாமலும் இம் முத்திரையைச் சிற்பங்களில் அமைப்பது உண்டு. அது பிடிப்பைக் காட்டும்.[28]

கடக முத்திரைக்கும் சிம்மகர்ண முத்திரைக்கும் அதிக வேறுபாடுகள் இல்லை. திரு கோபிநாதராவ் இரண்டையும் ஒன்றென்வே கூறுகிறார்.[29] திரு. கணபதி ஸ்தபதி சிம்மகர்ண முத்திரைக்கான விளக்கம் கூறுமிடத்து, 'கடக முத்திரையில் நடுவிரலானது உள்ளங்கை வரையில் நன்கு வளைந்து அணிவிரல் அதனைத் தொடர்ந்து செல்ல, மற்ற விரல்கள் கடக முத்திரையில் உள்ளவாறே வளைந்திருக்கும்' என்று கூறுகிறார்.[30]

இவ்விளக்கங்களை மனத்திலேற்றிக் கொண்டு, பரங்குன்றத்துச் சிற்பத்தை நோக்குவோமாயின், இறைவனின் வலமுன்கை கடக முத்திரையில் விளங்குவதை மிகத் தெளிவாக உணரலாம். இதைச் சிம்மகர்ண முத்திரை என்றாலும் தவறாகாது. ஏனெனில் இரண்டு முத்திரைகளுக்கும் அதிக வேறுபாடு இல்லை,

இறைவன் தன் வலப்பின்கையில் அனலை ஏந்தியுள்ளார். பொதுவாக எல்லா ஆடவல்லான் சிற்பங்களிலும், செப்புத் திருமேனிகளிலும் இடப்பின்கையில்தான் அனலோ அல்லது தீயகலோ காட்டப்பெற்றிருக்கும். வலப்பின்கை பொதுவாகத் துடியையே ஏந்தியிருக்கும். இச் சிற்பத்தில் வழக்கத்துக்கு மாறாகப் புதுமையான தொரு மாற்றம் தரப்பட்டுள்ளது, அனலேந்தியுள்ள இக் கையைக் கபாலமேந்திய கையென்று பிழைபடக் குறித்துள்ளார் திரு. தேசிகர்.[31]

இப் பெருமானின் இடமுன்கை வேழ முத்திரையில் வடிக்கப்பட்டுள்ளது. திரு. தேசிகர் இதை டோல முத்திரை யென்று தவறாகக் குறிப்பிட்டுள்ளார்.[32] ஒடிந்த- ஆனால் அறாத கிளை மரத்தில் தொங்கி நிற்கும் நிலைபோலத் தோளிலிருந்து நீட்டப்பெற்றுத் தொங்கியமையும் கை அமைதியே டோல முத்திரை.[33] ஒரு கரணத்தில் இரண்டு தோள்களும் தளர்த்தியாக அமைந்து, பதாக முத்திரையிலுள்ள கைகள் இரண்டும் தொங்கிக்கொண்டிருந்தால் அதுவே டோல முத்திரை என்று பரதரின் நாட்டிய நூல் கூறுகிறது.[34]

கையை நேராக நீட்டி, மணிக்கட்டில் கைத்தலத்தைக் கீழ் நோக்கிச் சரித்துத், தளிர்க்கை போல் விரல்களை அமைத்து, கம்பீரமாகப் பிடிக்கும் கையை வேழமுத்திரை (கரி அஸ்தம்) என்கிறது சிற்பச் செந்நூல்.[35] பரங்குன்றத்துச் சிற்பத் திருமேனியின் இடமுன் கை அமைப்பு இந்த விளக்கத்திற்கே பொருந்தி வருகிறது. வேழ முத்திரையாக அமைந்துள்ள இக் கையை டோல முத்திரையாக்கியிருப்பது எவ்விதத் தானும் பொருந்தாது.

இடப்பின்கையில் விடைக் கொடியுடன் காணப்படும் பரங்குன்றத்துப் பேரழகரின் கால்களைப் பார்ப்போம். விரல்களை முயலகனின் முதுகின் மீது ஊன்றிக், குதிங்காலை உயர்த்திய நிலையில், வலக்கால் குட்டிதமாக அமைந்துள்ளது. இடக்கால் முழுவதுமாய் முயலகனின் முதுகின் மீது ஊன்றியுள்ளது. இறைவனுக்குப் பக்கத்தில் இவ்வாடலைக் கண்டு மகிழும் சுவைஞர்களாய் உமையன்னை, குள்ளச் சிறு பூதங்கள், குடமுழா வாசிக்கும் தண்டு, நான்முகன், திருமால், இந்திரன் ஆகியோர் காட்டப்பட்டுள்ளனர்.

தன் நெஞ்சமெலாம் நிறைந்த இறைவனின் இனிய ஆடற் கோலத்தைக் கண்டு மகிழும் உமையன்னையின் அழகுக் கோலம் சிற்பக் கலையின் தொடமுடியாத உயரம்! வலக்கையைக் குறள் வடிவப் பெண்ணொருத்தியின் தலை மீது வைத்தபடி, இடக்கையில் மலர் மொட்டை ஏந்திய நிலையில், ஒசிந்து நிற்கும் இறைவியின், ஒல்காப் பேரெழிலில், இறைவனின் தாண்டவமே தடைப்பட்டு விடுமோ என்ற ஐயம் நமக்கு உண்டாகும்படி, எழிலார்ந்த ஆடை அணிகலன்களுடன், பார்க்கப் பார்க்க உள்ளத்தில் மெல்லுணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்யும் வகையில் படைக்கப்பட்டுள்ள அரிய கலைப்படைப்பு இது.

இறைவியின் பின்புறம் காளையும் தன் இறைவனின் ஆடலைக் கண்டபடி அகமகிழ்ந்து நிற்கிறது. குள்ளச்சிறு பூதமொன்று குழல் ஊதுகிறது. அதனருகில் தண்டு குடமுழா வாசித்தபடியே, மெய்மறந்த நிலையில் ஆடலைக் கண்டு, அதன் வேகத்திலும், சிறப்பிலும் முற்றிலுமாய்த் தம்மையிழந்து காட்சியளிக்கின்றார். மூன்று சிறு கணங்கள் ஆடலைக் கண்டு வியந்த நிலையில் காட்டப்பட்டுள்ளன.

கி. பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டிய நாட்டுச் சிற்பிகளால் செதுக்கப்பட்டதாகக் கருதப்படும் இந்த அழகு வடிவங்களின் சிகரமாய் விளங்கும் இறைவனின் ஆடற்கரணத்தைத் திரு. சிவராமமூர்த்தி லலிதம் என்கின்றார்.[36]

லலிதத்தில் எந்தக் கால் வேண்டுமானாலும் குட்டிதமாக அமையலாம் என்ற நோக்கில் வேண்டுமானால், வயலூராரையும், கொடுமுடியாரையும், பரங்குன்றத்துப் பேரழகரையும் லலித கரணர்களாய்க் கொள்ளலாம். என்றாலும் எப்போது வலக்கால் குட்டிதமாய்க் காட்டப்பட்டுள்ளதோ, அப்போதே அது பரதரின் இலக்கணப்படி சதுரமாகிவிடுவதை எப்படி ஒதுக்க முடியும்? இலக்கணப்படி வலக்கால் குட்டிதமாய் உள்ளவற்றை லலிதமென்றும், வரையறைக்கு நேர்மாறாய் இடக்கால் குட்டிதமாக உள்ள திருவரங்குளத்தாரைச் சதுரரென்றும் திரு. சிவராமமூர்த்தி மாற்றிக் குறித்திருப்பது சரியன்று.

இந்த லலித சதுர வேறுபாடுகள் பேரறிஞர் பலரைத் தடுமாற வைத்துள்ளன. டாக்டர் கபில வாத்சாயனா அவர்கள் குடந்தை சாரங்கபாணி கோயில் சிற்பங்களைப் பற்றி எழுதியுள்ள நூலொன்றில் சதுரம் லலிதம் என்னும் தலைப்பின் கீழ் பதினொரு கரணங்களை உள்ளடக்குகிறார்.[37] இவையனைத்தும் காலமைப்பில் சற்றேறக்குறைய ஒன்றுபடுபவை என்கிறார். ஆனால் இவற்றில் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன. இவற்றுள் திரு. சிவராமமூர்த்தி சதுர கரணமாய்க் குறிப்பிடும் வடிவ எண் நாற்பதை இவர் லலிதம் என்கிறார்.[38] இங்கு வலக்கால் குட்டிதமாய் உள்ளது. சதுரம் என்று கல்வெட்டும், இவரும் குறிப்பிடும் வடிவ எண் முப்பத்தொன்பதிலும் வலக்கால் குட்டிதமாய் உள்ளது.[39]

இங்குதான் குழப்பமே! எது லலிதம்? எது சதுரம்? இதில் மேலும் ஒரு விந்தை என்னவென்றால் திரு. சிவராமமூர்த்தி சதுரமென்று குறிப்பிடும் குடந்தைக் கரணத் தோற்றம் போலவேதான் குமாரவயலூர், கொடுமுடித் திருமேனிகளின் காலமைப்பு உள்ளது. ஆனால் அவற்றை மட்டும் அவர் லலிதம் என்கிறார்.

இவற்றையெல்லாம் நோக்கும்போது கரணங்களைப் பற்றியும், கரணச் சிற்பங்களைப் பற்றியும், முழுமையானதோர் ஆய்வு தேவையென்பது புலப்படுகிறது. அது வரை

யிலும், பரதரின் நாட்டிய நூல் கருத்தின் அடிப்படையிலும், கரண விளக்கச் சிற்பங்களின் அடிப்படையிலும், வலக்கால் குட்டிதமாக இடப்பாதமருகே அமையப்பெற்ற செப்புத் திருமேனிகளைச் சதுரமென்றும் இடக்கால் குட்டிதமாக உள்ள செப்புத் திருமேனிகளை லலிதமென்றும் வகைப் படுத்தலாமென்பது பொருத்தமாகப்படுகிறது. இந்நிலையில் வயலூர், கொடுமுடி திருமேனிகளும், பரங்குன்றத்துப் புடைப்புச் சிற்பமும் சதுரமாகும்: திருவரங்குளத்துத் திருமேனி லலிதமாகும்.

---

1. C. Sivaramamurti, Nataraja in Art, Thought and Literature, 1974 p. 228.
2. ஆ. சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, 1982, பக். 1034.
3. Venkata Narayanaswami Naidu and others, Tandava Laksanam, 1980, p. 97.
4. Ibid., p. 31.
5. Dr. Manomohan Gosh, The Natya sastra English Translation, second edition, 1967 p. 54.
6. டாக்டர். பத்மா சுப்பிரமணியம், பரதக்கலை கோட்டுபாடு, 1985, பக். 51.
7. டாக்டர். இரா . கலைக்கோவன், சதுர தாண்டவப் பெருமான், தினமணி கதிர். 6-5-1984, பக். 4.
8. C. Sivaramamurti. Nataraja in Art, Thought and Literature, 1974, p. 51.
9. ஆ. சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, 1982, பக். 1034
10. Venkata Narayanaswami Naidu and others, Tandava Laksanam, 1980, p. 97.
11. Ibid., p. 30.
12. Dr. ManoMohan Gosh. The Natya sastra English Translation, second edition, 1967, p 53.
13. T. A. Gopinatha Rao, Elements of Hindu Iconography, Vol II, part I, p. 262.
14. T. A. Gopinatha Rao, Elements of Hindu Iconography Vol II, part I, p. 263.

15. டாக்டர் இரா. கலைக்கோவன். கலைவளர்த்த திருக்கோயில்கள், கழக வெளியீடு. 1984, பக். 38-40.

16. டாகடர் இரா. கலைக்கோவன், கண் வழி கவிதைகள் பருகிட, 35th Madras Srate Ophthalmic Conference, Souvenir, Sep. 1987,

17. டாக்டர் இரா. கலைக்கோவன், திருப்பரங்குன்றத்துப் பேரழகன், நுண்கலை, சனவரி 1985, பக். 14-17.

18. தண்டபாணி தேசிகர், ஆடல்வல்லான், 1967, பக். 233.

19. C. Sivaramamurti, Nataraja rn Art, Thought and Literature, 1974, p. 262, See photo plate No. 123.

20. C. Sivaramamurti, Nataraja in Art. Thought and Literature, 1974, p. 235 See photo plate No. 87.

21. A. R. E. 37 of 1908.

22. செ. போசு, திருப்பரங்குன்றம், தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1981, பக். 71.

23. C. Sivaramamurti, Nataraja in Art, Thought and Literature, 1974, p. 208, See photo plates Nos. 56, 57.

24. தண்டபாணி தேசிகர், ஆடல்வல்லான், 1967, பக். 178.

25 வை. கணபதி ஸ்தபதி. சிற்பக் கைகள், கட்டுரை, உலகத் தமிழ் மாநாட்டுக் கண்காட்சிக் கையேடு, 1968, பக். 158.

26. வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், 1978, பக். 34.

27. மேற்படி., பக். 34.

28. மேற்படி., பக். 35.

29 T. A. Gopinatha Rao, Elements of Hindu Iconography, Vol I, part I, 1971, p. 15.

30. வை. கணபதி ஸ்தபகி, சிற்பச் செந்நூல், 1978, பக். 35.

31. தண்டபாணி தேசிகர், ஆடல்வல்லான், 1967, பக். 178.

32. மேற்படி, பக். 178.

33. வை. கணபதி ஸ்தபதி. சிற்பச் செந்நூல், 1978, பக். 44.

34. Dr. MonoMohan Gosh, The Natya Sastra, English Translation, Second Edition, 1967, p. 142.

35. வை. கணபதி ஸ்தபதி. சிற்பச் செந்நூல், 1978, பக். 44.

36. C. Sivaramamurti, Nataraja in Art, Thought and Literature. 1974, p, 208.

37. Dr. Kapila Vatsayana, The Dance Sculpture in Saranga pani temple, 1982, p. 32-42.

38. Ibid., p. 40.

39. Ibid., p. 39.

# 5. தாமரைத் திருவடிக் கீழ்

தமிழகத்தில் தோன்றிய தொழத்தக்க நாயன்மார்களுள் காரைக்கால் அம்மையார் குறிப்பிடத்தக்கவர். சேக்கிழாரின் பெரிய புராணம் இவ்வம்மையின் வாழ்வியலை அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

காரைக்காலில் பெரும் வணிகரான தனதத்தரின் செல்வ மகளாய்ப் பிறந்தவர் புனிதவதி. வளரும் போதே இறை யன்பும், கருணைப் பொலிவும், சிவனடியாரிடம் தளராப் பேரன்பும் கொண்டவராய் அருட்செல்வியாய் வளர்ந்தார். பருவம் செழித்த காலத்தே நாகை வணிகர் பெருமகன் நிதிபதியின் திருமகன் பரமதத்தனுக்குப் புனிதவதியை மணம் முடித்தனர். ஒரே பெண்ணாதலால் தம்முடனேயே தம் திருமகள் இருக்க வேண்டுமென்ற ஆசை மிகுதியில் தம் மகளுக்கும் மாப்பிள்ளைக்குமாய், தனி மணிமாடம் கட்டிக் கொடுத்து அவர்களை அதில் குடியேற்றிப் போற்றி வந்தார் தனதத்தர். பரமதத்தனும் வணிகத்தில் ஈடுபட்டுச் செல்வம் பெருக்கி வாழ்ந்து வந்தான்.

ஒரு நாள் வணிக நிலையத்தில் பரமதத்தனுக்கு ஒருவர் இரண்டு மாங்கனிகளைத் தந்தார். அவன் அவற்றை வீட்டுக் குத் தந்தனுப்பினான். புனிதவதி கணவர் தந்தனுப்பிய மாங் கனிகளைப் பெற்று உள்ளே எடுத்து வைத்தார். அது போழ்து சிவன்டியாரொருவர் பசியுடன் புனிதவதி இல்லம் தேடி வந்தார். அவருக்குக் கால் கை கழுவ நீரளித்துப் பீடத்தி லமர்த்தி உணவு படைத்த புனிதவதி, கறியமுது சமைக்காதி ருந்தமையால், தம் கணவன் தந்தனுப்பிய மாங்கனிகளில் ஒன்றை அரிந்து படைத்தார். வந்த திருத்தொண்டர் அவ்வினிய உணவை அருந்தி மகிழ்ந்து புனிதவதியை வாழ்த் திச் சென்றார்.

பரமதத்தன் பகலுணவுக்கு வந்தான். உணவருந்த அமர்ந்ததும் அவன் அனுப்பிய இரண்டு மாங்கனிகளில் சிவனடியார் உண்டது போக எஞ்சியிருந்த ஒன்றைப் புனிதவதியார் அவனுக்கு அரிந்து வைத்தார். அதைச் சுவைத்து உண்ட பரமதத்தன் இன்னொரு கனியையும் கேட்டான். புனிதவதி திடுக்கிட்டார்; செய்வதறியாது திகைத்தார்; கணவனைக் கேட்காது சிவனடியார்க்குத் தந்தது தவறோ என்று கலங்கினார்; இறைவனை நினைத்து வணங்கினார்; உடன் இறையருளால் மாங்கனியொன்று புனிதவதி கையில் தோன்றியது; அதை எடுத்துச் சென்று கணவனுக்குப் படைத்தார். முன் வைத்த கனியை விட இது சுவை மிகுதியாக இருந்ததை உணர்ந்த பரமதத்தன், 'இது ஏது?' என்றான். என்ன சொல்வதென்று தெரியாது குழம்பிய புனிதவதியார் இறுதியில் நடந்த உண்மைகளை உரைத்தார்.

'நீ சொல்வதெல்லாம் உண்மையானால் எனக்கு இறையருளால் இன்னொரு கனி பெற்றுக்கொடு' என்று பரமதத்தன் கேட்க, புனிதவதி இறைவனை நினைத்து வேண்ட, மாங்கனியொன்று புதிதாய்த் தோன்ற, அதை மணவாளன் கையில் வைத்தார். பரமதத்தன் அதிசயித்துப்போய் நிற்க, கனியும் கையிலிருந்து மறைந்தது. பரமதத்தன் அஞ்சி நடுங்கினான். இறையருள் பெற்ற இப் பெண்ணரசியுடன் இல்லறம் நடத்துவது எப்படி என்று குழம்பினான். சிலநாள் அவரிடமிருந்து விலகி வாழ்ந்தான். பிறகு வெளிநாடு சென்று பணம் திரட்டி வருவதாகக் கூறிக் கப்பலேறிப் புறப்பட்டான். பல நாடு சென்று வாணிகம் செய்து, செல்வம் வளர்த்து, மீண்டு பாண்டிய நாடடைந்து பெண்ணொருத்தியை மணந்து, மகளொன்று பெற்று அப் பெண்ணுக்குப் புனிதவதி என்று பெயர் சூட்டி வாழ்ந்து வந்தான்.

காரைக்காலில் கணவன் வருவான், வருவான் என்று காத்திருந்த புனிதவதி, கடல் கடந்து சென்று வந்த உறவினர் வழி பரமதத்தன் வேறோர் ஊரில் குடும்பம் அமைத்து வாழ்வது கேள்விப்பட்டதும் அங்குச் சென்றார். பரமதத்தன தன் குடும்பத்துடன் புனிதவதி இருக்குமிடம் வந்து அவரது காலடி

யில் வீழ்ந்து வணங்கித் தொழுதான். கண்டவர் திடுக்கிட்டனர். பின் பரமதத்தன் காரைக்காலில் நடந்தது கூறி, 'இவர் மனிதப் பிறவியல்ல, தெய்வம். அதனால்தான் இவரைத் துறந்து வேறொரு பெண்ணை மணந்தேன்' என்று வணங்கி நின்றான். புனிதவதி செய்வதறியாது இறைவனை நினைத்தார். 'என் கணவனுக்காகவே இத்தனை நாள் இந்த வனப்பான் உடலைச் சுமந்து நின்றேன். இனி இது எதற்கு? என் சதையுடம்பை அழித்துப் பேயுரு தருக' என இறைவனை வேண்டினார். இறைவனும் அவ்வாறே அருளினார். பேய் வடிவு பெற்ற பெருமாட்டியார் அற்புதத் திரு அந்தாதி, திரு இரட்டை மணிமாலை பாடியருளினார். இறைவனைக் காண விரும்பிக் கைலை சென்றார். மலையை அடைந்ததும் அங்குக் காலால் நடத்தல் தவறென்று, தலையால் நடந்து சென்றார்.

அவர் தலையால் நடந்து வருவதைக் கண்டு வியந்த பார்வதி தேவி இறைவனை உசாவ, 'இவள் நம்மை வழிபடும் அம்மை. இப்பெருமை மிக்க வடிவம் நம்மை வேண்டிப் பெற்றாள்' என்றருளினார். புனிதவதியார் அருகில் வந்ததும் இறைவன் 'அம்மையே' என்றழைத்தார். புனிதவதியாரும் 'அப்பனே' என்றழைத்து அவர் திருவடிகளை வணங்கினார். இறைவன் யாது வேண்டுமென்று கேட்க, 'தங்களிடம் நீங்காத அன்பு வேண்டும்; பிறவாமை வேண்டும்; பிறப்புண்டானால் உம்மை என்றும் மறவாமை வேண்டும்; தாங்கள் ஆடும் போது நான் தங்கள் திருவடியின் கீழிருந்து கண்டுமகிழ்ந்து பாடியிருத்தல் வேண்டும்' என்றார். இறைவன் அவ்வாறே அருள் புரிந்து, 'தென் திசையில் திருவாலங்காட்டில் நாம் ஆடும் போது நீ கண்டு மகிழ்ந்து பாடுக' எனப் பணித்தார். அம்மை திருவாலங்காடு அடைந்தார். ஊர் நெருங்கியதும் மீண்டும் தலையாலே நடந்து சென்றார். திருவாலங்காட்டில் ஆடல் அரசனின் திருக்கூத்து கண்டு மகிழ்ந்து இறைவன் சேவடிக் கீழ்த் தங்கிப் பாடிப் பரவியிருந்தார்.

ஆடவல்லானின் தாமரைத் திருவடிகளின் கீழமர்ந்து அப்பெருமானின் அதியற்புத திருக்கூத்தைக் கண்டு மகிழ்

வதையே வாழ்க்கை லட்சியமாய்க் கொண்டு காவியப் புகழ் பெற்ற காரைக் காலம்மையைச் சிற்ப வடிவில் பல கோயில் களில் கண்டு மகிழலாம். கோனேரி ராசபுரத்து உமாமகேசுவரர் கோயிலில் ஆடவல்லானுக்குப் பக்கத்தில் காரைக்காலம்மையைச் சிற்ப வடிவில் செம்பியன் மாதேவி வடித்துக் களித்திருக்கிறார். இராசேந்திர சோழனின் கங்கை கொண்ட சோழீச்சரத்திலும் நடராசரின் சிற்பத் தோற்றத்தின் கீழ் ஆடல் கண்டு மகிழும் நிலையில் அம்மையையும் காணலாம். கல்லில் வடித்த கவிதைகளாய்க் காரைக்காலம்மையை, ஆடவல்லானின் திருவடிக் கீழும், ஆடல் கண்டு அநுபவிப்பவராய் இறைவனின் பக்கத்திலும் கண்டு மகிழ முடிகிறதே தவிர, செப்புத் திருமேனியாய் ஆட வல்லானுடன் காண்பது அரிதாகவே உள்ளது.

திருச்சியில் அமைந்துள்ள அருள்மிகு பூலோகநாத சாமி திருக்கோயில் ஓர் அபூர்வமான செப்புத் திருமேனியைக் கொண்டுள்ளது. ஆடவல்லானாய் இறைவனும், அவரது அடிக் கீழ் ஆடலுக்குத் தாளமிடும் அம்மையுமாய், அழகுத் திருக்கோலமாய் அமைந்த செப்புத் திருமேனி இது. முப்பது தீச்சுடர்களுடன் அமைந்த திருவாசியின் மேற்புறத்தில் பூவேலைப்பாடுகள் அழகுற அமைந்துள்ளன. தாமரைத் தளத் தில் இரு கைகளிலும் பாம்பொன்றைப் பிடித்தவாறு குப்புறப் படுத்திருக்கும் முயலகனின் முதுகின் மீது வலத் திருவடியை ஊன்றியபடி, இடத் திருவடியைத் தூக்கிய திருவடியாய் வலப்புறம் வீசி அழகரசராய்க் காட்சியளிக்கிறார் இறைவன். விரிந்த சடையில் வலப்புறம் கங்காதேவியும் இடப்புறம் பிறை நிலவும் காணப்படுகின்றன. சடா மகுடத்தில் தலை யோடும், ஊமத்தம்பூவும், கொக்கிறகும் வடிக்கப்பட்டுள்ளன. வலக்காது நீள் செவியாகவும், இடக் காதில் பனையோலைக் குண்டலமும் காணப்படுகின்றன.

இறைவனின் வலக்கைகளில் பின்கை உடுக்கை ஏந்தி யுள்ளது. முன்கை காக்கும் கையாய் அமைந்துள்ளது. இடப் புறக் கைகளில் முன்கை வேழ முத்திரையில் வலப்புறம் நீட்டப்பட்டுள்ளது. பின்கை தீச்சுடரை உள்ளங்கையில்

ஏந்தியுள்ளது. பாம்புக் கங்கணம், கைவளைகள், கழுத்தணிகள், இடுப்பணிகள் முதலியன இறைவன் திருமேனியை அழகு செய்கின்றன. இடையில் மடித்துக் கட்டிய அரையாடை. இலேசாய்ச் சிரித்த இளநகையரும்பும் அழகு முகத்தில் கருணையும் அருளும் பொலிந்தவாறுள்ளன.

முயலகன் படுத்துள்ள தாமரைத் தளத்தின் அடிப் பகுதியின் முன்புறத்தில்தான், வலப்புற மூலையில் காரைக்கால் அம்மையும், இடப்புற மூலையில் நந்திகேசுவரரும் காட்டப்பட்டுள்ளனர். நந்திகேசுவரரின் பின்னிரு கைகள் மேல் தூக்கிக் கூப்பி வணங்கிய நிலையில் காட்டப் பட்டுள்ளன. முன்னிரு கைகள் குடமுழா என்னும் ஐந்து முக இசைக் கருவியை இறைவனின் ஆடல் அசைவுகளுக்கேற்பத் தாள லயத்துடன் தட்டிக்கொண்டிருக்கின்றன. இந்தக் குடமுழாவைத் தன் இரு கால்களுக்கிடையில் பக்குவமாய்ப் பிடித்தபடி இறைவனின் ஆனந்தத் தாண்டவத்தில் தம்மை மறந்த நிலையில் மெய் சிலிர்த்து நிற்கும் நந்திகேசுவரரைப் பார்க்கப் பல நூறு கண்கள் வேண்டும்.

வலப்புற மூலையில் காரைக்கால் அம்மையார், பாடும் மெய்ப்பாட்டில் கையிரண்டிலும் தாளங்களைக் கொண்டு அமர்ந்த நிலையில் காட்சி தருகிறார். மார்பிலும், கைகளிலும், கழுத்திலும், நெற்றியிலும் திருநீற்றுக் கோடுகள்; இடைக்குக் கீழ் ஆடை; தொங்கும் செவிகள்; எளிமையான கோலத்தில் தெய்வத் திருமுன்னில் பாடிப் பரவசமாய் நிற்கும் அம்மையின் தெய்வீகப் பொலிவை வருணிக்க வார்த்தைகளில்லை. ''எடுத்தருளும் சேவடிக் கீழ் என்றும் இருக்கின்றாரை''[1] எனச் சேக்கிழார் பாடிய செவ்விய திருவரிக்கேற்ப இப்படிமத்தில் இறைவன் சீர் பரவும் திருக் கோலத்தில், அவரின் தூக்கிய திருவடியின் கீழ் அம்மையைக் காண்கிறோம். புராண வரிகளைப் புடம் போட்டுக் காட்டும் படிமம் இது.

அழகுடன் பொலியும் மிகப் பிற்பட்ட காலத்துக் கலை முறையைச் சேர்ந்ததாக இருந்தாலும் இந்த ஆடவல்லான்

படிமம் மிகவும் பெருமை வாய்ந்ததாகும். தமிழகத்துக் கோயில்களில் எத்தனையோ ஆடவல்லான் படிமங்கள் காணப் பட்டாலும், மிகச் சிலவே தனிச் சிறப்பும் கலையழகும் கருத்துப் பொலிவும் வாய்ந்தவையாய் விளங்குகின்றன. அவற்றுள்ளும் இத் திருவடிவம் குறிப்பிடத்தக்கது. ஆட வல்லான் செப்புத் திருமேனிகளின் வழக்கமான அமைப்பு முறையிலிருந்து விலகி, காரைக்காலம்மை வேண்டிய வண்ணமே இறைவன் அருள, அந்த அருளாசிப்படியே ஆடும் ஆண்டவனின் அடிக்கீழ் அமர்ந்து பாடும் அழகைத்தன் நெஞ்சில் ஏற்றி, கைவழி கலையாய்ப் படைத்தளித்த வார்ப் பறிஞனின் இலக்கிய அறிவையும், கலை நோக்கையும் எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை. கண்களை மலர்த்திக் கருத்தை நிறைக்கும் இப் படிமம் கலை வரலாற்றுச் சிறப்புடைய ஒன்று எனில் அது மிகையாகாது.

---

1. திருத்தொண்டர் புராணம், திருப்பனந்தாள் காசிமட வெளியீடு, 1982, பக். 213., பாடல் எண். 5.

## 6. வாருங்கள், வலம் வருவோம்!

அன்புக்குரிய மருத்துவ நண்பர்களே, வணக்கம். முப்பத்தொன்பதாவது தமிழ்நாட்டு மருத்துவ மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வரலாற்றுப் புகழ் மிக்க திருச்சி மாநகருக்கு வருகை தந்திருக்கும் உங்களை இந்திய மருத்துவ மன்றத் திருச்சிராப்பள்ளிக் கிளையின் சார்பிலும், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றுப் பேரவையின் சார்பிலும் வருக வருகவென வரவேற்று மகிழ்கிறேன். தமிழகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் பொதுமக்களின் நோய் தீர்க்கும் மகத்தான சமுதாயப் பணியில் முனைந்து ஈடுபட்டிருக்கும் 'உங்களுக்கெல்லாம் இந்த மூன்று நாட்கள்தாம் அமைதியாக மூச்சுவிடக் கூடிய, அழகைப் பார்த்து இரசிக்கக் கூடிய வாய்ப்பான நாட்கள். இந்த இனிய நாட்களில் மாநாட்டுக் கூடத்தில் நீங்கள் கேட்கப் போகும் கட்டுரைச் செய்திகளும், காணப்போகும் நண்பர்களின் அன்பு உசாவல்களும், திருச்சி மருத்துவர்கள் வழங்கவிருக்கும் கலை நிகழ்ச்சிகளும் உங்கள் நெஞ்சில் நீங்காமல் நிறையப் போகின்றன. இந்த அற்புதமான நினைவுகளுடன், திருச்சியின் பெருமைக்குரிய வரலாற்றுப் புதையல்களையும் கண்டு மகிழ்ந்து, அதனால்பெறும் இன்ப மலர்வுகளையும் இதயத்தே நிறைத்துச் செல்லுங்கள். எங்கே, கண்களைக் கொஞ்சம் மூடிக் கொள்ளுங்கள்; கற்பனையுணர்வுகளைக் கூர்மைப் படுத்திக்கொள்ளுங்கள்; திருச்சியை வலம் வருவோம்.

மலைக்கோட்டையைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். எங்கள் மாநகரின் மைய மலையல்லவா! இங்குள்ள தாயுமானவர் கோயிலையும், உச்சிப் பிள்ளையாரையும் கண்டிப்பாகப் பார்த்து வணங்கியிருப்பீர்கள். ஆனால் இதே மலையில் பாண்டியர் குகைக் கோயில் ஒன்றும், பல்லவர் குகைக் கோயில் ஒன்றும் இருப்பது உங்களுக்குத் தெரியுமா? தெரிந்திருந்தால் மகிழ்ச்சி; தெரியாதிருந்தால், இதோ, வாருங்கள் பார்ப்போம்.

மலையின் அடிவாரத்தில், மைய அரசு தொல்பொருள் துறையின் பாதுகாப்பில், அழகான சிற்பங்களின் இருப்பிடமாய், ஏழாம் நூற்றாண்டுக் கலைமுறையில் அமைந்துள்ள இக் குடைவரைக் கோயிலை எழுப்பியவர்கள் பாண்டியர்கள். இந்தத் தூண்களைப் பாருங்கள். கல்லைக் குடைந்து எப்படிச் செதுக்கியிருக்கிறார்கள்! இங்குப் பிள்ளையார், முருகன், நான்முகன், கதிரவன், கொற்றவை ஆகிய தெய்வங்களின் நெடிய சிற்பத் திருமேனிகள் பாறையில் செதுக்கிய படிவங்களாய் எத்தனை அழகுடன் மெய்சிலிர்க்க வைக்கும் விதத்தில் காட்சியளிக்கின்றன! எதிரெதிராக உள்ள இரண்டு கருவறைகளில் நமக்கு வலப்புறம் இருக்கும் கருவறையில் திருமால் இருக்கிறார். இடப்புறம் இருக்கும் கருவறையில் இலிங்கத் திருமேனி இருந்திருக்க வேண்டும். சைவ, வைணவ ஒருமைப்பாட்டுக் கோயிலாக இதைக் கொள்ளலாம். பாண்டியருடைய குடைவரைக் கோயில்களை மதுரை மாவட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்திலும் காணலாம். திருச்சியில் இது ஒன்றுதான் இருக்கிறது.

இனி மலைவாசலையடைந்து படியேறுவோம். அப்போதுதான் மகேந்திரப் பல்லவனின் மகத்தான கலைச் சாதனையைக் கண்டு மகிழலாம். தாயுமானவர் கோயிலுக்குள் நுழையாமல், உச்சிப் பிள்ளையார் கோயிலுக்குச் செல்லும் படிகளில் ஏறும் இடத்தில்தான் மலைச் சரிவில், மகேந்திரனின் இந்தக் கலைக்கோயில் குடைவரையாய்க் காட்சியளிக்கிறது. கங்கையைச் சடையில் தாங்கிய கருணை வள்ளல் சிவபெருமானின் உலகப் புகழ்பெற்ற அதியற்புதமான சிற்பத் தோற்றம் இங்குதான் உள்ளது. வலக்காலை முயலகனின் தலைமீது ஊன்றி, இடக்காலைத் தரையில் நிறுத்தி, கம்பீரமாகக் காட்சியளிக்கும் சிவபெருமானின் அழகு பொலியும் தோற்றத்தைக் கண்டு மயங்காதவரே இருக்க முடியாது. அந்த முகத்தில்தான் எத்தனை கருணை! எத்தனை அருள்!

இதோ இந்தப்புறம் சுவரில் கல்வெட்டாய்த் தெரிவதுதான் திருச்சிராப்பள்ளி அந்தாதி. தமிழகத்திலேயே, ஓர்

இலக்கியம், கல்லில் வெட்டிய கற்காவியமாய்க் காட்சியளிப்பது எங்கள் திருச்சியில்தான்.

இன்னும் சில படிகள் ஏறிக் காண விரும்பும் நீங்கள் தொடர்ந்து வாருங்கள், உச்சிப் பிள்ளையாருக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டு அப்படியே திருச்சியின் இயற்கையும், செயற்கையும் கலந்த அழகுக் காட்சிகளை ஒரு 'பறவைப் பார்வை' பார்ப்போம்.

உறையூரில் ஐவண்ணப் பெருமான் கோயில் உள்ளது. உத்தம சோழன் காலத்துக் கற்கோயிலான இதைச் சம்பந்தர் பாடியிருக்கிறார். பல அழகிய சிற்பங்கள் உள்ள இக்கோயில் 1912இல் திருப்பணி செய்யப்பட்டது. இக் கோயிலில்தான் புகழ்பெற்ற 'சைக்கிள்' சிற்பம் அம்மன் கருவறையின் கிழக்குப்புறத் தூணில் உள்ளது. கண்டு மகிழ வேண்டிய அதிசயம் இது.

திருச்சியில் வைணவப் பெருமைக்குத் தலையாய கோயிலாய்த் திகழ்வது திருவரங்கம். தமிழ்நாட்டின் மிகப்பெரிய கோபுரத்தைப் பெற்றிருக்கும் இக்கோயிலின் தங்க முலாம் பூசிய விமானம் பார்ப்பதற்குரியதொன்று. பல திருமுன்களைப் பெற்றிருக்கும் இக் கோயிலில் வரலாற்றுப் புகழ் வாய்ந்த கல்வெட்டுகளைக் காணலாம். கிடந்த கோலத்தில் அரங்கநாதரின் அருள் முகம் தரிசித்து மகிழலாம். இக் கோயிலில் உள்ள அருங்காட்சியகத்தில் தந்தச் சிற்பங்க்ள் உள்ளன். வேலைப்பாடமைந்த பாலுணர்வுச் சிற்பங்கள் காண்பதற்குரியவை. அது மட்டுமன்று, இங்குள்ள குழலூதும் பிள்ளைக் கோயில், சிற்பக் கருவூலமாகும். ஹொய்சளப் பேராட்சியின் படைப்புத் தொட்டிலான இக் கோயிலில்தான் எத்தனை அழகியர் எழிலார்ந்த சிற்பங்களாய்க், காணக் கிடைக்காக் கவினுறு வடிவங்களில் காட்சி தருகின்றனர். இவர்களுள் குறிப்பிடத்தக்க எழில் மடந்தை, அதோ, அந்த மூலையில் நிற்கிறாளே, அந்த நங்கை நல்லாள்தான். நாணத்தின் கொழுந்தாய், இளமையின் நிறை பேரெழிலில் ஒசிந்து நிற்கும் அந்த ஒய்யாரக் கோலமும், சற்றே சரிந்து, சற்றே

கவிழ்ந்த திருமுகத்தின் பார்வை காட்டும் பரவச நயமும் எத்தனை அழகு போங்கள்! 'நாணம்' என்னும் நயமான உணர்வின் நலமான வெளிப்பாட்டைப் பார்த்திராதவர்கள் நன்றாகப் பார்த்துக்கொள்ளுங்கள். தொட்டணைக்கத் தூண்டும் இந்தத் தேவமகளை அப்பரும், மங்கையாழ்வாரும் பாடிய பாடல்களில், உள்ளடக்கமாய்ச் சந்திக்கலாம்.

திருவானைக்கா சிவபெருமான் உறையும் தலம். இந்தத் தலத்து அம்மை அருள்மிகு அகிலாண்டேசுவரிக்கு ஆடி வெள்ளி மிகவும் உகந்த நாள். கோச்செங்கணான் என்னும் சோழ மன்னனால் எடுக்கப்பட்ட இக் கோயிலின் கருவறையில் நீர் ஊற்று ஒன்று இருக்கிறது. அருள்மிகு ஜம்புகேசுவரரைத் தரிசிக்கும்போது இந்த நீரூற்றையும் பார்க்கலாம். உச்சிக்கால வழிபாடு இங்கு சிறப்புக்குரியது. சிவாச்சாரியார் பெண் வேடம் அணிந்து வந்து வழிபடுவது பார்க்கப் புதுமையாக இருக்கும். பார்வதி சிவனை வழிபட்ட கதையை நாள்தோறும் செய்து காட்டுகிறார்கள்.

இந் நிலவுலகை ஆட்சி செய்யும் அம்பிகையின் அருள் முகம் காண்பதற்காகத்தான் சமயபுரம் வந்திருக்கிறோம். இராபர்ட் கிளைவுக்கும், பிரெஞ்சுப் படையினருக்கும் கி. பி. 1752இல் இங்குப் போர் நடந்தது. கிளைவ் இக் கோயிலையே பாசறையாகக் கொண்டு போரிட்டு வெற்றி பெற்றாராம். அம்மனைப் பாருங்கள்! சினக் குறிப்பிலும் ஒரு சின்னச் சிரிப்பு; ஆவேசத்திலும் ஓர் அருட்பொலிவு! அதுதான் எங்கள் மகமாயி!

அப்பனையும், அம்மையையும் பார்த்தால் போதுமா? பிள்ளை முருகனைக் காணவேண்டாமா? வயலூர் வடிவழகன் திருச்சியிலிருந்து மேற்கே எட்டு கிலோ மீட்டர் தொலைவில் கோயில் கொண்டுள்ளான். வயல் வெளிகளுக்கு நடுவில் அழகான கோயில். இங்குள்ள நடராசரின் செப்புத் திருமேனி உலகப் புகழ் பெற்றது. நீங்கள் எத்தனையோ பரத நாட்டியம் பார்த்திருப்பீர்கள். பரதத்தில் கரணம் என்பது ஒரு நிலை; நாட்டிய சாத்திரத்தை எழுதிய பரத முனிவர்

நூற்றெட்டுக் கரணங்களை வகைப்படுத்துகிறார். அவற்றுள் ஒன்றுதான் சதுர கரணம். இந்த அற்புதமான கரண வகையில் அமைந்த அபூர்வமான நடராசரைச் சதுர தாண்டவராய், உமையின் துணையுடன் வயலூரில் காணலாம். வலக்காலைக் குத்திட்ட திருவடியாய்க் கொண்டு, இடக்காலைத் தரையில் முழுவதுமாய் ஊன்றி, சிவபெருமான் ஆடிக் காட்டும் இச் சதுர கரணம் தமிழ்நாட்டிலேயே மூன்று கோயில்களில்தான் உள்ளது. அவற்றுள் திருச்சி வயலூர் குமரப்பெருமான் கோயில் ஒன்று.

உங்களில் யாருக்கேனும் அகழ்வாராய்ச்சி, தொல் பொருள் ஆய்வு இவற்றில் ஆர்வம் இருந்தால் இன்னும் நான்கு கிலோ மீட்டர் இதே பாதையில் செல்வோம்: முள்ளிக் கரும்பூர் என்ற நாகரிகப் புதையலைப் பார்ப்போம். இங்குதான் அண்மையில் ஈராண்டுக் கால இடைவெளியில் மிகப்பெரிய புத்தர் சிற்பம் ஒன்றும், மகாவீரரின் நுட்பமான வேலைப்பாடுகள் கொண்ட சிற்பம் ஒன்றும், மகாவிஷ்ணுவின் நெடிய சிற்பம் ஒன்றும், மிகமிக அபூர்வமான இராமர் சிற்பமொன்றும் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றுப் பேரவையால் கண்டுபிடிக்கப்பட்டன. அதுமட்டுமன்று, சிதைந்த நிலையில் விக்கிரம சோழன் கல்வெட்டுடன் சிவன் கோயிலொன்றும், சுவடழிந்த நிலையில் இலிங்கத் திருமேனி மட்டும் உள்ள கோயிலொன்றும், அடிச்சுவடுகளை மட்டும் எச்சமாய் விட்டு விழுந்து போன சிவாலயமொன்றும் இக் குழுவினர் கண்டுபிடித்தனர். இப் பகுதியில் பார்க்குமிடமெல்லாம் வரலாற்று வெளிச்சத்தின் வனப்பான கீறல்கள் தாம்!

இதேபோல் அகழ்வாராய்ச்சி நடந்துள்ள இன்னொரு இடம் கண்ணனூர். சமயபுரத்திலிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள இவ்வூரில்தான், மண்ணில் புதைந்த மாநகரமொன்றின் எச்சங்களைத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளிப்படுத்தியுள்ளது. மைசூரைச்சேர்ந்த ஹொய்சளப் பேரரசர்கள் பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சோழர்களுக்கும், பாண்டியர்



மண்ணுக்குள் புதைந்திருந்தேன் பலகாலம்
உங்கள்
கண்ணுக்கு விருந்தானேன் இந்நாளில்

பக். 80 (முள்ளிக்கரும்பூர் மகாவீரர்)



வானவரின் வையவரின் இருள்நீக்க
ஆலமரம் கீழமர்ந்து அருளுரைத்தோன்!

(சீனிவாசநல்லூர் ஆலமர் அண்ணல்) பக். 83



பாடுபட்டுக் கட்டிவைத்த கலைக்கோயில்
இன்று பாழ்பட்டுக்கிடக்குதய்யா பார்ப்போரின்றி!
(ஆலம்பாக்கம் மாடமேற்றளி)

பக். 84



இதமான கலையுணர்வில் எழுந்த என்னை
மிதக்கின்ற கோயிலென மாற்றிவிட்ட
உதவாத நிலைமாற வகைசெய்வீர் !
(ஆலம்பாக்கம் கைலாசநாதர் கோயில்) பக். 84

களுக்கும் உதவுவது போல் தமிழகம் வந்தனர். அப்படி வந்தவர்கள் வழியில் குறிப்பிடத்தக்கவனாய்த் தோன்றிய வீரசோமேசுவரனே இக் கண்ணனூரை உருவாக்கி, இதைத் தன் தலைநகராக்கி இப் பகுதியை ஆண்டு மகிழ்ந்தான். இப் பேரரசனின் காலத்தில்தான் இப் பகுதியில் இரண்டு கோயில்கள் உருவாயின. ஒன்று திருவரங்கம் காட்டழகிய சிங்கர் கோயில், இன்னொன்று கண்ணனூர்ப் போசளீசுவரர் திருக்கோயில், இன்றைய அகழ்வாராய்ச்சி அறிஞர்களுக்கு, அன்றைய வரலாற்றுச் சுவடுகளை அள்ளி வழங்கிக்கொண்டிருக்கும் இக் கண்ணனூர்ப் பெருநகரில் இன்றளவும் உயிர்ப்புடன் விளங்கும் ஒரே ஒளிச்சுடர் இந்தப்போசளீசுவரர் திருக்கோயில்தான். அகன்ற வானப்பரப்பிலோர் அழகுக் கவிதை போல், வரையாத ஓவியமாய்ப் போவோர் வருவோரின் பார்வையில் படமாட்டோமா என்ற ஏக்கத்தைச் சுமந்தபடி, ஏகாந்தப் பேரெழிலுடன் எழுநூறு ஆண்டுக் காவியமாய் நின்றுகொண்டிருக்கிறது, இந்த எழிலார்ந்த கலைக்கோயில்; இதைப் பார்த்து மகிழ்வதே ஓர் இனிய அநுபவம்தான்.

திருவெறும்பூர், திருச்சி மாநகரின் தொழிற்பேட்டை; இங்குதான் புகழ்பெற்ற உயர் அழுத்தக் கொதிகலன் தொழிலகங்கள் உள்ளன. இதே இடத்தில் கண்டராதித்த சோழன் காலத்தில், அதாவது ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன் எடுக்கப்பட்ட அழகு நிறைந்த மலைக்கோயிலொன்று எறும்பீசர் திருக்கோயிலென்ற பெயரில் அமைந்துள்ளது; படியேறி மலைக்கோயிலை அடைந்தால் கண்ணில் படமாகும் கருத்துக்கினிய காட்சிகள்தாம் எத்தனை! இவ்விடத்தின் அமைதியான சூழலும், தூய்மையான காற்றும் பார்ப்பவரைப் பரவசப்படுத்தும்.

இங்கிருந்து குறுக்கு வழியாகக் கல்லணைக்குப் போகலாம். கரிகாலன் கட்டியது என்று காலமெல்லாம் புகழ் பாடும் காவிரியின் அணைக்கட்டு இது. தங்கி இளைப்பாற விடுதிகள் உண்டு. மதகுகள் வழியே பாய்ந்து வெளிப்படும்

காவிரியின் நுரைபூத்த நீர்ப்பெருக்கில் மனம் மயங்க இங்குள்ள பூங்காக்களை ஒரு சுற்றுச் சுற்றலாமா?

திருச்சி நாமக்கல் சாலையில் ஐந்து சிறப்பான கோயில்களும், முக்கொம்பு என்னும் சுற்றுலாத் தலமும் உள்ளன. முதலில் நம் கண்ணில் படுவது உத்தமர் கோயில். இது ஓர் அதிசயமான கோயில். ஆம்! இங்குதான் சிவபெருமான், திருமால், நான்முகன் ஆகிய மும்மூர்த்திகளுக்கும் தனித் தனி கோயில்கள் உள்ளன. இதற்கடுத்தபடி அமைந்துள்ள கோயில் திருவாசி. இங்குதான் ஞானசம்பந்தர் கொல்லி மழவனின் மகளுக்கு நேர்ந்திருந்த முயலகன் நோயை நீக்கி நலப்படுத்தினார். ''மணிவளர் கண்டரோ மங்கையை வாடமயல் செய்வதோ இவர் மாண்பே'', என்ற சம்பந்தரின் பாடல் அந் நங்கையின் நோய் நீக்க, மழவன் மகிழ்ந்த வரலாறு, நம்மை மெய் சிலிர்க்க வைக்கும். இங்குள்ள நடராசர் படிமம் அபூர்வமானது. சிவபெருமான் முயலகன் மீது ஆடுவதாகவும், தாமரைத் தளத்தின் மீது ஆடுவதாகவும் பார்த்திருக்கும் நமக்கு, இங்கே இறைவன் பாம்பின் மீது ஆடுவதைப் பார்க்க வியப்பாக இருக்கும். தமிழகத்திலேயே பாம்பின் மீது ஆடுவதுபோல் நடராசர் வடிவம் அமைந்துள்ள ஒரே செப்புத் திருமேனி இதுதான்.

தென் திருப்பதி என்று போற்றப்படும் குணசீலமும், முக்கொம்பும் அருகருகே அமைந்துள்ளன. குணசீலம் சிறிய கோயிலென்றாலும் கீர்த்தி மிகுந்த கோயில். பித்தம் பிடித்தவர்களை இங்குக் கொண்டுவந்து வைத்து மருத்துவம் பார்ப்பதுண்டு. எதிரே முக்கொம்பு எனப்படும் மேலணை தமிழக அரசால் ஒரு சுற்றுலாத் தலமாக மாற்றப்பட்டு வருகிறது. அழகான பூங்காக்கள்; அமைதியான சூழல்; அலையெனப் புரளும் காவிரியின் குளிர்ந்த நீர்ப்பெருக்கு. தங்கி மகிழ வாய்ப்பாகக் 'குளுகுளு' அறை வசதிகள். ஞாயிற்றுக் கிழமைகளிலும், பிறவிடுமுறை நாட்களிலும் பாதி திருச்சியை இங்கே பார்க்கலாம்.

இங்கேயே நின்றுவிட்டால் எப்படி? திரு ஈங்கோய் மலைக்குப் போக வேண்டாமா? காவிரியின் நீர்ப்பெருக்கைக்

காலமெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தாலும் கண்கள் நிறையாது. அதோ, அதுதான் திருஈங்கோய் மலை. நக்கீரர் பாடிய மலை. இங்கு இறைவன் கோயிலுடன், திருமடமொன்றும் சக்தி தலமாய் அமைந்துள்ளது. 'குண்டலினி சக்தி' பற்றிய விளக்கங்கள் வேண்டுமானால் இம்மடத்துக்குள் நுழையலாம். மகளிரே துறவிகளாய் விளங்கும் இத் தலத்து வழிபாட்டுச் சிறப்பு பார்த்து மகிழ வேண்டிய ஒன்று.

சீனிவாசநல்லூரில், நெடுஞ்சாலையின் வலப்புறத்தே, கண்ணுக்குத் தெரியாதபடி தென்னந்தோப்பொன்றில், அதோ ஒளிந்திருக்கிறதே, அதுதான் அருள்மிகு குரங்கநாதர் கோயில். முதற் பராந்தகன் காலத்து அழகுக் கோயில். வழிபாடற்ற நிலையில், மைய அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையின் கீழ் பாதுகாக்கப்பட்ட சின்னமாய்ப் பராமரிக்கப்பட்டு வரும் இக் கோயிலின் சிற்பங்கள் முற்காலச் சோழர் காலத்துச் சாதனை இமயங்கள். குறிப்பாக இங்குள்ள ஆலமர் அண்ணலின் சிற்பம் காலத்தால் அழியாத கற்கவிதையாகும். இறைவனுக்கு மேலிருக்கும் கல்லால மரத்தில் இன்றைய மகளிர் பயன்படுத்தும் நவீன கைப் பையைப் பாருங்கள். இதைப் 'பொக்கணம்' என்பார்கள். இதே மரத்தில் அணில், குரங்கு, இறைவனின் கீழ் மான் இன்னும் என்னோரன்ன அழகுகள்! இத்துடன் 'ஊர்த்வ ஜாநு' எனப்படும் கரண முறையில் அமைந்த நடராசரின் ஆடல் சிற்பமும் இக் கோயில் சுவரில் காணப்படுகிறது. இங்குள்ள கோட்டச் சிற்பங்கள் படையெடுப்புகளால் பழுதுபட்டிருந்தாலும், பார்வைப் பின்னல்களில் பேரழகு மின்னல்களாய்ப் பதியும் அழகுடையவை. சிறியதாய்ச், சிங்காரமானதாய்ச் சிந்தையில் நிலைப்பதாய் நிற்கும் இக்கலைக் கோயிலை நெஞ்சில் நிறுத்தியபடியே, பாலத்தின் வழி, காவிரியைக் கடந்து குளித்தலை செல்வோம்,

திருச்சி கரூர் பாதையில் பல கோயில்கள் உள்ளன, குறிப்பிடத்தக்கவை குளித்தலை கடம்பவனேசுவரர் கோயிலும், அய்யர் மலைக்கு அருகிலுள்ள இரத்தினகிரீசுவரர் கோயிலும்தான். கடம்பவனே சுவரர் கோயிலில் ஓர் அற்புத

மான நடராசர் படிமம் உள்ளது. எழுவர் நங்கையர் திருமேனிகள் கருவறை உட்சுவரில் இலிங்கத் திருமேனிக்குப் பின்புறம் காணப்படுவதும் இக் கோயிலின் தனித்த சிறப்புகளுள் ஒன்றாகும்.

திருச்சி மேலூர் நெடுஞ்சாலையில்தான் விராலிமலை இருக்கிறது. நாம் விராலிமலையை நெருங்கிவிட்டதை அந்த மயிற் கூட்டங்கள் உணர்த்துகின்றன. நாயக்கர் காலத் திருப்பணியுடன் கூடிய இக்கோயிலில் மயிலாடும் பாறைகள் பல உள்ளன. முருகப் பெருமானைத்தரிசித்து விட்டு, பல்லவர், சோழர் காலத்துக் கலையற்புதங்களைப் பார்க்கப் போவோம்,

திருச்சி செயங்கொண்டம் சாலையில் திருமழபாடி பிரிவுப் பாதையில்தான் ஆலம்பாக்கம் அமைந்துள்ளது. இங்குதான் பிற்காலப் பல்லவர்களின் கலைக்கோயில்கள் மூன்று சிவனுக்கொன்றும், திருமாலுக்கொன்றும், எழுவர் நங்கையருக்கொன்றுமாய் அமைந்துள்ளன. தொங்கும் தோட்டம், மிதக்கும் அங்காடி என்றெல்லாம் எத்தனையோ உலக அதிசயங்களைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இங்கே ஆலம் பாக்கத்திலும் அப்படியொரு அதிசயம் மிதக்கும் கோயிலாய்க் காட்சியளிக்கிறது. பல்லவ மன்னன் தந்திவர்மன் எடுப்பித்த கைலாசநாதர் கோயில்தான் மழைக் காலங்களில் இப்படி நான்கு திருச்சுற்றுகளிலும் தண்ணீரால் சூழப்பட்டு, மிதக்கும் கோயிலாய் உருமாறி நிற்கிறது. எத்தனை கலைநயமும், எவ்வளவு கல்வெட்டுச் சிறப்பும் வாய்ந்த கோயில் பாருங்கள் : பார்க்கும் இடமெல்லாம் கல்வெட்டுகள்தான். இந்தக் கோயிலின் இன்றைய நிலைமை தான் கண்களில் இரத்தத்தைவரவழைப்பது போல் உள்ளது.

அதோ ! அந்த நில வெளியில், ஆகாயப் பந்தலில் அபூர்வமாய்ப் பூத்த ஓர் அழகான பூப்போல மோனத்தவம் செய்தபடி நிற்கிறதே, அதுதான் பராந்தகன் காலத்துக் கல்வெட்டுடன் இலங்கும் திருமாலுக்கான மாடக்கோயில்.

சிதைந்து, சிதிலமாகக் காட்சியளித்தாலும் அதன் கம்பீரத்தைப் பாருங்கள். இங்குதான் தமிழகத்தில் மிக அபூர்வமாகக் காணப்படும் இராமர் சிற்பங்களுள் ஒன்று உள்ளது.

தமிழகத்தின் மிகப் பழமையான எழுவர் நங்கையர் கோயிலொன்றும் செல்லியம்மன் கோயில் என்ற திருப்பெயருடன் இங்குள்ளது.

இங்கிருந்து கூப்பிடு தொலைவில் உள்ளது திருமழபாடி. சோழ வேந்தர்களின் செல்லப்பிள்ளையாய் விளங்கிய இக் கோயிலில் நடராசரின் அற்புதமான ஆடல் தோற்றங்கள் உள்ளன. ஊர்த்வ ஜாநு, தண்டபட்சக் கரணச் சிற்பங்கள் இரண்டும், இயமனை அழித்த தாண்டவக்கோலமும், யானையை உரித்த தாண்டவ வடிவமும் இம் மழபாடிக் கோயிலின் மறக்க முடியாக் கலை மாணிக்கங்களாகும். கல்வெட்டுகளால் சூழப்பெற்றிருக்கும் கருவறையில் இறைவன் அழகராய் அருள்செய்கிறார். திருச்சுற்றில் இருக்கும் சோமாஸ் கந்தர் திருமேனி கலை நுட்பம் வாய்ந்த ஒன்றாகும். கல்லில் அமைந்திருக்கும் இத் திருமேனியில் தட்டும் போது எழும் ஓசை, இது உலோகத்தால் செய்யப்பட்டதோ என்று வியக்க வைப்பதாய் இசையொலியாய், இனிமையாய் அமைந்துள்ளது. இந்தக் கோயிலின் எதிரேதான் கொள்ளிடம் சுற்றி வளைத்துச் கொண்டு ஓடுகிறது. விருப்பம் உள்ளவர்கள் ஒரு முழுக்குப் போடலாம்.

இப்போது நம்மை எதிர்கொள்வன பழுவூர்க்கோயில்கள். கல்கி எழுதிய 'பொன்னியின் செல்வனை' உங்களில் பலர் படித்திருப்பீர்கள். அதில் வரும் பழுவேட்டரையர்களை மறந்திருக்கவே முடியாது. அந்தப் பழுவூர் மரபைச் சேர்ந்த குமரன் கண்டன், குமரன் நக்கன் என்ற சிற்றரசர்கள் காலத்தில் எழுந்த அழகுக் கோயில்கள்தான் அவனி கந்தர்ப்ப ஈசுவரத்து அகத்தீசுவரமும், சோழீச்சரமும். இரண்டுமே கலையுலகில் பழுவூர் அரசர்கள் பதித்த அற்புத முத்துக்கள். பார்க்கப் பார்க்கப் பார்த்துக் கொண்டேயிருக்கத் தூண்டும் எழில் நயம் வாய்ந்த கலைத் தொட்டில்கள்.

இவற்றுள் அகத்தீசுவரம் அழகான சிங்கத் தூண்களுடன் கூடிய முகமண்டபத்தைக்கொண்டது. அந்தச் சிங்கங்களைப் பாருங்கள். எத்தனை கம்பீரம்! எத்தனை கவர்ச்சி! கருவறையின் தேவ கோட்டங்களில் உள்ள மகர தோரணங்களில் காணப்படும் சிற்றுருவச் சிற்பங்கள் முற்காலச் சோழர் காலத்துச் சிற்பக் கலைச் சிறப்புக்கு ஒளிர்விடும் எடுத்துக் காட்டுகளாய் இலங்குகின்றன. இங்குள்ள 'கங்கையை ஏற்ற அண்ணல்' கலைநயம் பொருந்திய சிற்பவடிவாகும். இறைவனின் இடப்பின்கை கங்கையைச் சடையில் ஏற்கிறது. வலப்பின்கை மானை ஏந்தியுள்ளது. இடமுன் கையால்சினம் கொண்டுள்ள இறைவியின் இடக்கையைப் பற்றியுள்ளார். வலமுன்கை இறைவியின் வல மார்பகத்தைத் தழுவியுள்ளது. இருவரின் முகங்களிலும் எத்தனைஎத்தனை உணர்வலைகள்! கனிந்த காதலையும், செல்லச் சிணுங்கலையும் இணைத்துக் காட்டும் இணையற்ற சோழர் சிற்பம் இது.

சோழீச்சரமும் அழகமைந்த கோயில்தான். இதன் புறச் சுவர்ச் சிற்பங்களுள் முருகனும்,நான்முகனும் எத்தனை அழகு பொலிய காணப்படுகின்றனர். கல்லில் வடித்த கவிதைகளாக இலங்கும் இத்திருமேனிகளைப் பார்க்கும் போதே மனம் இலேசாகி மயங்கிப் போகிறது. மகிழ்வும், அமைதியும் நம்மிடம் மையலுடன் வந்து நிறைந்து கொள்கின்றன.

செயங்கொண்டம் தாண்டியாயிற்று. அதோ பாருங்கள், நமக்கு வலப்புறத்தில் வானத்தைத் தழுவுவது போல் ஓர் அழகான கோயில் விமானம். அதுதான் சோழர்குலத் தென்றல் முதலாம் இராசேந்திரனின் ஈடு இணையற்ற சிற்பப் புதையல். கங்கை கொண்ட சோழீச்சரம் என்ற திருப்பெயருடன் அமைந்த அற்புதக் கலைக் களஞ்சியம். காலத்தின் கருணையற்ற கைகளில் கரையத் தொடங்கியிருந்த இக் கலைக் கோயிலைக் காப்பாற்றிக் காத்து வரும் பெருமை, மைய அரசின் தொல் பொருள் ஆய்வுத் துறைக்கே உரிய தொன்றாகும். நடுக்காலச் சோழர்களின் கட்டடக் கலைக் கோர் எழுச்சி இமயம் தஞ்சைப் பெருங் கோயிலென்றால், அச் சோழர் காலத்துச் சிற்ப வளமைக்கோர் சாதனைப் பட்ட

யம் கங்கை கொண்ட சோழபுரம். எத்தனை எடுப்பான கோயில்! கோயிலின் புறச்சுவர்களில் காணப்படும் சிற்பங் கள் ஒவ்வொன்றும் கல்லில் கனிந்த கற்பனைகள். இவற்றுள் ளும் இதயத்தை நெகிழ்த்தி அதில் இனம் புரியாத இன்ப மலர்வுகளை அள்ளித் தெளிக்கும் அழகுச் சிற்பம் சண்டேசு வரருக்கு இறைவன் அருள் செய்யும் அருமைக் கோலம் தான். எத்தனை கருணை இறைவனின் பார்வையில்! எத்தனை நளினம் இறைவியின் கோலத்தில்! எத்தனை பணிவு கலந்த பெருமிதம் சண்டேசுவரரின் முகத்தில்! இது சிற்பந்தானா அல்லது உயிரோவியமா என்று நம்மை மயங்க வைக்கும் இக் கலைப் பேழை, உலக அரங்கில் நம்மைத் தலை நிமிர்த்த வைக்கும் சாதனைச் சிற்பமாகும்.

இதே கோயிலின் விமான மேல் தளத்தின் அடிப்புறத் தில் காதலர் சுதையுருவம் ஒன்று காணப்படுகிறது. ஏறிப் போய்ப் பார்க்க வேண்டும். தவற விட்டு விடக் கூடாது. "செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே'' என்ற குறுந்தொகைக் காதலுக்கோர் கனிந்த இலக்கணமாய்க், 'காலம் முழுவதும் தொழுதிடல் வேண்டும், காதலென்பதோர் கோயிலின் கண்ணே' என்னும் பாரதி வரி களுக்கோர் பரவசமூட்டும் இலக்கியமாய்க் காணப்படும் இவ் வழகிய தோற்றந்தான் எத்தனை எத்தனை மெல்லுணர்வு களை நித்தியமல்லி நறுமணமாய் நெஞ்சில் தூண்டி விடுகிறது! அந்தக் காதலனின் வலக்கை, அவன் அழகரசியின் நீண்ட கூந்தலைப் பிடித்திழுத்து, அவள் முகத்தைத் தன் முகத்துக் காய்க் கவிழ்க்கும் திறன்தான் என்னே! இடக்கை, அந்தப் பேரழகியின் இட மார்பகத்தை இலேசாய்த் தழுவியபடி இருக்க, கண்களில் கிறக்கமும், கவிழ்ந்த முகத்தில் காதலு மாய் அந்தக் குறும்புக்காரி தன் வலக்கையை அவன் வலத் தொடையில் ஊன்றிடக், 'காதல்' என்னும் மூன்றெழுத்துக் களின் முத்தாய்ப்பாய் அல்லவா இந்தச் சிற்பம் அமைந் திருக்கிறது. ஒரு முத்தக் காட்சியை இத்தனை நயமாய், இத்தனை அழகாய், இத்தனை நளினத்தோடு எங்குமே

பார்க்க முடியாது. கண்களால் அள்ளிக் கருத்தில் நிறையுங்கள் ! பின்னால் பயன்படும்.

அணைக்கரையில் சற்று இளைப்பாறுவோம். மீன் பிடிக்கும் வேடிக்கைகளைப் பார்த்தபடி சற்றுக் கண்ணயர்ந்தாலும் தவறில்லை.

என்ன அதற்குள்ளாகவா விழித்து விட்டீர்கள் ? புறப்படுவோமா ? திருச்சி மாநகரின் கலைப் புதையல்களையும், எழிற் காட்சிகளையும் கண்ணிலும், நெஞ்சிலுமாய்ப் படம் பிடித்துக் கொண்ட இந்த அற்புத நினைவுகள் என்றென்றும் இருக்குமல்லவா ? கவிதைகளாய்க், கனவுகளாய், அவை கருத்தில் நிறைந்திருக்க, திருச்சியை நெருங்குகிறோம். நான் விடைபெற்றுக் கொள்ளட்டுமா ? வணக்கம்.



எங்கேயும் உன் தாண்டவமேதான் நடராசா

(திருமழபாடி)



ஒரு தரம்! ஒரே தரம்!
(கங்கைகொண்ட சோழீச்சரம்) பக். 87



சின்னவளைத் தலையேற்றச் சினங்கொண்ட
மூத்தவளை
சிருங்காரக் குறிப்பாலே சினம்தீர்க்கும் சிவபெருமான் !
(பழுவூர் கங்கையப்பர்) பக். 86



உய்யக் கொண்டான் அருகே
எடுக்கப்பட்ட வீரக்கல் பக். 126



திருவானைக்கா - கோயிலுக்கருகே
உள்ள வீரக்கல் பக். 129

# 7. இவரலாது இல்லையோ பிரானார்?

சிவபெருமானுக்கு அணுக்கமான தொண்டரல்லவா, அதன்ால்தான் சுந்தரரால் இப்படியொரு உரிமைக் கேள்வியைக் கேட்க முடிந்தது. திருவானைக்காவை வணங்கிப் பதிகம் பாடி மகிழ்ந்த கையோடு திருப்பாச்சில் ஆச்சிரா மத்தை அடைந்த சுந்தரர் பெருமானுக்குப் பொருள் முட்டுப் பாடு நேர்ந்தது. அதனால் உள்ளம் புழுங்கினார். அப் புழுக்கம் இறைவரிடத்திலே பிணக்கை உண்டாக்கியது. அப்பிணக்கு, 'வைத்தனன் தனக்கே தலையுமென் நாவும்' எனத் தொடங்கி "இவரலாது இல்லையோ பிரானார்?"[1] என்ற பதிக மொன்றைத் திருப்பாச்சிலாச்சிராமத்து இறைவன்மேல் பாட வைத்தது. சுந்தரரின் சுந்தரத் தமிழ்க் கவியில் சிந்தை தந்த சிவனார், தம் தொண்டர் மனம் மகிழப் பொருட்குவை தந்தருளினார். அதைப் பெற்ற நிறைவுடன் சுந்தரர் திருப் பைஞ்ஞீலி, திரு ஈங்கோய் மலை முதலிய தலங்களைக் காணத் தம் பயணத்தைத் தொடர்ந்தார். சேக்கிழாரின் பெரிய புராணம் இப்படி முடிகிறது.[2] ஆனால் திருப்பாச்சிலாச் சிராமத்துத் தலவரலாறு இத்தோடு ஒரு புனைகதையைச் சேர்த்துக்கொண்டு பின்வருமாறு தொடர்கிறது:

திரு ஈங்கோய் மலையை அடைந்து அங்கு உறையும் இறைவனைச் சுந்தரர் பாடியதும், அத்தலத்து மரமாகிய புளியமரம் தன் காய்களைப் பொன்னாக்கிக் கீழே உதிர்க்கச், சுந்தரர் அவற்றை வாரியெடுத்துக்கொண்டு மீண்டும் திருப் பாச்சிலாச் சிராமம் வருகிறார். அங்குச் சிவபெருமான் முன்பு தமக்களித்த பொன்னையும், திரு ஈங்கோய்ப் பொன் புளியங் காயையும் உடன் வைத்து, உரைகல்லில் உரைத்துப் பார்க்கும் போது, சிவபெருமான் எழுந்தருள, சுந்தரர் தாம் உரைத்த பொன் மாற்றினைக் காட்ட, இறைவன், 'ஒரு சிறிதும் வேறு பாடு இல்லையே,' என்கிறார். இக் கூற்றினால் இறைவனுக்கு மாற்றுரை வரதீசுவரர் என்று பெயர் வந்ததாகத் தலவரலாறு

குறிப்பிடுகிறது. இந்தப் புளியங்காய்க் கதைக்குப் பக்கபலமாக அடிக்குறிப்பில், சுந்தரருக்குப் புளியங்காய் பொன்னானதைச்,

'சுந்தரருக்குப் புளியங்காய் ஈந்ததுகாண் அம்மானை
சுந்தரருக்குப் புளியங்காய் ஈந்ததுவே யாமாயின்
அத்துணையும் சொர்ணங்காண் அம்மானை,'

என்று சுந்தரர் அம்மானை நூல் ஒன்று குறிப்பிடுவதாக வேறு தலவரலாறு எடுத்துச் சொல்கிறது.[3] இவ்வளவும் சொல்லும் இத்தலவரலாறு இறைவனுக்கு ஏன் 'வரதீசுவரர்' என்ற பெயர் வந்தது என்பதற்கு விளக்கம் தரவில்லை. வரதர் என்பது பெருமாளின் பெயர். இங்குள்ள ஈசுவரனுக்கு, வரதீசுவரர் என்று பெருமாளின் பெயரையும் இணைத்துத் தந்திருப்பதன் அடிப்படை விளங்கவில்லை. மேலும் இக் கோயிலின் உள்திருச்சுற்றில், மேற்குப் புறச் சுற்று மாளிகையில், 'மாற்றறி வரதர்' என்ற பெயருடன் பெருமாளின் நின்ற திருக்கோலச் சிற்பமொன்று உள்ளது; வல முன்கை காக்கும் குறிப்பு காட்ட, இட முன்கை கட்ய வலம்பிதமாகப், பின் கைகளில் வலப்புறம் சக்கரமும், இடப் புறம் சங்கும் கொண்டு நிற்கும் இந்தச் சிற்பத் திருமேனிக்கு மாற்றறி வரதர் என்ற பெயர் சூட்டப்பட்டதன் விளக்கமும் தலவரலாற்றில் இல்லை. செவிவழிச் செய்தியாகக் கோயிலார், சுந்தரர் பொன்னை உரைத்த போது சிவபெருமான், அது மாற்றுக் குறையாத தங்கம்தான் என்று சொன்ன போது, சான்றாளராய்ப் பெருமாள் நின்றார்; அதனாற்றான் அவருக்கு மாற்றறி வரதர் என்று பெயர் ஏற்பட்டது எனக்கூறி, இக் கோயிலின் இரண்டாம் கோபுர நிலையின் மேற்புறமிருக்கும் சுதையுருவங்களைக் காட்டு கிறார்கள். இதில் சுந்தரரும் சிவபெருமானும், பெருமாளும் காட்சியளிக்கின்றார்கள். இதையும் சேர்த்துக்கொண்டாலும், மாற்றுரை வரதீசுவரர் என்பதன் பெயர்க்காரணம் புலப்பட வில்லை. வரதர் உடன் நின்றதால்தான், ஈசுவரனுக்கு வரதீசுவரர் என்ற பெயர் ஏற்பட்டதென்றால் வரதருக்கு ஏன் மாற்றறி ஈசுவர வரதர் என்ற பெயர் தரப்படவில்லை?

எல்லாவற்றிற்கும் மேலாகப் பெரியபுராணத்து வரலாற்றைப் பாதை திருப்பிப் புதுக் கிளைக் கதையொன்றை நுழைத்துத் தலவரலாறு புனைந்திருக்கும் புனைகதையால், சுந்தரருக்குப் பெருமைக்குப் பதிலாகச் சிறுமையே சேர்வது தான் துன்பமாய் உள்ளது. இறைவன் இரண்டு இடங்களில் தமக்குத் தந்த பொன்னைப் பயன்படுத்தி மகிழாது. இரண்டும் ஒரே மாற்றுதானா என்று தமக்குள்ள பணிகளை யெல்லாம் விடுத்து சுந்தரர் உரைத்துப் பார்ப்பதாய்த் தலவரலாறு கூறுவது வேதனையைத் தருகிறது. கதைகள் வேண்டாமென்று கூறவில்லை. ஆனால் அந்தக் கதைகளில் கூட ஒரு நேர்மை, பொருத்தம், அறநெறி இருந்தால் மக்களுக்கு வழிகாட்ட உதவக்கூடும். புனையப்படும் கதைகள் அக்கதை மாந்தர்க்குப் பெருமை தருவதாக அமைய வேண்டுமே தவிர, சிறுமை சேர்ப்பதாக இருத்தல் கூடாது. இதை இனியேனும் தலவரலாறு எழுதும் பெருமக்கள் கருத்தில் கொள்வது நல்லது.

சோழர் கலைமுறையில் நெடிய ஆய்வுகள் செய்திருக்கும் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள்கூட இக் கோயிலைப் பற்றி எழுதும் இடத்தில் தலவரலாற்றின் கதைக்குத் துணை போயிருப்பது வியப்படைய வைக்கிறது.[4] சிவப்பதிகள் வரலாறு என்னும் நூல் இக்கோயிலைப் பற்றிக் குறிப்பு காட்டும் இடத்தில், 'சுந்தரமூர்த்தி நாயனாருக்கு ஆயிரம் செப்புக்காக கொடுத்துப் பின்பு பொன்னாக உரைத்துக் காட்டிய இடம்' என்று புதுக்கதை சொல்கிறது.[5] எங்கிருந்து இந்தச் செய்தியை இந்நூல் பெற்றதென்பதை அறியக்கூடவில்லை. சுந்தரர் பொன் கேட்டு இறைவன் தந்தார் என்ற பெரிய புராணச் செய்தி, எப்படி எப்படி யெல்லாம் திரிந்து, பல கிளைக் கதைகளை உருவாக்கி விட்டிருக்கின்றது என்பதை நினைக்கும்போது நம்மவர் கற்பனை யாற்றலை வியக்காதிருக்க முடியவில்லை.

தலவரலாறு இக் கோயிலுக்குரிய தீர்த்தங்களைப் பற்றிக் குறிப்பிடுமிடத்தில் அன்னமாம் பொய்கை, சிலம்பு நதி என்ற இரண்டைக் குறிக்கிறது.[6] அன்னமாம் பொய்கை இப்

'போதைய' அம்மன் கோயிலுக்கு எதிரில் இருக்கும் சிறு குளத்தைக் குறிக்கும் பெயர். இப்பெயர் வந்தமைக்கும் தலவரலாறு ஒரு கதை கூறுகிறது. உமாதேவியார் அன்ன வடிவில் வந்து இப்பொய்கையில் நீராடி இறைவனை வழிபட்டதால், இதற்கு அன்னமாம் பொய்கை என்று பெயர் ஏற்பட்டதாம். இதில் வேடிக்கை என்னவென்றால் சுந்தரர் இக் கோயிலைப் பாடிய பதிகத்தில்,

> "அன்னமாம் பொய்கை சூழ்தரு பாச்சில்
> ஆச்சிரா மத்துறை அடிகள்,"[7]

என்று பாடுகிறார். இதற்கு அன்னங்கள் மிக்கு வாழும் பொய்கை சூழ்ந்த திருப்பாச்சில் ஆச்சிராமம் என்பது பொருள்.[8]

இதே பதிகத்தில் மற்றோ ரிடத்தில்,

> "பூச்சிலை நெஞ்சே பொன்விளை கழனிப்
> புள்ளினஞ் சிலம்புமாம் பொய்கை",

என்று வருகிறது.[9] 'பொன் விளையும் எனப் புகழத்தக்க கழனிகளில் பறவைக் கூட்டம் ஒலிப்பதும், நீர் நிறைந்த பொய்கைகளை உடையதுமான திருப்பாச்சிலாச்சிராமம்' என்று இவ்வரிகளுக்கு உரை காணப்படுகிறது.[10] இதில் வரும் 'சிலம்புமாம் பொய்கை' என்பதை எடுத்துக்கொண்டு, இக் கோயிலுக்குரிய இன்னொரு தீர்த்தமாகச் சிலம்பு நதியை உருவாக்கியுள்ளது தலவரலாறு. ஓர் ஊரைப் பற்றிப் பாடும் போது அவ்வூரின் நிலவளம், நீர்வளம் பாடுவது மரபு. அம் மரபினையொட்டி திருப்பாச்சிலாச்சிராமத்தின் பொய்கைகளையும் அதில் உலவும் அன்னங்களையும் புள்ளினம் ஒலிக்கும் கழனிகளையும் சுந்தரர் பாட, அவ்வரிகளின் முழுமையான பொருளைப் பெறாது, இரண்டு தீர்த்தங்களை உருவாக்கிவிட்டிருக்கும் தல வரலாற்றின் செய்கை துன்பம் தருகிறது.

இக்கோயிலில் படியெடுக்கப்பட்டதும், படியெடுக்கப் படாததுமாய்ப் பல கல்வெட்டுகள் உள்ளன. எந்தக்கல்வெட்

டிலும் இறைவனின் பெயர் மாற்றுரை வரதீசுவரர் என் றில்லை. தலவரலாற்றின் கூற்றுப்படி சுந்தரர் காலத்தி லேயே இக்கோயில் இறைவன் மாற்றுரை வரதீசுவரர் ஆனா ரெனில் கி. பி. எட்டாம் நூற்றாண்டினராய்க் கருதப்படும் சுந்தரருக்குப் பின்வந்த முதலாம் பராந்தகன், முதலாம் இராசராசன் மற்றும் தொடர்ந்த சோழப் பேரரசர்கள் எவருடைய கல்வெட்டிலும், மாற்றுரை வரதீசுவரராய், இறைவன் பெயர் பெறாமைக்குக் காரணம் என்ன? இக் கோயில் இறைவனைப்பாடிய சுந்தரரும் பாச்சிலாச்சிராமத்து எம் பரமர், பாச்சிலாச்சிராமத்துறை அடிகள்[11] என்றுதான் குறிப்பிட்டிருக்கிறாரே தவிர மாற்றுரை வரதீசுவரராய்க் காணவில்லை. இந்நிலையில் தலவரலாறு ஏன் இறைவனை மாற்றுரை வரதீசுவரராய்க் காட்டுகிறது? விளக்கம் சொல்ல முடியாத ஒரு பெயர் இறைவனுக்கு எந்தக் காலத்தில் சூட்டப் பெற்றது? இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளில் காலத்தால் பிற்பட்டது கிருஷ்ண தேவராயருடையது. எனவே கி. பி. பதினாறாம் நூற்றாண்டுக்குப் பிறகே, பெயர் மாற்றம் நிகழ்ந்துள்ளதாகக் கருதலாம். நல்ல தமிழ்ப் பெயர்களுடன் கூடிய இறைக் கோயில்களுக்கும், இறைத் திருமேனிகளுக்கும் பிற்காலத்தில் தேவையற்ற பெயர் மாற்றம் நிகழ்ந்தது. அது மட்டுமன்று, மன்னர்கள், தங்கள் திருப்பெயர்களால் எடுத்த கோயில்கள் கூடப் பெயர் திரிந்து பெருமை குன்றின. இராசராசேச்சரம் என்று கல்வெட்டுகள் பெருமை பாடும் தஞ்சைப் பெரிய கோயில் இன்று பிரகதீசுவரர் கோயிலாய்ப் பெயர் திரிந்து போன கொடுமை இங்கு நினைக்கத் தக்கது. ஊர்ப் பெயர்களையெல்லாம் தமிழ்ப் படுத்தும் தமிழக அரசு, இத்திருக்கோயில்களின் பெயர்களையும், அங்குள்ள தெய்வங் களின் பெயர்களையும் கூட தேவாரப் பதிகங்களிலும், கல் வெட்டுகளிலும் காணப்படும் பெயர்களையொட்டி மாற்றம் செய்வது சாலச் சிறந்த பணியாகும்.

திருப்பாச்சில் ஆச்சிராமத்து இறைவனைச் சம்பந்தரும் பாடியிருக்கிறார்.[12] பெரிய புராணம் சம்பந்தரின் இக் கோயில் வருகையை விளக்கமாய் விவரிக்கிறது.[13] அன்பில்,

மாந்துறை முதலிய தலங்களை வழிபட்ட சம்பந்தர் பெருமான் அங்கிருந்து திருப்பாச்சிலாச்சிராமம் அடைந்தார். மழநாடு என்று போற்றப்பட்ட திருப்பாச்சில் பகுதிக்குத் தலைவராக இருந்தவர் கொல்லி மழவர். அவர் பெற்றமகள் முயலகன் என்னும்நோய் பற்றியதால் துன்பம் மிகக் கொண்டு துவண்டாள். யாது செய்தும் அந்நோய் தீராமையின், தான் வழிபடும் கங்கைச் சடையரே கதியென்று, மழவர் தம் மகளைத் திருக்கோயிலில், இறைவன் திருமுன் கிடத்தி வைத்தார். 'வழியொன்றுமிலையோ?' என்று அவர் மனம் வெம்பியிருந்த நேரத்தில்தான் சம்பந்தர் திருப்பாச்சில் ஆச்சிராமத்துக்கு வந்தார். தம் துன்பத்தை மறைத்துக் கொண்டு, உரிய சிறப்புகளுடன் சம்பந்தரை எதிர் கொண்ட மழவர் தலைவர், அவரைத் திருக்கோயிலுக்கு அழைத்து வந்தார். கோயிலைச் சுற்றி வந்த சம்பந்தர், இறைவன் முன் கிடத்தப்பட்டிருந்த பெண்ணைக் கண்டதும் வியந்து மழவரிடம் கேட்டு அனைத்துச் செய்திகளையும் அறிந்தார். உடனே.

*''துணிவளர்திங்கள் துளங்கி விளங்கச்*
*சுடர்ச்சடை சுற்றி முடித்துப்*
*பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ*
*ஆரிடமும் பலிதேர்வர்*
*அணிவளர் கோலம் எலாஞ்செய்து பாச்சில்*
*ஆச்சிரா மத்துறைகின்ற*
*மணிவளர் கண்டரோ மங்கையைவாட*
*மயல்செய்வதோ இவர் மாண்பே''*

என்று பதிகமொன்றைப் பாடியருளினார். அவ்வளவில் அப்பெண், நோய் தீர்ந்து நலம் பெற்று எழுந்து தந்தையைச் சேர்ந்தாள். இருவருமாய்ச் சம்பந்தரைப் போற்றி வணங்கினர், சம்பந்தர் பெருமான் இறைவனை வணங்கித் திருப் பைஞ்ஞீலி புறப்பட்டார். சம்பந்தரின் இந்த அறச் செயலை இன்றும் நினைவு கூர்ந்து, வலிப்பு நோயுள்ளவர்களை இக் கோயிலுக்கு அழைத்து வந்து, இறைவனைத் தொழுது வணங்குவது மக்களின் வழக்கமாய் உள்ளது.

ஐயடிகள் காடவர் கோனும் இக் கோயிலைப் பாடியுள்ளார். இவரது பாடல் பதினோராம் திருமுறையில் உள்ளது.[14]

"இட்ட குடிநீர் இருநாழி ஒருழக்காச்
சட்டவொரு முட்டைநெல் தான்கலந்(து)—அட்ட
அருவாச்சார் என்றங்(கு)அழாமுன்னம் பாச்சில்
திருவாச்சி ராமமே சேர்."

முத்தரைய மன்னர்களுள் புகழ் சுமந்து நிற்பவன் சுவரன் மாறன். பல போர்களை நடத்தி, வெற்றிகளைக் குவித்து, வீர மறவனாய் வாழ்ந்த அப்பெருமகன், கலையார்றல் நிறைந்தவன் என்பதை அவன் கை வண்ணம் பட்ட கலைக் கோயில்கள் வழி அறியலாம். சுவரன் மாறனின் வெற்றிப் பெருமிதங்களை வீர வரிகளாக்கிய இலக்கியக் கலைஞர்களைச் செந்தலைக் கல்வெட்டுகள் நமக்கு அறிமுகப் படுத்துகின்றன. அப்புலவர் பெருமக்களுள் ஒருவர் தாம் வேள்நம்பன். இவர் பிறந்த ஊர் பாச்சில்.[15] இந்தப் பாச்சில் என்ற ஊர்ப் பெயருடன் சேர்ந்து, பாச்சில் வேள் நம்பன் என்றே இவரது பெயர் கல்வெட்டுகளுள் காணப்படுகின்றது.

"வெங்கட் பொருகயல்சேர் வேல் கொடியோன் வாண்மாறன்
செங்கட் கரும்பகடு சென்றுழக்க —வங்குலந்தார்
தேரழுந்தி மாவழுந்தச் செங்குருதி மண்பரந்தவ்
வூரழுந்தி யூர்என்னும் ஊர்,"[16]

என்று சுவரன் மாறனின் அழுந்தியூர்ப் போரைப் பாடுகிறார் பாச்சில் வேள்நம்பன். இக்கவிஞர் பெருமான் பாடியிருக்கும் அழுந்தியூர், அண்மையில் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றுப் பேரவையினரால் வெளிப்படுத்தப்பட்டது.[17]

பாச்சில் வேள்நம்பனைத் தந்து பெருமை பெற்றதும், சம்பந்தராலும், சுந்தரராலும், ஐயடிகள் காடவர் கோனாலும் பாடப்பெற்றதுமான திருப்பாச்சில் ஆச்சிராமம், இன்று திருவாசி என்ற பெயருடன், திருச்சி நாமக்கல் சாலையில், திருச்சிக்கு வடமேற்கில், கொள்ளிடத்தின் வடகரையில் திருச்சியிலிருந்து பத்து கிலோ மீட்டர் தொலைவில் அமைந்

துள்ளது. நெடுஞ்சாலையில் இருந்து வடபுறம் பிரியும் மண் பாதையில் முக்கால் கிலோ மீட்டர் சென்றால் இவ் வூரை அடையலாம். காவிரியின் கரையில் இருப்பதால் வளம் கொழித்துக் குலுங்கும் இவ்வூரின் மையத்தில் ஐந்து நிலைக் கோபுரத்துடன் அழகாய் விளங்குகிறது இறைவனின் திருக் கோயில். கோயிலுக்கு முன்னால் ஒரு சிறு திறந்த மண்டபம் பிற்காலத்துக் கட்டட முறையில் காணப்படுகிறது. சுதை வடிவங்களுடன் காட்சியளிக்கும் கோபுரத்தில் நரசிம்மத் திருத்தோற்றத்தின் கதை விளக்கங்கள் உள்ளன.

கோபுர வாயிலில் நுழையும் நம்மைப் பெரிய மண்டப மொன்று எதிர் கொள்கிறது. இம் மண்டபத்தின் தெற்கில் இறைவியின் கோயிலும், வட புறத்தே ஆயிரலிங்கத் திருக் கோயிலும் (சகஸ்ரலிங்கம்) உள்ளன. இவ் ஆயிர லிங்கக் கோயிலுக்குப் பக்கவாட்டில் ஒன்பான் கோள்களின் அமைப்பு உள்ளது. இம் மண்டபத்துத் தூண்கள் சிலவற்றில் பூ வேலைப் பாடுகளும், சிலவற்றில் சிற்பத் திருமேனிகளும் உள்ளன. முன்னாலுள்ள தூண்களில் காணப்படும் சிற்பங்களைக் கொல்லி மழவன், அவன் மனைவி, மகள் என்று பெயர் சூட்டிக் காட்டியுள்ளனர். இம் மண்டபத் தூணொன்றில் பாலுணர்வுச் சிற்பமொன்றும் காணப்படுகிறது. ஆயிர லிங்கக் கோயிலில் உள்ள லிங்கத் திருமேனியில் சிறிய வடிவில் ஆயிரம் லிங்கங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

மண்டபத்தின் தெற்குப் புறமுள்ள இறைவியின் திருக் கோயிலைப் பார்த்தபடி நந்தியொன்று உள்ளது, மண்டபம் இவ் விடத்திலிருந்து கோயிலின் வெளிச் சுற்றாய் மாறி ஆயிர லிங்கக் கோயில் வரை நீள்கிறது. இச் சுற்றில்தான், இறை வியின் திருக்கோயில் எதிரில் குளமொன்று உள்ளது, கோயி லார் இதைத்தான் அன்னமாம் பொய்கை என்கின்றனர்.

இறைவியின், திருக்கோயில் மேற்குப் பார்த்த திருமுன் னுடன் அமைந்துள்ளது. பெரியதொரு முன்மண்டபமும், அதையடுத்து இடை நாழியோடு கூடிய மகா மண்டபமும், அதைத் தொடர்ந்து உள் மண்டபமும், கருவறையும் உள்ளன.

முன் மண்டபத்திலிருந்து கோயிலைச் சுற்றி வர வாய்ப்பாக இதன் இருபுறமும் வழிகள் உள்ளன. கருவறையில் இறைவி, நாற்கரத் தேவியாய் நின்ற திருக்கோலத்தில் அருளாட்சி செய்கிறார். சடாமகுடமும் கருணை பொலிந்த முகத் தோற்றமுமாய் விளங்கும் இறைவியின் பின் திருக்கைகளில் மலர் மொட்டுகள் உள்ளன. வல முன் கை காக்கும் குறிப்பு காட்ட, இட முன் கை அருட் குறிப்புடன் விளங்குகிறது. இறைவி கோயிலின் வெளிச் சுற்றில் சண்டேசுவரிக்கென ஒரு சிறு கோயில் உள்ளது. இறைவி கோயில் உள்மண்டபம், கருவறை இவற்றின் புறச்சுவர் கோட்டங்களில் தெய்வத் திருமேனிகள் நின்ற கோலத்தில் காணப்படுகின்றன. உள்மண்டபக் கோட்டங்களில் வடபுறம் வைஷ்ணவியும், தென்புறம் இந்திராணியும் இருப்பதாகத் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் குறித்திருக்கிறார்.[18]

உள்மண்டபத்தின் வடபுறக் கோட்டத்தில் இருக்கும் திருமேனி வல முன்கையில் சிறு கத்தி கொண்டு, இடமுன் கையைக் கீழ்நோக்கி நிறுத்திய கருவியொன்றின் மீது ஊன்றியுள்ளது. இக்கருவி பட்டையான வாள் போலத் தோன்றுகிறது. இதன் பின்கைகளில் சங்கும் சக்கரமும் காணப்படுவதால் இதைக் கொற்றவையின் ஒரு தோற்றமாகக் கொள்ளலாமே தவிர வைஷ்ணவியாகக் கொள்ள முடியாது; ஏனெனில் ஆகமப்படி வைஷ்ணவியின் முன் கைகள் காக்கும் குறிப்பிலும் அருட்குறிப்பிலும் அமைய வேண்டும்.[19]

தென்புறக் கோட்டத்தில் உள்ள திருமேனி வலப் பின் கையில் அங்குசமும், இடப்பின் கையில் பாசமும் கொண்டுள்ளது. முன்கைகள் காக்கும் குறிப்பும், அருட்குறிப்பும் கொண்டுள்ளன. இதை இந்திராணி என்றழைப்பது சற்றும் பொருந்தாது. ஆகம விதிப்படி இந்திராணியின் கைகளில் வஜ்ரமும், சக்தியும் அல்லது வஜ்ரமும் அங்குசமும், அல்லது வஜ்ரமும் மலரும் இருக்கலாம்.[20] இந்திராணியைப் பொறுத்த மட்டில் வஜ்ரம் முக்கியமான கருவியாகும். தென்புறக் கோட்டத் திருமேனியின் கைகளில் வஜ்ரம் இல்லாமையால்

இதை இந்திராணியாய்க் கொள்வது இயலாததாகிறது. ஆகம விதிப்படி இதைத்தேவியின் திருக்கோலமென்றுதான் கொள்ள வேண்டும்.[21]

கருவறைக் கோட்டங்களில் வடபுறம் பிராம்மியும், கிழக்கில் மயேச்சுவரியும், தென்புறம் சாமுண்டீசுவரியும் இருப்பதாகத் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் எழுதியுள்ளார்.[22] இவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

வடபுறம் இருக்கும் திருமேனி, தன் பின்னிரு கைகளில் வலப்புறம் அக்கமாலையும் இடப்புறம் குண்டிகையும் கொண்டு முன்னிரு கைகளில் காக்கும் குறிப்பும் அருட்குறிப்புமாய் எழுந்தருளியுள்ளது. பிராம்மிக்குரிய கருவிகள் இருந்தபோதிலும் இத்திருமேனி ஒரு முகம் கொண்டு விளங்குவதால் இதைப் பிராம்மியாக ஏற்றுக்கொள்ளத் தயக்கமேற்படுகிறது. ஆகமங்கள் பிராம்மிக்கு நான்கு முகங்கள் இருக்க வேண்டுமென்று எடுத்துரைக்கின்றன.[23] அதே ஆகமங்கள், தேவியின் திருத்தோற்றத்தை அமைக்கும்போது பின் கைகளில் அக்கமாலையும் குண்டிகையும் இருக்கலாம் என்றும் குறிக்கின்றன.[24] எனவே நான்கு முகங்கள் பெறாத இத்திருமேனியை பிராம்மி என்பதை விட தேவியின் திருக்கோலமாய்க் கொள்வதே பொருத்தமாய்த் தோன்றுகிறது.

கிழக்குக் கோட்டத்திலுள்ள திருமேனி திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் குறிப்பது போல் மயேச்சுவரிதான். இத்திருமேனியின் முன்கைகள் காக்கும் குறிப்பிலும், அருட்குறிப்பிலும் உள்ளன. பின்னிரு கைகளில் வலப்புறம் மழுவும் இடப்புறம் மானும் காட்டப்பட்டுள்ளன.

தெற்கிலுள்ள திருமேனியை சாமுண்டீசுவரி என்று திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் குறித்திருப்பது பிழையானது. சாமுண்டீசுவரியை இயமனின் சக்தியாக ஆகமங்கள் காட்டுகின்றன.[25] இத் திருமேனியின் கைகளில் தலையோடும் முத்தலை ஈட்டியும் அமைய வேண்டும்.[26] ஆனால் தெற்குக் கோட்டத்திலுள்ள திருமேனியின் பின்னிரு கைகளிலும் மலர் மொட்டுகளே உள்ளன. முன்னிரு கைகளும் காக்கும் குறிப்பும்

அருட்குறிப்பும் கொண்டுள்ளன. பெரும்பாலான் கோயில் களில் இறைவியின் திருக்கைகள் இப்படித்தான் அமைந் துள்ளன என்பது இங்கு நினைவுகூரத் தக்கது. எனவே இதையும் இறைவியின் திருவடிவாய்க் கொள்வதே பொருத்த மாகும்.

எனவே, இறைவி கோயில் தேவகோட்டங்களில் முப்புறமும் இடம் பெற்றிருக்கும் தெய்வத் திருமேனிகள் ஐந்தும், தேவியின் மாறுபட்ட திருத்தோற்றங்களே என்பது இதனால் தெளிவாய்ப் புலப்படும். இக் கோயில் விமானத்தின் சிகரம் வேசர வகையினது. கருவறையின் அடித்தளத்தில் பொறிந்த நிலையில் கல்வெட்டொன்று முப்புறமும் தொடராய்க் காணப்படுகிறது. மிகவும் பழுதுபட்ட நிலையில் இருப்பதால் அரசர் பெயரோ, ஆட்சியாண்டோ அறியக்கூட வில்லை. அம்மன் கோயிலுக்கு அளிக்கப்பட்ட கொடையைப் பற்றிப் பேசும் இக் கல்வெட்டின் எழுத்தமைதி கொண்டு இதைப் பதினான்காம் நூற்றாண்டினதாய்க் கொள்ளலாம்.

இறைவி கோயிலும், ஆயிரலிங்கக் கோயிலும் உள்ள வெளிச்சுற்றிலிருந்து உள் சுற்றுக்குச் செல்ல கோபுர வாயி லொன்று மண்டபத்தின் மையத்தில் அமைந்துள்ளது. மூன்று நிலைக் கோபுரமான இதன் இருபுறமும் வாயிற் காப்போர் சிற்பங்கள் உள்ளன. நடுக்காலச் சோழர்களின் கலைமுறையில் அமைந்துள்ள இவையிரண்டும் இடுப்புக்குக் கீழே பக்க வாட்டில் திரும்பிய நிலையிலும், இடுப்புக்கு மேல் நேரே நோக்கிய நிலையிலும் அமைந்துள்ளன. வலப்புறக் காவலரின் வலக்கால், மழுவின் கத்திப் பகுதியின் மேலும் இடக்கால், இடப்புறம் திரும்பிய நிலையிலும் உள்ளன. இடக்கை மழுவின் மேலிருக்க, வலக்கை அரைக்கொடி முத்திரையில் அமைந்துள்ளது. இடப்புறக்காவலரின் வலக்கை மழுவின் மேலுள்ளது. இடக்கை வியப்பு முத்திரையில் உள்ளது. இவர் இடக்கால் மழுவின் கத்திப்பகுதியின் மீதிருக்க, வலக்கால், வலப்புறம் திரும்பிய நிலையில் உள்ளது. இரண்டு வடிவங்களுமே சடா மகுடத்துடனும், ஆந்தைக் குண்டலங்

களுடனும் உள்ளன. மார்பிலுள்ள முப்புரி நூல் பூக்களால் தொடுத்தாற் போல் அலங்காரமாய் உள்ளது.

இரண்டாம் கோபுர வாசலின் தாங்குதளத்திலும், பக்கச் சுவர்களிலும், வாசல் சுவர்களிலுமாய்ப் பல கல்வெட்டுகள் உள்ளன. இவை முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன் முதலிய சோழ மன்னர்களுடையவை. இக் கோபுர வாயிலின் மேல்நிலையில் பல சுதையுருவங்கள் காணப்படுகின்றன. இவற்றில் முதல் தொகுப்பின் பின்புறம் பெருமாள் காணப்படுகிறார். அவருக்கு முன்னால், அரையில் குறுக்காக மடித்துக் கட்டிய ஆடையுடன் தோட்டக்காரர் தோற்றத்தில் இருவர் நிற்கின்றனர். ஒருவர் கையில் மண்வெட்டியும், இன்னொருவர் கையில் இரண்டு சுருக்குப் பைகளும் உள்ளன. இன்னொருவர் தேர்ந்த உடைகளை உடுத்திய வளமான ஆடவராய்க் காட்சியளிக்கிறார். கோயில் சிவாச்சாரியாரிடம் இந்த வடிவங்களைப் பற்றிய விளக்கத்தைக் கேட்டபோது, சுந்தரர் பொன் பெற்றது பற்றி மீண்டுமொரு புதுக்கதை கிடைத்தது. தோட்டக்காரர்களாய் உள்ளவர்கள் சிவபெருமானும் பூத கணமும். எதிரில் இருப்பவர் சுந்தரர். சுந்தரர் வழக்கம் போல் கோயிலில் பொன் கேட்க, இறைவன் தோட்டக் காரராய் வடிவெடுத்து இக் கோயிலில் உழவாரப் பணி செய்ய, அங்குத் திருச்சுற்று வந்த சுந்தரரிடத்து, தோட்டக்காரராய் இருந்த சிவபெருமான், மண் பைகளைத் தர, அவை பொற் பைகளாக மாற, அப் பொன்னின் மாற்று உரைக்கப்பட, அதற்குப் பெருமாள் சான்றாக நின்றாராம்.[27] பெரிய புராணம் தான் எப்படியெல்லாம் சிதைக்கப்படுகிறது! இந்தச் சிதைவுகளுக்குச் சுதை விளக்கங்கள் வேறு.

இரண்டாம் தொகுப்பு நல்ல வேளையாக முயலகன் நோயைச் சம்பந்தர் தீர்த்தருளிய கதையை எடுத்துக் காட்டி அமைகிறது. இதில் குழப்பங்கள் இல்லை. இந்தக் கோபுர வாசலுக்குள்ளிருக்கும் வலப்புறச் சுவரில் நந்திதேவர் என்ற பெயரில் சந்திரசேகரப் பெருமானின் திருவடிவமும் உமையன்னையின் திருவடிவமும் காணப்படுகின்றன. சிவாச்சாரி

யாரிடம் கேட்டபோது 'நந்திதேவர்தாம் செய்யச் சொன்னோம். செய்தவர் இப்படி சந்திரசேகரராக்கி 'விட்டார்,' என்று வருந்தினார். செய்தவர்தான் தவறாகச் செய்தார், இவர்கள் குறைந்தபட்சம் பெயரையாவது மாற்றி எழுதி வைக்கலாம் அல்லவா? விபரமறியாது வரும் பொது மக்களுக்கு இதனால் எத்தனை குழப்பம் தவறான செய்திகளைத் தருகிறோம் என்ற உணர்வே அற்ற நிலையில் இது போன்ற செய்கைகள் பரவலாக நடப்பது வேதனையைத் தருகிறது.

இரண்டாம் கோபுர வாயிலுள் நுழைந்ததும் மையக் கோயில் நம் கண்களில் படமாகின்றது. மையக் கோயிலைச் சுற்றியுள்ள உள்திருச்சுற்று மதிலையொட்டி, திருச்சுற்று மாளிகை முத்திசைகளிலும், முழு வடிவினதாய் ஒரு தள அமைப்புடன் காணப்படுகிறது. இதன் தென்புறத்து அடித் தளத்தில் குலோத்துங்கனின் மிக நீண்ட கல்வெட்டு செதுக் கப்பட்டுள்ளது. இங்குதான் அறுபத்து மூன்று நாயன்மார் களின் திருமேனிகளும், எழுவர் அன்னையர் திருமேனிகளும் உள்ளன. இவற்றுள் எழுவர் அன்னையர் திருமேனிகள் நடுக்காலச் சோழர்களின் கலைப்படைப்புகள் எனலாம். இச் சிற்பங்கள் போதிய கவனமின்மையின் காரணமாய் மிகவும் பொரிந்து போய், எண்ணெய்ப் பிசுக்குப் பிடித்து, காணச் சகியாக் கோலத்தில் கவினிழந்து கிடக்கின்றன.

எழுவர் அன்னையரை அடுத்து வீரக்கல் ஒன்று காணப் படுகிறது. ஆண் வடிவம் ஒன்று குத்துக்காலிட்டு அமர்ந்து, இடக்கையால் தலைமுடியைப் பிடித்துக்கொண்டு, வலக்கை யால் கழுத்தை அறுப்பது போல் அமைந்துள்ளது. இச் சிற்பம் 'மாமுண்டி' என்ற பெயருடன் உள்ளது. கொற்றவையிடம் எதையேனும் வேண்டிக்கொண்டு, அது நிறைவேறினால், தன் கழுத்தைத் தானே அறுத்துக் கொள்வதாய்ச் சூளுரைத்து, வேண்டல் நிறைவேறியதும், சூளுரைத்தாற் போலவே, கழுத்தை அறுத்துத் தன்னையே பலியாக்கிக் கொள்ளும் பழக்கம் நவகண்டம் கொடுப்பது என்று கூறப்படுகிறது.[25]

இது போன்ற நவகண்டச் சிற்பங்கள் ஏழு டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றுப் பேரவையால் திருச்சிக்கு அண்மையிலுள்ள அழுந்தியூரில் இருந்தும்,[29] திருவானைக்காவிலிருந்தும், உய்யக்கொண்டான் திருமலையில் இருந்தும்,[30] குளித்தலையிலிருந்தும்[31] கண்டுபிடிக்கப்பட்டன, இவற்றுள் அகழ்ந்தெடுக்கப்பட்டவை திருச்சி அருங்காட்சியகத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

உள்திருச்சுற்றின் தென்மேற்கு மூலையில் கோடி வினாயகர் குடிகொண்டிருக்கிறார். அவரையடுத்து அமைந்துள்ள சோமாஸ்கந்தருக்கான உட்கோயிலில் இறைத் திருமேனி இல்லை. இது பாதுகாப்புக்கருதி மையக் கோயிலுக்குள் வைக்கப்பட்டுள்ளது. மேற்குச் சுற்றின் மையத்தில் ஆறுமுகர் திருமுன்னும், அதையடுத்த வடமேற்கு மூலையில், யானைத் திருமகள் திருமுன்னும் அமைந்துள்ளன. இவையிரண்டிற்கும் இடைப்பட்ட பகுதியில், திருச்சுற்று மாளிகையில் பல உதிரிச்சிற்பங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றுள் பாலசுப்பிரமணியர், மாற்றறி வரதர், கொற்றவை முதலிய சிற்பங்கள் அளவில் பெரியவையாயினும் காலத்தால் மிகவும் பிற்பட்டவை. இவற்றுள் பாலசுப்பிரமணியர் சிற்பம், கவனிப்பின்மையால் மிகவும் பழுதுபட்டு, முகம் முழுவதும் பொரிந்துபோய், பரிதாபக் கோலத்தில், பார்வையாளர் கண்களைக் கசிந்துருக வைக்கும் நிலையில் துவண்டுபோய் நிற்கிறது. இதன் அருகில் வல முன் கை காக்கும் குறிப்பு காட்ட, இட முன் கை கட்யவலம்பிதத்தில் அமைய, பின்னிரு கைகளில் சக்கரமும் சங்கும் கொண்டு நிற்கும் திருமாலின் வடிவத்தைத்தான் மாற்றறி வரதரென்று குறிப்பிடுகிறார்கள்.

திருச்சுற்று மாளிகையின் வடபுறத்தே சந்திரசேகரருக்கென்று ஒரு தனியிடம் ஒதுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புக் கருதி இங்கிருக்கவேண்டிய திருமேனியைக் கோயிலார் உள்ளே வைத்துள்ளனர்.

மையக் கோயில், முகமண்டபம், இடைக்கட்டுடன் கூடிய மகாமண்டபம், உள் மண்டபம், கருவறை என நான்கு பிரிவு

களாய் அமைந்துள்ளது. முக மண்டபத்தின் கிழக்கிலும் தெற்கிலும் படிக்கட்டுகளுடன் கூடிய வாயில்கள் உள்ளன. உள்மண்டபம், கருவறை இவற்றின் புறச்சுவர்களில் தேவ கோட்டங்கள் உள்ளன. உள்மண்டபத்தின் தென்புறக் கோட்டத்தில் பிள்ளையாரும், வடபுறக்கோட்டத்தில் கொற்றவையும் உள்ளனர். கருவறைக் கோட்டங்களில் தென் புறம் ஆலமர் அண்ணலும், மேற்கில் அம்மையப்பரும், வடபுறம் நான்முகனும் காணப்படுகின்றனர். இத் திருமேனி களுள் அம்மையப்பர் திருமேனி முற்காலச் சோழர்களின் அற்புதக் கலைவடிவாய்க் காட்சியளிக்கிறது. இறைவன் ஏற்றிருக்கும் வடிவின்வலப்புறத்தில் அரையாடையும், இறைவி யாய்க் காட்டப்பட்டிருக்கும் இடப்புறத்தில் கணுக்கால் வரை யிலான பட்டாடையும் கொண்டிலங்கும் இத்திருமேனியின் இடக்கை மலர் கொண்டிருக்க, வலக் கைகளில் பின்கை மழுவேந்த, முன் கை காளையின் தலைமீது பொருந்தியுள்ளது. பின்னால்காளை நிற்கிறது. காளையின் முகம் நம்மை நோக்கிய நிலையில் காட்டப்பட்டுள்ளது. இத்திருமேனியின் முகப் பொலிவு சிறப்ப அற்புதமாகும்.

உள் திருச்சுற்றின் வடபுறத்தே, மையக் கோயிலின் அருகே, சண்டேசுவரருக்கான சிறிய திருமுன் ஒன்று உள்ளது. மையக் கோயிலின் மகாமண்டபப் புறச்சுவர்களிலும், கருவறையின் அடித்தளத்திலும் கல்வெட்டுகள் உள்ளன. துணைத்தளம் முதல் கொடுங்கை வரை கருங்கல்லால் ஆன இதன் விமானத்தின் மேல்தளம் செங்கல்லால் கட்டப் பட்டுள்ளது. வட்டமான சிகரத்தையுடைய இத்தளத்தின் வடபுறம் உள்ள விமான தேவதைகள் நம் கருத்தைக் கவர் கின்றன. கீழ்நிலையின் வலப்புற மூலையில் சதாசிவ மூர்த்தியும், இடப்புறம் யானையை அழித்த பெருமானும் சுதையுருவங்களாய்க் காட்சி தருகின்றனர். சதாசிவத் திருமேனி கோயில்களில் வெகு அருமையாகவே காணப்படு கிறது. இங்கு விமான தேவதையாய் வலப்புறம் இரண்டும், இடப்புறம் இரண்டும், நடுவில்ஒன்றுமாய் ஐந்து முகங்களுட னும், பத்துத் திருக்கைகளுடனும் மகிழ்விருப்புக் கோலத்தில்

இத் திருமேனி அமைந்திருப்பது சிறப்பான செய்தியாகும். வலக்கைகளில் கீழிருந்து மேலாக, சக்தி, கத்தி, மழு, முத்தலை ஈட்டி முதலியன காணப்படுகின்றன. இடக் கைகளில் கீழிருந்து மேலாக தீச்சுடர், மணி, மலர் மொட்டு, பாசம் ஆகியன இருக்க, வலமுன்கை காக்கும் குறிப்புடனும், இடமுன்கை அருட்குறிப்புடனும் அமைக்கப்பட்டுள்ளன. சதாசிவத் திருமேனியைப் பற்றிப் பல ஆய்வுகள் தமிழகத்தில் நடந்துள்ளன. தஞ்சையைச் சுற்றியுள்ள சில கோயில்களில் குறிப்பாகக் கண்டியூர் வீரட்டானேசுவரர் திருக்கோயில், செந்தலை சுந்தரேசுவரர் திருக்கோயில், தஞ்சை கலைக் கூடம் போன்றவற்றில் உள்ள நான்கு முகத் திருமேனிகளைச் சதாசிவ வடிவாய்ச் சில ஆய்வாளர்கள் கொண்டு கட்டுரைகள் எழுதியுள்ளனர்.[32] இத் திருமேனிகளையொட்டி இன்னும் விரிவான ஆய்வுகள் நடப்பின் பல சமய உண்மைகளும் தத்துவங்களும் புலப்பட ஏதுவாகும்.

மையக் கோயிலுக்குள், முக மண்டபத்தின் கிழக்கு வாயில் வழியே நுழையும் நம்மைத் தென்புறத்திலிருக்கும் பிள்ளையார் வடிவம் வரவேற்கிறது. இம் மண்டபத்தின் வடகிழக்கு மூலையில், தென்புறம் பார்த்த நிலையில் வைரவர் திருமேனி உள்ளது. இத் திருமேனியின் வலப்பின்கையில் உடுக்கையும் இடப்பின்கையில் பாசமும் உள்ளன. முன் கைகளில் வலப்புறம் முத்தலை ஈட்டியும், இடப்புறம் தலையோடும் விளங்க, இடமுன்கையிலிருந்து பாம்பொன்று படமெடுத்த நிலையில் தலைவிரிக்க, இடுப்பில் பாம்பணியும், தோளில் மண்டையோட்டு மாலையும், நெற்றியில் மூன்றாவது கண்ணும் கொண்டு, நாய் ஊர்தியுடன் காட்சியளிக்கிறார் வைரவர்.

தென்கிழக்கு மூலையில் மூன்று திருமேனிகள் மேற்குப் பார்த்த நிலையில் நிறுவப்பட்டுள்ளன. இவற்றுள் முதலில் இருப்பது கதிரவன். ஆகமப்படி அழகாய் அமைந்துள்ள சிற்பம் இது. மூன்றாவதாக அமைந்துள்ள சிற்பத்தைச் சந்திரன் என்று எழுதியிருக்கிறார்கள். இது சந்திரனே அன்று. ஆகமப்படி சந்திரனின் திருமேனி மார்பளவு உயர்த்

திய தன்னிரு கைகளிலும் மலர் மொட்டுகளை ஏந்தியிருக்க வேண்டும்.[33] இங்கிருக்கும் திருமேனியோ கதையொன்றைத் தளத்தில் நிறுத்தி அதன் மீது இடக்கையை ஊன்றியுள்ளது. வலக்கையை அச்சுறுத்தும் (தர்ஜனி) முத்திரையில் வைத்துள் ளது. இதே போன்ற இரண்டு சிற்பங்களை இக்கோயில் வளாகத்திற்கு எதிரிலுள்ள அடைக்கலத்தான் கோயிலில் இன்றும் காணலாம். இவை ஊர்த் தெய்வங்களாகத் தேரடிக் கருப்பு, மதுரை வீரன் என்ற பெயர்களில் வழிபடப்படு கின்றன. எனவே முக மண்டபத்தில் சந்திரன் என்ற பெயருடன் காணப்படும் சிற்பமும் ஊர்த் தெய்வங்களுள் ஒன்றாகலாம். இதைத் தவறுதலாக இங்கு நிறுவி, சந்திரன் என்னும் பெயர் சூட்டி வைத்திருப்பது துன்பம் தருகிறது. கோயிலைச் சார்ந்தவர்கள், குறிப்பாக சிவாச்சாரியார்கள் கூட, இது போன்ற பிழைகளை நீக்க முயலாதிருப்பது வியப் பையே தருகிறது. சில கோயில்களில், இப்பிழைகளைச் சுட்டிக் காட்டும்போது, உடனே திருத்தியமைத்துவிடு கிறார்கள். சில கோயில்களில்கண்டுகொள்வதே இல்லை.

இம் மண்டபத்தின் வடபுறத்தில் நாகர சிகரத்துடன் கூடிய ஆடவல்லான் திருமுன் அமைந்துள்ளது. மற்றக் கோயில்களில் காணமுடியாத புதுமையான திருக்கோலம். வழக்கமான ஆனந்தத் தாண்டவத் திருமேனிகளில் இறைவ னின் ஊன்றிய வலக்காலின் கீழே முயலகன் என்னும் குறளரக் கனைக் காணலாம். இங்கோ இறைவனின் திருவடியின் கீழ் பாம்பொன்று காணப்படுகிறது. கோயிலார் இச் செப்புத் திருமேனியை, 'அரவத்தின் மீதாடும் அண்ணல்' என்று அன்பொழுக அழைக்கிறார்கள். வழக்கமாக முயலகனின் மீது காலூன்றி ஆடும் இறைவன், இங்குப் பாம்பின் மீது ஆடுகிறார். கண்ணனின் காளிங்கநர்த்தனம் போல் இங்கே முக்கண்ணனின் ஆடல் அமைந்துள்ளது. இது படம் விரித்த பாம்பன்று ; படுத்திருக்கும் பாம்பு. பாம்பைத் தன் வலக் காலின் கீழ் அழுத்தி, அதன் தலைமீது தன் பாதத்தைப் பொருத்தி ஆடுவதாகப் படிமம் வடிக்கப்பட்டுள்ளது. இறைவனின் கால் அழுத்துவதால், பாம்பின் தலைப்பகுதியும்

உடலின் முற்பகுதியும் தட்டையாகிப் பக்கங்களில் விரிவதை, வார்ப்பறிஞர் மிக அற்புதமாகக் காட்டியிருக்கிறார். அழுத்தம் தாளாமல், இலேசாகத் திறந்த வாயும், பிதுங்கிய விழிகளுமாய்ப் பாம்பின் முகமும், இறைவனின் திருவடியின் கீழ் சிக்கியதால் தன் உடலின் பிற்பகுதியை, அவரின் ஊன்றிய காலின் பின்புறத்தே ஒட்டியபடி வளைத்துக்கொண்டுள்ள நிலையில் பாம்பின் உடலும் இயற்கையான நிலையில் வடிக்கப்பட்டுள்ளன.

இறைவன் முயலகன் மீதும், தாமரைத் தளத்தின் மீதும் ஆடுவதாக ஆகமங்கள் பேசுகின்றன.[34] இதற்குப் புராணச் சான்றுகளும் நிறையவே உள்ளன. ஆனால் பாம்பின் மீது ஆடுவதாய்த் தேடிய வரையில் எங்கும், எந்தச் சான்றும் கிடைக்கவில்லை. ஒருவேளை தாருகாவனத்து முனிவர்களால் தன்மீது ஏவப்பட்ட பாம்பைக் கையணியாய்க் கொள்வதற்கு முன், முயலகனை மிதித்து நசுக்கி, அவன் மீது ஆடினாற் போல, பாம்பின் மீதும் தம் திருவடி பதித்து ஆடினாரோ? சகளாதிகாரத்தில் கூட[35] இறைவன் ஆலமரத் தடியில் ஆடத் தொடங்குவதாகவும், அப்படித் தொடங்கும் நேரத்தில் பாம்பரசனான கார்க்கோடகன், இறைவன் திருவடியைத் தீண்ட வருவதாகவும், அது கண்ட இறைவன் காலைத் தூக்கி ஆடுவதாகவும் காணப்படுகிறதே தவிர, அரவத்தின் மீதாடியதாகக் குறிப்பு இல்லை. முயலகனையே இறைவன் திருவடியில் வார்ப்பறிஞர்கள் அமைத்து வந்த முறையை மாற்றி, திருவாசிப் படிமத்தைச் செதுக்கிய கலைஞர், அம் முயலகனின் கையில் காட்டப்பெறும் பாம்பையே முயலகனாய்க் கொண்டு, பரமன் பாம்பின் மீது ஆடுவதாகக் கற்பனைச் செறிவும், புதுமைப் போக்கும் கலந்ததொரு குறியீடாய்ப் படைத்தார் போலும்.

இடையில் ஆடை, ஆடலுக்கு இடையூறாக இல்லா வண்ணம் இரு மேற்கால் பகுதிகளிலும் முடிச்சிட்டுக் காட்டப்பட்டுள்ளது. வலப்புறமும், இடப்புறமும் இம் முடிச்சுகளின் தொங்கல், ஆடலுக்கேற்ப அசைந்த நிலையில் அழகாய் வடிக்கப்பட்டுள்ளது. மார்பில் முப்புரி நூலும், மார்புக்

கட்டும் காணப்படுகின்றன. கழுத்தில் கண்டிகை, சரப்பளி இவற்றுடன் வேறு சில கழுத்தணிகளும் வடிக்கப்பட்டுள்ளன. வளை கொண்டு விளங்கும் இடமுன்கை, வேழ முத்திரையில் வார்க்கப்பட்டுள்ளது. காக்கும் கையாய்க் காட்டப்பட்டிருக்கும் வல முன் கையில் வளையை அடுத்துப் பாம்பொன்று வளையலாய் அமைந்திருக்கும் அழகைப் பார்க்கலாம். படமெடுத்த நிலையில், பார்வை இறைவனை நோக்கியபடி, அப் பாம்பு வடிக்கப்பட்டிருக்கும் நேர்த்தி நெஞ்சைத் தொடுகிறது. மேற்கைவளை, கீழ்க்கை வளை இவற்றுடன் காட்சி தரும் பின்னிரு கைகளில், வலக்கை துடியையும் இடக்கை தீச்சுடரையும் ஏந்தியுள்ளன,

அழகுத் திருக்கோலமாய் விளங்கும் இறைவனின் முகம் இலேசாய்ச் சிரித்த இளமுறுவல் நிலையில், இன்ப நெட்டுயிர்ப்பாய் விளங்குகிறது. வலச் செவி நீள்செவியாகவும், இடச் செவி பனையோலைக் குண்டலத்துடனும் காட்டப்பட்டுள்ளன. பொதுவாக ஆனந்தத் தாண்டவப் படிமங்களை விரி சடை அழகராய்த்தான் காணமுடியும். ஆனால் இங்கோ அதிலும் புதுமை! 'துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச் சுடர்ச்சடை சுற்றி முடித்து,' என்று சம்பந்தர் இக் கோயிலைப் பற்றிப் பாடிய தேவாரத் திருவரிக்கேற்றாற் போல, இறைவன் சடைகளைச்சுற்றி முடித்தவராய்ச், சடா மகுடத்துடன்காட்சியளிக்கிறார். மகுடத்தின் முன்புறம் தலையோடு காட்டப்பட்டுள்ளது.

இறைவன் ஆடும் தளத்தைச் சுற்றி எழுந்துள்ள திருவாசியில் இருபத்தேழு தீச்சுடர்கள் உள்ளன. இறைவனின் இடப்புறம் தேவியின் திருவுருவம் தாமரைத் தளத்தில் நின்ற திருக்கோலத்தில் காணப்படுகிறது, பட்டாடையும் கரண்ட மகுடமும் கொண்டு விளங்கும் தேவியின் வலமுன்கை மலர் மொட்டு ஏந்த வாய்ப்பாகக் கடக முத்திரையிலும், இடக்கை தொங்கும் கையாகவும் வார்க்கப்பட்டுள்ளன, முவ்வளைவுக் கோலத்தில் முக்கண்ணனார் ஆட்டத்தைக் கண்டு களிப்பவராய் உமையன்னை உருவாக்கப்பட்டுள்ளார்.

இறைவனின் ஆடற் கோலங்களின் அருகே இறைவியும் காட்டப்பெறுதல் ஆகம மரபாகும். அம் மரபையும், புதுமையையும் கலந்து, கற்பனை வீச்சில் ஒரு கலைஞன் வடித்தளித்த அழகுக் கோலங்களைக் கண்டு மகிழவும், வணங்கி நெகிழவும் தேவாரம் புகழும் திருவாசிக்கு வாருங்கள்.

முக மண்டபத்திலிருந்து மகா மண்டபத்துக்குள் நுழையும் வாயிலின் இருபுற நிலைகளிலும் முதற் பராந்தகனின் இரண்டு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. வலப்புற நிலையில் உள்ள கல்வெட்டு பன்னிரண்டாம் ஆட்சியாண்டிலும், இடப்புறமுள்ள கல்வெட்டு பதினைந்தாம் ஆட்சியாண்டிலும் வெட்டப்பட்டுள்ளன.[36] இக் கல்வெட்டுகளில் இக் கோயிலின் உள்மண்டபம், பராந்தகன் மண்டபம் என்றும், அதன் வாயிற்படி, கிழி கொடுத்தருளிய திருவாசல் என்றும் சொல்லப்பட்டிருப்பதாகத் தலவரலாறு குறிப்பிடுகிறது.[37] ஆனால் பராந்தகனின் இந்த இரண்டு கல்வெட்டுகளில் மட்டுமல்லாமல், இக்கோயிலில் இருந்து படியெடுக்கப்பட்ட அம்மன்னனின் இன்னொரு கல்வெட்டையும்[38] சேர்த்து, மூன்று கல்வெட்டுகளிலும், எந்த ஓர் இடத்திலும் இப்படிப்பட்ட பெயர்களைக் காணவில்லை. கிழி கொடுத்த வாசல் என்ற சொற்றொடர் மடைப்பள்ளியின் வடக்குப் பார்த்த சுவரில் காணப்படும் மூன்றாம் இராசராசனின் இருபத்தெட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் காணப்படுகிறது: இவ் வாசலில் சிறுகாலைச் சந்தியில் பதினான்கு திருவிளக்குகளும், இரவுச் சந்தியில் பதினெட்டு திருவிளக்குகளும் எரிப்பதற்காக நிலக்கொடையொன்றை இக் கோயிலைச் சேர்ந்த சண்டேசுவர தேவகன்மிகள் திருநாமத்துக் காணியாகக் கொடுத்ததை இக் கல்வெட்டு எடுத்துரைக்கிறது.[39] மூன்றாம் இராசராசனின் கல்வெட்டில் காணப்படும் கிழிகொடுத்த வாசல் என்ற சொற்றொடரை, முதலாம் பராந்தகனின் கல்வெட்டில் கொண்டுவந்து நிறுத்தியிருக்கும் தலவரலாற்றின் செயல் வரலாற்றுக் குழப்பத்திற்கு வித்திடுவதாய் உள்ளது.

மகாமண்டபத்தின் வடபுறத்தே உள்ள கம்பியுடைப்புக்குள் இக் கோயிலுக்குரிய செப்புத் திருமேனிகள் காணப்படுகின்றன. இவற்றுள் சோமாஸ்கந்தர் திருமேனியும், சந்திரசேகரர் திருமேனியும் வனப்புடையவை.

மகாமண்டபம் இடை நடையாய்ச் சுருங்கி உள் மண்டபத்துக்கு வழி தருகிறது. உள்மண்டபத்தில் இறைவியின் செப்புத் திருமேனி இன்ப சக்தியாய் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறது. கருவறையில் இறைவன் இலிங்கத் திருமேனியராய், மாற்றுரை வரதீசுவரர் என்ற திருப்பெயருடன் அருளாட்சி செய்கிறார்.

இக் கோயிலில் இருந்து பதினாறு கல்வெட்டுகளை மைய அரசின் கல்வெட்டுத்துறையினர் படியெடுத்துள்ளனர். இவற்றுள் ஒன்று 1891 ஆம் ஆண்டிலும்[40] ஐந்து 1972-73 ஆம் ஆண்டிலும்,[41] பத்து 1973-74 ஆம் ஆண்டிலும்[42] பதிப்பிக்கப்பட்டுள்ளன. இக் கோயிலைப் புனித சிலுவைக் கல்லூரி வரலாற்றுத் துறை மாணவியர் சிலரின் ஆய்வேட்டிற்காக நுணுகி ஆராய்ந்த போது இந்தப் பதினாறு கல்வெட்டுகள் தவிர, படியெடுக்கப்படாத ஒன்பது புதிய கல்வெட்டுகளையும் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றுப் பேரவை கண்டுபிடித்தது. இவற்றுள் ஏழு கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன. இரண்டு கல்வெட்டுகள் எளிதில் படியெடுக்க முடியாத நிலையில் இருந்தமையால் பார்வைப் படிப்பு செய்யப்பட்டு, முடிந்தவரையில் செய்தி பெறப்பட்டது.

**திருவாசி கோயில் கல்வெட்டுகளின் பட்டியல் :**

| அரசர்கள் | கல்வெட்டறிக்கையில் பதிப்பிக்கப்பட்டவை | புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டவை |
|---|---|---|
| முதலாம் பராந்தகன் | 3 | — |
| முதலாம் இராசராசன் | 2 | 2 |
| முதலாம் இராசேந்திரன் | — | 1 |

| அரசர்கள் | கல்வெட்டறிக் கையில் பதிப்பிக் கப்பட்டவை | புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டவை |
| --- | --- | --- |
| முதலாம் இராசாதிராசன் | 1 | — |
| முதலாம் குலோத்துங்கன் | 1 | 3 |
| மூன்றாம் குலோத்துங்கன் | — | 1 |
| மூன்றாம் இராசராசன் | 2 | 1 |
| மாறவர்மன் சுந்தர பாண்டியன் | 2 | — |
| சடையவர்மன் சுந்தர பாண்டியன் | 1 | — |
| வீர சோமேசுவரன் | 1 | — |
| கிருஷ்ண தேவராயர் | 1 | — |
| துண்டுக் கல்வெட்டுகள் | 2 | — |
| மன்னன் பெயர் தெரியாத பொரிந்து போன கல்வெட்டு | — | 1 |

இந்த இருபத்தைந்து கல்வெட்டுகளின் திரண்ட செய்திப் பிழிவுகள் சோழர் காலத்துச் சமுதாயத்தை நம் கண்முன் நிறுத்துகின்றன.

### அரசியல் செய்திகள்

முதற் பராந்தகனின் கல்வெட்டுகளில் பாச்சில், திருப் பாச்சில் ஆச்சிராமம்[43] என்று அறிமுகமாகும் இவ்வூர், முதலாம் இராசராசனின் ஐந்தாம் ஆட்சியாண்டு வரை அதே பெயரால் அறியப்பட்டு வந்தது.[44] முதலாம் இராசராசனின் பதினோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் இவ்வூர் உள்ள வளநாடு ராஜாஸ்ரய வளநாடு என்று அறிமுகப்படுத்தப் படுகிறது. இம்மன்னனின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில், மழநாடாகிய ராஜாஸ்ரய வளநாட்டுப் பாச்சில் கூற்றத்து மீபிலாற்றுப் பாச்சில் என்றும், முதலாம் குலோத்

துங்களின் இருபத்தேழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் தியாகவல்லி வளநாட்டுப் பாச்சில் கூற்றத்துப் பாச்சில் என்றும் இவ்வூர் அடையாளம் காட்டப்படுகிறது. தியாக வல்லி வளநாடு என்பதைக் கல்வெட்ட றிக்கை தவறாகத் தியாக விநோத வள நாடு என்று குறிப்பிட்டுள்ளது.[45] முதற்குலோத்துங்கனின் ஆட்சியாண்டு தெரியாத கல்வெட்டு இப் பகுதியைத் தீன சிந்தாமணி வளநாட்டுப் பாச்சில் கூற்றத்துப் பாச்சில் என்று குறிப்பிடுகிறது. குலோத்துங்கன் காலத்திலேயே இவ் வளநாடு இரு முறை பெயர் மாற்றம் அடைந்திருப்பதை அறிய வியப்பாக இருக்கிறது. இந்தப் பெயர் மாற்றம் எப்போது ஏற்பட்டது என்பதை அறியக் கூடவில்லை. அன்பில் சுந்தரராசப் பெருமாள் கோயிலில் உள்ள முதற் குலோத்துங்கனின் மெய்க் கீர்த்தியோடு கூடிய ஆட்சியாண்டு தெரியாத கல்வெட்டொன்றும் தீன சிந்தாமணி வளநாட்டுப் பகுதியாகவே அன்பிலை அறிமுகப்படுத்து கிறது.[46] இப் பகுதி தீன சிந்தாமணி வளநாடாக இருந்து, தியாகவல்லி வளநாடாய் மாறியதா அல்லது தியாக வல்லி வளநாடாக இருந்து, தீன சிந்தாமணி வளநாடாய் மாறியதா என்பதை இக் கோயில் கல்வெட்டுகள் கொண்டு அறியக்கூட வில்லை. மூன்றாம் இராசராசனின் கல்வெட்டும், முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டும் இவ்வூர் அமைந்திருக்கும் வளநாட்டை வடகரை ராஜராஜ வளநாடு என்று தெரிவிக்கின்றன. ஊரின் பெயரும், கூற்றத்தின் பெயரும் மாறா நிலையில், வளநாட்டின் பெயர்மட்டும் காலப்போக்கில் மாறி வந்துள்ளது.

முதலாம் இராசராசனின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால் மழநாடாகிய ராஜாஸ்ரய வளநாட்டுப் பாச்சில் கூற்றத்து மீபிலாற்றுப் பிரமதேயத்தில் துடையூர் என்று ஓர் ஊர் இருந்ததையும், அவ்வூர், சபையோர் எனப் பட்ட ஆட்சிக்குழுவால் ஆளப்பட்டு வந்ததையும் அறிகிறோம். இதே கல்வெட்டு ராஜாஸ்ரய வளநாட்டு களார்க் கூற்றத்துப் பிரமதேயமான அன்பிலையும் வெளிக் கொணர்கிறது. கல்வெட்டறிக்கை இக் கல்வெட்டின் ஆட்சி

யாண்டைப் பத்தொன்பது என்று தவறாகக் குறிப்பிட்டுள்ளது.[47] துடையூரும், அன்பிலும் இன்றளவும் அதே பெயர்களால் வழங்கி வருவது இங்கு எண்ணத் தக்கது.

இராசராசனின் பதினோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு 'திருவாச்சிராமத்து ஊரார்' என்னும் வரியால் திருவாசியில் ஊரவை இருந்த செய்தி புலப்படுகிறது.[48] இம் மன்னனின் இருபத்தோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு தென்னூரை அறிமுகப்படுத்துகிறது.[49] வயலூர்க் கல்வெட்டொன்று தென்னூர் பற்றிக் குறிப்பிடுவதும்[50], இத் தென்னூர் இன்றளவும் அதே பெயரில் திருச்சியில் தில்லை நகருக்கு அருகில் மக்கள் குடியிருப்புப் பகுதியாக நிலவி வருவதும் எண்ணி வியக்கத்தக்கது.

முதலாம் குலோத்துங்கனின் கல்வெட்டுகள் பல ஊர்களின் பெயர்களை அறிமுகப்படுத்துகின்றன. அவற்றுள் நாமக்கல்லுக்கு அருகில் இருக்கும் தற்போதைய தொட்டியமும் ஒன்று. தியாகவல்லி வளநாட்டு மீபிலாற்று நகரம் தொட்டியமான ராசகேசரிபுரம் என்று இவ்வூர், இம் மன்னனின் இருபத்தேழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால் நமக்கு அறிமுகமாகிறது. திருத்தவத்துறை (இப்போதைய லால்குடி), உலக்கிக்குண்டி, வடகரை ராசராச வளநாட்டில் இருந்த ஊற்றத்தூர் மேல்வழிப்பட்ட திருப்பிடவூர் நாடு, களவழி நாடு, பாலையூர், பாம்படங்க நல்லூர், பொன்னாறு லால நல்லூர், ஆன்மூர்க் கூற்றத்து ஆன்மூர் நாடு, கிழார் மங்கலம் முதலிய ஊர்கள், முதலாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன், முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன், முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டுகளாலும், பொய்கை நாட்டுக் கடல்வாயில்; இடையாற்றுப் பிராந்தகபுரம் முதலிய ஊர்கள் முதற் பராந்தகன் கல்வெட்டுகளாலும் தெரிய வருகின்றன.

மும்முடிச் சோழன் கல்வெட்டால் தஞ்சாவூர்க் கூற்றமும், அதைச் சார்ந்த குறுகாடி என்னும் ஊரும் தெரிய வருகின்றன,[51] கோமாறவர்மன் சுந்தரபாண்டியனின்

இரண்டு கல்வெட்டுகளால் திருவரங்கம், பாண்டிகுலபதி வள நாட்டு, விளாநாட்டின் ஓரங்கமாய் இருந்த செய்தி கிடைக் கிறது.

முதலாம் இராசராசனுக்குப் பிறகு சோழப் பெருநாடு பல்வேறு வள நாடுகளாகவும், நாடுகளாகவும், கூற்றங்களாக வும், ஊர்களாகவும் பிரிக்கப்பட்டு அரசியலமைப்பும் ஆட்சி யமைப்பும் எளிமையாக்கப்பட்டமைக்கும், அவ்வூர்கள் ஊரவை, சபை போன்ற, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களால் நல்லாட்சி செய்யப்பட்டமைக்கும், இவ்வூர்க் கல்வெட்டுகளும் சான்றாகின்றன.

இக்கோயில் கல்வெட்டுகளால் பல அரசு அலுவலர்களின் பெயர்களும் கிடைக்கின்றன. முதலாம் இராசராசனின் பெருந்தரத்து அலுவலர் பாரதாயன் காடன் ஆதித்தனான செம்பியன் பிரம்ம மாராயர்,[52] ஆன்மூர் நாட்டுப் பெருந் திணை நக்கன் விழுப்பேரரையன்,[53] நாடு வகை செய்யும் அலுவலர்களான ஆவணமுடையான் மார்த்தாண்டான் உத்தமன்,[54] உலகளந்த சோழ விழுப்பரையர்[55] ஆகியோர் அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். எச்சோறு, சூலவரி, நிலவரி, சோடுவரி என்ற வரியினங்கள் பற்றி முதலாம் இராசராசனின் கல்வெட்டும், கிருஷ்ணதேவராயரின் கல் வெட்டும் கோடி காட்டுகின்றன.[56]

## சமுதாயச் செய்திகள்

இக் கோயில் கல்வெட்டுகளால் பல மக்கட் பெயர்கள் கிடைக்கின்றன. இடையாற்று நாட்டுப் பிராந்தகபுரத்துக் கிழவன் பிடாரன், நீலப் பட்டுடையானான காவிரன் தாமோதிரன், திருவடி பூதி, வில்லவராயன், விழுப்பரதாயன், சிவ அந்தணர் காசியபன் பட்டாரகன், கொற்றமுடையான் கேசவன், உலகளந்த சோழ விழுப்பரையர், அந்தணர் காசியபன் ஆடவல்லான் திருத்தவத்துறை உடையான், காசியபன் மாகாளி ஆடவல்லான், காசியபன் மாகாளி தேவன், பாரத்துவாசி, காசியபன் உய்ய கவித்தான்

சுந்தரனான நாற்பத்தெண்ணாயிரபட்டன், காசியபன் திருத்தவத்துறைத்தானான சண்டேசுவரன், ஆவணமுடையான் மார்த்தாண்டன் உத்தமன், அன்பில் பாரதாயன் காடன், ஆதித்தனான செம்பியன் பிரும்மமாராயர், ஆதித்தன் பெருமான் நூற்றுவனான சாதுப் பிரியன், சாரணன் நாராயணன் செட்டி, சாரணன் நாராயணன் கண்ணன், சிவாச்சாரியார் காசியபர் திருவை பட்டர், குறுகாடி கிழவன் பரமன் குஞ்சர மல்லனான பல்லவரையன், பொன்னார் வசவண்ணன், திருவாசிராமம் உடையார், அழகப்பெருமாள், நக்கன் விழுப்பேரரையன் முதலிய பெயர்கள் இக் கல்வெட்டுகளில் காணக்கிடக்கின்றன.

சமுதாயத்தில் இருந்த பல்வகைத் தொழிலாளர்களுள் நாவிசர், தச்சர், வண்ணக்கர், கணக்கர் முதலானவர்களையும், பல்வேறு அளவைகள், நிறைகள், குறிப்பாகக் கழஞ்சு, மா, முக்காணி, தூணிப்பதக்கு, பலம், கலம், முக்குறுணி, நாழி, உழக்கு, குறுணி, ராஜாஸ்ரயன் என்ற பண்டாரக்கல், பொன்னை நிறுக்கப்பயன்பட்ட பாச்சில்கல், மற்றும் பாச்சில் கோல் முதலானவற்றையும் இக்கல்வெட்டுகள்வழி தெரிந்து கொள்கிறோம்.

சமுதாயத்தில் மகளிருக்கு இருந்த சொத்துரிமை, அந்தணப்பெண் ஒருவருடைய நிலம், நக்கன் சேகமங்கலம் என்ற பெண்ணின் நிலம் பற்றிய செய்திகளாலும், பணிமகளிரும் பெருமையுற்றுப் பெரும் பொருள் உடையவர்களாகவும், வள்ளன்மை நிறைந்தவர்களாகவும் வாழ்ந்தமை, முதலாம் இராசராசனின் இருபத்தோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டாலும் மெய்ப்பிக்கப்படுகின்றன. முதலாம் இராசராச தேவரின் பெரிய வேளத்துப் பணிமகளாய் இருந்த நக்கன் கற்பகவல்லி, இக்கோயில் இறைவர்க்குப் போனகம், திரு அமுது முதலிய படையல்களுக்காக இருநூற்று ஒரு கழஞ்சு பொன் கொடையாகத் தந்திருக்கிறார் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன். பணிமகளைக் குறிக்கக் கல்வெட்டு பெண்டாட்டி என்ற சொல்லைப் பயன்படுத்துகிறது.

ஆடல் வல்ல மகளிர் சமுதாயத்தில் இருந்தனர். எள், துவரை, கடுகு, நெல் போன்ற பயிர்களின் பெயர்களும், கார்த்திகைத் திருநாள் விழா, சதயத் திருவிழா போன்ற விழாக்களைக் கோயில்களில் கொண்டாடிய செய்திகளும், பொரிக்கறி அமுது, நெய்யமுது, தயிரமுது, பயற்றுப்போனகம் முதலியவை மக்களின் பொதுவான உணவு வகைகளாக இருந்தமையும், இக்கோயில் கல்வெட்டுகளால் தெரியவருகின்றன. நிலங்களுக்குக் கூடப் பெயர்கள் இருந்தமையைப் பராந்தகன் கல்வெட்டால் அறிகிறோம். 'பூதிமாசாக்கல்' என்று ஒரு நிலம் பெயரிடப்பட்டிருந்தது. ராசராசன் மாடை குறித்தும் ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது.

### கோயில் பற்றிய செய்திகள்

இக்கோயில் இறைவனின் பெயர் முதற் பராந்தகன் காலத்தில், திருவாச்சிராமத்து தேவர், திருவாச்சிராமத்துப் பெருமானடிகள் என்று வழங்கி வந்தது.[57] இப்பெயர் முதலாம் இராசராசன் காலத்தில் திருப்பாச்சீசுவரமுடைய மகாதேவர் என்றும்[58], முதற் குலோத்துங்கன் காலத்தில் திருவாச்சிரமுடையார்[59] என்றும், மூன்றாம் இராசராசன், முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் திருவாசிர முடைய நாயனார்[60] என்றும் மாறுதலடைவது கவனிக்கத் தக்கது. திருப்பாச்சில் ஆச்சிராமம் என்ற பெயர் காலப்போக்கில் திருவாசிரம் என்றாகி, இன்று அந்த 'ரம்'மும் மறைந்து திருவாசியாகி நிற்கிறது.

இத்திருக்கோயில் நிர்வாகம் பற்றி இங்குள்ள கல்வெட்டுகள் மிகத்தெளிவான செய்திகளைத் தெரிவிக்கின்றன. பதிபாத மூலத்தார், திருமாகேசுவரர், சண்டேசுவர தேவகன்மிகள் ஆகிய குழுவினர் இக்கோயில் நிர்வாகத்தைக் கவனித்து வந்தனர். இவர்கள் தவிர சிவாச்சார்யம் செய்வோர் தனியாக இருந்தனர். காசியபன் திருவை என்னும் சிவாச்சாரியாரை முதற்குலோத்துங்கனின் கல்வெட்டு அடையாளம் காட்டுகிறது. இக்கோயில் சிவப்பிராமணர்களாகக்காசியபன் உய்ய கவித்தான் சுந்தரனான நாற்பத்

தெண்ணாயிர பட்டன், காசியபன் ஆடவல்லான் திருத்தவத்துறை உடையான், காசியபன் மாகாளி ஆடவல்லான், காசியபன் மாகாளி தேவன் ஆகியோர் பெயர்கள் காணப்படுகின்றன.

இறைவனுக்கு வழங்கப்பட்ட படையல்களில் திருஅமுது, கறியமுது, தயிரமுது, பொரிக்கறி அமுது, அடைக்காய் அமுது (பாக்கு) ஆகியவை இடம் பெறுகின்றன. இவற்றை இறைவனுக்கு வழங்கு வாய்ப்பாகப் பலர் கொடையளித்தனர். அவர்களுள் முதலாம் இராசராசனின் பெரிய வேளத்துப் பெண்டாட்டி நக்கன் கற்பகவல்லி ஒருவர். முதற்பராந்தகன் காலத்தில் இறைவனின் திரு அமுதிற்காகவும், ஒருழக்கு நெய்யில் நாள்தோறும் நந்தா விளக்கொன்று எரிக்கும் செயலுக்காகவும் பூதிமாசாக்கல் என்ற பெயருடைய நிலம் கொடையளிக்கப்பட்டது.[61] வீரசோமேசுவரன் காலத்தில் இக்கோயிலுக்குப் பதினாயிரம் கலம் அரிசி தரப்பட்டுள்ளது.[62] இறைவன் திருமுன் நந்தா விளக்கொன்று எரிக்க, அதே பராந்தகன் காலத்தில் பத்தரையே அரைக்கால் கழஞ்சு பொன் பிடாரன் என்பவரால் தரப்பட்டது.[63] இக்கோயில் இறைவர்க்குப் பொற்பட்டம் ஒன்று செய்யப் பத்துக் கழஞ்சு பொன்னும், பரிவாரத் தெய்வமான கணபதியாருக்குப் பொற்பூ ஒன்று செய்ய மூன்று கழஞ்சு பொன்னும் தஞ்சாவூரைச் சேர்ந்த குறுகாடி கிழான் பரமன் குஞ்சர மல்லனால் தரப்பட்டது.[64] நிலை விளக்கொன்று, பொன்னாலான தளிகை ஒன்று, காரகக்கால் முதலியன பெண் ஒருவரால் தரப்பட்டுள்ளன.[65] இறைவனுடைய திருமஞ்சனத்துக்கும், படையலுக்கும் முதற்குலோத்துங்கன் காலத்தில் கோயிலாரைக் கூட்டிவைத்து வழிவகைகள் செய்யப்பட்டன.[66] இரவுச் சந்தியில் ஒரு விளக்கெரிக்கக் கொடை தரப்பட்டுள்ளது. அன்பிலைச் சேர்ந்த செம்பியன் பிரம்ம மாராயர் இக்கோயிலில் இரண்டு நந்தா விளக்குகள் எரிக்க முப்பது கழஞ்சு பொன் தந்துள்ளார்.[67]

முதலாம் இராசராசனின் பதினோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டினால் இக்கோயிலில், மூன்று சந்திக்கும், மேளம்

கொட்டவும், காளம் ஊதவும், சங்கு ஊதவும் ஆட்கள் இருந்தமையும், அவர்கள் வாழ்க்கைக்குரிய வசதிகள் கோயிலாரால் செய்யப்பட்டிருந்தமையும் தெரிய வருகின்றன. இதே கல்வெட்டு இராசராசவிடங்கர் என்ற பெயரில் இருந்த இறைத் திருமேனியையும் சுட்டிக்காட்டுகிறது.[68] இன்னொரு கல்வெட்டு, இக்கோயிலில் இருந்த பரிவாரத் தெய்வமான கணபதியார்க்குத் தரப்பட்ட கொடையைச் சுட்டுகிறது.[69]

இக் கோயில் வளாகத்தின் ஒரு பகுதியில் மட்டும், இரவுப் போதில் இருபது திருவிளக்குகள் எரிந்தன. இதற்காக இரண்டரை கழஞ்சு பொன் தரப்பட்டுள்ளது.[70] மூன்றாம் இராசராசனின் கல்வெட்டொன்றால் திருநாமத்துக் காணியாக நூறு குழி நிலம் இக் கோயிலுக்குத் தரப்பட்டதையும், அதன் வருவாய் கொண்டு, இக் கோயிலில் உள்ள கிழிகொடுத்த திருவாசலில், சிறுகாலைச் சந்தியில் பதினான்கு விளக்குகளும், இரவுச் சந்தியில் பதினெட்டு விளக்குகளும் ஆக மொத்தம் முப்பத்திரண்டு விளக்குகள் எரிக்க வகை செய்யப்பட்டதையும் அறிய முடிகிறது.[71]

இக் கோயிலில் கார்த்திகை விழாவும், சதயநாள் விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. சதய விழாவின் போது இறைவனுக்கு உச்சியம் போதில் திருவமுது அளிக்கும் திருத்தொண்டிற்காகத் தொட்டியத்தைச் சேர்ந்த வணிகப் பெருமகனார் அரையநல் பாணன் அருளதேவன் திருவரங்கமுடையான் நிலக் கொடை அளித்துள்ளார்.[72] இக் கோயிலில் உத்தம சோழன் திருமண்டபம் என்ற பெயருடன் ஒரு மண்டபம் இருந்ததாகக் கல்வெட்டு உணர்த்துகிறது.[73] இது தற்போதைய மகா மண்டபமாகலாம்.

முதலாம் இராசாதிராசனின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, இக் கோயிலில் விளக்கொன்று எரிக்க நெல் கொடையாகத் தரப்பட்டதைத் தெரிவிக்கிறது.[74] ஆன்மூர்க் கூற்றத்துக் கிழார் மங்கலத்தில் வாழும் ஆன்மூர் நாட்டுப் பெருந்திணையான நக்கன் விழுப்பேரரையன் நந்தா விளக்கொன்று எரிக்க நிலக்கொடையளித்த செய்தியைப்

பதினோராம் நூற்றாண்டு எழுத்தமைதியில் அமைந்த இன்னொரு கல்வெட்டு அறிவிக்கிறது.[75] மூன்றாம் இராசராசனின் இருபதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, உலக்கிக் குண்டிகோவிந்த பட்டனின் மகன் பொன்னார் வசவண்ணன் இக்கோயில் இறைவனின் பஞ்ச திரவிய முழுக்காட்டிற்காகப் பசுக்களும், பஞ்சதிரவிய கலசமும் கொடையளித்ததைக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு ஆண்டார் சிரசம்பந்தர் முன்னிலையில் பொறிக்கப்பட்டுள்ளது.[76] இம் மன்னனின் இருபத்தோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, இதே பொன்னார் வசவண்ணன், இறைவனின் பஞ்சகவ்ய திருமுழுக்காட்டுச் செலவுகளுக்காகப் பஞ்ச கவ்ய மயக்கலாக. வரி விலக்கம் பெற்று வாங்கித் தந்த நிலக்கொடையைக் குறிக்கிறது.[77]

திரிபுவன சக்கரவர்த்தி முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன், பாண்டி குலபதி வளநாட்டு, விளாநாட்டுத் திருவரங்கத்தில், தன் அரண்மனையில், மழவராயன் என்ற அரியணையில் வீற்றிருந்தபடி, தன் மைத்துனன் அழகப் பெருமான் வேண்டுகோளை ஏற்று இக் கோயில் ஆட்சியாருக்கு வழங்கிய நேரடி ஆணையை இரண்டு கல்வெட்டுகள் எடுத்துரைக்கின்றன. இதன்படி சுந்தரபாண்டியன் சந்தியின் போது இறைவனுக்கு வழங்கப்படும் படையலுக்காய்ப் பாச்சில் கூற்றத்துப் பொன்னாறுலால நல்லூரில் நிலக்கொடை தரப்பட்டது.[78]

கிருஷ்ண தேவராயரின் கல்வெட்டு திருச்சிராப்பள்ளி சீர்மையின் வடக்குக் கரையிலுள்ள திருவாசிராமம் கோயிலுக்குச் சோடுவரி, சூலவரி இவற்றால் வரும் வருமானத்தைத் தந்து ராயர் பிறப்பித்த ஆணையைத் தெரிவிக்கிறது.[79]

சம்பந்தரின் பாடல் பெற்றிருப்பதால் இக் கோயில் கி. பி. ஏழாம் நூற்றாண்டிலேயே சிறப்புடன் விளங்கியது என்பது தெளிவு. இக் கோயிலில் உள்ள கல்வெட்டுகளைக் கொண்டு பார்க்கும்போது சம்பந்தரின் காலத்தில் செங்கல் கட்டடமாக இருந்த இக் கோயில், கற்றளியாக மாறியது முதலாம் பராந்தகனின் ஆட்சிக் காலத்தில்தான் என்பது

உறுதிப்படும். இம் மன்னனின் பன்னிரண்டாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டே இங்குள்ள கல்வெட்டுகளுள் காலத் தால் பழமையானது. கருவறையின் மேற்குக் கோட்டத் திலுள்ள அம்மையப்பர் வடிவமும் மேற்சொன்ன கருத்தை வலியுறுத்த வல்லது. முதலாம் ஆதித்தனின் திருப்பணி களிலும், முதலாம் பராந்தகனின் தொடக்க காலத் திருப் பணிகளிலும் தான் கருவறை மேற்குக் கோட்டத்தில் அம்மை யப்பர் இடம் பெறுகிறார்.

முதலாம் பராந்தகனுக்குப் பிறகு இக் கோயில் எத்தனை முறை புதுப்பிக்கப் பட்டதென்பது தெரியவில்லை. கோயிலின் இன்றைய அமைப்பு முற்காலச் சோழர்களின் கலை முறை யில் இல்லை. கோயிலின் பல சுவர்களிலும் சிதறிக் கிடக்கும் கல்வெட்டுகள், கட்டட அமைப்பு முறை, கவின் குறைந்த சிற்பங்கள் இவற்றைக் கொண்டு பார்க்கும் போது இக்கோயில் பதினேழு அல்லது பதினெட்டாம் நூற்றாண்டில் ஒரு திருப் பணிக்கு உள்ளாகியிருப்பது உறுதிப்படுகிறது. கோயிலின் முன்மண்டபம் பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதியில் அல்லது இந்த நூற்றாண்டின் தொடக்க காலத்தில் உருவாகியிருக்கலாம்.

சம்பந்தராலும், சுந்தரராலும் பாடப்பெற்று, சோழர் களின் அன்பு நிறைந்த அரவணைப்பில் அகமகிழ்ந்து விளங்கிய இத்திருக்கோயில், இன்று ஓரளவுக்கு நல்ல நிலையில் விளங்கு வதற்கு, இக் கோயிலின் மேல் பெரும் ஈடுபாடு கொண்டு அரும்பணியாற்றி வரும் திரு. ஆறுமுகம், திரு. பரமன் ஆகியோரும், அவர்கட்கு உறுதுணையாக விளங்கி உதவி வரும் இக் கோயிலின் நிர்வாக அதிகாரியுமே காரணரா வார்கள். பொதுமக்களின் ஒத்துழைப்பும், ஊர் மக்களின அரவணைப்பும், நிறைந்த அளவில் கிடைக்குமானால், திருவாசி சோழர் காலத்துப் புகழைப் பெற்றுச் செம்மாந்து நிற்கும் நாள் நெடுந் தொலைவில் இல்லை.

1. ஏழாம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1964. பக். 110.

2. புலவர் அரசு, பெரியபுராண வசனம், கழக வெளியீடு, 1979. பக். 31.

3. தி. பட்டுச்சாமி ஓதுவார், திருவாசி என்னும் திருப்பாச்சிலாச்சிராமக் கோயில் வரலாறு, 1971, பக். 37-38.

4. S. R. Balasubramanyam, Middle chola Temples, p. 387-388.

5. கழகப் புலவர் குழு, சிவப்பதிகள் வரலாறு, கழக வெளியீடு, 1980, பக். 32,

6. தி. பட்டுச்சாமி ஓதுவார், திருவாசி என்னும் திருப்பாச்சிலாச்சிராமக் கோயில் வரலாறு, 1971, பக். 11.

7. ஏழாம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1964 பக். 111

8. மேற்படி., பக். 111.

9. மேற்படி., பக். 113.

10. மேற்படி., பக். 113.

11. ஏழாம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1964, பக். 110–119.

12. முதலாம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1958, பக். 209.

13. புலவர் அரசு, பெரியபுராண வசனம். கழகப் பதிப்பு, 1979, பக். 208.

14. பதினோராம் திருமுறை, கழகப் பதிப்பு, 1971, பக். 37-38, பாடல் எண். 16.

15. நடன காசிநாதன், முத்தரையர், 1976, பக். 59.

16. நடன காசிநாதன், முத்தரையர், 1976, பக், 108.

17. DR. R Kalaikkovan, Archaeological discoveries at Azhundur, Indian Express dt. 1-3-1986.

18 S. R. Balasubramanyam, Middle CholaTemples, 1977, p. 889.

19. T. A. Gopinatha Rao, Elements of Hindu Iconography Vol. I, part II, 1985, p. 384.

20. Ibid., p. 385,

21. Ibid., p. 388.

22. S. R, Balasubramanyam, Middle Chola Temples, 1977, p. 389.

23. T. A. Gopinatha Rao, Elements of Hindu Iconography, Vol I part II, 1985, p. 383.

24. Ibid., p. 343

25. தி. இராசமாணிக்கம், இந்து சமயக் கடவுள்களின் திருவுருவங்கள், கழக வெளியீடு, 1982, பக். 75.

26. T. A. Gopinatha Rao, Elements of Hindu Iconography, Vol I, part II, 1985, p. 386.

27. 4. 2. 87 அன்று நானும் என் துணைவியும் கோயில் சென்றிருந்த போது நேரில் கேட்டறிந்தது.

28. டாக்டர் இரா. நாகசாமி, நடன காசிநாதன், கு, தாமோதரன், ச. ஹரிஹரன், கல்வெட்டியல், தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1980, பக். 133.

29. தினமலர், 18. 9. 85.

30. Indian Express 16. 5. 87, 28.6. 87.

31. Indian Express, 15. 11-87.

32. சாந்தலிங்கம், சதாசிவத் திருவுரு, தொல்பொருள் தொழில் நுட்பப் பணியாளர் பண்பாட்டுக் கழக அஞ்சல்வழிக் கருத்தரங்கக் கட்டுரை எண். 4, 1986.

33. T. A. GopinathaRao, Elements of Hindu Iconogrgphy, Vol I. part II. 1985, p. 308.

34. C. Sivaramamurti, Nataraja in Art, Thought and Literature, 174, p. 150–153.

35. Ibid., p. 150.

36. A. R. E. 342, 343 of 1972-73.

37. தி. பட்டுச்சாமி ஓதுவார், திருவாசி என்னும் திருப்பாச்சிலாச்சிராமத்துக் கோயில் வரலாறு, பக். 80.

38. A. R. E. 238 of 1973-74.

39. இக் கல்வெட்டு 31. 1. 1987 அன்று டாக்டர் மா. இராச மாணிக்கனார் வரலாற்றுப் பேரவையால் கண்டுபிடிக்கப்பட்டுப் படி யெடுக்கப்பட்டது.

40. A. R. E. 34 of 1891.

41. A. R. E. 342-345 of 1972-73.

42. A- R. E. 232-241 of 1973-74.

43. A. R. E. 342, 343 of 1972-73.

44. A. R. E. 344 of 1972-73.

45. A. R. E. 346 of 1972-73.

46. S. I. I. Volume VIII Ins. no. 185.

47. A. R. E. 239 of 1973-74.

48. புதிதாகப் படியெடுக்கப்பட்ட கல்வெட்டு.

49. புதிதாகப் படியெடுக்கப்பட்ட கல்வெட்டு.

50, A. R. E. 139 of 1936.

51. A, R. E. 344 of 1972-73.

52. A. R. E. 239 of 1973-74.

53. A. R. E. 241 of 1973-74.

54. புதிதாகப் படியெடுக்கப்பட்ட கல்வெட்டு.

55. A, R.E. 346 of 1972 73.

56, A. R. E. 239, 237 of 1973-74.

57. A. R. E. 342, 343 of 1972 73.

58. A. R. E. 239 of 1973-74.

59. A. R. E. 346 of 1973-74.

60. 232, 233, 235, of 1973-74.

61. A. R. E. 342 of 1972-73.

62. தி. பட்டுச்சாமி ஓதுவார், திருவாசி என்னும் திருப்பாச்சி லாச்சிராமக் கோயில் வரலாறு. 1971, பக். 30.

63. A. R. E. 343 of 1972-73.

64. A. R. E. 344 of 1972-73.

65. A. R. E. 345 of 1972-73.

66. A. R. E. 346 of 1972-73.
67. A. R. E. 239 of 1973-74.
68. புதிதாகப் படியெடுக்கப்பட்ட கல்வெட்டு.
69. A. R. E. 344 of 1972-73.
70. புதிதாகப் படியெடுக்கப்பட்ட கல்வெட்டு.
71. மேற்படி.
72. மேற்படி.
73. A. R. E. 346 of 1972-73.
74. A. R. E. 240 of 1973-74.
75. A. R. E. 241 of 1973-74.
76. A. R. E. 232 of 1973–74.
77. A. R. E. 233 of 1973-74.
78. A. R. E. 235 and 235 of 1993-74.
79. A. R. E. 237 of 1973-74.

# 8. நவகண்ட நடுகற்கள்

நாட்டுக்காகவோ ஊருக்காகவோ, குடும்பத்துக்காகவோ அல்லது தனியருக்காகவோ ஏதேனும் ஒரு வகையில் வீரத்தை வெளிப்படுத்தித் தம் இன்னுயிரைத் தியாகம் செய்யும் வீரப் பெருமக்களின் நினைவு போற்றி எடுக்கப்பட்ட வழிபாட்டுச் சின்னங்களே நடுகற்கள். நடுகல் எடுக்கும் பழக்கம் நம் நாட்டில் மிகப் பழங்காலம் தொட்டே இருந்து வந்தது என்பதற்குத் தொல்காப்பியம் ஒரு முழுமையான சான்றாகும். காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுதல், பெரும்படை, வாழ்த்துதல் என்று அறுவகையான நிலைகளைக் கடந்து நடுகல் எடுக்கும் மரபு நிலவியதைத் தொல்காப்பியர் அறிவுறுத்துகிறார்.[1] பின்னால் வந்த புறப்பொருள் வெண்பாமாலை இந்த நிலைகளை மிக அழகுபட விவரிக்கிறது.[2]

வீரன் ஒருவனுக்கு நடுகல் எடுக்க விரும்பும் ஊராருடன், மறவரும், பாணரும், கூத்தரும் மற்றும் பலரும் நல்ல கல்லைத் தேடிச் செல்வர். கல்லைத் தேர்ந்ததும் மாலையும் மலரும் மதுவுமிட்டு அக்கல்லைக் கொள்வர். அப்போது மணியும் பறையும் ஒலிக்கும். கொண்ட கல்லை வண்டியிலேற்றிக் கொணர்ந்து, அதை நீரில் அமிழ்த்திக் குளிர வைத்து நீராட்டுவர். வெம்மை தணிந்த கல் குளிர்ந்த நிலையில், அதில் வீரனின் பெயரும் வடிவும் எழுதி, அதற்கு மீட்டும் மலரும் மதுவும் செம்மறியாட்டுப் பலியும் தந்து, மயிற்பீலி சூட்டி, படலை சாற்றிப் பல்லியம் இயம்ப நடுவர். இப்படி நடப்பட்ட கல்லுக்குக்கோயில் எடுப்பதைப் பெரும்படை என்பர். நட்டவரும் பிறரும் அக் கல்லைப் போற்றி வாழ்த்துவர்.

இந்நடுகற் பழக்கம் சங்க காலத்தில் பரவலாகக் காணப்பட்டமைக்குப் புறநானூற்றுப் பாடல்கள் பல சான்றுகளாய்

நிற்கின்றன.[3] பின்னால் வந்த பல்லவர்கள், அவர்களைத் தொடர்ந்த சோழர்கள், அதன் பின் ஆண்ட பாண்டியர்கள், இடையில் நின்ற பாணர்கள் வேளிர்கள் ஆகிய இவர்கள் காலங்களிலும் வீரக்கல் எடுக்கும் பழக்கம் பெரும் சிறப்போடு பின்பற்றப்பட்டது.[4] இம் மரபு வழிகளுக்குரிய மன்னர்கள் கால நடுகற்கள் தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்து கிடைத்துள்ளன. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் துணை இயக்குநர் திரு. நடன காசிநாதன் அவர்கள் வீரக்கற்களைப் பற்றிய தம்முடைய நூலொன்றில், தமிழக மெங்கும் வீரக்கற்கள் கிடைத்தபோதிலும், தஞ்சை மாவட்டத்தில் ஒன்று கூடக் கிடைத்திலது என்றும், திருச்சி மாவட்டத்தில் கரூரில் மட்டும் இரண்டே நடுகற்கள் கிடைத்துள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார்.[5]

கடந்த இரண்டு ஆண்டுகளில் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றுப் பேரவையினர் ஒன்பது நடுகற்களைத் திருச்சி மாநகரின் அண்மைப் பகுதிகளில் இருந்தும், குளித்தலையில் இருந்தும் கண்டறிந்து வெளிப்படுத்தியுள்ளனர். இவற்றுள் ஐந்து ஏறத்தாழ கி. பி. ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டின ஆகலாம். மற்ற நான்கும் கி. பி. பதினான்காம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவை. இவற்றுள் முதல் நடுகல் கிடைத்த இடம் அழுந்தூர்.[6]

திருச்சி மேலூர் சாலையில், மணிகண்டத்திலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது அழுந்தூர். இங்கிருந்து வலப்பக்கம் பிரியும் மண் சாலையில் மூன்று கிலோமீட்டர் உள்ளே போனால், அடர்ந்த இரு பெரும் மரங்களின் நிழலில் ஓர் அழகுக் கோயில் அனாதையாய் நிற்பதைப் பார்க்கலாம், இதுதான் அருள்மிகு வரகுணீசுவரம். இக் கோயிலைக் கண்டுபிடித்து வரலாற்று வெளிச்சத்திற்குக் கொண்டு வந்த நிலையில்தான்,[7] பக்கத்துப் பகுதிகளை ஆராயும் முனைப்பு தோன்றியது. இக்கோயிலில் இருந்து அரைக் கிலோமீட்டர் தொலைவில் உள்ள பிடாரித் தோப்பு, தென்னை மரங்கள் சூழ்ந்த ஒரு தனித்த பகுதி. இங்கு உடைந்த நிலையில் எழுவர் நங்கையர் சிற்பங்கள் சில

காணப்படுகின்றன. இந்தத் தோப்பில்தான் பழுதுபட்ட நிலையில், பொரிந்து போயிருந்த நடுகல்லொன்றினை இப் பேரவையினர் கண்டு பிடித்தனர். இச் சிற்பம் தமிழகத்தில் பண்டு நிலவி வந்த நவகண்டம் கொடுக்கும் பழக்கத்தின் அடிப்படையில் உருவானதாகும். அவிப்பலி என்ற சொற்றொடரால் இப் பழக்கத்தின் வேரைத் தொல்காப்பியம் அடையாளம் காட்டுகிறது.[8]

கொற்றவையிடம் எதையேனும் வேண்டிக்கொண்டு, அவ் வேண்டுதல் நிறைவேறினால், தம் தலையைத் தாமே அரிந்து தேவிக்குப் பலியிடுவதாகச் சூளுரைத்துக், கேட்டது நிறைவேறிய நிலையில், வேண்டுதலின் வண்ணம், தலையைத் தத்தம் செய்யும் வீரப்பெரும் பண்பு அன்றைய தமிழரிடம் அதிகமாக இருந்தது. இந்த வீர வழக்கத்தையே நவகண்டம் கொடுப்பது என்று கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. இத்தகு நவகண்டச் சிற்பமே அழுந்தூர் பிடாரித் தோப்பில் கிடைத்த முதல் வீரக்கல்லாகும்.

இச் சிற்பத்தில் இளைஞர் ஒருவர் குத்துக்காலிட்டு அமர்ந்த நிலையில் காணப்படுகிறார். வலக்கால் மடித்தபடியிருக்க, இடக்காலைக் குத்துக்காலாக வைத்து உட்கார்ந்திருக்கும் இவரின் இடக்கை, தலைமுடியைப் பிடித்திழுத்த நிலையில் விறைப்பாக உள்ளது. வலக்கை, கத்தியால் கழுத்தை அறுக்கும் மெய்ப்பாட்டில் காட்டப்பட்டுள்ளது. சிற்பம் அதிகமாகப் பொரிந்துள்ளதால் மேற்கொண்டு நுண்ணிய விவரங்களைப் பெற இயலவில்லை. இச் சிற்பத்தின் அடியில் பாதியழிந்து போன கல்வெட்டொன்று அரைகுறையாகக் காணப்படுகிறது. இக் கல்வெட்டு வரியால் இந்த வீர இளைஞனின் பெயர் குள்ளையன் என்பது தெரிய வருகிறது.[9]

இரண்டாவது வீரக்கல்லும் நவகண்டச் சிற்பந்தான். இது திருச்சி குமாரவயலூர் சாலையில், உய்யக்கொண்டான் திருமலைத் திருக்கோயிலுக்கு அருகில், வயலோரத்துச் சாலையில், முக்கால் வாசிக்கு மேல் மண்ணில் புதைந்து,

வெறும் தலைப்பகுதி மட்டும் தெரிந்த நிலையில் காணப் பட்டது. இப்படியொரு சிற்பம் இங்குப் புதையுண்டிருப்பது பற்றித் தகவல் தந்தவர் சோமரசம்பேட்டை மேனிலைப் பள்ளித் தமிழாசிரியர் திரு. தமிழகன். இவரது செய்தியும், கி. ஆ. பெ. விசுவநாதம் மேல்நிலைப்பள்ளி நாட்டுநலப் பணித்திட்ட மாணவர்களின் கடுமையான உழைப்பும் டாக்டர். மா. இராசமாணிக்கனார் வரலாற்றுப் பேரவையினரின் மேற் பார்வையில் ஓர் அற்புதமான நடுகல்லை அருங்காட்சியகத் திற்கு வழங்கின.

130 சென்டிமீட்டர் உயரமும் 45 சென்டிமீட்டர் அகலமும் கொண்ட இந்த நடுகல் ஒரு வீரனின் நின்ற கோலத்தைக் காட்டுகிறது. நாற்பது சென்டிமீட்டர் உயர முள்ள தளத்தின் மீது வீரனின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இடக்கை தலைமுடியை உறுதியாய்ப் பற்றியிருக்க, வலக்கை வாளொன்றால் கழுத்தையறுப்பது போல் காட்டப் பட்டுள்ளது. கழுத்து பாதி அறுபட்ட நிலையில், வாள் இடப்புறமாகக் கழுத்தைத் துளைத்துக்கொண்டு போகிறது. முகம் நீண்ட உருண்டை வடிவில் உள்ளது. செவிகள் அரிக்கப் பட்டுள்ளன.

வாகு வளையம், சரப்பளி, வீரக்கழல் போன்ற அணி கலன்களுடன், இடுப்பில் அரையாடையும், அதிலொரு கூர்மையான வாளும் கொண்டுள்ள இவ் வீரனின் இரு பாதங்களுமே வலப்புறம் திரும்பியுள்ளன. இந்த நவகண்டச் சிற்பத்தை ஊரார் 'சாவாங்கல்லு' என்று அழைக்கிறார்கள். ஊரில் யாரும் இறந்துபட்டால், அவர்களது உடலை இடு காட்டுக்கு எடுத்துச் செல்லும் போது இந்த சாவாங்கல்லுக்கு அருகே கொணர்ந்து, இதை வழிபட்டுச் சில காசுகளை இங்கே காணிக்கையாகப் போட்டுவிட்டுச் செல்வது மரபாம். இந்நடுகல் ஓர் இடுகாட்டுத் தெய்வமாகக் கொண்டாடப் பட்டு வந்துள்ள நிலை வியப்பையே தருகிறது.

மூன்றாவது வீரக்கல் திருச்சி லால்குடி சாலையில், வாளாடி மேல்நிலைப்பள்ளிக்கருகில் சாலையோரத்திலுள்ள

மரத்தடியில் இருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டது. இது இங்குப் புதையுண்டிருக்கும் செய்தியையும் திரு. தமிழகனே தெரிவித்தார். லால்குடி ஆணையரின் மேற் பார்வையில், கி. ஆ. பெ. விசுவநாதம் மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த நாட்டுநலப் பணித் திட்ட மாணவர்கள், அவர்தம் ஆசிரியர் திரு இரா. இராசேந்திரன் ஆகியோர், தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறைப் பதிவு அலுவலர் திரு. அ. அப்துல் மஜீது, உதவியாளர் திரு. ச. நடராசன் ஆகியோர் ஒத்துழைப்புடன் இவ்வரிய சிற்பத்தை வெளியில் கொணர்ந்தனர்.[11]

ஏறத்தாழக் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக மதிப்பிடத்தக்க இச்சிற்பம் வெகு காலம் மண்ணுக்குள் புதைந்திருந்தமையால் மிகவும் பொரிந்த நிலையில் காணப்படுகிறது. அறுபது சென்டிமீட்டர் உயரமும் இருபது சென்டிமீட்டர் அகலமும், ஏறத்தாழ இரண்டு டன் எடையுமுள்ள இச் சிற்பத்தில் இரண்டு மனித உருவங்கள் காட்டப்பட்டுள்ளன. ஓர் உருவம் பெரிய அளவினதாய் நின்ற கோலத்தில் உள்ளது. இடக்கால் நேராக ஊன்றியிருக்க, வலக்கால் முன்னால் நீட்டப்பட்டு, முழங்காலருகே இலேசாக மடிந்த தோற்றத்தில் உள்ளது. வலக்கை தலைக்கருகே உயர்ந்து குறுவாளொன்றை எறியும் அமைப்பில் இருக்க, இடக்கை முழுவதுமாய் நீட்டப்பட்டுள்ளது. இவ்வுருவத்தின் பக்கத்தில் இருக்கும் மனித வடிவம் சிறிய அளவினதாய் நின்ற கோலத்தில் காணப்படுகிறது.

குறுவாளை எறியும் தோற்றத்தில் காணப்படும் இவ் வீர வடிவம், போரொன்றில் தன்னுயிரைத் தியாகம் செய்த பெருமகனாய் இருக்க வேண்டும். இந்தச் சிற்பமும் வாளாடிப் பெருமக்களுக்குச் சாவாங்கல்லாகப் பயன்பட்டு வந்ததை அறிந்த போது, வீரக்கற்கள் சுடுகாட்டுத்தெய்வங்களாகப் போற்றப்பட்டு வந்த பழக்கம் பல ஊர்களில் ஆழமாய் வேரூன்றியிருப்பதை உணர முடிந்தது.

இம் மூன்று வீரக்கற்களையும் புதையுண்டிருந்த இடங்களிலிருந்து அகழ்ந்தெடுத்து அருங்காட்சியகத்திற்குச் சேர்க்கும் பணிக்கு உற்றுழி உதவிய பெருந்தகை, திருச்சி

மாவட்ட ஆட்சித் தலைவராயிருந்த திருமிகு வ. விசுவநாதன் அவர்கள்தாம். திருச்சியின் வரலாற்றுக்கு மேலும் சில புகழ்மிக்க வரிகளைச் சேர்க்க அன்னாரது அன்பும் அரவணைப்பும் பெரிதும் உதவின.

திருவானைக்காவல் திருக்கோயிலின் முதற்கோபுர வாயிலின் இடப்புறத்தே, கேட்பாரற்ற நிலையில் ஓர் அழகிய சிற்பம் அனாதையாய் நிற்கிறது. இதுதான் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றுப் பேரவை, வரலாற்று உலகிற்கு வெளிப்படுத்திய நான்காவது வீரக்கல்.[12] இப் பேரவையினர் கண்டுபிடித்த வீரக்கற்களிலேயே அழகும், தெளிவும், சிறந்த செதுக்குத் திறனும் நிறைந்ததாய்க் காணப் படும் இச் சிற்பம், வீரனொருவன் நின்ற நிலையில் நவ கண்டம் கொடுப்பது போல் அமைந்துள்ளது. 1. 5 மீட்டர் உயரமும், அரை மீட்டர் அகலமும் உள்ள இந்த ஆண் வடிவத்தின் முகத்தில் வீரமும், கோபமும் கொந்தளிக் கின்றன. தலையில் சடாமகுடம், கழுத்திலும், கைகளிலும் பல்வேறு அணிகலன்கள். இடுப்பில் மடித்துக் கட்டிய ஆடை; அது நழுவாதிருக்க ஒரு கச்சு. இந்த இடுப்புக் கச்சில் ஒரு குறுவாள் செருகப்பட்டுள்ளது. இடக்கை தலைமுடியை இழுத்துப் பிடித்திருக்கும் நிலையில், வலக்கையில் இருக்கும் கத்தி கழுத்தை ஊடுருவியுள்ளது. இக் கத்தியின் மறுமுனை, கழுத்து அறுபட்ட நிலையில், உடலின் இடப்புறம் நீண்டுள் ளமை, மிக இயற்கையாகக் காட்டப்பட்டுள்ளது.

அண்மையில் திருவாசி மாற்றுரை வரதீசுவரர் திருக் கோயிலில் ஒரு வீரக்கல் பார்த்தறியப்பட்டது.[13] மையக் கோயிலைச் சுற்றியுள்ள உட்சுற்றின், தென்புறத் திருநடை மாளிகையின் தென்கிழக்குக் கோடியில், எழுவர் அன்னையர் சிற்பங்களையடுத்து இச்சிற்பம் காணப்படுகிறது. இதை 'மாமுண்டி' என்ற பெயரால் ஊரார் வணங்குகிறார்கள். ஆண் வடிவம் ஒன்று வலக்காலைக் குத்துக்காலாய் வைத்து இடக்காலை முழங்கால் அளவில் மடித்து மண்டியிட்டு அமர்ந்த நிலையில் காட்சியளிக்கிறது. இவ் வடிவத்தின்

இடக்கை உயர்ந்து தலைமுடியை இழுத்துப் பிடித்த நிலையில் இருக்க, வலக்கை, வாளொன்றால் கழுத்தை அறுத்த நிலையில் உள்ளது. கழுத்தை அறுத்துக்கொண்டு கத்தி இடப்புறம் நீண்டுள்ளது. எடுப்பான நாசியும், சினமும் வீரமும் நிறைந்திலங்கும் முகத்தோற்றமும், அடர்ந்த மீசையும் இவ் வடிவத்தின் எழிலுக்கு எழில் சேர்க்கின்றன. இடப்புறத் தோளிலிருந்து சவுக்குபோன்ற ஒரு பொருள் தொங்குகிறது. கைகளில் கங்கணம், தோள்களில் வாகு வளையம், இடுப்பில் தொங்கலோடு கூடிய அரையாடை என்று அழகு படக்காட்சி தரும் இச் சிற்பம் மக்களின் வழிபாட்டில் உள்ளது. இதன் சிற்பச் செறிவு கொண்டு பார்க்கும் போது இதையும் ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டு நடுகல்லாகவே கொள்ளத் தோன்றுகிறது.

இந்த ஐந்து நடுகற்களும் திருச்சிக்கு மிக அண்மையிலுள்ள இடங்களிலிருந்து கிடைத்துள்ளன. இவை ஐந்தும் ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டுக் கலைமுறையில் அமைந்தவை. இவற்றுள் நான்கு நவகண்டச் சிற்பங்கள். ஒன்று போர் வீரனின் நடுகல்.

குளித்தலையில் நவகண்டச் சிற்பங்கள் இருப்பதாக முசிறி அரசினர் கலைக்கல்லூரி வேதியல் துறைப்பேராசிரியர் திரு. அமர்ஜோதி தந்த தகவலைத் தொடர்ந்து டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றுப் பேரவையினர் அருள்மிகு கடம்பவனநாதர் திருக்கோயில் வெளித் திருச்சுற்றிலிருந்தும், பேராளம் உகந்த அம்மன் திருக்கோயில் வெளித் திண்ணையிலிருந்தும் நான்கு நவகண்டச் சிற்பங்களைக் கண்டறிந்து வெளிப்படுத்தினர்.[14]

குளித்தலை அருள்மிகு கடம்பவனநாதர் திருக்கோயில் இறைவன் வடக்கு நோக்கி அமர்ந்த திருத்தலம். இங்கு அழகும் புதுமையுமானதோர் ஆடவல்லானும், பாலுணர்வுச் சிற்பங்கள் நிறைந்ததேரும், எழுவர் கன்னியர் அமர்ந்திருக்கும் இறைவன் கருவறையும் காணத்தக்க அதிசயங்கள். நாவுக்கரசரால் பாடப் பெற்ற[15] இத் திருத்

தலத்தின் மேற்கு வெளித் திருச்சுற்றுப் பகுதியில் மூன்று நவ கண்டச் சிற்பங்கள் கேட்பாரற்றுக் கிடக்கின்றன.

மரத்தடியில் திண்ணை மீது இரண்டும், சற்றுத் தள்ளி தோட்டப் பகுதியில் செடிகளின் மறைவில் மற்றொன்றும் உள்ளன. இம் மூன்று நவகண்டச் சிற்பங்களும் நின்ற நிலையில் இருக்கும் ஆண் வடிவங்களாய்க் காணப்படுகின்றன. இரண்டு வடிவங்கள் தம் இடக்கையால் தலைமுடியைப் பிடித்தவாறிருக்க, ஒரு வடிவம் வாளொன்றைப் பிடித்துத் தரையில் ஊன்றியவாறு உள்ளது. இம் மூன்று வடிவங்களின் வலக்கைகளிலும் கத்தி உள்ளது. அக் கத்தியால் கழுத்தை அறுத்துக்கொண்டிருக்கும் நிலையில் சிற்பத் தோற்றங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இரண்டு சிற்பங்களில் தலைமுடி மேலே தூக்கி மகுடம் போல் கட்டப்பட்டுள்ளது. ஒரு சிற்பத்தில், தலைமுடி பக்கவாட்டுக் கொண்டையாய்க் காட்டப்பட்டுள்ளது. எல்லாச் சிற்பங்களுமே அழகும் எடுப்புமான முறுக்கு மீசையுடன்தான் உள்ளன. கண்களில் சினக்குறிப்புக்குப் பதிலாகக் கருணைப்பொலிவே காணப்படுகிறது.

ஒன்றேகால் மீட்டர் உயரமும் அரைமீட்டர் அகலமும் உள்ள முதற் சிற்பத்தின் கழுத்தில் வீரத்தாலி காணப்படுகிறது. இடுப்பில் மடித்துக் கட்டப்பட்டுள்ள அரையாடையில் குறுவாள் ஒன்று செருகப்பட்டுள்ளது. பக்கவாட்டில் முடிந்த கொண்டையுடன் தோற்றமளிக்கும் இச் சிற்பம் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகலாம்.

ஒரு மீட்டர் உயரமும் அரை மீட்டர் அகலமும் உள்ள இரண்டாவது வடிவத்தின் கழுத்தில் வீரத்தாலியுடன், கண்டிகை, சரப்பளி முதலியனவும் உள்ளன. கால்களில் வீரக்கழல்களும் கைகளில் வளைகளும் உள்ள இதன் இடுப்பில் அரையாடை மடித்துக் கட்டிய அமைப்பில் காட்சியளிக்கிறது. இதுவும் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகலாம்.

மூன்றாவது வடிவம் அளவில் சற்றுச் சிறியது. அறுபது செண்டிமீட்டர் உயரமும், முப்பது செண்டிமீட்டர் அகலமும் உள்ள இச் சிற்பமே இங்குள்ள மூன்றிலும் பழமையானது; அழகானது. பதினான்காம் நூற்றாண்டுக் கலைமுறையில் அமைந்துள்ள இச் சிற்ப வடிவத்தின் கால்கள் பக்கவாட்டில் திரும்பியுள்ளன. கழுத்தில் அணிகலன்களுடன் காட்சியளிக்கும் இவ் வடிவத்தின் இடையையும்நன்றாக மடித்துக் கட்டிய அரையாடை அலங்கரிக்கிறது.

குளித்தலைப் பேருந்து நிலையத்தின் ஒரு புறத்தில் காணப்படும் பேராளம் உகந்த அம்மன் (பேராளக் குந்தாளம்மன் கோயில் என்று ஊர் மக்களால் சொல்லப்படு கிறது) கோயில் வளாகத்தில் கண்டறியப்பட்ட நான்காவது நவகண்டச் சிற்பம் வழிபாட்டில் உள்ளது. நின்ற கோலத் தில் காணப்படும் இந்த ஆண் வடிவத்தின் தலைமுடி உச்சிக் கொண்டையாக முடியப்பட்டுள்ளது. கழுத்தில் செருகப் பட்ட கத்தி இடப்புறம் நீண்டுள்ளது. இரண்டு கைகளையும் கூப்பி வணங்கிய நிலையில் காணப்படும் இதன் இடத் தோளில் வில்லொன்று தொங்குகிறது. மேற்கையில் கங் கணம் உள்ளது. ஒரு மீட்டர் உயரமும், அரை மீட்டர் அகலமும் உள்ள இச் சிற்பம் பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகலாம்.

இவ்வொன்பது வீரக் கற்களின் கண்டுபிடிப்பால், தமிழகத்தின் பிற பகுதிகள் போலவே திருச்சியிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் கூட நடுகல் வழிபாடு செழிப்பாக இருந்ததையும், குறிப்பாகக் கொற்றவை வணக்கமும், தன்னைத் தானே சூள் முடித்துப் பலிகொடுத்துக் கொள்ளும் நவகண்டப் பழக்கமும் மிக அதிக அளவில் ஆழமான ஈடு பாட்டுடன் பின்பற்றப்பட்டு வந்ததையும் அறிய முடிகிறது. திருச்சியின் நான்கு திசைகளில் இருந்தும் இந்த நவகண்டச் சிற்பங்கள் கிடைத்துள்ளதால், ஆய்வுகள் மேலும் முனைப்பா னால் இதுபோல் பல இனியும் கிடைக்கலாம் என்பதும், தமிழகத்தின் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களில் திருச்சியும், அதன் சுற்றுப்புறங்களும் பிற மாவட்டங்களுக்கு இணையான

பங்கு வகித்ததை அதன் வழி மெய்ப்பிக்கலாம் என்பதும் உறுதியாகும்.

---

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, புறத்திணை இயல், கழக வெளியீடு, 1956, பக். 81

2. புறப்பொருள் வெண்பா மாலை, சோமசுந்தரனார் உரை, பொதுவியற்படலம், கழக வெளியீடு, 1978, பக், 251-257.

3. புறநானூறு, உ. வே. சாமிநாதய்யர் உரை, ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, 1956, பாடல் எண்கள் 221, 223, 232, 260, 261, 263, 264, 306, 314, 329 335.

4. Natana. Kasinathan, Hero Stones in Tamilnadu, Arun publication, Madras, 1978, p. 2-3.

5. Ibid., p. 2.

6. தினமணி, 4–9. 1985.

7. Dr. R. Kalaikkovan, Archaeological discoveries at Azhundur, Indian Express, 1-3–1986.

8. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, புறத்திணை இயல், கழக வெளியீடு, 1956, பக். 116.

9. N. Saraswathi, Arulmigu Varagunisvara temple at Azhundur, Dissertation submitted to Bharathidasan University, 1986, p. 22.

10. Hindu, 18-7-1986.

11. Hindu, 9-1–1987.

12. Indian Express, 16-5–1987.

13. மாலைமுரசு, 7-8-1987

14. மாலைமலர், 13-11–1987.

15. ஐந்தாம்திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1961, பக்.114.

# 9. கல்வெட்டுகளில் இசைக் கருவிகள்

தமிழகம் திருக்கோயில்களின் தாயகம். இங்குத் திரும்பிய திக்கெல்லாம் வானளாவும் விமானங்களும், விண்ணை முட்டும் கோபுரங்களுமாய்ப் பல மரபுப் பேரரசர்கள் பரிவுடன் எடுப்பித்துச் சென்ற கலைக்கோயில் களின் அருளாட்சிதான். இக்கோயில்கள் வெறும் வழிபாட்டு வளாகங்களாக நின்று விடாமல் மனித சமுதாய வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையிலும் பேரங்கம் வகித்தன. மென்மை யுணர்வுக்கும், மேன்மைப் பண்புக்கும் அடிப்படையான கலைகளை இத் திருக்கோயில்கள்தாம் இனிதே வளர்த்தன. ஆடற்கலை, சிற்பக் கலை, இசைக்கலை, ஓவியக்கலை, கட்டடக் கலை, வார்ப்புக்கலை என்று கலைகளின் பல்வேறு துறைகளும் இங்குப் போட்டி போட்டுக்கொண்டு கட்டிக் காக்கப்பட்டன; கருத்தோடு வளர்க்கப்பட்டன. அப்படி வளர்ந்த கலைகளுள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டிப் பிடித்த நுண்கலைகள் சில. அவற்றுள்ளும் தலையாயதாய் இசைக்கலையைச் சொல்லலாம். செவி மணக்க, உளம் மலர, நினைவுகள் குளிர, திருக்கோயில்களின் திருநடை மாளிகைகளிலும், இறைத் திருமுன்களிலும் தேவாரப் பதிகங்களும், ஆழ்வார் பாசுரங்களும், இன்ன பிற எத்தனையோ இனிய நயம் கலந்த பாடல்களும் பாடப்பட்டன. அப்படிப் பாடப்பட்ட பாடல்களுக்குப் பொருத்தமாக இசைக்கருவிகள் இயக்க வல்லார் பலரால் இனிதே வாசிக்கப் பட்டன. இந்த இசைக் கருவிகளின் பட்டியலும், பாங்கும் நம்மை வியப்பி லாழ்த்துகின்றன. கல்வெட்டுகளிலும், சிற்பத் திருமேனிகளிலுமாய்க் காணப்படும் இசைக் கருவி களின் வகைகளும், பிரிவுகளும் ஒன்றிரண்டல்ல ..!

இசைக் கருவிகளைப் பற்றி நமக்குச் செய்தி தரும் முதல் கல்வெட்டு குடுமியான் மலையில் உள்ள இசைக் கல்வெட்டு தான். இதை முதலாம் மகேந்திரவர்மனுடையதென்று பல

ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.[1] இக் கல்வெட்டின் வடக்குப் புறத்தில் வலம்புரி கணேசர் சிற்பத்துக்குச் சற்று மேலே 'பரிவாதினி' என்ற சொல் வெட்டப்பட்டுள்ளது. ஏழு நரம்புகள் உள்ள இசைக் கருவியாக-அதாவது வீணை வகைகளில் ஒன்றாக இதைக் கல்வெட்டறிஞர்கள் காட்டுகிறார்கள்.[2] ஓர் இசைக் கருவியைப் பற்றிக் கல்வெட்டு வழி நாம் அறிவது மகேந்திரனின் உதவியால்தான். கி. பி. ஏழாம் நூற்றாண்டு குடுமியான்மலைக் கல்வெட்டுப் போலவே திருமயம் கல்வெட்டுகளும், 'பல்லவர் கால இசைக்கலை வளர்ச்சிக்குச் சான்றாக விளங்குகின்றன்.[3]

கோயில்களில் திருப்பதியம் ஓதப்பட்டதை நாம் அறிவோம். பல கோயில்களில் திருப்பதியங்கள் ஓதும்போது உடுக்கை, தாளம் வாசிக்கப்பட்டன.[4] முதலாம் இராசராசன் தன் தஞ்சைப் பெருங்கோயிலில் திருப்பதியம் விண்ணப்பிக்க நாற்பத்தெட்டு பேரைக் கொணர்ந்து அமர்த்தினான்.[5] அவர்கள் பாடும்போது நிலையாய் உடுக்கை வாசிக்க கோமபுரத்து, தத்தய கிரமவித்தன் மகன் சூர்யதேவ கிரமவித்தனான ஆலவிடங்க உடுக்கை விஜ்ஜாதிரனன் ஆன சோமசிவன் நியமிக்கப்பட்டான். கொட்டி மத்தளம் வாசிக்க குணப்புகழ் மருதனான சிகாசிவன் இருந்தான்.[6] இந்தக் கல்வெட்டால் உடுக்கை, கொட்டிமத்தளம் என்னும் இசைக்கருவிகள் நமக்கு அறிமுகமாகின்றன. இதே கோயிலில் உள்ள தளிச்சேரிப் பெண்டிர் கல்வெட்டு கொட்டாட்டுப் பாட்டு பற்றிக் கூறுகிறது. ஆடல் மகளிர் ஆடும்போது, சூராவன் வீரசோழனான பஞ்சவன் மாதேவி நாடகமய்யன், மறைக்காட்டுக் கணவதியான திருவெள்ளறைச் சாக்கை முதலியோர் கொட்டாட்டுப் பாட்டுப் பாடினர்.[7] இதே கல்வெட்டு வங்கியம், உடுக்கை, வீணை என்னும் இசைக் கருவிகளையும் வெளிப்படுத்துகிறது.[8] முதலாம் இராசராசனின் படை வீரர்கள் பலரும் இசைக் கலைஞர்களாயும், இசைக் கருவிகளை இயக்கத் தெரிந்த விற்பன்னர்களாயும் திகழ்ந்த வல்லமையைத் தஞ்சைக் கல்வெட்டுகள் தெரியப்படுத்துகின்றன. நிகரிலிச் சோழத் தெரிந்த உடன் நிலை குதிரைச்

சேவகர்கள் வங்கியம் வாசிப்பவர்களாக இருந்திருக்கின்றனர்.[9] பிரம்மகுட்டன் கணவதியான இருமடி சோழ வாத்ய மாராயன், அரையன் வாத்ய மாராயன் போன்றோர் பாடவியம் வாசித்தனர்.[10] வீர சோழ விடங்கனான ராஜராஜ ஸ்ரீஹஸ்தன், கூத்தன் ஆதித்தனான ராஜராஜ சஹஸ்ர பாபு ஆகியோர் உடுக்கை வாசிக்க, சுப்ரமண்யன் கூத்தனான செம்பியன் வீணை ஆதித்தனும், அரையன் சதாசிவனும் வீணை வாசித்தனர்.[11] இக் கோயிலில் ஆரியம் பாட மூவரும், தமிழ் பாட ஒருவரும் இருந்தனர். இப் பாட்டுக்குக்கொட்டி மத்தளம் வாசித்தவன் காந்தர்வதாசன். பக்கவாத்தியம் வாசித்தவர்கள், அழகிய சோழத் தெரிந்த வலங்கை வேளைக்காரர், சத்திரிய சிகாமணி தெரிந்த வலங்கை வேளைக்காரர் படைப்பிரிவுகளைச் சேர்ந்தவராவர்.[12] 'பக்கவாத்தியம்' என்ற சொல்லாட்சி ஆடலுக்கும், பாடலுக்குமாய்ப் பயன்படும் துணைக் கருவிகளைச் சுட்டுகிறது. தயிலன் விக்கியண்ணன் என்பாரும், மும்மடி சோழத் தெரிந்த யானைப்பாகரில் சூற்றிநாதன் என்பாரும் முத்திரைச் சங்கு ஊதும் பணியில் இருந்ததாக இதே கல்வெட்டு சொல்கிறது.[13]

அரக்கோணம் கைலாசநாதர் கோயிலைச் சேர்ந்த கல்வெட்டு, அவ்வூரைச்சேர்ந்த முள்ளிக்குடையான் ஆதித்தன் என்பார், தாமர்க் கோட்டத்து பல்கலத்துத் திருக்கூடளிச் சரத்து ஆழ்வார் கோயிலில் செகண்டிகை கொட்டுவார், காளம் ஊதுவார், உவச்சர் என்பார்க்கு நிலக்கொடை தந்ததைக் கூறுகிறது. காளம் ஊத இருவரும், மேளம் கொட்ட உவச்சர் இருவரும், செகண்டிகை கொட்ட ஒருவரும் இக் கோயிலில் இருந்ததை இக் கல்வெட்டால் உணரும்போதே 'செகண்டிகை' என்னும் (செயகண்டிகை) இசைக்கருவி நமக்கு அறிமுகமாகிப்போகிறது.[14]

கோயில்களில் வழிபாட்டின் போது சங்கு ஊதப்பட்டதற்குப் பல கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன:

''புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ''

என்னும் திருப்பாவை வரிகள் நினைந்து இன்புறத்தக்கன. இறைவனுக்கு மகிழ்வூட்டும் இச் சங்கொலியை எழுப்பிய கலைஞர்க்கு நிலக்கொடை தரப்பட்டதை மேல்சேவூர், தஞ்சாவூர், திருமழபாடி கல்வெட்டுகள் எடுத்துரைக்கின்றன.[15] திருச்சோற்றுத்துறை, திருவதிகை, திருவிடைவாசல், கழிஞ்சூர் போன்ற இடங்களிலுள்ள திருக்கோயில்களுக்குச் சங்குகளே கொடையாகத் தரப்பட்டுள்ளன. இச் சங்குகளின் மேல் கல்வெட்டெழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.[16]

தஞ்சைக் கோயிலுக்கு 286, 287 கழஞ்சுகளால் ஆன இரண்டு பொன்னாலான காளங்களை முதலாம் இராசராசன் கொடையாகத் தந்தான். இக் காளங்களுள் ஒன்றின் மேல் சிவபாதசேகரன் என்றும், இன்னொன்றின் மேல் ஸ்ரீராஜராஜன் என்றும் பொறித்து வைத்தான். இறைமேனிகள் திருவீதி வலம் வரும்போது இசைக்கப்படுவதற்காகவே இக் காளங்கள் தரப்பட்டன.[17] இது போலவே பொன்னாலும் பிறவற்றாலுமான பல இசைக்கருவிகளை இராஜராஜன் வழங்கியுள்ளான்.

தஞ்சைப் பெரியகோயிலில் வீணை வாசிக்கப்பட்டது போலவே கிடங்கில், திருந்துதேவன்குடி, திருக்கடவூர், வேம்பற்றூர் ஆகிய கோயில்களிலும் இறைவன் திருமுன் வீணை வாசிக்கப்பட்டது. இப்படி வீணை வாசித்து மகிழ்வித்தவர்களுக்காகத் தரப்பட்ட நிலக்கொடைகள் 'வீணைக்காணி' எனப்பட்டன.[18] ராஜசிம்மப் பல்லவன் காலத்தில் இசைக் கருவிகள் பலவாக இருந்தமையும் அவற்றை இயக்குவதில் இராசசிம்மன் வல்லவனாக இருந்ததையும் ஸ்ரீ வாத்ய வித்யாதரன் என்ற அவன் விருதுப் பெயர் மெய்ப்பிக்கிறது.[19] மகேந்திரவர்மனைப் போலவே பின்னால் வந்த ரகுநாத நாயக்கன், 'ரகு நாரேந்திரன்' என்ற வீணையை ஏற்படுத்தியதாகத் தஞ்சாவூர்க் கல்வெட்டொன்று கோடி காட்டுகிறது.[20]

சம்பந்தருக்கு இறைவன் தாளம் கொடுத்த கதையைச் சேக்கிழார் கூற அறிவோம்; திருவெண்ணெய் நல்லூர் கோப்

பெருஞ்சிங்கனின் கல்வெட்டொன்று, இக் கோயிலுக்கு உதயன் ஸ்ரீ கயிலாயமுடையான் என்பார், 'பித்தன் என்று பாடச் சொன்னான்' என்ற சொற்றொடர் பொறித்த இரு தாளங்களைவழங்கியதாகக்கூறுகிறது.[21] சுந்தரரை இறைவன் தடுத்தாட் கொண்டதும், அது போது இறைவனைச் சுந்தரர் 'பித்தன்' என்றதும், எப்படிப் பாடுவது என்று கேட்டவர்க்கு, நீ அழைத்த வண்ணமே 'பித்தா' என்று தொடங்கிப் பாடுக, என் இறைவன் வழிகாட்டி மகிழ்வித்ததும் சேக்கிழாரால் நமக்குச் சொல்லப்பட்ட வரலாறு.[22] தாளங்களைப் பற்றியும் ஒருசில கல்வெட்டுகள் எடுத்துரைக்கின்றன. அந்தநல்லூரிலுள்ள பரகேசரிவர்மனின் கல்வெட்டொன்று கரடிகை என்னும் தோல் கருவியை அறிமுகப்படுத்துவதுடன் செய கண்டிகை, காளம் முதவிய கருவிகளை இயக்குவார்க்குத் தரப் பட்ட கொடைகளையும் சுட்டுகிறது.[23]

கல்வெட்டுகளைப் போலவே, வரலாற்றுக்கு வெளிச்சமூட்டும் வல்லமை படைத்தவை செப்பேடுகளும், சிற்பங்களும் ஆம். அண்மையில் தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் கல்வெட்டியல் துறை இணைப்பேராசிரியர் புலவர் செ. இராசு அவர்கள், கும்பகோணத்திலுள்ள நாகேசுவரர் கோயில் எனப்படும் குடந்தைக் கீழ்க் கோட்டத்திலிருந்து ஒரு செப்பேட்டைப் படியெடுத்துப், படமெடுத்து, செய்தி வெளியிட்டிருக்கிறார்கள்.[24] கி. பி. 1735 - ஆம் ஆண்டில் துக்கோஜி என்னும் மராத்திய மன்னனால் வெளியிடப்பட்டிருக்கும் இச் செப்பேடு இசைக் கருவிகளின் களஞ்சியமாய்த் திகழ்கிறது. இதன் ஒருபுறம் கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டில் குடந்தைக் கோயில்களில் வாசிக்கப்பட்ட இசைக்கருவிகளின் வடிவும், மறுபக்கம் துக்கோஜியின் நிலக் கொடை அறிவிப்பும் உள்ளன. குடந்தையில் இருந்த இசைக் கலைஞர்கள் மையம் ஒன்றுக்கு துக்கோஜி நிலக்கொடை தந்ததுடன், இச் செப்பேட்டின் வாயிலாகக் கோயில்களில் பணியாற்றும் இசைக் கலைஞர்களுக்கு பொதுமக்கள் பெருமனதுடன் பொருளுதவி தரவேண்டுமென்றும், வேண்டியுள்ளார். விழாக்காலங்களில் வாசிக்கும் இசைக் கலைஞர்களுக்கு வழக்க



குடமுழவு

பக். 141



குழலிசைக்கும் ஆனாய நாயனார்



வீணாதர தட்சிணா மூர்த்தி
—பழுவூர். பக். 140



இசைக் கருவிகளைக் காட்டும் செப்பேடு.
பக். 138

மாகத் தரும் ஊதியம் தவிர, சிறப்பூதியம் தரவேண்டு மென்றும்,வாசிக்கப்படும் கருவிகளுக்கேற்ப இவ்வூதியவிகிதம் வேறுபடுமென்றும் கூறியிருப்பது துக்கோஜிக்கு இசையின் மீதிருந்த பற்றையும், பாசத்தையும் காட்டுகிறது.

இச் செப்பேட்டின் ஒருபுறத்தில், மேல் பகுதியில் யானைத் திருமகளும், அதன் இருபுறமும் கதிரவனும் நிலவு மென இறைத் திருமேனிகள் வடிக்கப்பட்டுள்ளன. அடுத்த வரிசையில் செப்பேட்டின் வல மூலையில் நந்தியொன்றும், அதையடுத்து ஆட வல்லானும், சிவகாமியும், அதையடுத்து சாரங்கபாணி தன் தேவியருடனும் காட்சியளிக்கின்றனர். இதைப் பார்க்கும் போது, இந்த இசைக் கலைஞர் மையம் குடந்தை நாகேசுவரர் கோயிலிற்கும், சாரங்கபாணி கோயி லுக்கும் வாசித்த கலைஞர்களின் வாழ்விடமாக இருந்தி ருக்குமோ என்று கருதத் தோன்றுகிறது. இதனையடுத்து ஐந்து வரிசைகளாகச் செப்பேடு பகுக்கப்பட்டுள்ளது. முதல் வரிசையில் வலப்புற மூலையில் நந்திகேசுவரரும், இடப்புற மூலையில் ஆஞ்சநேயரும் காணப்படுகின்றனர். இவர்களுக் கிடையில் பன்னிரண்டு இசைக் கருவிகள் வடிக்கப்பட் டுள்ளன. இரண்டாம் வரிசையில் பதினொரு கருவிகளும், மூன்றாம் வரிசையில் பதின்மூன்று கருவிகளும், நான்காம் வரிசையில் பதினொரு கருவிகளும், கடைசி வரிசையில் மூன்று கருவிகளும் காணப்படுகின்றன. மொத்தம் ஐம்பது வகை யான இசைக் கருவிகளைக் கொண்டுள்ள இச் செப்பேடு ஒரு வரப்பிரசாதமாகும். பல்வகை மத்தளங்கள், தபேலாக்கள், நாககரங்கள், தாளங்கள், வீணைகள், சிதார் போன்ற கருவிகள், ஊதுகுழல்கள், வங்கியங்கள், யாழ் போன்ற நரம்புக்கருவிகள் எனப் பல இசைக்கருவிகள் இதில் உள்ளன. சில கருவிகளை 'இவைதாம்' என இனம் கண்டுகொள்ள முடிவது போல், எல்லாவற்றையும் விளங்கிக்கொள்ள வாய்ப் பில்லாத நிலையில், செப்பேடு இவற்றின் பெயர்களைக் கொண்டிருக்கவில்லை. இச்செப்பேட்டில் காணப்படும் நாககரம் கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் தான் புழக்கத் திற்கு வந்ததென அறிஞர்கள் கருதுகின்றனர். பரதசங்கிரகம்,

"பூரிகை நாககுரங் பொற்சின்னம் எக்காளை
தாரை நவரிசங்கு வாய்வீணை—வீரியம்சேர்
கொம்புதித்தி காளை குழலுடன் ஈராறும்
இன்பார் துளைக்கருவி என்"

என்று பேசும்.[25]

கல்வெட்டுகள், செப்பேடுகள் போலவே சிற்பங்களும், செப்புத் திருமேனிகளும் கூட பல இசைக்கருவிகளை நமக்கு அடையாளம் காட்டுகின்றன. திருமாலின் கையில் இருக்கும் சங்கு, சிவபெருமானின் கைகளில் காணப்படும் துடி, கொட்டு முழவு, மத்தளம் போன்றவை குறிப்பிடத்தக்கன. எல்லா ஆடவல்லான் திருமேனிகளிலும், அவை சிற்பங்களானாலும் சரி, செப்புத் திருமேனிகளானாலும் சரி, இறைவனின் வலம் அல்லது இடப் பின்கையில் துடியிருப்பதைப் பார்க்கலாம். தமருகம், உடுக்கை, எனப் பல பெயர்களுடன் விளங்கும் இதிலிருந்துதான் எழுத்துகளும், நாதமும் பிறந்ததாக ஞானிகள் கூறுவர். தென்திசைக் கடவுள் என்று போற்றப் படும் தட்சிணாமூர்த்தித் திருமேனிகளில் வீணாதர தட்சிணா மூர்த்தி என்றொருதிருத்தோற்ற அமைப்பு உண்டு. கீழ்வேளூர் கேடிலியப்பர் கோயிலிலும், பழுவூர் அவனிகந்தர்ப்ப ஈசுவரத் துத் திருக்கோயிலிலும் வீணாதர தட்சிணாமூர்த்தியைப் பார்க்கலாம். கழுகு மலையில் அற்புதமான தட்சிணாமூர்த்தி சிற்பம் இருக்கிறது. அமர்ந்த வண்ணமே மத்தளம் கொட்டு வது போல் அமைந்த அதியற்புதமான அழகுத் திருக்கோலம் அது. ஊர்த்வ தாண்டவத் திருக்கோலத்தில், இறைவனின் இடமுன்கை சிறு முழவொன்றைப் பற்றியபடி இருக்கும். வல முன்கை குச்சியொன்று கொண்டு அதை முழக்கும். திருவெறும் பூர்க் கோயில் தேரொன்றில் இது போன்ற மரச்சிற்பம் காணப்படுகிறது. இதன் பக்கங்களில் திருமால், நான்முகன், நந்திகேசுவரர், காளி போன்ற தெய்வங்களும் இசைக்கருவி களை இயக்கியபடி ஆடல் கோலத்தில் காணப்படுகின்றனர். திருமாலும் கூட தன் முன்கைகளால் சிறு மத்தளமொன் றைக் கொட்டி மகிழ்வதை இச் சிற்பம் காட்டுகிறது. இதில் நான்முகன் தாளமிசைக்கிறார்.[26] திருச்சி பூலோகநாத சாமி

திருக்கோயிலில் உள்ள ஆடவல்லானின் செப்புத் திருமேனி ஒன்றில் காரைக்கால் அம்மையாரின் வடிவம் காணப்படுகிறது. தன்னிரு கைகளிலும் தாளங்களைக் கொண்டு இறைவனின் ஆடலுக்கு அம்மை இசையெழுப்பும் இவ்வதிசய செப்புத் திருமேனி போன்று வேறெந்தக் கோயிலிலும் காண முடியாது.[27]

*தத்துவம் ஆட, சதாசிவம் தானாட, சித்தமும் ஆட,* சிவசக்தி தானாட, வைத்த *சராசரம் ஆட, மறையாட,* அத்தனும் *ஆடினான் ஆனந்தக்கூத்தே* என்ற திருமூலரின் திருக்கூத்துத் தரிசன வரிகளை மெய்ப்பிக்கும் ஆடவல்லான் திருமேனிகளில் உடனிருப்போராய்க் காட்டப்படும் முனிவர்களும், பூதகணங்களும், நந்திகேசுவரரும் பல இசைக்கருவிகளுடன் காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கது.[28] செந்தலை சுந்தரேசுவரர் திருக்கோயில், திருச்சி பூலோகநாதசாமி திருக்கோயில், மேலப் பெரும்பள்ளம், கடலூர் தீர்த்தநகரி சிவக்கொழுந்தீசுவரர் திருக்கோயில் போன்றவற்றில் காணப்படும் ஆடவல்லான் செப்புத் திருமேனிகளில் 'குடமுழா' காணப்படுகிறது. இதைப் பஞ்சமுக வாத்தியமென்பார்கள். சதாசிவனாகத் தோன்றும் சிவபெருமானின் ஐந்து திருமுகங்களையே இக் குடமுழாவின் ஐந்து முகங்களும் குறிப்பதாகக் கொள்ளுவர். சிருஷ்டியைக் குறிக்கும் சத்யோஜாதம், ஸ்திதியைக் குறிக்கும் வாமதேவம், சங்காரத்தை வெளிப்படுத்தும் அகோரம், அனுக்கிரகம் அளிக்கும் ஈசானம், மற்றும் தத்புருஷம் என்னும் ஐந்து முகங்களையே ஐந்து தட்டும் தளங்களாய்க் கொண்ட குடமுழவு, இன்றும் திருவாரூர்க் கோயிலில் நடைபெறும் அசபா நடனத்தின் போது இசைக்கப்படுகிறது. திருத்துறைப்பூண்டிக் கோயிலிலும், திருவாரூர்க் கோயிலிலும் இதுஉள்ளது. இதையே சிற்ப வடிவில் ஆறை வடதளி, கங்கை கொண்ட சோழபுரம், திருப்பரங்குன்றம், திருமழபாடி, தாராசுரம், விருத்தாசலம், புள்ளமங்கை முதலிய இடங்களிலுள்ள திருக்கோயில்களில் காணலாம். திருவலஞ்சுழியிலும், திருவாரூரிலும் உள்ள நாயக்கர் கால ஓவியங்களிலும் குடமுழா இடம் பெற்றுள்ளது. மயிலாடுதுறை

அருகே திருமணஞ்சேரி என்னும் சிற்றூரில் குடமுழா வாசித்த ஒருவரைக் கல்வெட்டொன்று வெளிப்படுத்துகிறது.[29]

வைத்தீசுவரன் கோயிலில் உள்ள ஆடவல்லான் திருமேனி சிறப்பானது. இதில் கணங்களுக்குப் பதிலாக முனிவர்கள் காட்டப்பட்டுள்ளனர். நீண்ட தாடியுடன் காணப்படும் இம் முனிவர்களுள் வலப்புறம் இருப்பவர் குடமுழா வாசிக்கிறார்; இடப்புறம் இருப்பவர் வீணையுடன் காட்சியளிக்கிறார். தாளத்திற்குப் பதிலாய் இந்த ஆடவல்லான் படிமம் வீணையைக் கொண்டிருப்பது ஒரு புதுமையும், சிறப்புமான மாற்றமாகும். தோளில் சாய்த்து, கையிலேந்திய வீணையுடன் தான் எழுப்பும் இசைக்குத் தானே மயங்கியவராய், இறைவனின் ஆடலில் களிப்புப் பேரலைகள் எழும்ப, அதில் சிக்கித் தடுமாறும் சித்தத்தினராய்க் காட்சியளிக்கும் இம்முனிவரின் எழிலார்ந்த வடிவம் இதயமள்ளும் அழகாம்.

கடவுளர் திருமேனிகள் தவிர மனிதர்களும் இசைக்கருவிகளுடன் சிற்ப வடிவங்களில் காட்சி தருகின்றனர். தில்லைக் கோயில் இசைக் கலைஞர் சிற்பங்களுக்குப் பெயர் பெற்றது. தில்லையிலுள்ள சிவகாமசுந்தரி கோயில் வெளிச்சுற்றில், திருச்சுற்று, மாளிகைச் சுவரின் அடிப்புறத்தில், மகளிரின் ஆடற்கோலங்கள் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. ஆடும் மகளிரின் ஆட்ட வேகத்திற்கேற்ப அருகில் நிற்கும் ஆடவக் கலைஞர்கள் மத்தளங்களை இயக்குகிறார்கள். அப்பப்பா! எத்தனை விதமான மத்தளங்கள்! ஒவ்வொன்றும் ஓர் அமைப்பு! நீள, அகலங்களில் எத்தனை மாறுதல்கள்!

இதே கோயிலின் முன் மண்டபத்தில், வலப்பக்கத் தூண்களில் இரண்டு பெண்கள் நாககரம் வாசிப்பது போல் சிற்பங்கள் இருப்பதாக மதுரைப் பல்கலைக்கழக இசைப் பேராசிரியர் திரு. வீ. ப. கா. சுந்தரம் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். தோளில் கட்டித் தொங்கவிடப்பட்டுள்ள பம்பை, நாகவணைசு, புல்லாங்குழல் போன்ற இசைக் கருவிகளையும் சிவகாமசுந்தரி கோயில் மண்டபத்தில் காணலாம்.[30]

திருமங்கலத்தில் ஆனாயநாயனார் புல்லாங்குழல் வாசிப்பது போல் சிற்பமும், செப்புத் திருமேனியும் உள்ளன;

திருச்சி அருங்காட்சியகத்தில் உள்ள கண்ணன் குழலூதும் சிற்பமும் மிக அற்புதமானதாகும். இதில் விரல் மாற்றி இசைக்கும் வித்தை மிக அழகாக, நுணுக்கமாகக் காட்டப் பட்டுள்ளது. பட்டீசுவரம் கோயிலில் இரு நரம்புகளுடன் அமைந்த ருத்திர வீணைச் சிற்பத்தைக் காணலாம். திரு மயத்தில் உள்ள திருமால் கோயிலில் எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இருடியாழ் செதுக்கப்பட்டுள்ளது. சிதார் போன்ற வீணை வகைச் சிற்பங்களைப் பல கோயில்களில் காணலாம். ஆறை வடதளி, குடந்தை நாகேசுவரர் கோயில், திருப்பரங் குன்ற முன்மண்டபம், சிவகாமசுந்தரி கோயிலின் முன் மண்டபம் முதலியன சிறந்த எடுத்துக் காட்டுகள். நெல்லை, தென்காசி, குற்றாலம் கோயில்களில் சாரங்கி உள்ளது. ஓது வார் தேவாரம் பாடி இதை இசைத்துக்கொள்வதாகக் கூறுவர்.

சிவகாமசுந்தரி கோயிலில் நடன நங்கைக்குப் பக்க வாத்தியமாய் கைச்சதங்கை காட்டப்பட்டுள்ளது. கூப்பிய இரண்டு கைகளுக்குள்ளும் சலங்கை மணிகளை வைத்து, ஆட்டத்தின் தாளத்திற்கேற்ப, குலுக்கி ஒலியெழுப்புவார் களாம். இதைக் 'கைச்சதங்கை' என்று குறிப்பிடுகிறார்கள். சிவகாமசுந்தரி கோயிலில் குழித்தாளம், இலைத்தாளம் எனத் தாளவகைகளும் சிற்பமாகியுள்ளன.[81]

திருநெல்வேலியில் நாங்குநேரியிலுள்ள செண்பகராம நல்லூர்க் கோயிலில் $4\frac{1}{2}$ அடி உயரக் கல்தூண் ஒன்று உள்ளது. இதிலே முக்கோணத் துளையொன்று சற்று வளைந்த நிலையில் காணப்படுகிறது. இது தூணின் மூன்றில் ஒரு பங்கு உயரத்தில் அமைந்துள்ளது. இருபக்கமும் திறந்துள்ளது. இத்துளையின் ஒரு புறம் வாய் வைத்து ஊதினால் சங்கொலியும், மறுபுறம் வாய் வைத்து ஊதினால் எக்காள ஒலியும் கேட்கின்றன. இதையும் ஒர் இசைக் கருவியாய்ப் பயன்படுத்தியிருப் பார்களோ என்று ஐயமெழுகிறது.[82] ஆழ்வார் திருநகரியில் கல் நாகசுரம் உள்ளது. இதை வாசிக்கலாம்.[83] செய்யூர்க் கோயிலில் இன்றும் கூட பிரமோத்சவ ஆண்டு விழாவில் ஆண்டுக்கொரு முறை சர்வ வாத்யம் என்றோர் இசைக் கருவி

இசைக்கப்படுகிறது. இதை இசைத்துறை அறிஞர்கள் 'பல்லியப் படைப்பு' என்கிறார்கள்.[84]

படித்த வரையிலும், பார்த்த வரையிலும், கேட்ட வரையிலுமான தகவல்கள் தந்த உண்மைகளே இங்குச் செய்திகளாகியுள்ளன. தேடிப் புகுந்தால், அள்ளக் குறையா நிதியமாய், இன்னும் எத்தனையோ சிறப்புகள் கிடைக்கலாம். தமிழகத்தில் கலைகளுக்குப் பஞ்சமில்லை! கலைகளில் பிறந்து வளர்ந்து, அதிலேயே ஊறிப்போன சமுதாயம் இது: அதனாலேயே அறிவியலின்பால் அதிக நாட்டமின்றித் தளர்ந்துபோன சமுதாயமும் கூட. இன்றளவில், அறிவியலின் துணையுடன், ஆர்வமும், ஈடுபாடும் கொண்டவர்கள், இத் தமிழ்த் திருமண்ணில் இருந்து மறைந்துபோன இனிய வரலாறுகளை வெளிப்படுத்தித் தீருவம்தென முடிவுகட்டிப் புறப்படுவார்களேயானால், எத்தனையோ இருண்ட பகுதிகள் வரலாற்று வெளிச்சத்துக்கு வரும். வாழ்ந்து வீழ்ந்த ஒரு மாபெரும் சமுதாயத்தின் முழுமையான படப்பிடிப்பும் நமக்குக் கிடைக்கும்.

———

1. Dr. V. Premalatha, Music through the Ages, 1985, p.291.
2. Dr. V. Premalatha, Music through the Ages, 1985, p. 292.
3. Ibid., p. 292-294.
4. A. R E. 129. of 1914.
டாக்டர் இரா. நாகசாமி, தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள். தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1969, பக் 48 49.
5. டாக்டர் இரா. நாகசாமி, இராஜராஜன், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு. 1978, பக். 15.
6. டாக்டர் இரா. நாகசாமி. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறைவெளியீடு, 1969, பக். 53.
7. மேற்படி., பக், 89.

8. டாக்டர் இரா. நாகசாமி, தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1969, பக். 90, 91.

9. மேற்படி. பக். 90.

10. மேற்படி. பக். 90, 91.

11. மேற்படி., பக், 91.

12 மேற்படி., பக்.91, 92.

13. மேற்படி., பக். 92.

14. கி. ஸ்ரீதரன், கோயில்கள் வளர்த்த இசைக்கலை, வானொலிப் பேச்சு.

15. டாக்டர் இரா. நாகசாமி, தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1969, பக். 92. இராமச்சந்திரன், திருமழபாடி, தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1978, பக். 126.

16. கி. ஸ்ரீதரன், கோயில்கள் வளர்த்த இசைக்கலை, வானொலிப் பேச்சு.

17. டாக்டர் இரா. நாகசாமி, இராஜராஜன், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1978, பக். 13.

18. கி. ஸ்ரீதரன், கோயில்கள் வளர்த்த இசைக்கலை, வானொலிப் பேச்சு.

19. டாக்டர். மா. இராசமாணிக்கனார், பல்லவர் வரலாறு, கழக வெளியீடு, 1977, பக். 153.

20. கி. ஸ்ரீதரன், கோயில்கள் வளர்த்த இசைக்கலை, வானொலிப் பேச்சு.

21. மேற்படி.

22. திருத்தொண்டர் புராணம், காசி மட வெளியீடு, 1982. பக். 27.

23. S. I. I. Vol III., Ins. No. 139.

24. The Hindu, 16-5-1986.

25. மயிலை சீனி. வேங்கடசாமி. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், 1956, பக். 104.

26. டாக்டர் இரா. கலைக்கோவன், எழில் கொஞ்சும் எறும்பி யூர், செந்தமிழ்ச் செல்வி, அக்டோபர் 1986, பக். 80–81.

27. Dr. R. Kalaikkovan, At the lotus feet, Indian Express; dated 23-11-1985.

28 டாக்டர் இரா. கலைக்கோவன், ஆடல் காணீரோ, தினமணி கதிர், 28-7-1985.

29. A. R. E. 17 of 1914.

30. பாரதிதாசன் பல்கலைக்கழக அறக்கட்டளைச் சொற்பொழி வின் போது இசைத் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் வீ. ப. கா. சுந்த ரம் அவர்கள் கூறிய செய்தி.

31. பாரதிதாசன் பல்கலைக் கழக அறக்கட்டளைச் சொற்பொழி வின் போது இசைத் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் வீ. ப. கா. சுந்த ரம் அவர்கள் கூறிய செய்தி.

32. சோமலெ, திருநெல்வேலி மாவட்டம், 1965, பக். 303.

33. மேற்படி., பக். 295.

34. பாரதிதாசன் பல்கலைக் கழக அறக்கட்டளைச் சொற்பொழி வின் போது இசைத் தமிழ்ப்பேராசிரியர் முனைவர் வீ. ப. கா. சுந்த ரம் அவர்கள் கூறிய செய்தி.

# 10. கோயிலடி மக்களின் கோபம் என்ன ?

இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும் பொழிலார்ந்த மதில்கள் சூழ் திருப்பேர் நகர் என்று பாராட்டிப் போற்றப் படும் இன்றைய கோயிலடி, திருச்சி திருவையாறு சாலையில், கல்லணையிலிருந்து பன்னிரண்டு கிலோ மீட்டர் தொலைவில் காவிரியின் வடகரையில் அமைந்துள்ளது. புது மணப் பெண் போல் குடமுழுக்கின் மணம் மாறா வண்ணப் பூச்சுகளுடன், மாடக் கோயிலாய் அமைந்திருக்கும் பெருமாள் கோயிலொன்றும்,[1] தேடித் தவித்துக் கண்டுபிடிக்க வேண்டிய நிலையில், ஒரு மறைவில், பரிதாபத்துக்குரிய கோலத்தில், பழுதுபட்டுக் கொண்டிருக்கும் சிவன் கோயிலொன்றும் இக் கோயிலடியில் குடிகொண்டுள்ளன. அப்பக் குடத்தான் என்று ஆசையோடு அழைக்கப்படும் பெருமாளைப் பார்த்து விட்டுத், 'திவ்ய ஞானேசுவரர்' என்ற பெயர் சூட்டப்பட்டதால் 'நமக்கெதற்கு ஞானம்' என்று பொதுமக்களால் முற்றிலும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் கவினிழந்து கிடக்கும் சிவபெருமானைப் பார்க்கும் போது கண்ணிமைகள் நனைவதைத் தவிர்க்க முடியவில்லை,

ஊரின் ஒதுக்குப்புறத்தில், மதிலொன்றால் சூழப்பட்டு, யாரும் தப்பித் தவறிக் கூட வந்துவிடக் கூடாது என்ற கனத்த கவனத்துடன் பெரும்பாலும் பூட்டப்பட்ட நிலையிலேயே காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும் இக் கோயிலைப் பார்க்கச் சென்ற மூன்று முறையும், தொலைவிலிருக்கும் சிவாச்சாரியார் கருணை கொண்டு வந்து கதவுகளைத் திறக்கும் வரை குறைந்தஅளவு அரைமணி நேரமாவது காத்திருந்து நம் பொறுமையுணர்வைப் புடம்போட வேண்டியிருந்தது. காலை பத்து மணியளவில் கூட கோயில் பூட்டப் பட்டுள்ளதே என்று நொந்துகொண்ட நம்மிடம், ''எப்போதாவது அத்தி பூத்தாற்போல் வரும் உங்களைப் போன்ற ஓரிருவருக்காக தினமும் இக் கோயிலில் 'வெறிச்சென்று' எத்தனை

மணி நேரம் தனியராய் ஒருவர் காத்திருக்க முடியும்?'' என்று நம்மைவிட அதிகமாய் நொந்துகொண்டார் கோயிலைச் சார்ந்த இன்னொருவர். திவ்ய ஞானேசுவரரின் கதியை நினைத்தபோது துன்பம் தொண்டையை அடைத்தது.

மையக் கோயிலின் முன்பகுதி ஒரு மேடை மீது எழும்பியிருந்தது. தரைமட்டத்திலிருக்கும் கருவறையும், உள் மண்டபமும் மட்டுமே முற்காலச் சோழர்களுடையன. மகா மண்டபம் பிற்காலச் சோழர்களுடைய கட்டடக் கலை முறையில் உள்ளது. அதற்கு முன்னால் போடப்பட்டுள்ள தகரக் கொட்டகை அண்மைக் காலத்தது. கோயிலின் திருச்சுற்று வழக்கம்போல், ஆசையோடு கவனிப்பார் யாருமில்லாக் காரணத்தால், அச்சுறுத்தும் நிலையில் அவலமாய் இருக்கிறது. கல்வெட்டுகளைப் படிக்கத் திருச்சுற்று வருவது அவசியம் என்ற நிலையில் கல்லையும், முள்ளையும் கருதாமல் திருச்சுற்று வந்தோம்.

மகா மண்டபத்தின் தெற்குச் சுவரில் விக்கிரம சோழன் கல்வெட்டு புன்னகைத்தது. அதையொட்டி மகாமண்டபத்துக்குள் நுழைய ஆறு படிகளுடன் கூடிய தெற்கு வாசல், உள் மண்டபத்தின் புறச் சுவர்களில் தென்புறம் நின்ற கோலப் பிள்ளையாரும், வடபுறத்தில் மகிடாசுரனின் தலை மீது கொற்றவையும் தென்பட்டனர். கருவறையின் புறச்சுவர்க் கோட்டங்களில் தென்புறம் தென்திசைக் கடவுள்; வல முன் கை சின்முத்திரை காட்ட, இட முன்கை ஏடு கொண்டிருக்க, வலப் பின்கையில் முத்தலை ஈட்டியும், இடப் பின்கையில் பாம்புப் பாசமுமாய் இருந்த கோலத்தில் இருக்கும் இவ்விறை வடிவின் இரு புறமும் ராசகேசரியின் கல்வெட்டொன்று இரு பகுதிகளாய்க் காட்சியளிக்கிறது. மேற்குக் கோட்டத்தில் அம்மையப்பரின் அழகிய வடிவம். ஆதித்தன், பராந்தகன் காலத்துக்கே உரிய கலை நயத்துடன் மிளிரும் இவ் வடிவத்தின் பின்புறம் நம்மைப் பார்க்கத் திருப்பிய முகத்துடன் காளை நிற்கிறது: அதன் தலை மீது இறைவனின் வலமுன்கை வலப்பின்கையில் பரசு. இறைவியின் கை மலர்மொட்டு கொண்டுள்ளது. ஆணும்பெண்ணும் சரிநிகர் சமானம்என்னும்

சமுதாயக் கோட்பாட்டை வலியுறுத்தும் இந்த அழகுச் சிற்பம் கலைநுணுக்கக் களஞ்சியமாகும். குறிப்பாக இதன் முகப் பொலிவைப் பார்த்துக்கொண்டேயிருக்கலாம். இத்தனை நளினமான சிற்பம் நாடுவாரும், நயந்து புரப்பாரும் இல்லாக் காரணத்தால் நலியத் தொடங்கியுள்ளது. வடபுறக் கோட்டத்தில் நான்முகன்.

மேற்குப்புறச் சுற்றில் தென்கோடியில் பிள்ளையாரும், வட கோடியில் முருகனும் தனித்தனிக் கோயில்களில் சுற்றாலைத் தெய்வங்களாய் அமர்ந்துள்ளனர். உள் மண்டபத்தருகே சண்டேசுவரருக்கென்று சிறு உட்கோயி லொன்று உள்ளது.

திருச்சுற்றின் வடபுற முடிவில் மகா மண்டபத்தின் கீழ்ப் பகுதியிலும், அண்மைக் கால அமைப்பாகக் காணப் படும் மேடையின் கீழ்ப் பகுதியிலும் வைத்துக் கட்டப்பட் டுள்ள இரண்டு பெரும் கற்களில் எழுத்துகள் காணப்படவே நெருங்கிப் பார்த்தோம். கல்வெட்டுக் கருவூலங்களான அவை கட்டடப் பகுதிகளாகித் தலை கீழாக வைக்கப்பட்டி ருந்தன. வௌவாலாக மாறினால்தான் நாம் அதைப் படிக்க முடியும். கோயிலைச் சார்ந்தவரிடம் கேட்டபோது, 'இதை விட வேடிக்கையை உள்ளே வந்து பாருங்கள்' என்றழைத் தார். மகா மண்டபத்திற்குள் நுழைந்தோம். என்ன கொடு மையான காட்சி! தரையில் பாவியுள்ள கற்களில் ஏறத்தாழ ஒன்பது நீளமான கற்களில் எழுத்துகள், கல்வெட்டுகள் பொறிக்கப்பட்ட கற்களை எந்த மகானுபவரோ தள வரிசை யாக்கி மகிழ்ந்திருக்கிறார். இந்த நாட்டின் இனிய வரலாற்றை எல்லோரும் மிதித்து மகிழ அடிப்படை போட்ட அந்த ஊர் பேர் தெரியாத மனிதரை நொந்தபடியே மகா மண்டபத் தைக் கண்களால் துழாவினோம். வடகிழக்கு மூலையில் நவக் கிரகமும், அதையடுத்து வைரவரும் நிறுவப்பட்டுள்ளனர். வைரவர் வலப்பின்கையில் பரசுவும், இடப்பின்கையில்பாசமும் கொண்டு, இடமுன்கையில் தலையோட்டுடன் நிற்கிறார். வலமுன்கை உடைந்துள்ளது. சிறிய திருமேனியாய் நிற்கும் அவர் தம்திருவடிகளை ஒட்டி நாயொன்று நிற்கிறது.

இம் மண்டபத்தின் வடபுறத்தில் தெற்குப் பார்த்த நிலையில் கருவறையும் உள்மண்டபமுமாய் இறைவியின் திருமுன் அமைந்துள்ளது. அகிலாண்டேசுவரியாய்ப், பின்கைகளில் மலர் மொட்டும், முன்கைகள் காக்கவும், அருள் செய்யவும் குறிப்பு காட்ட, அம்மை அழகுத் தேவியாய்க் கருவறையில் காட்சியளிக்கிறார். மகா மண்டபத்தின் தென்மேற்குப் புறத்தில் பிள்ளையாரும், வடமேற்குப் புறத்தில் அப்பரும் உள்ளனர்.

உள்மண்டப வாயிலின் இருபுறமும் சோழர் காலத்து வாயிற்காப்போர் திருமேனிகள், சிற்பக்கலைச் சாதனைகளாக நிற்கின்றன- நேர்கொண்ட பார்வையுடன் காட்சி தரும் இத் திருமேனிகளில் வலப்புறம் இருக்கும் வடிவத்தின் வலக்கை சுட்டு முத்திரை காட்ட இடக்கை கதையின் மீது பொருந்தியுள்ளது. இடப்புறம் இருக்கும் வடிவம் வலக் கையைக் கதை மீது வைத்தபடி, இடக்கையை வியப்பு முத்திரையில் விரித்துள்ளது. காதுகளைப் பனையோலைக் குண்டலங்கள் அழகு செய்ய இலேசான சிரிப்பும், அந்தச் சிரிப்பினூடே உறுதியான ஒரு கண்டிப்பும் காட்டும் கவின் வடிவம் இது. எப்படித்தான் கல்லில் இத்தனை உணர்வலைகளைப் படம் பிடித்தன்ரோ தெரியவில்லை !

கருவறையில் இறைவன் தனியராய், இலிங்கத் திருமேனியராய், கோயிலடி மக்களின் கோபமென்ன என்பதைப் புரிந்துகொள்ள விரும்புபவர் போல், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் பூட்டப்பட்ட கதவுகள் திறக்கப் படாவா, புன்னகை பூத்தமுகங்களுடன் மக்கள் கூட்டம் வாராதா? என்று ஏங்கித் தவித்தவராய் எழுந்தருளியிருக்கிறார். விமானத்தின் சிகரம் அரை வட்ட வடிவில் அமைந்துள்ளது.

இக் கோயிலில் இருந்து ஏழு கல்வெட்டுகள் கல்வெட்டுத் துறையினரால் படியெடுக்கப்பட்டுள்ளன.[2] ஆனால் திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் இக் கோயிலில் மூன்றாம் நந்திவர்மன், நிருபதுங்கவர்மன், முத்தரையர் கல்வெட்டுகளும் இருப்பதாக மாற்றிக் கூறியுள்ளார்.[3] இவர் குறிப்பிடும்

பல்லவ மன்னர்களின் கல்வெட்டுகள் திருச் சென்னம்பூண்டி யிலுள்ள திருச்சடைமுடியுடைய மகாதேவர் கோயிலில் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.[4]

திவ்ய ஞானேசுவரர் கோயிலில் இருந்து படியெடுக்கப் பட்ட ஏழு கல்வெட்டுகளுள் மன்னன் பெயர் தெரியாத ராசகேசரிக் கல்வெட்டுகள் மூன்று; முதலாம் குலோத்துங் கனுடையது ஒன்று; விக்கிரம சோழனுடையது ஒன்று; மூன்றாம் இராசேந்திரனுடையது ஒன்று; சடாவர்மன் சுந்தரபாண்டிய தேவருடைய கல்வெட்டு ஒன்று. இவ்வேழு கல்வெட்டுகளுமே பல சுவையான தகவல்களைப் பகிர்ந்து கொள்கின்றன.

'திவ்ய ஞானேசுவரர்' என்ற பெயர் கல்வெட்டுகளில் இல்லை. திருப்பேர்த்துறை மகாதேவர், திருப்புறத்துப் பெருமானடிகள், திருப்புறத் துறைவார் என்றுதான் இறைவன் குறிக்கப் பெறுகிறார். கோயிலடி, ராசகேசரிக் கல்வெட்டுகளில் எயில் நாட்டுத் தேவதானமான திருப்பேர் என்றும், முதலாம் குலோத்துங்கன் கல்வெட்டில் பாண்டி குலாசனி வளநாட்டு எயில் நாட்டு பிரம்மதேயமான திருப் பேர் என்றும் அறிமுகப்படுத்தப்படுகிறது. ராசகேசரியின் காலத்தில் தேவதானமாக இருந்த இவ்வூர் முதலாம் குலோத் துங்கன் காலத்தில் பிரம்மதேயமாக மாறியிருக்கிறது.

இக் கோயிலில் உள்ள கல்வெட்டுகளில் காலத்தால் பழமையானவை ராசகேசரியின் கல்வெட்டுகளே. மன்னன் பெயர் தெரியாத ராசகேசரியின் மூன்று கல்வெட்டுகளுள் ஒன்று ஆட்சியாண்டும் தெரிந்து கொள்ள முடியாத நிலையில் உள்ளது. இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளிலேயே மிக நீண்டதும், அதிக மக்கள் பெயர்கள் கொண்டு விளங்குவதும் இக்கல்வெட்டுதான்.[5] எயில் நாட்டுத் தேவதானமான திருப் பேர் சபையோரிடமிருந்து, கிளியூர் நாட்டு சிறுதவூருடையான் வேளான் வீர நாராயணனான செம்பியன் வேதிவேளான் என்பவர், எண்பது கழஞ்சு பொன்னுக்கு நிலங்களை இறை யிலியாகப் பெற்று அதை இக்கோயிலாரிடம் ஒப்புவித்தார்.

இந்நிலங்களின் ஒரு பகுதியைக் கோயிலில் மேளம் இசைக்கும் நக்கன் குமரன், காடன் வேம்பன், காகுத்தன் சருப்பேதி முதலிய எண்மருக்கு உவச்சக் காணியாக வைத்தார். மேளம் கொட்டுபவர்களை உவச்சர் என்பது அக்கால வழக்கம். இது தவிர இருந்த நிலத்தை இக்கோயில் இறைவர்க்கு நாழிகைப் புறமாகவும், திருவிழாப் புறமாகவும் தந்த இப்பெருமகனே இக்கோயிலைக் கற்றளியாக்கிய பெருமைக்குரியவர். இக் கல்வெட்டில் சபைக்கு நிலம் விற்றவர்களாகப் பலர் பெயர்கள் காணப்படுகின்றன. காச்சுவன் அங்கி வாசுதேவன், ஆரிதன் செட்டிகுமரன், அவர் தம்பியர் நால்வர், காச்சுவன் நாராயணன் பத்மனாபன், பாலாசிரியர்கள் பிரம நீல கண்டன், கண்ட நீலகண்டன், நாராயணன் பிரமன், மற்றும் காச்சுவன் நக்கன் செட்டி, கவுசியன் பட்டனங்கி தாமோதரன் என விற்றவர் பெயர்களும், இந்த நில விலையாவணம் எழுதப்பட்டதற்குச் சான்றாளர்களாய் நின்றதாகப் பாலாசிரியர்கள் சாத்தன் கள்வன், நக்கன் சோமன், குமரன் நீலகண்டன், காவிதி அலங்காரப் பிரியனான் கேசவநந்தி மற்றும் மாமாத்திரன் ஆத்திரயன் மார்த்தாண்ட கண்டன்எனப் பலர் பெயர்களும் உள்ள இக் கல்வெட்டில் ஊர் நடுவனாக பிரம்மப் பிரியனான மாறன் சாத்தன் குறிக்கப் பெறுகிறார். விற்கப்பட்ட நிலத்தின் எல்லைகளைக் குறிக்கும் போது பராந்தகன் வாய்க்கால், சுந்தர சோழ மங்கலம் என்னும் பெயர்கள் கூறப்படுகின்றன.

இராசகேசரியின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு செம்பியன் வேதி வேளான் திருப்புறத்து உறையும் இறைவனுக்குத் திருக்கற்றளி எழுப்பிய செய்தியைச் சொல்வதுடன் இக்கோயில் இறைவர்க்குப் பல்வகைப்பட்ட அறங்களைச் செய்வதற்காக, ஊர்ச்சபையிடம் இப்பெருமகன் நிலம் விலைக்குப் பெற்று அதைக் கோயிலாரிடம் ஒப்புவித்ததையும் எடுத்துரைக்கிறது. இறைவனுக்கு மூன்று சந்திக்கும் கறியமுது, நெய்யமுது, தயிரமுது, அடைக்காய் அமுது, வெற்றிலை மூன்றடுக்கு, சர்க்கரை வட்டு மூன்று

ஆகியவை படைப்பதற்கும், திருமேல்பூச்சு சந்தனத்திற்கும், இவை தவிர மூன்று சந்தியிலும் எரியும்படி சந்தி விளக்குகள் நந்தா விளக்குகள் இரண்டு, திருப்பலிச் சடங்கிற்குப் பிடி விளக்குகள் இரண்டு, கதிரவன் மறைந்த பிறகு திருக்காப்பு கொள்ளுமளவும் திருமண்டபத்தில் எரிய விளக்கு ஒன்று ஆகியவற்றுக்கும், இந்நில வருவாய் கொண்டு, கோயிலார் ஏற்பாடு செய்ய ஒப்புக்கொண்டதின் பேரில் செம்பியன் வேதிவேளான் இந்நிலத்தைக் கோயிலாரிடம் ஒப்புவித்ததாகக் கல்வெட்டு எடுத்துரைக்கிறது.[6] இவ் வள்ளல் பெருமகனின் உயரிய நோக்கும், இறைப்பற்றும் நெஞ்சை நெகிழ்விக்கின்றன. இதே பெருமகன் திருச்சிக்கு அருகிலுள்ள திருஎறும்பியூர்த் திருக்கோயிலுக்குச் செய்திருக்கும் அறங்கள் ஒன்றிரண்டல்ல! திருஎறும்பியூர்க் கல்வெட்டுகள் இவரைப்பற்றிப் போட்டி போட்டுக்கொண்டு புகழ்ந்துரைக்கின்றன.[7]

இக் கோயிலில் உள்ள ராசகேசரியின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு[8] இவ்வூர்ப் பெருங்குறி சபை இவ்வூர்ப் பெரிய கோயிலின் தெற்கிலுள்ள புன்னை மரத்தின் கீழ்க் கூடியதாகத் தெரிவிக்கிறது. திருக்கோயிலுடையான் ஓமயிந்தன் முன்னூற்றுவன் பள்ளியான் கரணமாணிக்கம், திருக்கோயிலுடையான் ஓமயிந்தன் நாராயணன் முந்நூற்றுவன், திருக்கோயிலுடையான் ஓமயிந்தன் நாகேந்திரன் திருவாலன் ஆகியோர் இக்கோயில் இறைவனுக்கு அர்ச்சனா போகமாக மூன்று மா நிலம் தந்த செய்தி இக் கல்வெட்டால் அறியக் கிடக்கிறது. பொரொசக்குடி என்னும் ஊரின் பெயரும் இக் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. இக் கல்வெட்டு முழுமையடையவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இம்மூன்றனுள் செம்பியன் வேதிவேளானைக் குறிக்கும் கல்வெட்டுகளுக்குரிய ராசகேசரி ஐயத்திற்கிடமின்றிக் கண்டராதித்தனே எனலாம். திருஎறும்பியூர்க் கல்வெட்டுகளுடன் ஒப்பு நோக்கும்போது இந்த உண்மை புலப்படுகிறது.[9] இதைத் திரு என். சேதுராமனும் தம் நூலில் விளக்கியுள்ளார்.[10] மூன்றாவது கல்வெட்டு இராசகேசரியின்

பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ளது. மெய்க்கீர்த்தியில்லாத இக்கல்வெட்டு முதலாம் இராசராசனுக்கு முற்பட்ட ஒரு ராசகேசரியினுடையது. முதலாம் இராசராசனுக்கு முற்பட்ட ராசகேசரிகளுள் உயரிய ஆட்சியாண்டுடையவர்கள் இருவரே. ஒருவர் முதலாம் ஆதித்தன்; மற்றவர் சுந்தரசோழர் என்னும் இரண்டாம் பராந்தகர். இக் கோயில் கற்றளியாக்கப்பட்டது கண்டராதித்தர் காலத்தில்தான் என்பதால் எளிதாக முதலாம் ஆதித்தனை விலக்கி விடலாம். எஞ்சியிருக்கும் சுந்தரசோழரே இப் பன்னிரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்குரிய ராசகேசரி.

முதலாம் குலோத்துங்க சோழரின் நாற்பத்து நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால்[11] பாண்டி குலாசனி வளநாட்டு எயில் நாட்டு பிரம்மதேயமான ராஜேந்திர சதுப்பேதி மங்கலத்து மகாசபையார், திருப்பேர்த்துறை மகாதேவர்க்கு ஒருவேலி நிலத்தை அன்றாடு நற்காசு ஒன்றை விலைப் பொருளாய்க் கொண்டு விற்றுக் கொடுத்தனர். இந்நிலத்தின் எல்லைகளைக் குறிக்கும்போது, உலகமாதேவி வதியும், இதே ஊரிலுள்ள பெருமாள் கோயிலுக்குத் திருவாய்மொழிப் புறமாகக் கொடுக்கப்பட்ட நிலமும் சுட்டப்படுகின்றன. இந்த விலை ஆவணத்தை எழுதிய நடுவராக அரசுடையான் திருச்சிற்றம்பலமுடையான் மத்தமுகன் என்பவர் குறிக்கப் பெறுகிறார். எழுதப் பணித்த சபையோராக திருவிக்கிரமபட்டன், பரமாற்பன் செல்லப்பிரான் பட்டன், உமாசகிதபட்டன் ஆகியோர் பெயர்கள் உள்ளன.

மூன்றாம் இராசேந்திரனின் 'பூமியும் திருவும் தானே புணர' என்னும் மெய்க்கீர்த்தியுடன் காணப்படும் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு[12] திருப்புறத்துப் பெருமானுக்குத் திருவிழா நடத்த வாய்ப்பாக மேல்களத்தூர், களத்தூருடையான் குப்பையாதித்த தேவனுக்குப் புக்க பள்ளி ஸ்ரீதேவி என்பவர் இக் கோயிலுக்குரிய பழந்தேவதான நிலத்தில் தரிசாகக் கிடந்த திடலில் ஏழு மா நிலத்தை திப்பொக்குப் பொன் கழஞ்சரைக்கு வாங்கிக் கோயிலுக்களித்தார். இந்

நிலத்தில் வரும் விளைச்சலைக் கொண்டு சித்திரை, திருவாதிரை விழா செலவுகட்கு நாள்தோறும் பதின்கல நெய் ஒன்பது நாளைக்குக் கோயிலார் தருவதென ஒப்புதலாயிற்று. இதைப் பணித்தவர்களாகச் சோலைப்பிரான் பட்டன், சாரணன் நரசிம்ம தேவன் சேந்தன் ஆகியோர் பெயர்களும், நடுவனாக அலங்காரப் பிரியன் பெயரும் கூறப்படுகின்றன. இக்கல்வெட்டில் உள்ள 'பூமியும் திருவும் தானே புணர' என்னும் மெய்க்கீர்த்தியுடன், ராசகேசரி ராஜேந்திர சோழதேவரின் கல்வெட்டுகள் சிலவும் காணப்படுகின்றன.[13] இந்த ராசகேசரி ராசேந்திர சோழதேவரைக் கல்வெட்டறிக்கை முதலாம் குலோத்துங்க சோழனாகக் காண்கிறது.[14] இந்த மெய்க்கீர்த்திக் குழப்பம் பிற்காலச் சோழர்களிடையே பரவலாகக் காணப்படுகிறது.

விக்கிரம சோழனுடைய பதினோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒரு சோகமான சூழ்நிலையைச் சித்திரம் போட்டுக் காட்டுகிறது.[15] திருப்பேரூரின் வடபுறத்தே திருச்சடைமுடி என்னும் ஊரகத்தே அமைந்திருந்த திருச்சடை உடைய மகாதேவர் கோயிலின் திருமண்டபத்தில் பெருங்குறிசபை கூடியது. 'காலம் பொல்லாததாய் நம் ஊர் அழிந்து குடி ஓடிப்போய்க் கிடந்தமையால் இவ்வூர்ப் பெருமாளுக்கு விண்ணப்பம் செய்து' என்று கல்வெட்டுச் செய்தி தொடங்குகிறது. ஏதோவொரு பஞ்சத்தாலோ வெள்ளத்தாலோ திருப்பேர்நகர் பாதிக்கப்பட்டு, குடிகள் ஊரைவிட்டு ஓடிவிட, ஊர்ச் சபையார் மனம் நொந்து கோயிலையும் ஊரையும் காப்பாற்ற இறைவனிடமே விண்ணப்பித்து வேண்டினர். இது தெரிந்த கவுசியன் சீனிவாச தேவன் சீதரபட்டரான மதுராந்தக பிரம்மாதி ராஜா என்பவர் ஐநூறு குழி நிலத்தை இறைவனுக்குத் திருப்படி மாற்றுக்கு முதலாகத் தந்தார். இதை இறையிலியாக்கி இதன் வருவாயில் நற்காரியங்கள் நிகழ்த்த ஊரவை உத்தரவிட்டது. இந்த உத்தரவைப் பணித்தவர்களாகத்திருவடி, தாமோதரன் ஸ்ரீவாசுதேவ பட்டன், பாலாசிரியர்கள் குமார சன்மன் ஸ்ரீகிருஷ்ணபட்டன், சிவதேவன் சோமதேவ பட்டன்,

ராஜேந்திர சோழ மாதேவபட்டன், திருப்பிரா நீலகண்ட பட்டர் ஆகியோர் பெயர்களும், நிகழ்ச்சிக் குறிப்புகளை எழுதிய ஊர் நடுவனாக மாலரி கேசவன் தேர்ப்பாகன் பெயரும் காணப்படுகின்றன.

சடாவர்மன் சுந்தர பாண்டிய தேவரது கல்வெட்டு,[16] மூன்று பெருமக்கள் ஒன்றாய்ச் சேர்ந்து செய்த நில விற்பனையைப் பற்றிக் கூறுகிறது. இரையூரைச் சேர்ந்த கிழவன் அரையன் அழகிய திருமழபாடி உடையா ரான தென்னவதரையன், சிற்றாற்காடு கிழவன் அரையன் திருக்காட்டுப்பள்ளி உடையாரான சோழவதரையர், சிற்றாற் காடு கிழவன் அரையன் பொன்னார் மேனியர் ஆகியோர், எயில் நாட்டு மாறநேரியான தீன சிந்தாமணிச் சதுப்பேதி மங்கலத்துப் பிடாகையில் கோயிலுக்கென நிலங்களும் மனை களும் விற்றுக் கொடுத்தனர். இதற்காக இவர்கள் பெற்றுக் கொண்ட தொகை அன்றாடு நற்காசு நானூறாகும். இவ் விற்பனைக்குச் சான்றாளராய்க் காணப்படும் பலர் பெயர் களுள் இராசேந்திர சோழக் காங்கையன் பெயரும் ஒன்று.

இக் கல்வெட்டுகளால் இக் கோயில் செம்பியன் வேதி வேளான் என்னும் அறச் சிந்தனையாளரால் கற்றளியாக்கப் பட்ட செய்தியும், இங்கிருந்த ஊரவை அமைப்புகள் பற்றிய விபரங்களும், இவ்வூரில் ஏற்பட்ட பஞ்சம், அதற்கு ஊர்ப் பெருமக்கள் உரியன செய்து உதவிய பாங்கு, இறைக் கோயிலுக்கு இதயமுள்ளவர்கள் அள்ளித்தந்து வழிபாடுகளைக் கவனித்துக்கொண்ட அறச்சிந்தனை இன்னபிற எத்தனையோ சமுதாய, அரசியல் தகவல்கள் நமக்குக் கிடைக்கின்றன.

சோழப் பெருவேந்தர்களாலும், இறைப்பற்று நிறைந்த வள்ளல்களாலும் ஊர்ப் பெரியவர்களாலும் ஒழுங்குபட புரக்கப்பட்டு வந்த இத் திருக்கோயில் தன் பெயரிலும் திரிந்து, நிலையிலும் தாழ்ந்து, காக்க நினைப்போர், கருணை கொள்வோர் யாருமில்லாச் சூழலில் மெல்ல மெல்லக் கவினிழந்து, கதியற்று நிற்கிறது. ஊரார் நினைத்தால் ஒரு

நாளில் இக் கோயில் வாழ்வு பெற்றுவிடும். ஆனால் நினைப்பதற்குத்தான் அவர்களுக்கு நேரமில்லை!

---

1. டாக்டர் இரா. கலைக்கோவன், காட்டுக்குள் ஒரு கலைக் கோயில், கழக வெளியீடு, 1986, பக். 178.

2. S. I. I. Vol, VII, Ins. Nos. 495-501.

3. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச்சோழர் கலையும் சிற்பமும், 1966, பக். 134.

4. A. R. E. 282-303 of 1901.

5. S. I. I. Vol., VII, Ins. No. 499.

6. S. I. I., Vol. VII., Ins. No. 501.

7. A. R. E. 102-105, 112, 128, 129, 131, 134 of 1914.

8. S. I. I., Vol. VII, Ins. No. 500.

9. M. Nalini, Thiru Erumbiyur Thirukkoil, Dissertation submitted to Bharathidassn University, 1986, p. 57-63.

10. N. Sethuraman, Early Cholas, 1980, p. 34.

11. S. I. I., Vol. VII ins. No. 497.

12. S. I. I., Vol. VII. Ins. No. 498.

13. S. I. I., Vol. VII, Ins. Nos. 875, 876, 877, 979.

14. S. I. I., Vol. VII, p. 508.

15. S. I. I., Vol. VII, Ins. no. 496.

16. S. I. I., Vol. VII, Ins. No. 495.

# 11. கல்வெட்டுகளில் சமுதாயம்-மறு பார்வை

மனித குலம் மண்ணில் தோன்றிய அந்த முதல் நாளி லேயே சமுதாய அமைப்புக்கான விதையூன்றல் நிகழ்ந்து விட்டதெனலாம். தனி மனித வாழ்வு எத்தனை நாட்களுக்கு நீடித்திருக்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்கும் போதே, கூட்டமைப்புகளுக்கான கொள்கை விளக்கங்கள் கிடைத்து விடுகின்றன. ஒருவர் இருவராகி, இருவர் மூவராகி, மூவர் நால்வராகவும், நால்வர் பலராகவும் சேர்ந்து வாழத் தொடங்கிய போதுதான் தனிமை பொதுமையாகவும், பொதுமை ஒரு சமுதாயமென்ற அமைப்பாகவும் மலர்ந்தது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இச் சமுதாய அமைப்பு முறை இருந்துவந்ததாக மானிடவியல் அறிஞர் களும் சமுதாயவியல் அறிஞர்களும், தொல்பொருள் அறிஞர் களும் கருத்து தெரிவிக்கிறார்கள். நமக்குத் தெரிந்து, நதிக் கரை நாகரிகங்கள், மேம்பட்ட சமுதாயக் களங்களாக விளங்கி வீழ்ந்ததை அகழ்வாய்வுத் தோண்டல்களும், அதில் வெளிப்பட்ட அசைக்க முடியாத சான்றுகளும் எடுத்துக் காட்டுகின்றன.

உலகப்படத்தில் உயர்ந்தோங்கி விளங்கிய எத்தனையோ பழஞ் சமுதாயங்களைப் படம் பிடித்துக்காட்டும் வரலாற் றாசிரியர்களுக்கு, வடிகால்களாக நின்று உதவுபவை, வரலாற்று விளக்கங்களாகக் கருதப்படும் அகழ்வாய்வுகளும், இலக்கியங்களும், கல்வெட்டுகளும்தாம். அடிப்படைச் சான்றுகளென்று அழைக்கப்படும் இவற்றுள்ளும் உறுதியான தகவல்களென்று உடனே ஏற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் சரியான செய்திகளை முறையாகத் தருபவை கல்வெட்டுகள் தாம். தமிழகத்து வரலாற்றையறிய, நம் மண்ணில் தோன்றிய மகத்தான சமுதாயத்தின் தெளிவான அமைப்பு முறைகளை, வாழ்வியலை விளங்கிக் கொள்ள, திருக்கோயில் களிலும், மலை முழைகளிலும், வீரக்கற்களிலும், பாறை

களிலும், செப்பேடுகளிலுமாய் இந்த நிலத்தையாண்ட பேரரசர்கள் செதுக்கி வைத்த வெட்டெழுத்துகள் பெரிதும் உதவுகின்றன.

சிற்றூரானாலும் சரி, பேரூரானாலும் சரி, விழிகளில் விடுபடும் பார்வைகள் பதியும் எந்த இடமானாலும் சரி, அங்கே ஒரு கோயிலையும், அதில் சில கல்வெட்டுகளையும், அந்தக் கல்வெட்டுகள் வழி ஒரு சமுதாயத்தையும் காணக் கூடிய இடம் தமிழகம்தான். தமிழகத்துக் கல்வெட்டுகள் கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்தே இங்கு வாழ்ந்து வளர்ந்த சமுதாயத்தைச் சுட்டிக் காட்டுகின்றன. வரலாற்றுக் கோடுகள் தமிழகத்துக் காலவரலாற்றைச் சங்க காலத்தில் தொடங்கிப் பல மரபுப் பேரரசர்களின் ஆட்சிக் காலங்களாய்ப் பகுத்து ஆங்கிலேயப் பேரரசு அரசாண்ட காலம் வரை தொடுத்துக் காட்டுகின்றன.

இப்படி வரையறுக்கப்பட்ட வட்டங்களுக்குள் வடித்துக் காட்டப்படும் சமுதாயத்தை ஒரு பார்வையில் பார்த்து அதன் சகல பரிமாணங்களையும் கட்டுக்குள் கொண்டுவந்து விடுவதென்பது யாருக்கும் இயலக்கூடியதன்று என்பதால், அதே சமுதாயத்தை மறுபார்வையாகவும் பார்க்க நேரிட்டுள்ளது. சமுதாயம் என்பதே ஆணையும் பெண்ணையும் அங்கமாய்க் கொண்ட அமைப்புதான். அவர்களுடைய உரிமைகள், உணர்வுகள், ஆவலாதிகள், ஆர்வப் போக்குகள், அவசரங்கள், சச்சரவுகள், எண்ணச்சிதறல்கள், ஏமாற்றங்கள், ஏக்கங்கள் என்று நாளும் பொழுதும், நலிந்தும் பொலிந்தும் வெளிப்படும் வெளிப்பாடுகளின் மொத்தக் கலவையாய்த் தான்சமுதாய நிகழ்ச்சிகள் சரித்திரமாகின்றன.

இந்தச் சமுதாயச் சரித்திரத்தின் நேர்க்கோடுகளாய், மனித வாழ்வைச் சுற்றிப்பின்னப்படும் சடங்குகள், சம்பிரதாயங்கள், அந்த வாழ்வை அர்த்தமுள்ளதாக்கும் கலைகள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், அந்த வாழ்வின் சட்ட திட்டங்கள், அதனால் நேரும் அரசியலமைப்புகள் என்பவை அமையும். இதே சமுதாயத்தின் இருண்ட பகுதிகள், இன்று

வரை வரையப்படாத வடிவங்களாய், விளக்கப்படாத செய்திகளாய்த், தலைப்பற்றுப் போன நிகழ்ச்சிகளாய் வரலாற்றுப் பக்கங்களின் மூலைகளில் யார் கண்ணிலும் படாமல் மறைபொருளாய் நிற்கின்றன.

எந்த ஒரு சமுதாயமும் நன்மையே நிரம்பிய, நல்லவர்களே வாழும் சமுதாயமாக இருந்துவிட முடியாது. அந்தச் சமுதாயத்தின் ஒரு பக்கத்தையே பார்த்துக்கொண்டு, இது தான் சமுதாயம் என்று ஏமாந்துகொண்டிருப்பதும் நியாயமாகாது. பல்லவர் காலம் முதல் நாயக்கர் காலம் வரையில் இந்த நாட்டில் செதுக்கப்பட்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான கல்வெட்டுகளுள் பல, சமுதாய மறுமலர்ச்சியைக் காட்டும் அதே நேரத்தில் சில, அந்தந்தக் காலகட்டங்களில் இந்த மண்ணில் நிலவிய சமுதாய அமைப்புகளில் ஆங்காங்கே நிகழ்ந்த அவலங்களையும், அங்கொன்றும் இங்கொன்றுமாய் நடந்த கலகங்களையும், பரவலாக நிகழ்ந்த குற்றங்களையும் சுட்டிக் காட்டுகின்றன என்றால், அக்காலத்து மக்களின் வரலாற்று நேர்மையை எப்படிப் போற்றுவதென்றே தெரியவில்லை. சமுதாயக் குறைபாடுகளைச் செதுக்கி வைத்ததன் மூலம், நடந்ததைக் காட்டி, இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்க வேண்டும் என்ற ஆர்வ விளக்கை ஏற்றி வைப்பதுடன், அந்த ஒளியில், அடாத செயல்கள் அடியோடு மறைய வேண்டும் என்ற ஏக்கத்தையும் வெளிப்படுத்தி, இது ஒரு எச்சரிக்கை, நேர்மைதான் இந்த மண்ணில் நிலைத்து நிற்கும். முறைகேடுகளும் ஒழுங்கின்மையும் கண்டிக்கப்படுவதோடு தண்டிக்கவும் படும் என்பதைப் பொது நோக்கோடு எடுத்துரைத்து, சமுதாயச் சீரமைப்புக்கு வழி கோலியிருக்கும் அக்காலப் போக்குகள் நம்மை வியப்புக்குள்ளாக்குகின்றன.

பேரரசுகளைப்பற்றி விரித்துரைக்கும் வரலாற்றாசிரியர்கள் அப் பேரரசுக் காலங்களில் அமைந்திருந்த சமுதாயக் களங்களை விமரிசிக்கும் போது அதிகக் கவனம் செலுத்துவதை இன்று காண முடிகிறது. அரசன்தான் நாடு, அவன் வெற்றிகள்தாம் வரலாறு என்றிருந்த நிலைமை

மாறி, தனி மனித வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுவதையே மிக இன்றியமையாத செயலாகச் சரித்திரம் நினைக்கத் தொடங்கியதன் விளைவுதான், வாழ்க்கை நிலைகளின் வளர்ச்சிப் படிகளை வரலாற்றுப்பக்கங்கள் வடித்துக்காட்டத் தொடங்கியிருப்பது.

ஒரு தனி மனிதனின் வாழ்க்கையானாலும் சரி, அவனோடு இணைந்து வாழும் ஒரு குடும்பத்தின் எதிரொலி யானாலும் சரி, அல்லது பல குடும்பங்கள் இணைந்த ஒரு சமுதாயத்தின் தாக்கமானாலும் சரி, அது அந்தந்தக் கால நேரங்களில் அமையும் பேரரசினாலும், பேரரசின் கொள்கை களினாலும், அரசியல் அமைப்பாலும், சட்டதிட்டங்களாலும் ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்படுவது உண்மைதான் என் றாலும், ஒரு சமுதாயத்தின் பொதுவான அமைப்பு முறைகள் எந்தக் காலத்திலும் பெரும் மாறுதல்களைப் பெற்றுவிடுவ தில்லை. அதனால்தான் சமுதாயத்தை மறுபார்வையாகப் பார்க்க முனையும் இந்த நேரத்தில், க்ாலப்பாகுபாடுகளைக் கடந்து. ஒரு பொதுப்பார்வையாகக், கல்வெட்டுகள் காட்டும் குறிப்புகளின் அடிப்படையில் வாழ்வியலின் விளக்கப்படாத வெளிப்பாடுகளைக் காட்ட நேர்கிறது.

சங்க காலத்தில் தலைவனும் தலைவியுமாய் வாழ்ந்த காதல் வாழ்க்கையின் கனிந்த பக்கங்களை எட்டுத் தொகை யிலும் பத்துப்பாட்டிலும் படித்துப் படித்து மகிழலாம். முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்களையும், அன்புடை நெஞ்சம் தாம் கலந்து, செம்புலப் பெயல்நீராய் மாறிய விந்தையையும், முட்டுவேன் கொல், தாக்குவேன் கொல், என்று காதல் கொந்தளிப்பைக் கனவு வரிகளாக்கிக் குமுறும் கன்னியர் நெஞ்சத்தையும் புலவர் பெருமக்கள் பொன் வரிக ளாக்கிக் காதலே உயிராய் வாழ்ந்த ஓர் ஒப்பற்ற சமுதாயத் தின் ஒழுங்கான படப்பிடிப்பை நமக்கு உவந்தளித்துச் சென் றிருக்கின்றனர்.

இதே இலக்கியங்களில் மருதம் காட்டும் பரத்தமை சங்க நிலத்தின் களைகளாய் நிற்பதையும், பாடல் வடிவில் சமுதாயக் கேடுகள் பல பக்குவமாய்ச் சுட்டிக் காட்டப்படுவதையும் நாம் காணத் தவறுவதில்லை. இந்தப் பண்பாட்டைப் பின்பற்றித்தான் பின்னால் வந்த மரபுகளும், வெளிச்சத்துக்கு வாழ்த்து வாசித்த அதே நேரத்தில், இருட்டுக்கும் இசையமைத்துத் தந்தன. சங்க காலத்தைத் தொடர்ந்து வந்த களப்பிரர் காலத்துச் சமுதாயத்தைப் பற்றி அதிகமாகத் தெரிந்துகொள்ள அடிப்படைச்சான்றுகள் இல்லாத நிலையில், ஒரு முந்நூறு ஆண்டுகளை வரலாற்று உலகம் வெற்றிடமாய்த் தள்ளி வைக்கிறது. இந்த வெற்றிடத்தைத் தாண்டி வந்த பேரரசுக் காலங்கள் கி. பி. 1600 வரை நீடித்தன. கி. பி. 600க்கும் 1600க்கும் இடைப்பட்ட இந்த ஆயிரமாண்டுக்கால சமுதாயத்தைத்தான், தமிழகத்துத் திருக் கோயில்களில், படியெடுக்கப்பட்டும் படியெடுக்கப்படாமலும் படியெடுக்கப்பட்டுப் பதிப்பிக்கப்படாமலும், வரலாற்று, நோக்கற்ற திருப்பணியாளர்களின் திருக்கைகளில் சிக்கிச் சிதைக்கப்பட்டும், சின்னாபின்னமாகியும், பார்வைக்குக் கிடைத்தும், பாழடைந்து போயும், சுண்ணாம்புப் பூச்சுகளால் உருமாறிப்போயும், கட்டடப்புனரமைப்புகளால் துண்டு துணுக்குகளாய்ச் சிதறியும் நிற்கும் கல்வெட்டுக் களஞ்சியங்கள், கரிக்கோட்டு ஓவியமாய் வரைந்து காட்டுகின்றன.

அரசனும் அதிகாரிகளுமாய் அமைந்த மைய அரசும், அதன் சார்பாளர்களாய் ஊரவைகளும் அரசியலமைப்பை உருவாக்கி வைத்தன. இந்த ஊரவைகள் எப்படியமைந்தன, எப்படியிருந்தன என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் நிறையவே உள்ளன. உத்தரமேரூர் வைகுந்தப் பெருமாள் கோயிலில் காணப்படும் முதற்பராந்தகனின் பன்னிரண்டாம், பதினான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள்[1] சோழர் காலத்து ஊராட்சியமைப்பையும், தேர்தல் முறைகளையும், வேட்பாளர்களின் தகுதிகளையும் எடுத்துரைக்கின்றன. இந்த வரலாற்றுப் புகழ்மிக்க கல்வெட்டுகள் வடித்துத் தரும்

சுவையான தகவல்கள் பத்தாம் நூற்றாண்டுச் சமுதாய அமைப்பைக் கண்முன் நிறுத்தும் காட்சிக் கவிதைகளாம்.

அக்காலத்தில் ஒவ்வோர் ஊரும் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இப்பகுதிகள் ஒவ்வொன்றும் இப்போதைய வார்டுக்கு இணையாகக் குடும்பு என்று வழங்கப்பட்டது. இக் குடும்புகளின் எண்ணிக்கை ஊரின் அளவைப் பொறுத்தே அமைந்தது. உத்தரமேரூரில் முப்பது குடும்புகள் இருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. ஒவ்வொரு குடும்புக்கும் ஓர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தத் தேர்தல் எப்படி நடந்தது ?

ஒவ்வொரு குடும்பில் உள்ளவர்களும் தமக்குள் வாரிய உறுப்பினராகக்கூடிய தகுதிகள் அமைந்த அனைவர் பெயரையும் தனித்தனி ஓலைத்துண்டுகளில் எழுதி, ஒன்று சேர்த்து, அது எக்குடும்பைச் சேர்ந்தது என்று தெரியுமாறு வாயோலை எழுதி வைத்துக் கட்டி ஒரு குடத்திலிட்டு வைப்பர். இவ்வாறே முப்பது குடும்புகட்கும் தனித்தனியே கட்டிக் குடத்தில் இடுவர்.

தேர்தல் நாளன்று ஊரார் அனைவரும், நம்பிமார் உட்படக் கூடுவர். நம்பிமார்களுள் மூத்தவர் ஒருவர் அனைவரும் காணுமாறு குடும்புகளின் ஓலைக் கட்டுகள் இடம் பெற்ற குடத்தைத் தூக்கிக்கொண்டு நிற்பார். விவரமறியாத ஒரு சிறுவனைக் கொண்டு, அக் குடத்திலிருந்து ஒரு குடும்பிற்குரிய ஓலைக்கட்டை எடுக்கச் செய்து, அவிழ்த்து அதிலுள்ள ஓலைத்துண்டுகளை இன்னொரு குடத்திலிட்டுக் குலுக்கி, அத்துண்டுகளுள் ஒன்றை அச்சிறுவனையே கொண்டு எடுக்கச் செய்து, அதை ஊரவை அலுவலரின் கையில் தரச் செய்வர். அவர் ஐந்து விரல்களையும் அகல விரித்து, அவ்வோலைத் துண்டை உள்ளங்கையில் பெற்று, அதிலுள்ள பெயரைப் படிப்பார். தனியோலை ஒன்றில் அப்பெயர் குறித்துக் கொள்ளப்படும்.

இது போன்றே முப்பது குடும்புகட்கும் முப்பது உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இவர்களுள்

அநுபவமும் அறிவும் நிறைந்தபன்னிருவர் சம்வத்சர வாரியத்திற்கும், அடுத்த பன்னிருவர் தோட்ட வாரியத்திற்கும், எஞ்சிய அறுவர் ஏரி வாரியத்திற்கும் பொறுப்பேற்பர். இது தவிர, மீண்டும் குடவோலை முறையில் பன்னிருவரைத் தேர்ந்தெடுத்து, அறுவரைப் பொன் வாரியத்திற்கும் எஞ்சியவரைப் பஞ்சவார வாரியத்திற்கும் உறுப்பினராய் அமர்த்துவர். இக் குட வோலைத் தேர்தல் முறையே சோழர்கால அரசியலமைப்பில் அடிப்படைக் கருவாய் அமைந்திருந்தது. இதனால்தான் பல்கிப் பெருகியிருந்த சோழப் பேராட்சியின் செயல்பாடுகள் பெருமைக்குரியனவாயும் புகழ்தற்குரியனவாயும் திகழ்ந்தன.

இப்படித் தேர்தல் முறைகள் தெளிவாக வகுக்கப்பட்டிருந்தும், தேர்தல்களில் சில தவறுகளும், ஊரவைப் பணிகளில் முறைகேடுகளும் நடந்ததைச் சில கல்வெட்டுகளால் அறிகிறோம். மூன்றாம் இராசராசனின் சேய்ஞலூர்க் கல்வெட்டு [2] அவ்வூர்க் கோயிலாட்சியார், அவை நடவடிக்கைகள் குறித்துச் செய்த முடிவுகளை வரிசைப்படுத்துகிறது. அரசாங்க அதிகாரிகளின் உதவி கொண்டோ, விதிமுறைகளுக்கு முரணாகவோ தேர்ந்தெடுக்கப்பட்டோர் கிராமத் துரோகிகள் ஆதலின் அவர்களுடைய சொத்து முழுவதுமாகப் பறிமுதல் செய்யப்படும். ஓராண்டிற்கு மேல் உறுப்பினராயிருக்க முயலுவோரும் கிராமத் துரோகிகளாவர். அதற்குரிய தண்டம் அவர்க்கு விதிக்கப்படும். வரி கொடுக்க வேண்டியவர்களிடம், அவர்கள் தர வேண்டிய வரிக்கு மேல் கூடுதல் வரி வசூலிப்பது நியாயமற்றது, தண்டனைக்குரியது. எந்தச் செலவுக்கும் எழுத்து மூல உத்தரவு இருக்கவேண்டும். கிராம விதிகளின்படி நடக்காது, அதிமாகச் செலவு செய்தாலும், வாங்க வேண்டியதற்கு மேல் அதிக வரி வாங்கினாலும், அதற்குக் காரணமான வாரியப் பெருமக்கள் அத்தொகையைப் போல் ஐந்து மடங்கு தண்டம் கொடுக்க வேண்டும். இந்தச் செய்திகளைப் படிக்கும் போது அக்கால மக்களின் நேர்மைப் போக்கும், தவறுகள் கண்டவிடத்துத் தயங்காமல் தட்டிக்கேட்கும் உள்ளப் பாங்கும், குறைகளைக்

களைந்து நிறைகளைக் காண விழையும் நேரிய நோக்கும் புலப்படுகின்றன.

அரசின் வருவாயில் முதலிடம் பெற்றது நிலவரிதான். அதனால் நிலமுடையவருக்கே சமுதாயத்தில் பெருமை இருந்தது. மேலும் அன்றைய வாணிபம் பண்டமாற்று முறையிலேயே பெரும்பான்மையும்நடந்ததாலும், அப்பண்டமாற்றுக்கான அடிப்படைப் பொருள் நெல்லாக இருந்ததாலும், நிலக்கிழார்களே பொருளாதாரத் தூண்களாய் விளங்கினார்கள். ஊரவைகளும், நிறைவேற்றுக் கழகங்களான வாரியங்களும் இப் பெருமக்களால்தான் நடத்தப்பட்டன. நிலவரியை ஆண்டுதோறும் வசூலிக்கும்பொறுப்பைப் பஞ்சவார வாரியத்தார் ஏற்றிருந்தனர். இந்த வரி தண்டல் பல இடங்களில் ஒழுங்காக நடந்தமையால்தான் பேரரசுகள் பெருக முடிந்தன. ஆனாலும் சில இடங்களில் ஒராண்டிற்கு ஒருமுறை தண்ட வேண்டிய வரிகளை மூன்றாண்டுகளுக்கும் மேலாகப் பெறாமல் விட்ட ஊரவைகளும், அப்படிக்கடமையில் தவறிய குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்ட உறுப்பினர்களும், அந்தக் குற்றத்திற்கு மாறாக வரிகட்டத் தவறியவரின் உடைமைகளை ஏலத்திலிட்டு, வரும் தொகையை அரசிறையாகச் செலுத்தச் சொல்லி ஆணைகள் பிறந்த நிலைகளும் இருந்ததாகக் கல்வெட்டுகளால் அறிகிறோம்.

சுத்தவல்லி நல்லூர் ஆத்திரையன் மாதேவ பட்டன் என்பான் தன் நிலங்களுக்குப் பத்தாண்டுகள் வரையில் வரி கொடாமல் இருந்ததைத் தஞ்சைக் களப்பாளிலுள்ள கல்வெட்டொன்று கூறுகிறது.[3] திருச்சி இரத்தினகிரியில் அரிஞ்சிகைச் சதுர்வேதி மங்கலத்திலிருந்த குடிகள் மூவர் தம் நிலங்களுக்குரிய வரியைப் பதினைந்து ஆண்டுகளாகச் செலுத்தாமல் இருந்து கடைசியில் ஊரை விட்டே போய்விட்டனர். அவர்களுடைய நிலங்களை அரசு பறிமுதல் செய்து, ஏலத்திவிட்டு, அத் தொகையை வரியாகக் கொண்டது.[4] இவ்வாறு பத்தாண்டுகளும் பதினைந்து ஆண்டுகளும் அரசு வரி பெறப் படாமல் இருந்தமைக்கு அதனைப் பெற வேண்டிய ஊரவை

யின் நிர்வாகத்தில் ஏற்பட்ட குறைபாடுகளே காரண மென்பார் பேராசிரியர் பண்டாரத்தார்.[5]

வரி கொடுக்கமுடியாமல் ஊரைவிட்டுஓடிய குடிமக்களின் நீளமான பட்டியலைத் திருமணஞ்சேரி, அந்த நல்லூர், திருவொற்றியூர், மன்னார்குடி, கோனேரி ராசபுரம், தஞ்சாவூர், இரத்தினகிரி என்னும்ஊர்க்கோயில்களில் காணப் படும் கல்வெட்டுகளுள் சில சோகக்கதைகளாய்ச் சொல்லியமு கின்றன.[6] வரிக் கொடுமையும் வறுமையும் தாங்காமல், வாரியப் பெருமக்களின் வரி தண்டும் முறைகளின் வேகங் களைப் பொறுக்க மாட்டாமல், பிறந்த மண், வளர்ந்து வாழ்ந்த வீடு, வாழவைத்த நிலம் எல்லாவற்றையும் விட்டு விட்டு வறிடம் நாடி, வாழ்க்கையைத்தேடி, மிரண்டு ஓடிய பரிதாபத்திற்குரிய மக்களின் வேதனைகளை என்னென் பது!

அதிகமாக வரி பெறப்பட்ட நிலைகளிலும், பெறப்பட்ட வரியினங்கள் போய்ச்சேரவேண்டிய இடத்திற்குப் போகாமல் இருந்த நேரங்களிலும் பொதுமக்கள் பொறுமையிழந்து கிளர்ந்தெழுந்த வேகத்தையும், தங்களுக்குள் ஒற்றுமை யுணர்வு பொலியச் செயல்பட்ட தீரத்தையும் சில கல்வெட் டுகளால் அறிய நேரும்போது மகிழ்வேற்படத்தான் செய் கிறது. விருத்தாசலம் கல்வெட்டொன்று தண்டிய வரியைத் தாமே அநுபவித்து வந்த சில அதிகாரிகளையும், நில உரிமை யாளர்களையும் எதிர்த்து ஊர்மக்கள், அவர்களுக்குக் குடி யிருப்பு வசதிகள் செய்துதரக் கூடாதென்றும், அவர்தம் திட்டங்கள் எவற்றுக்கும் உடன்படக்கூடாதென்றும் தமக்குள் செய்துகொண்ட ஒப்பந்தமொன்றை எடுத்துரைக்கிறது.[7] த்ஞ்சாவூர் கொறுக்கைக் கல்வெட்டும் இதே போன்றதொரு செய்தியை வெளிப்படுத்துகிறது.[8]

அக்காலத்தில் சமுதாயத்தில் அதிக மதிப்புப் பெற்று விளங்கிய இடம் கோயில்தான். இறைப்பற்றை வளர்ப்ப தற்கும், வாழ்க்கை நெறிகளை ஒழுங்குபடுத்துவதற்கும் உரிய இடமாகவும், கலைபல வளர்க்கும் கவினுறு வளாகமாகவும்,

ஊர் கூடி உரையாடவும், சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழவும், ஊரவை' நிகழ்வுகள் நடந்து பொலியவும் உரிய பொது மன்றமாகவும், சமுதாயக்கூட்டமைப்பின் பரிமாற்றங் களைப் பதிவு செய்து காத்திடும் பதிவகமாகவும், கல்வி, கேள்விச் செல்வங்களைக் கருத்துடன் வளர்க்கும் கலாநிலைய மாகவும், இவை எல்லாவற்றிற்கும்மேலாக, ஊரின் ஒவ்வோர் அணுவிலும் ஊடுருவி நிற்கும் பல்கலைக்கழகமாகவும் கோயில்கள் திகழ்ந்தமையைக் கல்வெட்டுகள் களிப்புணர் வுடன் வெளிப்படுத்தி மகிழ்கின்றன.

இக் கோயில்கள் வழிதான் நிலங்களை வாங்குவதும் விற்பதும் நடந்தது. ஊரில் வாழ்ந்தவர்கள் கோயிலுக்குத் தந்த கொடைகளை நிர்வகிப்பதற்கும், இறைத் திருமேனி களுக்கு அள்ளி வழங்கிய அளப்பரிய அணிகலன்களைப் போற்றிக் காப்பதற்கும், கோயில் வருமானத்தைக் கணக் கிட்டு வைத்துச் செலவினங்களைச் சரிக்கட்டுவதற்கும் கோயி லாட்சியர் தேவைப்பட்டனர். இதனால் ஒவ்வொரு கோயி விலும், அக் கோயிலை நிர்வகிக்க அலுவலர்கள் நியமிக்கப் பட்டனர். சில கோயில்கள் தனியாகளாலும், சில மடாதி பதிகளாலும், சில ஊரவையாலும், இன்னும் சில கோயில்கள் செல்வாக்குடைய சிலகுழுக்களாலும் நிறைந்த கவனத்துடன், குறையாத ஆர்வத்துடன் கண்காணிக்கப்பட்டு வந்தன. கோயில்களில் நடைபெற வேண்டிய கடமைகளைச்செய்பவர் கள் பல பணி நிவந்தக்காரர்கள் என்று அழைக்கப்பட்டனர். ஒவ்வொரு கோயிலிலும் ஏராளமான செல்வம் புழங்கியதால், எத்தனை கவனமுடன் நிர்வகிக்கப்பட்டு வந்த போதிலும் கோயிலாட்சியில் குறைகளும் மலிந்திருந்தன. எங்கே தவறுகள் தவறியும் தலையெடுக்கக்கூடாது என்று ஊரவை யார் திட்டமாய் இருந்தனரோ, அங்கேதான் அத்தனை கேடுகளும் ஆலவட்டம் போட்டன. இந்த அவலக் கதைகளை ஏராளமான கல்வெட்டுகள் ஏக்கப்பெருமூச்சுடன் எடுத்துரைக் கின்றன.

திருவிடைமருதூர் பாடல் பெற்ற தலம். தஞ்சை மாவட்டத்தில் குடந்தையை அடுத்து அமைந்துள்ள இக்

கோயிலில் இருந்து பல கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மூன்று கல்வெட்டுகள் இக் கோயிலில் நடந்த தவறுகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. சுந்தர சோழரின் கல்வெட்டொன்று[9], கோயில் செயல்பாடுகளை மேற்பார்வையிடும் பராந்தக மூவேந்த வேளான் என்னும் அரசு அலுவலர் இக்கோயில் நடவடிக்கைகளைப் பற்றி விசாரணை நடத்தியபோது, தொடர்பேதும் இல்லாத தோட்டக்காரர்கள் சிலரிடம் கோயிலுக்குரிய பத்து மா நிலம் சிக்கியிருப்பது கண்டு சினந்து, மீண்டும் அதைக் கோயிலுக்காகப் பெற்றுத்தந்த செய்தியைக் குறிப்பிடுகிறது.

இரண்டாம் ஆதித்தனுடைய நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு[10] இதே கோயிலில் இதே அதிகாரி செய்த இன்னொரு விசாரணையையும் எடுத்துரைக்கிறது. இக் கோயிலுக்காகத் தரப்பட்ட அறக்கட்டளைகளையும் அவற்றையொட்டி செய்யப்பட்ட செலவினங்களையும் ஒப்பு நோக்கிய நேரத்தில், இம் மூவேந்த வேளான், கோயில் கணக்குகளில் ஒழுங்கீனங்கள் நேர்ந்துள்ளதைக் கண்டார். காரணங்களைக் கேட்டு உத்தரவுகள் பறந்தன. கரணத்தாரும், சபையாரும், காரியவாதிகளும் கூட்டப்பெற்றனர். செயல்பாடுகளும் செலவினங்களும் கேள்வி பதில்களாகி, வியப்பைத் தரும் வேகத்தில் ஒளிந்துகொண்டிருந்த தவறுகள் வெளிப்படத் தொடங்கின. அரசு அலுவலர் அனைவர் பக்கமும் கேட்டு ஆவன செய்ததன் விளைவாய்த் திருவிடை மருதூர் அறக்கட்டளைகள் விழலுக்கிறைத்த நீராயிருந்த கதை மாறிப் பயிருக்காய்ப் பாயத் தொடங்கின.

இக் கோயிலில் நிகழ்ந்த தவறுகளுள் மகத்தானது ஓர் அறக்கட்டளையே மறைக்கப்பட்ட அற்புதம்தான். உத்தம சோழன் காலத்தில் திருவிடை மருதூர் திருக்கோயில் புதுப்பிக்கப்பட்டது. அதனால் அக்கோயிலுக்கு மன்னர்களும் மக்களுமாய்க் கொடுத்திருந்த அறக்கட்டளைகள் பற்றிய விவரங்கள்அடங்கிய கல்வெட்டுப் பலகைகள் நிலத்துக்கடியில் ஆவணங்களாகப் பாதுகாப்பான முறையில் அடுக்கி வைக்கப்

பட்டிருந்தன. கோயில் புதுப்பிக்கப்பட்டபின் இக் கல்வெட்டு களை உரிய இடங்களில் மீண்டும் வெட்டுவிக்குமாறு அரச ஆணை பிறந்தது. அத்தனை அறக்கட்டளைகளும் பதிவு செய்யப்பட்டுக் கல்லெழுத்துக்களாகிக் கோயிலை அலங்கரித் தன. கோயில் நடவடிக்கைகளை ஆராயும் அதிகாரிகளும், அறங்காவலர்களும், கணக்கரும். திருவிடை மருதூர் நகரத் தாரும் கோயில் நாடக சாலையில் கூடி, இத் திருக்கோயில் விளக்குகளுக்காக விழைந்து கொடுக்கப்பட்ட அறக்கட்டளை களைப் பட்டியலிட்டுப் பார்த்தனர். தரப்பட்ட கொடை களுக்கும், வெட்டப்பட்ட கல்வெட்டுகளுக்கும் ஒத்துவர வில்லை. ஒரு கொடை கணக்கில் வராமலிருப்பது புரிந்தது. காடுவெட்டிகள் நந்திப் போத்தரையன் அளித்த ஐம்பது கழஞ்சு பொன் தொடர்பான அறச் செய்தி விடுபட்டுப் போயிருந்தது. கவனிக்காமல் விட்டால் கழஞ்சுகளைத் தமதாக்கிக் கொள்ளலாம் என்றெண்ணியிருந்தோர் கடும் தண்டனைக்குள்ளாயினர். சுட்டளை பற்றிய கல்வெட்டு கோயில் சுவரில் நிரந்தரமானது.[11]

முதலாம் இராசராசனின் செல்லப்பிள்ளைகளுள் ஒன் றாய்ச் சிறப்புற்று விளங்கிய பெருமைக்குரிய கோயில் திரு வெண்காட்டுத் தேவர் திருக்கோயிலாகும். முற்காலச்சோழர் களின் கல்வெட்டுகளும், நடுக்காலச்சோழர்களின் எழிலார்ந்த செப்புத் திருமேனிகளும் கொண்டு விளங்கும் இத் திருக் கோயில் செல்வ வளத்தில் செழித்திருந்த கோயிலாகும். சோழப் பெருவேந்தரும் சைவத் திருவாளருமான கண்ட ராதித்த மும்முடிச் சோழரின் இரண்டாம் ஆட்சியாண்டில், இக்கோயிலிருக்கும் இடமான நாங்கூர் நாட்டு நாங்கூர்ச் சபையாரிடம், இவ்வேந்தரின் வாழ்வரசியாரும், தமிழகத்துக் கலைவரலாற்றில் தனித்ததோர் இடம் பெறும் பெருந்தேவி யாருமான அன்னை செம்பியன் மாதேவியார் அவர்கள், நானூறு காசுகளை வழங்கி, அத்தொகைக்குரிய நிலத்தை வாங்கி, அதன் வருமானத்தைக் கொண்டு, திருவெண்காட்டுத் தேவருக்கு மாதப் பிறப்பு தோறும் புனிதத் திருமுழுக் காட்டு நடத்துமாறு வேண்டியிருந்தார். அச் சபையாரோ

பணத்தைப் பெற்றுக் கொண்டனரே தவிர, அதற்குரிய நிலத்தை வாங்கவில்லை. முதலாம் இராசராசனின் ஆறாம் ஆட்சியாண்டில்தான் இந்த நிலவாங்கல் நடக்கவேயில்லை என்பது தெரிய வருகிறது.[12] நாங்கூர்ச் சபையாருக்கு நாடாளும் வேந்தனின் எச்சரிக்கை கலந்த ஆணை பறக்கிறது. செம்பியன் மாதேவியார் தந்த நானூறு காசுகளுக்குரிய நிலம் பரபரப்போடு வாங்கப்படுகிறது. கொடையளித்த நாளுக்கும், நிலம் வாங்கப்பட்ட காலத்துக்கும் இடையில் எத்தனை ஆண்டுகள்! எத்தனை மன்னர்கள்! கண்டராதித்தனை அடுத்து அரிஞ்சயன், அரிஞ்சயனைப் பின்பற்றி இரண்டாம் பராந்தகன், பிறகு உத்தமசோழன், அப் பேரரசனைத் தொடர்ந்து முதலாம் இராசராசன். நான்கு முடி மன்னர்களை ஏமாற்றி, ஏறத்தாழ நாற்பத்தேழு ஆண்டுகளாக இந்த நானூறு காசுகள், நாங்கூர்ச்சபையாரால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததை நினைக்கும் போது, வியப்பும் மலைப்பும் வேதனைக்கு வித்திடுகின்றன; என்றாலும் நடக்கும் தவறுகளை நியாயப்படுத்தி விடாமல், குறைகளைப் போக்கும் நேர்மைப் போக்குகள் இருந்த நிலையையும், கோயில் கணக்குகள் அவ்வப்போது தக்கவரால் மேற்பார்வையிடப்பெற்று தணிக்கை செய்யப்பட்ட முறையான சூழல்களையும், தவறுகளும், அவை கண்டுபிடிக்கப்பட்ட விதங்களும், அவற்றிற்குத் தரப்பட்ட தண்டனைகளும் கல்வெட்டுகளாய் மாறி, வழிவழி மரபுக்கு வழங்கப்பட்ட எச்சரிக்கையாய் நிலவிடும் அதிசயங்களையும் நோக்கும் போது, எப்படிப்பட்ட ஓர் உயர்ந்த சமுதாயம் நம் முன்னோடியாய் மலர்ந்திருந்தது என்பதை மகிழ்வோடு நினைத்துப்பார்க்க முடிகிறது.

உத்தம சோழன் என்று கருதப்படும் கோனேரின்மைகொண்டானின் பதினான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று திருமால்புரக் கோயிலில் காணப்படுகிறது. இக் கல்வெட்டு, ஊரவையார் செய்த மகத்தான ஊழலொன்றை வெளிச்சத்திற்குக் கொண்டுவருகிறது.[13] முதலாம் ஆதித்த சோழனின் இருபத்தோராம் ஆட்சியாண்டில் சிற்றியாற்றூர்

என்ற சிற்றூர், திருமால்புரக் கோயிலுக்குத் தேவதான இறையிலியாகத் தரப்பட்டு, அதன் பொறுப்பு பக்கத்து ஊரான புதுப்பாக்கம் சபையாரிடம் ஒப்படைக்கப்பட்டது. முதலாம் ஆதித்தனின் இருபத்திரண்டாம் ஆண்டில், அவ்வூர் அக்கால வழக்கப்படி யானையால் சுற்றி வரப்பட்டுத் தேவ தான இறையிலியாக ஊரறிய உறுதிப்படுத்தப்பட்டது. அந்த அறக்கட்டளையில் கூறியவாறு, திருமால்புரக் கோயிலுக்குரிய அறங்களை இத் தேவதான வருவாயிலிருந்து நிகழ்த்துவதற்குப் புதுப்பாக்கம் சபையார் உடன்பட்டனர். ஆனால் முதற் பராந்தகனின் நான்காம் ஆண்டுவரை இந்த அறக்கட்டளை கணக்குப் பேரேட்டிற்குக் கூட வரவில்லை: அன்று வரை, அதில் குறிக்கப்பட்டிருந்த அறச் செயல்களும் நடைபெறவில்லை. அறங்களைச் செய்யாத நிலையில், அந்தத் தேவதான இறையிலியின் மொத்த வருவாயும், பதினெட்டு ஆண்டுகளாய், ஊரவையின் கைப்பைக்குப் போய்க் கொண்டிருந்தது 'என்பதை நினைக்கும்போது மனத்தை நெருடத்தான் செய்கிறது.

இந்த அவலங்கள் ஏதும் கொஞ்சமும் தெரியாத நிலையில், முதற்பராந்தகனின் முப்பத்தாறாம் ஆண்டில், அதே கோயிலுக்கு வேறு சில நிலங்களும் அறக்கட்டளைகளாக வழங்கப்பட்டு, அதே புதுப்பாக்கம் சபையாரிடம் நிர்வாகத் திற்காக விடப்பட்டன. பொறுத்துப் பொறுத்துப் பார்த்த கோயில் சிவாச்சாரியார்களும், பொருள் காப்பாளர்களும், அறங்காவலர்களும் ஊரவையின் பொறுப்பற்ற போக்கினால் பொறுமையிழந்து, உத்தம சோழனுடைய அமைச்சனான மூவேந்த வேளானிடம், திருமால்புரக் கோயிலுக்குரிய அறக் கட்டளைகளின் வருமானத்தைக் கொண்டு, புதுப்பாக்கம் சபையார் உரிய அறச் செயல்களை நிகழ்த்தாமல், தங்கள் விருப்பம் போல் செலவிடுகின்றனர் என்ற குற்றச்சாட்டைத் தெரிவித்தனர். செய்தி அரசனை எட்டியது. அரசன் சபையாரையும் கோயிலாரையும் வரவழைத்து விசாரணை நடத்தினான். சபையின் குற்றங்கள் மெய்ப்பிக்கப்பட்டன. தண்டனைகள் தரப்பட்டன. ஏறத்தாழ எண்பது ஆண்டுக

ளுக்கும் மேலாகக் கோயில் சொத்துகளைத் தங்கள் சுய தேவைகளுக்குப் பயன்படுத்திப் பலன் கண்ட ஒரு சபை, தெய்வம் நின்று கொல்லும் என்ற பழமொழிக்கேற்பத் தவறுகளை ஒப்புக்கொண்டு தண்டனைகளை அநுபவித்தது.

உடையார் பாளையத்திலுள்ள கோவிந்தபுத்தூர் கங்கா ஜடாதரர் கோயிலில் உள்ள முதலாம் இராசராசனுடைய கல்வெட்டொன்று[14] இக்கோயிலில் நடந்த வேலை நிறுத்தத்தையும், தவறுகளையும் எடுத்துக்கூறுகிறது. முதலாம் இராசராசனின் அமைச்சராக இருந்து இக் கோயில் செயல்முறைகளை மேற்பார்வையிட்ட விக்கிரம சோழ மாராயன் என்பார். இக் கோயிலில் நடந்துகொண்டிருந்த தவறுகளைச் சரி செய்யும் பொருட்டு சாந்தபோசன் வெண்ணெய்க் கிரமவித்தன் என்பாரை இக் கோயில் நிர்வாகியாக நியமிக்க, இந் நியமனத்தால் தங்கள் வாய்ப்புகளுக்கு வாய்ப்பூட்டு போடப்பட்டதைக் கண்ட கோயில் பணியாட்கள் கொதித்துப் போயினர். எடுத்துஎடுத்துப்பழகிய கைகள் வாளாவிருக்குமா? நிர்வாகியின் கடுமையான மேற்பார்வையும், கட்டுப்பாடுகளும், எடுக்க முயன்ற கைகளை எடுக்க விடாமல் செய்தன. பலன், வேலைநிறுத்தம்! இந்த நிர்வாகியின் அதிகாரத்தை எதிர்த்து அவருக்குக் கீழ்ப்படியாமல், கோயில் வேலைகளைச் செய்யாமல், இப்பணியாட்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதற்கெல்லாம் அமைச்சர் பணிந்துவிடவில்லை. நேர்மையும், நியாய உணர்வுகளும் நிறைந்திருந்த காரணத்தால், அந்நாளில், அப்பெருமகன்றால் வேலைநிறுத்தம் செய்தவர்களை, வேலையை விட்டே தூக்கியெறிய முடிந்தது. சிலருக்கு இருபத்தைந்து கழஞ்சு பொன் தண்டம் விதிக்கப்பட்டது. கோயில் அலுவலர்களிடையே அமைதியின்மையும், கீழ்ப்படியாமையும் இருக்கவே கூடாது என்ற நல்ல நோக்கம் மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

சோழ மன்னர்களிடம் அவர்தம் உயிரைக் காக்க இருந்த வேளைக்காரப்படை போலவும், பாண்டிய வேந்தர்களின் ஆபத்துதவிகள் போலவும், கோயில்களில், கோயில்

சொத்துக்குத் தீங்கு நேராமல் பாதுகாத்து, தீங்கு நேரும் நிலையேற்படின், தங்கள் உயிரைத் தந்தேனும், அந்நிலையைத் தடுத்து, கோயிலின் உரிமைப் பொருட்களைக் காக்கும் பண்பு கொண்ட திரிசூல வேலைக்காரர் என்ற சிவனடியார்கள் இருந்தனர் என்பது திருநணிபள்ளிக் கோயில் கல் வெட்டொன்றால் தெரிய வருகிறது.[15] ஒருமுறை இக் கோயிலுக்குரிய நிலங்கள் சிலவற்றைத் தம்முடையன என்று குடிகள் நால்வர் பொய்யாக உரிமை கொண்டாடினர். அதைப் பொய்ப்பிக்கச் சரியான ஆவணங்கள் இல்லாமை யாலும், ஊரவையின் மெத்தனப் போக்காலும், இந்நிலங்கள் யாருடையன என்ற உரிமைக் கேள்வி எழுந்தது. இந்நிலங்கள் கோயிலுக்கு உரியனவே என்பதை மெய்ப்பிப்பதற்காக இக் கோயிலில் இருந்த திரிசூல வேலைக்காரர் சிலர் நெருப்பு வளர்த்து, அதில் விழுந்து, தம் உயிரைத் தியாகம் செய்தனர். அது கண்டு திடுக்கிட்ட தலைச்சங்காட்டு ஊரவையார், பொய்யுரிமை பாராட்டிய நால்வரும் தம் நிலத்தைத் திருப்பிக் கோயிலுக்கு வழங்குவதோடு, தவறைக் கண்டு பிடிக்கத் தங்கள் உயிரையே தத்தம் செய்த அச் சிவனடி யார்க்குச் செப்புத் திருமேனிகள் அமைக்க இருநூறு காசு களும், அப்படிமங்கட்கு வழிபாடு முதலியன நிகழ்த்த நில நன் கொடைகளும் வழங்கும்படி ஆணையிட்டு, அவ்வாணையைக் கண்ணும் கருத்துமாய் இருந்து நிறைவேற்றினர். கோயில் சொத்துகளைக் காப்பதற்காகத் தங்கள் உயிரையே தருமளவு இறை ஈடுபாடும் மனப்பக்குவமும் கொண்ட மகான்கள் அக்காலச் சமுதாயத்தில் இருந்தமையை அறிய நேர்கையில் கண்கள் கலங்குவதைத் தவிர்க்கமுடியவில்லை.

வடஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருவல்லம் தீக்காலிப் பெருமானடிகள் கோயில் கல்வெட்டொன்று,[16] மிகத் தேர்ந்த முறைகளால் கோயில்சொத்து கையாடப்பட்ட விவரங்களை ஒரு சுவையான கதை போல எடுத்துரைக்கிறது. முதலாம் இராசராசன் காலத்தில் வாழ்ந்த அரசு அதிகாரி களுள் குறிப்பிடத்தக்கவர் மதுராந்தகன் கண்டராதித்தர். தமிழகக் கோயில்கள் பலவற்றையும் மேற்பார்வையிட்டு,

வரவு செலவு கணக்குகளைத் தணிக்கை செய்து, குறைகள் இருப்பின் அவற்றிற்கு முடிவு காணும் நேர்மைப் போக்கின ராய்த் திகழ்ந்த செயல் வல்லாரான இவரால்தான் தீக்காலிக் கோயில் திருட்டு கண்டுபிடிக்கப்பட்டது. இவர் இக் கோயிலுக்கு வந்த நாளன்று, இறைவனுக்கு நடந்த திருமுழுக் காட்டுகளும் வழிபாடுகளும் அறக்கட்டளைகளில் சொல்லப் பட்டிருக்கும் அளவுகளில் சிறப்புடனும் செழிப்புடனும் நடத்தப்படாமை கண்டு திடுக்கிட்டார். மிகச்சுருங்கிய நிலை களில் இவ் வழிபாடுகள் நிகழ்ந்தமை இவரைத் துணுக்குற வைத்தது. இதைவிட வேடிக்கை, ஒளி விட்டு எரிய வேண்டிய கோயில் விளக்குகள் எல்லாம் மிக மங்கலாக எரிந்துகொண்டி ருந்ததுதான். நந்தா விளக்குகள் கூட நலிந்த விளக்குகளாய் மாறியிருந்தன. இக் கொடுமைகள் கண்டு மனம் நொந்த இப் பெருமகனார், கோயிலாட்சியாரை அழைத்துப் பேரேடு களைக் கொண்டுவரச்செய்து, கோயிலின் வரவு செலவுகள் குறித்து விரிவான விசாரணை நிகழ்த்தினாராம். இந்தக் காலத்தில்தான் குறை மின்னளவுகளைக் (low voltage) கண்டு மருளுகிறோம் என்றால், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பணத்தைக் கையாடும் பொருட்டு, சில புத்திசாலிகள் குறைந்த அளவு நெய்யைப் பயன்படுத்தி ஒளி குறைந்த நிலையில் விளக்குகளை எரித்து ஏமாற்றிய விந்தையைப் பார்க்கிறோம்.

சமுதாய அமைப்பில் ஆணும் பெண்ணுமாய் வாழ்ந்த வாழ்க்கை முறைகளைப்பற்றி அதிகத் தகவல்கள் இல்லை. எளிய குடும்பங்கள் எப்படி வாழ்ந்தன, இல்லற நிகழ்வுகள் எப்படியிருந்தன என்பதற்கெல்லாம் அங்கொன்றும் இங்கொன்றுமாய் அபூர்வமான சான்றுகளே கிடைக்கின்றன. திருமணக் காலங்களில் பெண்ணுக்குச் சீதனம் கொடுக்கப் படும் பழக்கம் இருந்தமைக்கும், அச் சீதனம் அப்பெண்ணுக்கு மட்டுமே உரிமையுடையதாய் இருந்தமைக்கும், அதை எடுத்துப் பயன்படுத்தும் உரிமை கணவனுக்குக் கூட இல்லாமல் இருந்தமைக்கும் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. விக்கிரமசோழன் காலத்தில் மங்கை நல்லூரில் வாழ்ந்திருந்த

அகளங்கராயன் என்பான் தன் மனைவியின் சீதனச்சொத்தைச் செலவிட்டதற்காக அவளுக்குச் சில நிலங்களை ஈடாகத் தந்தான் என்று கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது.[17]

மகளிரின் வாழ்க்கை நிலை சிறப்புற்றிருந்ததென்று கருதும்படியாகச் சில கல்வெட்டுச் செய்திகள் கிடைத்துள்ளன. அரசுத்துறையில் மகளிர் அதிகாரிகளாகப் பணியாற்றிய அருமையைத் திருவையாற்றுக் கல்வெட்டுகள் இரண்டு இனிதே சொல்கின்றன. இராசேந்திர சோழனின் தேவியாரிடம் அதிகாரிச்சியாக இருந்த முத்தான பொந் நங்கையையும்,[18] இராசாதிராசன் காலத்தில் அதிகாரிச்சியாக இருந்த சோமயன் அமித்திர வல்லியையும்[19] இக் கல்வெட்டுகள் வெளிச்சத்திற்குக் கொணர்கின்றன.

எத்தனையோ பெண்கள், எளிமையானவர்கள் கூட கோயில்களுக்குக் கொடைகளை அள்ளிக் கொடுத்திருப்பதையும், சிலர் கோயில்களை எழுப்பியிருப்பதையும் பார்க்கும் போது, வழங்கும் உரிமையும், அதற்குரிய செல்வ வளமையும் மகளிர்க்கிருந்த உண்மை புலப்படுகிறது. கலைகளில் தேர்ந்த மகளிர் பல்விதப் பெருமைகளையும் சிறப்புகளையும் பெற்று வாழ்ந்த உயர்ந்த வாழ்க்கையைப் பல கல்வெட்டுகள் ,தெரியப்படுத்துகின்றன. உத்தரமேரூர் சுந்தரவரதப் பெருமாள்கோயிலிலுள்ள இரண்டு கல்வெட்டுகள், ஆயிரத்து இருநூற்றுவன் மாணிக்கம் என்னும் ஆடல் நங்கை இக் கோயிலுக்குச் செய்த திருப்பணிகளைப் போற்றி, இந் நங்கைக்கும், இவரது வழியினருக்கும் நாள்தோறும் இறைவனுக்கிடும் படையலில் ஒரு குறுணி சோறு வழங்கவும், தேரோட்டத்தின் போது சில சலுகைகள் காட்டவும் கோயிலார் அனுமதியுடன் ஊரவை எடுத்த முடிவைத் தெரிவிக்கின்றன.[20]

இக்காலத்திய கலைமாமணி, தாமரைத்திரு போன்ற பட்டங்களைப் போல அக்காலத்தில் தலைக்கோலி[21], அரையன்[22], விசையரையன்[23], விழுப்பரையன்[24] போன்ற பட்டங்கள் வழங்கப்பட்டன. ஆடல்வல்ல மகளிர் பலர்

தலைக்கோலிப் பட்டம் பெற்றுக் கோயில்களில் ஆடல் மன்றங்களை நிர்வகித்து வந்த நெஞ்சு நிமிர்த்தும் செய்திகளை, நிலைத்த உண்மைகளாய்க் கல்வெட்டுகள் கூறிக் களிக்கின்றன.[25]

பொதுமக்களில் பலரும் தங்களால் இயன்ற அறங்களைத் தவறாமல் செய்து அறவாழ்வு வாழ்ந்து வந்தமைக்கு ஆயிரக் கணக்கில் கல்வெட்டுகள் அசைக்கமுடியாத சான்றுகளாகின்றன. திருவெறும்பியூரில் செம்பியன் வேதிவேளான் என்ற பெருமகனார் பயன் கருதாத் தொண்டுகள் பல ஆற்றி வந்த அருமையைக் கண்டராதித்த தேவரின் ஒன்பது கல்வெட்டுகளால் அறிகிறோம்[26]. கோயில் அமைப்புக்கும், அக் கோயில் நிலங்களைச் சாகுபடி செய்ய வாய்க்கால் அமைப்புக்கும், அங்குப்பணியாற்றும் ஊழியர்க்கு வீட்டு வசதிக்கும், உள்ளூர் மக்களின் பயன்பாட்டிற்கான குளம் அமைப்பதற்கும், இன்னும் பல்வேறு அறச்செயல்களுக்குமாய் இவ்வள்ளல் வாரி வழங்கிய நிலக்கொடைகளின் அளவை மதிப்பிட்டுச் சொல்ல முடியாமல் கல்வெட்டுக் குறியீடுகள் திணறிப் போகின்றன. இதே போல் உத்தரமேரூரில் காஞ்சியைச் சேர்ந்த நுளம்ப மயிலாட்டி என்னும் பெருமகனார் பல்வேறு அறக்கட்டளைகளை நிறுவிப் புகழ் பொலிந்து வாழ்ந்தமையைப் பதினொரு கல்வெட்டுகள் நம்முடன் பகிர்ந்துகொள்கின்றன[27].

ஊர்ப்பெரியவர்களுள் அறிவிற் சிறந்தவர்களும், அநுபவ அறிஞர்களும் பெரிதும் மதித்துப் போற்றப்பட்டனர். பல அறக்கட்டளைகளை நிர்வகிக்கும் பொறுப்பு இப் பெருமக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. தலைமைச்சான்றோர் எனவும் தேவரிடைச் சான்றோர் எனவும், பட்டாரப் பெருமக்கள் எனவும் பல பெயர்களால் அழைக்கப்பட்ட இப் பேராளர்களின் வழி காட்டலில் ஊர் மன்றுகள் ஒழுங்காக நடைபெற்றன.

சோழர் சமுதாயத்தில் அடிமை முறை பழக்கத்தில் இருந்தமைக்குப் பல கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன. அடிமைகள் பொதுவாகக் கோயிலை ஒட்டியே அடிமைப்

பட்டனர். திருவிடந்தை என்னும் ஊரிலுள்ள கல்வெட்டு பன்னிரண்டு குடும்பத்துச் செம்படவர், அருள்மிகு வராக தேவர் கோயிலுக்கு இரு அரசாங்க அலுவலர்களால் விற்கப் பெற்றனர் என்று கூறுகிறது.[28]

தஞ்சை மாவட்டம் மேலப் பெரும்பள்ளத்திலுள்ள கோயிலுக்கு அறுவரை அடிமைகளாகப் பதின்மூன்று காசுக்கு நாங்கூரைச்சேர்ந்த ஒருவர் விற்றதாக அக்கோயில் கல்வெட்டு கூறுகிறது.[29] இதே கோயிலில் உள்ள இரண்டு கல்வெட்டுகள், அரையன் பெருங்காதி என்ற ஒரு பெண் தன்னையும் தன் உறவினர்கள் உள்ளிட்ட எழுவரையும் முப்பது காசுகளுக்கு விற்றுக் கொண்டதையும்,[30] நங்கை என்ற இன்னொரு பெண் தன்னையும், தன் மகள், பெயரன், பெயர்த்திகள் முதலான பதினைந்து பேரையும் முப்பது காசுகளுக்கு விற்றதோடு, தாமும் தம் உறவினரும் அக்கோயிலுக்கு வழிவழி அடிமைக ளாகப் பணி செய்வதாக ஒப்பந்தம் செய்துகொண்டதையும்[31] கூறுகின்றன. அரசியல் தலைவனான வயிராதரன் என்பவர் தம்முடையவும், சீதனமாக வந்த தம் மனைவியருடையவு மான அடிமைகளுள் முப்பத்தாறு பேரைத் திருவாலங்காட்டுக் கோயிலுக்கு அடிமைகளாக விற்றமையை அவ்வூர்க் கல்வெட் டொன்றால் அறிகிறோம்.[32] இத்தகைய அடிமைகளுள் யாரேனும் ஓடி விட்டால், அவர்களைத்தேடிப் பிடித்து வந்து, மீண்டும் அடிமைப் பணிபுரியச் செய்ய வேண்டுமென்று மூன்றாம் குலோத்துங்கன் செய்த கட்டுப்பாடு ஒன்று திருவாலங் காட்டுக் கோயிலில் கல்வெட்டுச் செய்தியாகக் காணப்படுகிறது.[33]

இந்த அடிமைத் தொழில் எப்படி நடந்தது, யார் யார் அடிமைகளாக இருந்தனர், விற்பனைமுறையில் வேறுபாடுகள் உண்டா என்பதற்கெல்லாம் சான்றுகள் இல்லையாயினும், சோழச் சமுதாயத்தில் மக்கள் மையத்திலும் அடிமை முறை இருந்ததென்பதே உள்ளத்தை வருத்தப் போதுமானது.

சமுதாயத்தில் கிளர்ச்சிகளும், குழப்பங்களும், கலகங் களும் உண்டாகப் பெரும் காரணமாய் அமைபவை சமயங்

களின் பாற்பட்ட காழ்ப்புணர்வுகளும் சாதிச் சழக்குகளும் தாம். பல்லவர்காலத்துச் சமயச் சண்டைகளைச் சம்பந்தர் பாடல்களும், தொண்டரடிப் பொடியாழ்வாரின் பாசுர வரிகளும் எடுத்துக்காட்டுகின்றன. சேக்கிழாரின் திருத் தொண்டத் தொகையும், சமயக் காழ்ப்புகள் மக்கள் மையத் தில் விளைத்துவிட்ட உறவுக் குழப்பங்களையும், உணர்வு மயக்கங்களையும் உள்ளங்கை நெல்லிக்கனியாய் உறுதிப் படுத்துகிறது. பிற்காலச் சோழர்கள் காலத்தில் இது பல்கிப் பெருகிற்று. சமணமும் புத்தமும் சரியத் தொடங்கின. பள்ளிகளும் விகாரைகளும் இடிக்கப்பட்டன. உடைந்து பழுதுபட்ட புத்தர் சிலைகளும், புதைந்த நிலையிலும், சிதைந்த நிலையிலும் கிடைக்கும் சமணச் சிற்பங்களுமே இதற்குத் தக்க சான்றுகளாகும். சமயப் பொதுமை பல வேந்தர்களால் கடைப்பிடிக்கப்பட்டாலும், பின்னால் வந்த சோழப் பேரரசர்கள் சைவப் பேராளர்களாய்ச் செயல்பட்ட விதத்தால், மக்களும் கூட மன்னர் வழியில், சமயப்போர் களைச் சந்தித்து மகிழ்ந்தனர். இதனால் ஏற்பட்ட கலக விளைவுகளைப் பல கல்வெட்டுகளும், முள்ளிக்கரும்பூர் போன்ற இடங்களில் கிடைக்கும் பழுதுபட்ட சிதைவுச் சின்னங்களும்[34] போட்டி போட்டுக்கொண்டு வெளிப்படுத்து கின்றன.

பல்லவர் காலத்தில் அரும்புவிட்ட சாதிச் சண்டைகள், சோழராட்சியில் பெருகிப் படர்ந்தன. வலங்கை, இடங்கை என்னும் சாதிப் பிரிவுகளின் சண்டைகள் பற்றி நூற்றுக்கணக் கான கல்வெட்டுகள் செய்தி நூலை நூற்றுக் கொடுக்கின்றன. பல்வேறு சாதிகளாய்ப் பிரிந்து வாழ்ந்த மக்கள் மையத்தில், ஏற்றத்தாழ்வுகள் ஏராளமாய் நிறைந்து, சமுதாயம் மதிப் பிழந்து கிடந்தது. எல்லாருக்கும் உரிமைகள் சமமாக இல்லை. சட்டத்திற்கு முன் அனைவரும் ஒன்றென்ற நிலை யில்லை. காலில் மிதியடி அணியவும், வீட்டுக்கு வெள்ளை யடிக்கவும், விழாக்காலங்களில் இசைக்கருவிகளை முழக்கவும், திருமண நிகழ்ச்சிகளில் சில சடங்குகளை நிகழ்த்திக்கொள்ள வும் கூடப் பல பிரிவினருக்கு உரிமையில்லாதிருந்த கொடுமை

களைக் கல்வெட்டுகள் கண்ணீர்க் கதைகளாகக் கழறிக் கதறுகின்றன.

கல்வித் துறையை வளர்க்கக் கல்லூரிகள் பல இருந் தமையைக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் எடுத்துரைத்த போதும், அவையனைத்தும் வடமொழிக் கல்லூரிகளாகவே இருந்த அமைப்பைப் பார்க்கும்போது தமிழ் மேம்பட்ட முதன் மொழியாய் இருக்கவில்லையோ என்ற ஐயமேற்படு கிறது. திருமுக்கூடலிலும், எண்ணாயிரத்திலும் இருந்து வேதம் பயிற்றுவித்த கல்லூரிகளைப் பற்றி விரிவான செய்திகள் கிடைத்துள்ளன. இக் கல்லூரிகளில் ரூபாவதாரம், மீமாம்சை, பிரபாகரம், வியாகரணம், நால்வகை வேதங்கள், மருத்துவம் போன்றவை கற்றுக்கொடுக்கப்பட்டன. எண்ணாயிரம் வேத கல்லூரியில் முதுநிலை மாணவர்கள் எழுபது பேரும், இளநிலை மாணவர்கள் இருநூற்று எழுபது பேரும், ஆசிரியர்கள் பதினான்கு பேரும் இருந்தனர்.[85] இவர்களுக்கு இலவசமாக உணவளிக்கப்பட்டதுடன், கல்வியும் இலவசமாகவே பயிற்றுவிக்கப்பட்டது. திருமுக்கூடலில் மாணவர்கள் படிக்க விளக்கும், படுக்கப்பாயும், சனிதோறும் தலைமுழுக எண்ணெயும் கூட கொடுக்க ஏற்பாடாகியிருந்தது.

ஆய்குல மன்னன் கோக்கருநந்தடக்கனின் பார்த்திவ சேகரபுரச் செப்பேடுகள்,[86] அவ்வூரில் இவ்வரசன் எழுப்பிய வேதபாடசாலையொன்றின் நிர்வாக நடைமுறைகளை விளக்கிச் சொல்கின்றன. இச் சாலையில் படிக்கும் மாணவர்கள் செய்யக் கூடாதவைகளாகச் சொல்லப் பட்டிருக்கும் செய்திகள் நமக்கு வியப்பையே தருகின்றன. இச் சாலையில் படிக்கும் மாணவர்கள் ஒருவரோடொருவர் சண்டையிடக் கூடாது; குட்டிக்கொள்ளக் கூடாது; படைக் கலன் எடுத்துச்செல்லக் கூடாது, பணிப்பெண்கள் என்ற பெயரில் மகளிரை விடுதியில் வைத்துக் கொள்ளக் கூடாது. சாலைக்குச் சொந்தமான நிலத்தில் உழுகின்ற குடிகளிடம் கட்டாயப்படுத்தி விளைவுகளில் பங்கு பெறக்கூடாது. இந்த விதிகளையெல்லாம் மீறினால் தண்டனைகளும், அபராதங் களும் நிச்சயம். தரமறிந்து, தகுதியறிந்துசேர்த்துக்கொள்ளப்

படும் மாணவர்கள் கூட கல்லூரி விடுதிகளில் இப்படி யெல்லாம் நடந்துகொண்டமையால்தான், பிற்காலச் செப்பேடுகள் இப்படிப் பல விதிகளை விதித்தனவோ என்ற எண்ணம் எழுகிறது. கல்விச் சாலைகளில் கூட கட்டுப்பாடின்மையும் ஒழுக்கக் கேடுகளும் மலிந்திருக்கக் கூடுமோ என்ற ஐயமும் தோன்றுகிறது.

பொதுமக்களுக்குக் கோயில் மண்டபங்களில் நிகழ்த்தப் பட்டசொற்பொழிவுகளே கல்வியறிவூட்டும் களஞ்சியங்களாக அமைந்தன. தனிப்பட்ட முறையில் திருமடங்கள் சில கல்விப் பணிக்குத் தொண்டாற்றியிருக்கலாம் என்று கருதத்தக்க வகையில் கல்வெட்டுகள் சில கோடி காட்டினாலும்,[87] தமிழ் மேலிடம் பெற்றிருக்கவில்லை என்பதும் தமிழறிவு நிறைந்தவர்கள் தமிழ்க் கல்லூரிகள் நடத்த ஆர்வம் காட்டவில்லை என்பதும் அங்கைக் கனியாய் நிற்கும் உண்மைகளாம். இவற்றை மெய்ப்பிப்பதுபோல் அரசாணைகளையும், ஆவணங்களையும் அழிவின்றிக் கல்லில் பொறிக்கும் தொழிலை மேற்கொண்டிருந்த கல்தச்சர்கள் பொறித்த கல்வெட்டுகளில் நூற்றுக் கணக்கான எழுத்து, சொற் பிழைகள் காணப்படுகின்றன. ஒரு சில வரிகளையேனும் பிழையின்றி எழுதும் அடிப்படை அறிவைக்கூட அவர்கள் பெற்றிருக்கவில்லை என்பது இதனால் புலப்படுகின்றது. கல்லில் பொறிக்கும்படி செய்திகளை எழுதிக் கொடுத்த அரசாங்க அலுவலர்களே சொற்பிழைகளை அறியாதவர்களாக இருந்தனரா, அல்லது கல்வெட்டுகள் பொறிக்கப்படும்போது, அவற்றைக் கண்காணித்து, அவற்றில் நேரும் பிழைகளை, அவ்வப்போது திருத்தும் பழக்கம் அந்நாளில் இல்லையா என்றெல்லாம் ஐயப்பாடுகள் எழுகின்றன.

குற்றங்களுக்குத் தரப்பட்ட தண்டனைகளும் சில சமயங்களில் வியப்பையே தருகின்றன. கொலைச்செயல் போன்ற கொடிய குற்றங்களுக்குக் கூட மிக எளிய தண்டனைகளே வழங்கப்பட்டிருக்கின்றன. சுந்தர சோழரின் கல்வெட்டொன்று மறவன் ஆங்காரனை என்ற பராந்தக

வளநாடுடையானும் அவன் மைத்துனன் வாணராயன் அரவிந்தன் இராசாதித்தனும் தங்களுக்குள் தட்டுப்போர் தொடங்க, அதில் வாணராயன் தோற்கடிக்கப்பட்டு மாண்டு போனான். அவன் ஆன்மா அமைதி பெற வாலிகண்டபுரம் கோயிலில், அவ்னை அழித்தவனான மறவன் தூங்கானை நந்தா விளக்கொன்று எரிக்க வேண்டுமென ஆணையிடப் பட்டது. இறைவனுக்குத் தங்கப்பட்டம், கோயிலில் விளக் கெரித்தல், வழிபாட்டிற்கு வகை செய்தல் என்ற நிலையில் தான் பெருங்குற்றங்களுக்கான தண்டனைகளைப் பரவலாகக் காணமுடிகிறது. பிற்காலத்திய கல்வெட்டுகளில் சிறிய குற்றங்களுக்குக் கூட கடுமையான தண்டனைகள் வழங்கப் பெற்றமையைக் காண நேரும்போது முறையான சட்ட அமைப்புகளும், குற்றவியல் நெறிகளும் பின்பற்றப்படவில்லை யென்பதை அறிய முடிகிறது.

பல்லாயிரமாய்ப் பொறிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டு களில், பழந்தமிழர் திரட்டி வைத்துவிட்டுப் போயிருக்கும் ஆயிரமாண்டுக்கால வரலாற்றை, உவத்தல் காய்தல் இன்றி அணுகும்போது மகிழ்வும் ஏற்படுகிறது; மருட்சியும் ஏற்படு கிறது. கலைகளை வளர்த்து, கவினுறு கோயில்களை எடுத்து, வரலாற்று உணர்வுடன் செய்திகளை வடித்து, நம்மை வியப்பிலும், களிப்பிலுமாய் மெய்சிலிர்க்க வைக்கும் அதே சமுதாயம், ஒழுக்கக் குறைவுகளிலும், நிர்வாகத் தவறு களிலும், சாதிசமயச்சழக்குகளிலும் மூழ்கித் தத்தளித்த தையும், சமுதாயத்தின் முழுப் பார்வையாகப் பார்க்க நேரும் போது, கண்கள் கலங்குவதைத் தவிர்க்க முடியவில்லைதான். என்றாலும், ஒரு நாணயத்துக்கு இரண்டு பக்கங்கள் என்பது போல், ஒரு சமுதாயத்துக்கும் இரண்டு பக்கங்கள் இருப்பது இயற்கைதானே. இதில் தளர்ந்து போவதற்கும், தயக்கம் கொள்வதற்கும் எந்த அவசியமும் இல்லை. வளரும் சமுதாயங் களில்இதுபோன்றுநெல்வயலின்களைகளாய், நாளும் நடக்கும் நல்லவைகளுக்கு நடுவில், அங்கொன்றும் இங்கொன்றுமாய்க் கேடுகளும், குறைபாடுகளும் நிகழ்வது என்பது தவிர்க்க முடியாதது. எத்தனை நேர்மையுணர்வும், நியாயப் போக்கும்,

வரலாற்றுத் தொலைநோக்கும் இருந்திருந்தால், நல்லவை களைப் பொறித்த அதே நேரத்தில், நம் முன்னோர்கள், நடந்துபோன தீமைகளைக்கூட, மறைக்கக்கூடிய வாய்ப்புகள் இருந்தும், அடுத்த தலைமுறைகள் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தாலும், இதைப் படிக்கும் அடுத்தவர்கள் இந்தப்பொல்லாப் பாதைகளைப் புறக்கணிக்க வேண்டும் என்ற துடிப்பாலும், கோயில் சுவர்களில் பலரும் பார்க்க எழுத்தாக்கிப் போயினர் என்பதை நினைக்கும் போது வியப்பு மலர்கிறது. அவர்பால் நம் மதிப்பும் உயர் கிறது.

———

1. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, 1974, பக். 701–706.

2. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, 1974,, பக். 707-708.

3. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, 1974, பக். 531.

4. மேற்படி., பக். 531.

5. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, 1974, பக். 532.

6. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, 1974. பக். 530–533.

7. டாக்டர் கே. கே. பிள்ளை, தமிழக வரலாறு, மக்களும் பண் பாடும், 1977, பக். 321.

8. மேற்படி., பக். 321.

9. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், 1966, பக். 165.

10. மேற்படி., பக். 165.

11. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், 1966. பக். 166.

12 எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், 1966, பக். 183.

13. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், 1966, பக். 302-304.

14. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச்சோழர் கலையும் சிற்பமும், 1966, பக். 255.

15. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச்சோழர் கலையும் சிற்பமும், 1966, பக் 333.

16. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச்சோழர் கலையும் சிற்பமும், 1966, பக். 209.

17. டாக்டர் கே. கே. பிள்ளை, தமிழக வரலாறு-மக்களும் பண்பாடும், 1977, பக். 345.

18. நடன. காசிநாதன், கு. தாமோதரன், கல்வெட்டு ஓர் அறிமுகம், 1980, பக். 32.

19. S.I.I. Volume V, INs, No. 520.

20. டாக்டர் இரா. கலைக்கோவன், காட்டுக்குள் ஒரு கலைக் கோயில், கழகவெளியீடு, 1986, பக். 123.

21. மேற்படி., பக். 121-124.

22. டாக்டர் இரா. நாகசாமி, இராஜராஜன், 1978, பக். 19.

23. இரா. நாகசாமி, நடனகாசிநாதன், கு. தாமோதரன் ச. ஹரிஹரன் கல்வெட்டியல் 1980, பக். 96.

24. மேற்படி., பக். 96.

25. மயிலை சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், 1969, பக். 134.

26. A. R. E. 102-105, 112, 123, 129, 131, 134 of 1914.

27. S. I. I. Vol. III, 155, 157, 158, 160, 162, 164, 168, 169, 170, 171, 179.

28. டாக்டர் மா. இராசமாணிக்கனார், கல்வெட்டுகளில் அரசியல், சமயம், சமுதாயம், 1977. பக். 96,

29. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, 1974, பக். 569.

30. மேற்படி., பக். 569.

31. மேற்படி., பக். 570.

32. மேற்படி., பக். 570-571.

33. மேற்படி., பக் 571.

34. C. Vani, Mullikkurumbur, Disertation Submitted to Bharathidasan University, 1985.

35. டாக்டர் மா. இராசமாணிக்கனார், கல்வெட்டுகளில் அரசியல், சமயம், சமுதாயம், 1977, பக். 104.

36. நடனகாசிநாதன், கு. தாமோதரன், கல்வெட்டு ஓர் அறிமுகம் 1980, பக், 8-11.

37. டாக்டர் இரா. கலைக்கோவன், பூவார் அடிச்சுவடு, கலை மகள் சனவரி 1985, பக். 64.

டாக்டர் மா. இராசமாணிக்கனார், கல்வெட்டுகளில் அரசியல், சமயம், சமுதாயம், 1977, பக். 102-110.

38. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்,1966, பக் 118.

— — —

# 12. திசை விளக்காய்த் திகழ்கின்ற திருவரங்கம்

காவிரியும் கொள்ளிடமும் அரவணைக்கும் அழகு சூழ் திருவரங்கம், ஆதியும் அந்தமும் இல்லாதவோர் அற்புதத் திருப்பதி. அரவணையில் துயில் பயிலும் அந்தக் கார்மேக வண்ணனின் கருணை மழையில் நனைந்தவர்களாய்ப், பாசுரங்களைப் பாடிப்பாடி, அவன் பாத மலர்களைப் போற்றிக் கொண்டாடிய, ஆழ்வார் பெருமக்களின் ஆதார சுருதிகளில் ஆழ்ந்தமிழ்ந்த அழகுத் திருப்பதி. இதைப் பாடி மகிழ்ந்த பதினொரு ஆழ்வார்களுள்,[1] அதிகமாய்ப் பாடி அரங்க மையலில் அகமகிழ்ந்து போனவர் திருமங்கையாழ்வார்.[2] வேங்கடத்துப் பாசுரங்களை விட அரங்கத்துப் பாசுரங்களே எண்ணிக்கையில் அதிகம்.[3] இருநூற்று இரண்டு பாசுரங்களைக் கொண்ட வேங்கடத்தானுக்கு மதுரகவியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வாரின் பாசுரங்களில்லை.[4] இருநூற்று நாற்பத்தேழு பாசுரங்களால் இதய சுத்தியோடு தொழுது வணங்கப்படும் அரங்கத்தானுக்கு மதுரகவியாழ்வாரின் பாசுரங்களில்லை.[5]

பொன்னி சூழ் அரங்கத்துப் பூவை வண்ணனின் திருவடிகளைப் பணிந்தபடி, அரங்கத்து மண்ணிலே ஆர்வமே நிறைந்தவர்களாய்க், காலப் பொற்சுவடுகளைப் பதித்த பெரியவர்கள் பலராவர். அரங்கனின் பணிக்காக அரசையே துறந்து வந்த குலசேகர ஆழ்வாரும், அவர்தம் திருமகள் சேரகுலவல்லியாரும் இங்கிருந்தபடியே இனிய நல் பாசுரங்களால் இறைவனைப் பாடி மகிழ்ந்தார்கள்.[6] கொள்ளையடித்தாவது கோயில் செயல் முடிக்கத் திருமனம் கொண்ட திருமங்கை மன்னன், அரங்கன் கோயிலுக்காகச் செய்யாத செயல்களில்லை. தம் தோற்றப் பெருமையால் உறையூரை உயர்த்திய திருப்பாணாழ்வார், விப்ர நாராயணராய் இருந்து வேத முதல்வனால் தொண்டரடிப் பொடியாழ்வாரானவர், ஏறத்தாழ அறுபது ஆண்டுகளாய் அரங்கன் திருக்கோயில் நிர்வா

கப் பொறுப்பேற்று, பல அரிய மாறுதல்களைச் செய்ததுடன், விசிஷ்டாத்வைதத்தை உருவாக்கிய வித்தகர் பெருமான் உடையவர் ராமானுஜர், மற்றும் கூரத்தாழ்வார், பராசர பட்டர், வேதாந்த தேசிகர் என்று இம் மண்ணைப் புடம் போட்ட பெரியார்கள் பலராவர். தென்கலை வைணவ ஆச்சார்யாரான மணவாள மாமுனிகள் இப் பகுதியில் உள்ள பல்லவராயன் மடத்தில் பல்லாண்டுகள் வாழ்ந்திருந்து, சமயப் பொழிவுகளாற்றித் திருவரங்கத்திற்கு மேலும் பெருமை சேர்த்தார்.[7]

யாரால் கட்டப்பட்டது, எப்போது கட்டப்பட்டது; எப்படிக் கட்டப்பட்டது என்பது போன்ற மூலத் தகவல்களை முற்றிலும் அறிய முடியாத நிலையில், சிலப்பதிகாரத்தின் இனிய வரிகளைக் கொண்டே,[8] இரண்டாம் நூற்றாண்டி லிருந்து இக் கோயிலின் வரலாற்றைத் தொகுக்க முடிகிறது: பல்லவர் காலத்துப் பெரியவர்களின் பாசுரங்களைப் பெற்ற இக் கோயிலில் அந்தப் பல்லவர்களின் கல்வெட்டுகள் ஒன்று கூட இல்லாதது வியப்பையே தருகிறது. திருச்சுற்றுச் சுவர் கள், தூண்கள், செப்பேடுகள், நகைகள், பாத்திரங்கள் என்று எல்லா இடங்களும், எல்லாப் பொருள்களும் வரலாற் றுச் செய்திகளின் வரிவடிவங்களைப் பெற்றிருக்கும் இக் கோயிலில், தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி, ஒரியா எனப் பலமொழிகளில், அறுநூற்று நாற்பத்து நான்கு கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன.[9] இவற்றுள் முதல் கல்வெட்டைப் பொறித்த பெருமையைப் பெறுபவன் சோழ குலத் தென்றலான முதலாம் ஆதித்த சோழனே.[10] ஏறத் தாழ எண்பத்து மூன்று கல்வெட்டுகளைப் பொறித்து இக் கோயிலின் பால் தனக்குள்ள மாறாத அன்புக்கு மகுடம் சூட்டிக் கொண்டவன் முதலாம் குலோத்துங்கன்.[11] இப் பெருமானின் கல்வெட்டுகளுள் பெரும்பான்மையன மூன்றாம் திருச்சுற்றுச் சுவரில், இவனின் பத்தாம் ஆட்சி யாண்டிலிருந்து நாற்பத்தெட்டாம் ஆட்சியாண்டு வரையி லான காலகட்ட நிகழ்வுகளுக்குக் கவிதை விளக்கங்களாய்க் காணப்படுகின்றன. நம்பிராட்டியார் லோக மாதேவியார்,

பாண்டியன்புதல்வி நெறியன்மாதேவி, தென்னவன் மாதேவி, வளவன் மாதேவி, குணவல்லி, என்னும் கடலூருடையாள், சிறியாண்டாள் சாணி என்று இக் கோயிலுக்குக் கொடையளித்த கோமகள்களும் பணிமகள்களும் கல்வெட்டுகளால் வெளிச்சத்துக்கு வருகிறார்கள்.[12]

நிலக்கொடை, பொருட்கொடை, பொற்கொடை என்று எத்தனை விதமாய்க்கொடைகள்! திருவிழா நடத்த, எளியோர் உணவருந்த, விளக்கெரிக்க, மண்டபங்கள் கட்ட, திருப்பணிகள் நிகழ்த்த, மருத்துவப்பணி தொடர, என்று எத்தனை பணிகளுக்காய்க் கொடைகள்! கொள்ளை கொள்ளையாய் வந்து குவிந்த பொன்னையும், முத்தையும், நவரத்தினக் கற்களையும் பண்டாரத்தில் ஒடுக்கிப் பாதுகாக்கவும், நிலங்களைப் பட்டியலிட்டு, அதன் விளைச்சலில் வரும் பயிர் வகைகளைப் பெற்று வைக்கவும், கோயில் நிர்வாகங்களை நேர் செய்து இறைக்காரியங்களை இடையூறுகளின்றி இனிதே நிறைவேற்றவும் இக் கோயிலில் இருந்த அதிகாரிகளின் பட்டியலைப் பல கல்வெட்டுகள் பறை சாற்றுகின்றன.

கோயில் நிர்வாகத்தின் முதன்மை அதிகாரி ஸ்ரீ கார்யம் செய்வார் எனப்பட்டார். இப்பொறுப்புக்கான அலுவலர்கள் மிகுந்த கவனத்துடனும், அரசு அனுமதியுடனுமே தெரிந்தெடுக்கப்பட்டனர். முதலாம் குலோத்துங்கனின் ஆட்சிக் காலத்தில் ஏறத்தாழப் பதினொரு பெருமக்கள் இப் பொறுப்பைப் பல்வேறு கால கட்டங்களில் ஏற்றிருந்தனர்.[13] சங்கர நாராயண பட்டர், நிஷாதிராஜர் தென்னவன் பிரும்ம மாராயன், நடுவிருக்கும் அனந்த நாராயண பட்டர், சோழ சிகாமணி மூவேந்த வேளார், வீர சோழ மூவேந்த வேளார் என்பார் அவர்களுக்குள்ளும் முக்கியமானவர்கள்.

ஸ்ரீ கார்யம் செய்யும் அதிகாரிக்குத் துணையாக ஆழ்வார் கன்மிகள் என்னும் பெயருடன் கூடிய பேரவை ஒன்று இயங்கி வந்தது. இப்பேரவை தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரு உறுப்பினர்களைக் கொண்டது. ஸ்ரீ வைஷ்ணவ வாரியம், ஸ்ரீ பண்டார வாரியம் என்று இரு குழுக்களாக

இப்பேரவை உறுப்பினர்கள் செயல்பட்டனர். ஒவ்வொரு குழுவிலும் ஆறு உறுப்பினர்கள் அமைந்தனர். இவர்கள் தவிர ஸ்ரீ வைஷ்ணவ கணக்கு என்னும் அலுவலரும் கணக்கு வழக்குகளைக் கவனிக்க இருந்ததாகத் தெரிகிறது.[14]

அமைதியாகவும் முறையாகவும் ஒழுங்காகவும் நடந்து வந்த கோயில் நிர்வாகம் கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் சரியத்தொடங்கியது. சோழர்களின் வீழ்ச்சியும், பாண்டியர்தம் எழுச்சியும், ஒய்சளர்களின் வரவும் திருவரங்க நிர்வாகத்தைப் பெரிதும் பாதித்த நிலையைக் கல்வெட்டுகளால் அறியமுடிகிறது. முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டொன்று கி. பி. 1225இல் இக் கோயிலின் நிதியம் கோயிலாட்சியரால் கையாடப்பட்டதையும், ஜீயர் நாராயணதாசர், கோயில் கூறுடையாரான அழகிய சோழ பிரும்மாதிராயர்,பெரிய திருப்பதி ஸ்ரீ வைஷ்ணவர், கோயில் பணியாளர்கள், ஸ்ரீ பாகவத நம்பிமார், திருவரங்க ஊரவையார், விண்ணப்பம் செய்வார், நம்பிமார், ஸ்ரீபாதம் தாங்கும் நம்பிமார், திருவாசல் அரையர் ஆகியோர் அடங்கிய குழு இது குறித்துத் தீர விசாரித்து முடிவுகளுக்கு வந்ததையும், அம்முடிவுகளுக்கேற்ப நிர்வாகம் சீரமைப்பு செய்யப்பட்டதையும் எடுத்துரைக்கிறது.[15]

முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் காலத்தில் இக் கோயிலின் விமானம் பொன்னால் வேயப்பட்டதுடன், நிர்வாகமும் பல மாறுதல்களைப் பெற்றது. ஒரு கொத்துவிடமிருந்த (குழு) நிர்வாகப் பொறுப்பு பல கொத்துகளிடம் பகிர்ந்து தரப்பட்டது. உள்ளூராரும் அரையரும் பொற் பண்டாரத்தைக் காக்கும் புதியபொறுப்பையேற்றனர்.[16] இதுபற்றி இறைவனே ஆணையிட்டது போல ஒரு கல்வெட்டு இக் கோயிலில் உள்ளது. யார், யார் நிர்வாகக் குழுவில் இருக்க வேண்டுமென்பதை இறைவனே விரும்பியது போல் இக்கல்வெட்டு பேசுகிறது:

'நம் வீட்டுக் காரியம் செய்யும் பேரில் கோவணவர், குடவர், நம்பட்டர்கள், நம் வாளையும் சோட்டையும்

எடுக்கும் தொதவத்தி தூமறையோரான உள்ளூரார், நம் ராமானுஜனை உடையார், நம் பாடுவார், தழை இடுவார், நமக்குத் தண்ணீரும் மாலையும் கட்டுவார், நம் வாசல் காக்கும் ஆரியர், நமக்கு விளக்கும் பிடித்து பூத்தோப்பும் செய்யும் புண்டரிகர் உள்ளிட்ட கொத்து தோறும் ஒவ்வொரு வராகப் பத்துப் பேரும். தேசாந்தரிகள், சந்நியாசிகளில் நால்வரும், தொண்டை மண்டலம் பாண்டி மண்டலம் உள்ளிட்ட பதினெட்டு மண்டலங்களுக்கும் பொதுவாக ஐவரும், சேர, சோழ, பாண்டியர்க்கும், வடக்கிலுள்ள க்ஷத்திரியர்க்கும் சேர்த்து நால்வரும் ஆக மொத்தம் இருபத்து மூவர் கூடி, நம் காரியம் நல்லபடியாய் நடக்கச் செயலாற்றுவார்களாக, எனத் தொடரும் இக் கல்வெட்டு, தெரிந்தெடுக்கப்பட்ட கோயிலாட்சியரின் தகுதிகளுள் ஒன்றாய், நம்மாழ்வார், மங்கையாழ்வார் பாடிய பாசுரங் களில் இவர்கட்குத் தேர்ச்சி, இருக்கவேண்டுமெனக் குறிப்ப துடன், இவர்களுக்குத் தரப்பட வேண்டிய ஊதிய விகிதங் களையும் தெளிவாய்ச் சுட்டுகிறது.[17]

இக் கோயில் கல்வெட்டுகளில் குறிக்கப்படும் பொருட் களுள் சில நம் கவனத்தைக் கவர்கின்றன, உலகமாதேவியால் தரப்பட்ட கற்கள் பதிக்கப்பட்ட பாம்புப்படுக்கை இக்கோயிலின் பொற்பண்டாரத்தை அழகு செய்தது.[18] இக்கோயிலில் பீமசேனி கற்பூரம் என்ற பெயரில் ஒருவகைக் கற்பூரம் மதுரை கொண்ட பரகேசரியான முதற்பராந்தகன் காலத்திலும், உத்தம சோழன் காலத்திலும், இறைவன் திருமுன் எரிக்கப்பட்ட செய்தியை இரண்டு கல்வெட்டுகளால் அறிகிறோம்.[19] இக்கற்பூரம் அளவால் இப்பெயர் பெற்றதா, அல்லது வேறேதேனும் காரணம் பற்றிப் பெயர் பெற்றதா என்பதறியோம்.

முதற்குலோத்துங்கன் கல்வெட்டுகளால் தேத்தருந்திறல், திருப்பள்ளியெழுச்சி, திருவாய்மொழி முதலிய திவ்வியப் பிரபந்தப் பாசுரங்கள் இக்கோயிலில் இறைவன் திருமுன் பாடப்பெற்றதை அறிந்து மகிழ்கிறோம்.[20]

விசயநகரக் கல்வெட்டொன்று நாராயண விவாக மென்னும் வடமொழி நாடகக்காவியத்தின் வரிகள் சில வற்றைப் பெற்றுள்ளது.[21] இறைவன் திருமுன் பாடப்பெற்ற ஞான சூடாமணி என்னும் இலக்கியத்தை ஒரு கல்வெட்டும்,[22] அச்சுதராயரின் அவைப் புலவராயிருந்த திருமலை அம்மனின் பக்த சஞ்சீவியை மற்றொரு கல்வெட்டும்[23] வெளிப்படுத்துகின்றன. இந்தத் திருமலை அம்மனே அச்சுதராயரின் அரசியாய் மாறிய ஓதுவ திருமலாம்பாள்.[24] இவ்விரண்டு இலக்கியங்களையும் இக் கல்வெட்டுகள் இன்றேல் நம்மால் அறிந்திருக்க முடியாது.

பல்வேறு கல்வெட்டுகளால், இக்கோயிலுக்கு அளக்கப் பட்ட நெல் விகிதங்களை அறிய மலைப்பேறபடுகிறது. இப்படிப் பல்வேறு கொடைகளால் வந்து குவியும் நெல்லைக் கொட்டி வைக்கக் கட்டப்பட்ட ஐந்து பெரும் செங்கற் குதிர்களை இன்றும் கோயிலின் வெளித்திருச்சுற்றில் காண லாம்.

இக் கோயில் பண்டாரம், இறைக் காரியங்களுடன் பொதுப்பணிகளிலும் கருத்தாய் இருந்ததைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. ஏழை எளியவர்களுக்குக் கடன்கள் தரப் பட்டன. பசித்து வந்த சுற்றுலாப் பயணிகளுக்கு உணவு தரப்பட்டது. வேதம் வல்லவர்களுக்கு விருந்துகளே நடந்தன. நலிந்த சிற்றூர்களுக்கு நலம் பெறவும், நன்மைகள் பெருகவும் முதலீடுகள் தரப்பட்டன. ராஜமகேந்திர சதுர்வேதி மங்கலத்தில் இருந்த மும்முடிச் சோழ விண்ணகர் ஆழ்வார் கோயிலில் திருட்டும் கலவரமும் நடந்து கோயில் களையிழந்த போது அரங்க நிர்வாகம் தலையிட்டு அதைச் சீர் செய்ததுடன், கோயிலை மீட்டும் செல்வாக்குப் பெறச்செய்யும் சிறந்த வழிகளை வகுத்துத் தந்தது.[25]

இக் கோயில் பண்டாரம் வங்கியாகவும் செயல்பட்டதற்கு முதலாம் குலோத்துங்கனின் கல்வெட்டொன்று சான்று பகர் கிறது.[26] முதலாம் பராந்தகனின் பத்தாம் ஆட்சியாண்டின் போது, திருவரங்கம் கோயில் பண்டாரத்திலிருந்து சந்திர

லேகைச் சதுர்வேதி மங்கலத்தார் பெரும் பொருளைக் கடனாகப் பெற்றனர். ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகள் கழித்து முதலாம் குலோத்துங்கனின் காலத்தில் அக்கடன் வட்டியுடன் திருப்பித் தரப்பட்டது. இவ்வளவு நீண்ட காலக் கடன்களை இப்போது எந்த வங்கியும் தருவதில்லை என்பது இங்குக் கருத்தக்கது. பொருள் வரவுக்குறைவால் சிற்றூர்கள் நலிந்துவிடக்கூடாது என்ற அருள் நோக்கே இது போன்ற நீண்ட கால உதவிகளுக்கான காரணமாகும். அதுவும் கடன் பெற்ற சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலம் என்ன சாதாரண சிற்றூரா? ஒரு காலத்தில் புகழ் பூத்து விளங்கிய முத்தரையர் களின் தலைநகரமல்லவா! இன்று செந்தலை என்ற சிறிய பெயருடன் அளவிலும் சுருங்கி, அழிந்துபோய் நிற்கும், இந்த ஊரும் இதன் சுற்றுப் புறமும் இன்றும் வரலாற்று ஆய்வாளர் களுக்குச் செய்தி விருந்துகள் படைக்கும் சுந்தரப் புதையல்கள்!

பண்டாரத்தின் பணிகள் இவை மட்டும்தாம் என்று எண்ண வேண்டா, நோயுற்றவர்க்கும், தளர்ந்து மெலிந்தவர்க்கும் மருத்துவப் பணிகளும், அரங்கன் கோயிலில், ஒரு மருத்துவமனையின் துணையோடு தொடர்ந்து நடந்தன. இந்த மருத்துவமனை ஆரோக்கியசாலை என்ற பெயருடன், நான்காம் திருச்சுற்றில் எடுத்த கை அழகிய நாயனார் கோபுரமான வடக்குக் கோபுரத்துக்கு மேற்கே அமைந்திருந்ததையும், அதற்குச் சாலைப் புறமாகக் கொடைகள் தரப்பட்டதையும் கி. பி. 1257-ஆம் ஆண்டுக் கல்வெட்டு களிப்போடு பகிர்ந்துகொள்கிறது.[27] முகமதியர்கள் படையெடுப்பால் அழிவுற்ற இம்மருத்துவமனை மீண்டும் 1493-இல் கருடவாகன பண்டிதரால் புத்தமைப்பு செய்யப்பட்டு, தன்வந்தரி பெருமானின் திருவடிவத்தையும் பெற்றுத் தன் பணியைத் தொடங்கித் தொடர்ந்தது.[28]

ஏறத்தாழ ஐம்பது பேரரசர்களின் பெருங்கொடை களையும், எண்ணிக்கையில் அடங்கா ஏராளமான பெருஞ்செல்வர்கள், பொதுமக்கள் ஆகியோரின் ஆர்வம் நிறை

அறங்களையும் பெற்றுச் சிறந்த இத் திருக்கோயில், ஆகமங்களின் இலக்கண வரையறையை அடியொட்டி அமைந்த மிகச் சிறந்த திருக்கோயிலாகும். கருவறையைச் சுற்றிலும் ஏழு திருச்சுற்றுகளைக் கொண்ட இக் கோயிலின் கடைசித் திருச்சுற்றுகள் இரண்டும் பெருவீதிகளாய் அமைந்துள்ளமை போற்றற்குரியதாகும். அனைத்துப் பரிவாரத் தெய்வங்கட்கும் இங்குச் சுற்றாலைக் கோயில்கள் உள்ளன. ஏறத்தாழப் பதினேழுக்கும் மேற்பட்ட துணைக்கோயில்கள் இப்பெருங்கோயில் வளாகத்தில் பெருமையுற அமைந்துள்ளன. இக் கோயிலுக்கென்றே அமைந்த பல்வேறு தனிப்பெருமைகளுள் மிகமிக முக்கியமானவை இங்குள்ள தன்வந்தரி திருமுன்னும், பெருமாள் திருவுரு இயலில் புரட்சியை ஏற்படுத்திய ஆனந்தத் தாண்டவத் திருமாலும்தான்.[29] தென்னிந்தியாவில் உள்ள எந்தக் கோயிலிலும் இல்லாத சிறப்புக்குரிய திருமுன் தன்வந்தரி திருமுன். அது போலவே எந்த ஆகமத்திலும் காணப்படாத புதியவடிவம் ஆனந்தத் தாண்டவத் திருமால். பாலகிருஷ்ணனின் காளிங்க நர்த்தனத்தையும், சிவபெருமானின் ஆனந்தத் தாண்டவத்தையும் இணைத்து மிகப் புரட்சிகரமான சமயப் பொதுமை நோக்கோடு தமிழகத்துச் சிற்பியொருவர் கண்ட தன்னிகரற்ற திருமேனிதான் ஆனந்தத் தாண்டவத் திருமால். சங்கு சக்கரம் ஏந்திய பின்கைகளோடு, வலமுன் கையில் அபயம் காட்டி, இடமுன்கையை வேழ முத்திரையில் நீட்டி, ஐந்து தலைப் பாம்பின் தலைகளின் மீது தன் வலக்காலை ஊன்றி, இடக்காலை எடுத்த பாதமாய் வலப்புறம் வீசி, பெருமாள் ஆடும் அழகை என்னென்பது,

இது போலவே ஊஞ்சல் மண்டபத்தில் அன்னமூர்த்தி பத்மசம்ஹிதையில் காணப்படும் விளக்கத்திற்கேற்ற சிற்பப் படப்பிடிப்பாய்க் காணப்படுகிறார். இதுவும் ஓர் அற்புதமான திருவுருவ அமைப்பாகும். இக் கோயிலில் வைணவ ஆகமப்படி அமைந்துள்ள வழிபாட்டுப் படிமங்கள் அனைத்தையும் கண்டு, மகிழ்ந்து, வணங்கலாம்.

பல்வேறு மன்னர்களின் கீழ்ப் பல்வேறு நிலைகளில் வளர்ந்து வந்த அரங்கன் திருக்கோயில் சிற்பச் செறிவுகளைக் கீழ்வாசல் குதிரை மண்டபமும், குழலூதும் பிள்ளைத் திருக் கோயிலின் புறக்கோட்டங்களும், கிளிமண்டபத்து அடிநிலை களும் கொண்டுள்ளன. குதிரை மண்டப வீரர்களும் சண்டைக் காட்சிகளும் தமிழகத்து வீரத்திற்கு எடுத்துக் காட்டென்றால், குழலூதும் பிள்ளைக் கோயில் கோட்டச் சிற்பங்கள் இம்மண்ணின் காதல் உணர்வுகளுக்கமைந்த கலங்கரை விளக்கங்கள். மங்கையாழ்வாரின் பாடல்களுக் கென்றே அமைக்கப்பட்ட மகோன்னதமான விளக்கப் படங்கள் போல் இச் சிற்பங்கள் அமைந்துள்ளன. 'என்னையும் நோக்கி, என் அல்குலும் நோக்கி, ஏந்து இளம் கொங்கையும் நோக்குகின்றார்,'[80] என்ற பாசுரவரிகளுக்கோர் பாங்கான விளக்கமாய் ஆடையிழந்து, நாணமழிந்து, நெற்றிச் சுட்டியும், நேர்கொண்ட வகிடுமாய் நிற்கும் ஆயர் மகளின் அழகு வடிவம் ஒன்று போதும் அரங்கன் கோயில் சிற்பப் பெருமைக்கு.

கிளிமண்டபத்து ஆடல் சிற்பங்கள் அழகு பொலிந்தவை. தனிப்பெரும் ஆய்வொன்றே இச்சிற்பங்களின் இன்பமூட்டும் அழகுகளையும், சிறப்புக்குரிய இலக்கண அமைப்புகளையும் வெளிக்கொணர வல்லது. உள்திருச்சுற்றுக்களில் காணப் படும் பாலுணர்வுச் சிற்பங்கள் அதிசயமானவை. சில கோலங் களும், சில நிலைகளும் சிற்பியரின் அதீதக் கற்பனைகளாய்க் காட்சியளிக்கின்றன. கிளிமண்டபத்து ஆடற்சிற்பங்களும், திருச்சுற்றுக் காதல் சிற்பங்களும் இப்போது டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றுப் பேரவையால் ஆய்வுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உடையவரின் மூலத் திருமேனியும், உலாத் திருமேனியும் தனித்திரு முன்னாய் அமைந்துள்ளன. இத்திருமுன்னின் கூரையில் நாயக்கர் கால ஓவியங்கள். தாயார் கோயில் திருச் சுற்றுக் கூரையிலும் நாயக்கர் ஓவியங்கள். கண்ணுக்குள் கண்ணாய் வைத்துப் போற்றப்பட வேண்டிய இந்த ஓவியப்

புதையல்கள் கண்டுகொள்வாரும், கருணையுள்ளாரும் இல்லாக் காரணத்தால், மெல்ல மெல்ல உரிந்து கொண்டும், மங்கிக்கொண்டும் நம்மைவிட்டு மறைந்து கொண்டிருக்கின்றன.

மேற்குப்புறம் திருமுடி காட்டி, கீழ்த்திசைக்குத் திருவடி காட்டி, வடபுறத்துள்ளோர்க்கு இடக்கை காட்டி, தெற்குள்ளோர் கண்டு மகிழும் வண்ணம் அவர்கட்குச் சுந்தரத் திருமுக தரிசனம் காட்டி, அரவணை மேல் கண் துயில்வதாய்ப் படுத்திருக்கும் அந்த அழகரங்கனின் மேல் ஆசை கொண்டு தீராக்காதலில் தம்மையிழந்த துலுக்க நாச்சியாரும், ஆண்டாள் நாச்சியாரும், அவரது அரவணைப்பில் கோயில் வளாகத்தில் தனித்தனி திருமுன்களில் தவமிருக்கின்றனர். கமலவல்லியோ அரங்கனின் அடிபட்ட மண்ணில் கற்பூரமாய்க் கரைந்தேபோனாள்.

இவர்களுள் துலுக்கநாச்சியாரின் கதையையும், இறைவனோடு சங்கமமான சோழ இளவரசியாரின் வரலாற்றையும் கோயிலொழுகும், உறையூர் சந்நிதி வைபவமும் எடுத்துக் கூறுகின்றன.

அல்லாவுத்தீன் டில்லியில் பட்டமேறியதும் தென்திசை நாடுகளைக் கைப்பற்ற எண்ணினார். அந்த எண்ணத்தின் விளைவாய்த் தளபதி மாலிக்காபூரின் தலைமையில் டில்லிப் படை தென்னாடு நோக்கிப் புறப்பட்டது. கி. பி. 1310இல் மதுரை, அரசுரிமைக் குழப்பத்தால் அலமந்து கிடந்தது. மாறவர்மன் குலசேகரனைக் கொன்று சுந்தரபாண்டியன் அரியணை ஏறினான். அவனுக்கும் அவன் தம்பி வீரபாண்டியனுக்கும் அரசுரிமைப் போர்கள் தொடர்ந்தன. போரில் வீரபாண்டியன் வெற்றிபெற, சுந்தரபாண்டியன் மதுரையைக் கைவிட்டு ஓடினான். ஓடியவன் தெற்கு நோக்கி வந்துகொண்டிருந்த மாலிக்காபூரைத் தனக்கு உதவுமாறு வேண்ட, மாலிக்காபூரின் முகமதியப்படை தமிழகத்துள் நுழைந்தது. மதுரையைத் தாக்கிய மாலிக்காபூர் உறையூர், கண்ணனூர், சிதம்பரம், திருவரங்கமென்று பல நகரங்களை



திருவரங்கக் கீழவாசல் மண்டபம்



திருவரங்கம் கீழவாசல் மண்டபம்

பக். 193



பஞ்சவன் மாதேவீச்சரம் இறைவன்
கோயில்விமானம் பக். 204



பஞ்சவன் மாதேவீச்சரக் கோட்டச் சிற்பம்
—பிச்சையுகக்கும் பெம்மான் பக். 206

அழிக்கும் பணியில் படைகளை ஈடுபடுத்தினான். முடிவாக மதுரை போனபோது சுந்தரபாண்டியனின் சிற்றப்பன் விக்கிரம பாண்டியனை எதிர் கொள்ள முடியாது தளர்ந்த காபூர், தான் கைப்பற்றிய ஏராளமான பொருட் செல்வத்துடன் டில்லி புறப்பட்டான்.[81] அவனால் டில்லிக்குக்கொண்டு போகப்பட்ட 512 யானைகள், 5000 குதிரைகள்[82], 9000 மணங்குப்பொன் ஆகியவற்றுடன், யானைகள், குதிரைகள் மீது ஏற்றப்பட்ட அணிமணிகள் அடங்கிய பெட்டிகளுள் ஒன்றில்தான் திருவரங்கனின் செப்புத் திருமேனியும் வீற்றிருந்தது. டில்லி பாதுஷா அலாவுத்தீன் இந்தப் பெரும் புதையலை அனைவர்க்கும் பங்கிட்டுத் தந்தபோது அரங்கனின் அழகிய திருமேனி, அப்துல்லா உசேன் கசன்பி பாதுஷாவின் அரண்மனையை அடைந்தது.[83] அவர்தம் பெண் தான் சுரதாணி! அழகும் அறிவும் நிரம்பிய, பதினெட்டும் நிரம்பாப் பருவக்கொடி சுரதாணி! தந்தைக்கு வந்த தங்கம் வைரம் மற்றும் பரிசுக் குவியல்களைப் பார்வையிட்ட சுரதாணியின் பூவிழிகளில் பட்டது அரங்கனின் திருமேனி. ஒரே பார்வைதான்! ஆனால் அந்தப் பார்வை, அந்தப் பாவையின் வாழ்க்கைப் பாதையையே அடியோடு மாற்றியமைத்தது. தன்னையிழந்தவளாய்த், தன்நிலைமறந்தவளாய் அரங்கனின் அழகுத் திருவுருவில் லயித்துப்போன சுரதாணி அந்தப்புரத்துக்குக் கொண்டு போனாள் அரங்கனை.[84] பார்வையில் பிறந்த காதல், பித்தமாய் மாறியது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய், அரங்கனுக்கு ஆசை பொங்க விதம் விதமாய் உடையுடுத்தி மகிழ்ந்தாள். நறுமணப் பொருட்களாலும், பூக்களாலும் அலங்கரித்துக் களித்தாள். அரங்கனின் ஆசையில் அகிலத்தையே மறந்தாள்.

இந்தச் சம்பவம் நடந்த காலத்தில் கரம்பனூரில் ஓர் எம்பெருமான் அடியாள் இருந்தாள். அவள் தினமும் திருவரங்கன் திருமேனியைப் பார்க்காமல், தான் உணவருந்துவதில்லை என்ற விரதம் கொண்டிருந்தாள். மாலிக்காபூர் திருவரங்கனைக் கொண்டுபோய்விடவே, அப்பெண்மணியும் அதுபொறுக்கமாட்டாது காபூரின் படைகளைப் பின்பற்றித்

தொடர்ந்தாள், மாறுவேடத்தில் ஒரு வேலைக்காரி போல் படையுடன் சென்று டில்லியை அடைந்தவள், பரிசுப் பொருட்கள் பங்கிடப்பட்டபோது, திருவரங்கன் திருமேனி யாரையடைந்துள்ளது என்பதை அறிந்துகொண்டதும் தென்னகம் திரும்பினாள். திருவரங்கத்தை அடைந்ததும் கோயிலாரைக் கூட்டிச் செய்தியைச் சொன்னாள். அவளது முயற்சியையும், பக்தியையும் பாராட்டிய கோயிலார் அவளுக்குப் பின்சென்ற வல்லி என்று பட்டயளித்துப் போற்றினர்.

திருவரங்கனின் திருமேனியைப் பெற விரும்பிய கோயிலார் பல வழிகளையும் சிந்தித்து, இறுதியில் ஆடல் பாடல்களில் தேர்ந்த ஆண் பெண்களுடன், பின் சென்ற வல்லியையும் அழைத்துக் கொண்டு டில்லி அடைந்தனர். அங்கே கசன்பி பாதுஷாவின் மாளிகையை அடைந்து அவர் முன்னிலையில் ஜக்கிந்தி நாட்டியம் ஆடினார்கள்.[86] கருத்தைக் கவர்ந்த இந்த ஆடல்களில் உள்ளம் பறிகொடுத்த பாதுஷா அவர்களுக்கு வெகுமதிகளை அள்ளிக் கொடுத்தார். ஆடலரசியர் அவற்றை ஏற்க மறுத்து, திருவரங்கன் திருமேனியைப் பரிசாகக் கேட்டனர், பாதுஷாவும் பெற்றுக் கொள்ளுமாறு பரிந்துரைத்தார். ஆடலரசிகள் அந்தப்புரத்திற்குச் சென்று பார்த்தபோது திருவரங்கனின் திருமேனி அங்கு எல்லாச் சிறப்புகளோடும் செம்மாந்திருப்பதையும், அதன் எதிரே சுரதாணி தன்னை மறந்த ஒரு தெய்வீக நிலையில் அமர்ந்திருப்பதையும் கண்டனர். சுரதாணி அந்தப் படிமத்தைத் தரமாட்டாள் என்று உணர்ந்து, அவளிடம் மெல்லப் பேச்சுக் கொடுத்து, அவளுக்குப் பிரசாதம் கொடுப்பது போல் மயக்க மருந்தை ஊட்டிவிட்டார்கள். சுரதாணி மயக்கமடைய, ஆடலரசிகள் அரங்கன் படிமத்துடன் மாளிகையை விட்டுப் புறப்பட்டார்கள்.

மயக்கம் தெளிந்த சுரதாணி அரங்கனைக் காணாமல் தவித்தாள்; தேடியலைந்தாள்; விழிகளில் நீர் பெருக விழுந்து அரற்றினாள். அவள் தாபத்தையும் தவிப்பையும் காணச் சகியாத பாதுஷா, ஆடலரசியரைப் பிடித்து, அரங்கனின்

படிமத்தை மீட்டுவரப் படையொன்றை அனுப்பி வைத்தார், சுரதாணி, படையுடன் தானும் சென்றாள். டில்லிப்படை பின்தொடர்ந்து வருவதறிந்த திருவரங்கத்தார் வேறு திசையில்பயணப்பட்டு, தப்பித்துக்கொண்டனர். திருவரங்கம் வந்து சேர்ந்த டில்லிப்படை, ஆடலரசியரையோ, திருவரங்கன் திருமேனியையோ காணாமல் தத்தளித்தது. சுரதாணி ஏக்கத்தாலும் தாபத்தாலும் திருவரங்கத்து மண்ணில் திருவரங்கன் நினைவுடனேயே உயிர் நீத்தாள்.[38]

சுரதாணியின் இந்த அளவற்ற அன்பைப் போற்றிய கோயிலார் திருவரங்கக் கோயிலின் இரண்டாம் திருச்சுற்றின் வடகீழ் மூலையில், அவளுக்குத் தெய்வ வடிவம் தந்தனர். அரங்கனின் அழகு நாச்சியார்களுள் ஒருவராகவே சுரதாணியைக் கருதி, துலுக்க நாச்சியார் என்று நிறைந்த நேயமுடன் அழைக்கத் தொடங்கினர். நாள்தோறும் காலையில் கோதுமை ரொட்டி, மதுரப் பருப்பு, கிச்சடிப் பொங்கல் முதலியவற்றை சுரதாணி தெய்வத்திற்குப் படையலாகப் படைத்து வந்தனர். இப் பழக்கம் இப்போதும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இப்படியொரு காதல் கதையின் களமாக அமைந்ததாலோ என்னவோ திருவரங்கத்துக் குழலூதும் பிள்ளைக் கோயிலில் ஒய்சள மன்னன் வீர ராமநாதன் பெருமாளின் காதலுக்காய் ஏங்கும் பெண்களின் அழகு பொங்கும் உணர்ச்சி பூர்வமான வடிவங்களைச் சிற்பங்களாய்ச் சமைத்து மகிழ்ந்தான். காதலில் தோய்ந்து கிளியைத் தூதுவிடும் கன்னி ஒருபுறம், அத்தான் வருவார், அரவணைத்து ஆயிரம் முத்தம் தருவார் என்று காதல் கனவுகள் கண்களில் மின்னலிடத் திலகமிட்டுத் தன்னைத் திருத்திக்கொள்ளும் தையல் மறுபுறம், 'ஆகா ! பார்க்கமட்டானா ?' என்ற ஆசை ஒரு புறமும், 'அய்யோ ! பார்த்துவிட்டானே,' என்ற நாணம் மறுபுறமுமாய்க் காதல் தவிப்பைக் கண்களில் காட்டிக் கள்ள முறுவலுடன் நாண உணர்வின் உச்சத்தில் நிற்கும் நங்கைநல்லாள் இன்னொரு புறம் என்று, இக் குழலூதும் பிள்ளைக் கோயில், கல்லில் வடித்த காதல் கவிதைகளால் கனிந்து நிறைந்துள்ளது.[39]

அரங்கனின் ஆசையில் உயிர் விட்ட இன்னொரு நாச்சியாரைப் பார்ப்போம். உறையூர் பல ஆண்டுகட்கு முன் நந்த சோழனின் நலமான ஆட்சியில் திளைத்திருந்தது. பிள்ளையில்லா அப் பேரரசனின் குறை தீர்க்க லட்சுமி தேவியே ஒரு பெண் குழந்தையாய், உறையூரிலிருந்த தாமரைக் குளமொன்றில் தோன்றக், குழந்தையில்லா நந்த சோழன், அப் பிள்ளையை எடுத்துக் கமலவல்லி என்று பெயரிட்டு வளர்த்து வந்தான். அறிவிலும் அழகிலும் ஈடு இணையற்ற எழிலரசியாய் வளர்ந்துவந்த கமலவல்லி தன் தோழியருடன் விளையாடுவதில் பெருமகிழ்வுற்றாள். பருவமுற்ற நிலையில், ஒரு நாள் தன் தோழியருடன் நந்தவனத்தில் பூக் கொய்துகொண்டிருந்த போது, அப் பக்கம் வந்த அரங்கனின் திருமேனி கண்டு காதலுற்று நிறையழிந்தாள். ஊண் உறக்கமிழந்து, காதல் மயக்கத்தில் ஆழ்ந்திருந்த தன் மகளை அவள் விருப்பம் போலவே அரங்கனுக்கு மணம் செய்வித்து மகிழ்வோடு அனுப்பினான் நந்த சோழன். கமலவல்லி திருவரங்கம் வந்து கோயிலிலுள்ள திருமணத் தூணுக்குள் புகுந்தவுடன் அரங்கன் திருவடிகளில் ஒன்றிப் போய் மறைந்தார். கமலவல்லியுடன் வந்த தோழியரின் வழியினர் திருவரங்கக் கோயிலில் 'உறையூர் வல்லிக் கூட்டத்தார்' என்ற பெயரில் திருத்தொண்டு செய்து வருகிறார்கள்.

கமலவல்லி மறைந்து போனதால் துயருற்றநந்தசோழன், தன் சொத்துகளைத் திருவரங்கக் கோயிலுக்கு எழுதி வைத்தான். தன் மகளுக்கும் திருவரங்க மணவாளப் பெருமாளுக்கும் உறையூரில் ஒரு கோயில் கட்டினான்.[40] ஒரு காலத்தில் உறையூரில் மண்மாரி பெய்தபோது, உறையூரே மண்மூடிப் போய், இக் கோயிலும் அழிந்து போயிற்று. பின்னர் வந்த சோழன் ஒருவன் உறையூரில் கோயில் கட்டிப் பெருமாளையும் நாச்சியாரையும் அங்கு எழுந்தருளுவித்தான்.[41] இக் கோயில்தான் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற உறையூர் நாச்சியார் கோயில்.[42]

வாய்குளிர ஆழ்வார்களால் பாடப்பட்டும், கை குளிரக் கண்ணுற்ற பெருமக்கள் அனைவராலும் அரவணைக்கப்,

பட்டும், கால்குளிர தூரதூர தேசங்களிலிருந்தும் தளராது வந்து போகும் பயணிகளால் புரக்கப்பட்டும், ஒரு யுக சந்தியாய் எழுந்து நிற்கும் இத் திருக்கோயிலின் ராஜகோபுரம் அச்சுத தேவராயரால் எழுப்பப்பட்டு அரைகுறையாய் நின்று போனது. எல்லாம் நிறைந்த எம்பெருமானுக்கு, இது ஒன்று குறையாவதோ என்று எண்ணி ஏங்கிய குழந்தைமனமொன்று, இதை முடிக்க ஒரு முடிவெடுத்தது. அந்தத் தொண்ணூற்று மூன்று வயதுப் பிள்ளை மனத்தில் பிறந்த ஆவல், இன்று இருநூற்று முப்பத்தாறு அடி உயரக் கோபுரமாய்ப் பதின்மூன்று நிலைகளுடன், ஒவ்வொன்றும் பத்தே கால் அடி உயரமும், ஐந்தடி பருமனும் கொண்ட பதின்மூன்று கலசங்களுடன் ஒன்றே முக்கால் கோடி ரூபாய் செலவில் உருவாகி, ஆசியாவிலேயே உயர்ந்த கோபுரமாய், அரங்கன் பெருமை பாடி நிற்கிறது. அகோபில மடத்தின் நாற்பத்து நான்காவது திருப்பட்டம் ஏற்றுப் பல கோயில் திருப்பணிகளைத் தம் தள்ளாத வயதிலும் தளராமல் செய்து முடித்த அருள் தவத்திரு ஜீயர் சுவாமிகளின் ராஜகோபுரத் திருப்பணி, வரலாற்றில் இடம் பெறத் தக்கது.

கண்டவர் கண்வியக்க, கை குவிக்க, நெஞ்சிலும் நினைவிலும் ஆனந்தக் கனவுகளை ஆயிரமாய்ச் சுமக்கப், பார்வைகளே பரவசப்படும் நிலையில் தொடமுடியாத வானப் பரப்பைத் தொட எழுந்ததொரு, தேவாலயத் திருச்சிகரமாய், ஜீயர் சுவாமிகளின் காலக் கைங்கர்யமாய் எழுந்து நிற்கும் இந்த அழகுக் கோபுரத்தைக் கொண்டிருக்கும் அரங்கன் கோயிலைத், திசை விளக்காய் நிற்கின்ற திருவரங்கம் என்று பாடிய பெரியாழ்வார் பெருமான்தான்[48], எத்தனை தீர்க்கதரிசி !

---

1. நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திவ்விய தேசப் பிரபாவப் பகுதி, திருவேங்கடத்தான் திருமன்றப் பதிப்பு, 1981, பக். 202.

2. மேற்படி., பக். 183.

3. மேற்படி., பக். 188, 200.
4. மேற்படி., பக். 208
5. மேற்படி., பக். 202.
6. S.I.I. Vol XXIV, Introduction, p. i.
7. S.I.I. Vol. XXIV, Introduction p. i.
8. சிலப்பதிகாரம், ந. மு. வேங்கடசாமி நாட்டார் உரை, கழக வெளியீடு, 1959, பக். 254, வரிகள் 39–51.
9. S.I.I. Vol. XXIV, p. I–583.
10. Ibid., p. iii.
11. S.I.I. Vol. XXIV, Introduction, p. iv.
12. Ibid., p. vi.
13. Ibid , p. xi.
14. S.I.I. Vol., XXIV Introduction, p. xi.
15. Ibid., p. xii.
16. S.I.I. Vol XXIV, Introduction, p. xii, xiii.
17. Ibid., INs. No. 257.
18. Ibid., Introduction, p. vi.
19. S.I.I. Volume xxiv, Ins., Nos. 4, 12.
20. Ibid., Ins. nos., 63, 60.
21. Ibid., Introduction, p. xvii.
22. Ibid., p. xviii.
23. Ibid., p. xviii.
24. Ibid., p. xviii.
25. S.I.I. Volume XXIV, INs, No. 53.
26. Ibid. INS. No. 52
27. S.I.I. Volume XXIV. Introduction, p. xvii
28. Ibid., p xvii.
29. Indian Express, Madras edition, 9.3.87.
டாக்டர் இரா. கலைக்கோவன், ஆனந்தத் தாண்டவத்தில் விஷ்ணு, கலைமகள், நவம்பர் 1987, பக். 61–63.

30. நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திருவேங்கடத்தான் திரு மன்றப் பதிப்பு, பக். 209. பாசுர எண். 1758.

31. டாக்டர் கே. கே. பிள்ளை, தமிழகவரலாறு - மக்களும் பண் பாடும், 1977, பக். 378-380.

32. மேற்படி., பக். 380.

33. ஸ்ரீ வேணுகோபாலன், திருவரங்கன் உலா, முப்பதாம் அத்தியாயம், தினமணி கதிர், 1976.

34. ஸ்ரீவேணுகோபாலன், திருவரங்கன் உலா, முப்பதாம் அத்தியாயம், தினமணிகதிர், 1976.

கோயிலொழுகு நூலில் இப்பகுதி சற்று மாற்றிச் சொல்லப் பட்டுள்ளது. காண்க. கோயிலொழுகு, 1976, பக். 20.

35. கிருஷ்ணசாமி அய்யங்கார், கோயிலொழுகு, 1976, பக். 20.

36. கிருஷ்ணசாமி அய்யங்கார், கோயிலொழுகு, 1976, பக். 21.

37. ஸ்ரீ வேணுகோபாலன், திருவரங்கன் உலா, அத்தியாயம் முப்பது, தினமணி கதிர், 1976.

கோயிலொழுகு நூலில் இப்பகுதி மாற்றிச் சொல்லப் பட்டுள்ளது. காண்க, கோயிலொழுகு, 1976, பக். 21.

38. கிருஷ்ணசாமி அய்யங்கார், கோயிலொழுகு, 1976, பக். 21, 22.

39. டாக்டர் இரா. கலைக்கோவன், காட்டுக்குள் ஒரு கலைக் கோயில், கழக வெளியீடு, 1986. பக். 172-176.

40. எஸ். நரசிம்ம அய்யங்கார், உறையூர் கமலவல்லித் தாயார் சந்நிதி வைபவம், 1941, பக். 9-13.

41. கிருஷ்ணசாமி அய்யங்கார், கோயிலொழுகு, 1976, பக். 3-5.

42. டாக்டர் இரா. கலைக்கோவன், கலைவளர்த்த திருக் கோயில்கள், கழக வெளியீடு, 1984, பக். 164-172.

43. நாலாயிரதிவ்வியப் பிரபந்தம், பெரியாழ்வார் திருமொழி, திருவேங்கடத்தான் திருமன்றப்பதிப்பு, 1981, பக். 105, பாசுர எண் 417.

# 13. ஒரு காலக் கனவின் கண்ணீர்க் கதை

பழையாறை; முடி கொண்ட சோழபுரம், நந்திபுரம், இராசராசபுரம், ஆகவகுலகாலபுரம் என்று பல சிறப்புப் பெயர்களுடன் வரலாற்றுப் பக்கங்களை நிறைத்துக் கொண்டிருக்கும் இந்த ஊரில்தான் எத்தனை வனப்பான வரலாற்றுக் கீறல்கள்! குந்தவையும், வந்தியத்தேவனும் வாழ்ந்து மகிழ்ந்ததும், காதலும், கனிவுமாய்ச் சோழநாட்டுப் பேரழகியர் பலர் களித்துக் குலாவியதும், வீரப்புலிகளாய், இளங்காளைகள் ஆயிரக்கணக்கில் நாடுகாக்க எழுந்து நின்றதும் இந்த மண்ணில்தான் என்ற நினைவோடு பழையாறையை நெருங்குவோர், அதன் இன்றைய நிலையைப் பார்த்தால் துடித்துப் போய் விடுவர். விண்முட்டும் மாடமாளிகைகளும், கண் மயக்கும் காட்சியழகுகளும், நெஞ்சை நிறைக்கும் இனிய சூழல்களும் பழையாறைக்குப் பகையாகிப் போன நிலையில், யானையழித்த காடு போல, சின்னஞ்சிறு ஊர்களாய்ச் சிதறுண்டு, கவினிழந்து கிடக்கிறது இவ்வூர். பொலிவிழந்து நிற்கும் இந்தப் பழையாறையின் ஒதுக்குப் புறமான ஓரிடத்தில்தான், இராசேந்திரனின் காலக் கனவொன்று கண்ணீர்க் கதையைச் சுமந்தபடி கதறிக் கொண்டிருக்கிறது.

தமிழகத்துக் கோயில்களைக் கலையறிஞர்கள் பல வகைப் படுத்துவர். அவற்றுள் பள்ளிப்படைக் கோயில்கள் ஒரு வகை. இறந்தவர்களைப் புதைத்தல் பள்ளிப்படுத்துதல் எனப்படும். அப்படிப் பள்ளிப்படுத்தப்பட்ட இடத்தில் எழுப்பப்படும் கோயில்களே பள்ளிப்படைக் கோயில்கள். முதற்பராந்தகனால் அவன் தந்தை முதலாம் ஆதித்தனுக்கு எழுப்பப்பட்ட கோதண்ட ராமேசுவரம்,[1] முதலாம் இராசராசனால் அவன் பாட்டன் அரிஞ்சயனுக்கு எழுப்பப் பட்ட அரிஞ்சிகையீசுவரம்[2] இவையிரண்டும் பள்ளிப்படைக் கோயில்களுள் குறிப்பிடத்தக்க சிறப்புடையவை. இவை

போலவே, இத் தமிழ் மண்ணில் பெண்ணொருத்திக்கும் பள்ளிப்படைக் கோயில் ஒன்று இம் மண்ணையாண்ட மன்னன் ஒருவனால் எழுப்பப்பட்டிருக்கிறது, என்ற செய்தி பலருக்கும் தெரியாத வரலாற்றுப் புதையலாகும்.

இப் பள்ளிப்படைக் கோயில் இன்று 'ராமநாதன் கோயில்' என்ற புதிய பெயருடன், பழையாறையில் பரிதாபக் கோலத்தில் காட்சியளிக்கிறது, தமிழகத்துப் பெருமையைக் கங்கைக் கரையிலும், அலைமோதும் கடாரக் கரையிலும் கவிதைகளாய் வளரவிட்ட சோழப் பெருவேந்தன் முதலாம் இராசேந்திரனால் எடுப்பிக்கப்பட்ட பெருமையுடையது இக் கோயில். கல்வெட்டில் பஞ்சவன் மாதேவீச்சரம் என்று பூரிப்போடு அறிமுகப்படுத்தப்படும் இத்திருக் கோயிலை, இராசேந்திரன் தன் சிற்றன்னை பஞ்சவன் மாதேவியின் நினைவாக எடுப்பித்தான்.

முதலாம் இராசராசனுக்கும், வானவன் மாதேவிக்கும் பிறந்தவன் முதலாம் இராசேந்திரன். தாயிடம் அன்பு கொண்டிருந்தாற் போலவே முதலாம் இராசராசனின் இன்னொரு மனைவியும், தன் சிற்றன்னையுமான பஞ்சவன் மாதேவியிடமும் இராசேந்திரன் இணையற்ற அன்பு கொண்டிருந்தான். பழுவூர் மகளான பஞ்சவன் மாதேவி இப் பேரரசனைத் தன் கரைகாணாத் தாய்ப் பாசத்தால் அரவணைத்து வளர்த்திருக்க வேண்டும். அதனால்தான், அந்த அன்பின் விளைவால்தான், தான் அன்னையினும் மேலாய் மதித்த அப்பெருமாட்டி காலமானதும், அவரது மறைவைத் தாங்க இயலாத் துயரத்துடன் அப் பேரரசியை பள்ளிப்படுத்திய இடத்தில், அவர் நினைவாகச் சிவன் கோயி லொன்றைக் கலைக் கோயிலாய் எழுப்பி, அதற்கு அப்பெரு மாட்டியின் பெயரையே சூட்டிப் 'பஞ்சவன் மாதேவீச்சரம்' என்று பெருமைப் படுத்தினான் இராசேந்திரன்.

பழையாறையில் பஞ்சவன் மாதேவிக்காக இராசேந்திரன் எழுப்பிய இந்த அழகுக் கற்றளி இன்றிருக்கும் நிலை நெஞ்சைக் குமுற வைக்கிறது. சுற்றிலும் வயல்கள் சூழ,

அசோகவனத்துச் சீதை போல, சோகம் சூழ்ந்த தோற்றத்துடன், பாழடைந்து போன பழங்கோயிலாய், ஆளரவமின்றி, அனாதையாய் நிற்கிறது இந்த அன்புக்கோயில்! மிகப்பெரிய மதிலால் சூழப்பட்டிருந்தும், பல இடங்களில் தொடர்ச்சியின்றி, சுவர் சிதறியிருப்பதையும், செங்கற்கள் நழுவியிருப்பதையும், மதிலெல்லாம் செடிகள் செழித்திருப்பதையும் காணும்போது கண்களில் நீர் தளும்புகிறது. மூன்று நிலை முன் கோபுரம் பூச்சுகள் உதிர்ந்து செங்கற்கள் வெளித்தெரிய, செடி கொடிகளின் தயங்காத் தழுவலில், தன் கடைசி நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறது.

கிழக்கு நோக்கி அமைந்திருக்கும் மையக் கோயிலின் முகமண்டபத்து முகப்பில் பக்கத்திற்கொருவராக வாயிற்காப்போர் காணப்படுகின்றனர். பதினோராம் நூற்றாண்டுக் கலைமுறையில் அமைந்திருக்கும் இந்த அழகுச் சிற்பங்கள் அழிவின் பாதையில் அடியெடுத்து வைத்திருக்கின்றன. முகப்புச் சுவரிலும், செடிகள் காடாய் மண்டியுள்ளன. கற்கள் பல கட்டுமானத்திலிருந்து நழுவி, எந்தக்கல் எப்போது விழுமோ என்ற நிலையில் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. துணிவை வரவழைத்துக் கொண்டு மகா மண்டபத்துக்குள் நுழைபவர்கள் புறநானூற்றுத் தமிழர்களாக இருந்தாலும் மூக்கைப் பிடித்துக் கொள்ளவும், நெஞ்சைத் தேற்றிக் கொள்ளவும் வேண்டியிருக்கும். வௌவால்களின் பெருங்குடியிருப்பாய்த் தோன்றும் இம் மையக் கோயிலில் எங்கு நோக்கினும் கும்மிருட்டுதான். கையில் விளக்கில்லாமல் வருபவர்கள் எங்குக் காலை வைப்பது, எப்படி நடப்பது என்பது புரியாமல் விழிக்க நேரிடும். இம் முக மண்டபத்தின் தரையில் பாவப்பட்டிருந்த கற்கள் கருணையாளர்கள் பலரால் கடத்தப்பட்டுவிட்டதால், கம்பரை நினைத்தபடியே இட்ட அடிநோக, எடுத்த அடி தவறி விடாதபடி கவனத்துடன் நடக்க வேண்டும்.

மகா மண்டபத்து வாயிலின் இருபுறமும் சிவபெருமானின் சந்திரசேகர வடிவம் அழகு கொழிக்க வாயிற்காப்போர்

போல் நிறுத்தப்பட்டுள்ளது. இத் திருமேனிகளின் இடப்புறப் பின் கைகளில் முத்தலை ஈட்டி காட்டப்பட்டுள்ளது. வலப் புறப் பின் கைகளில் தலையோடு உள்ளது. நுழைவாயிலின் வலப்புறம் இருக்கும் திருமேனியின் வலமுன்கை காக்கும் கையாக, இடமுன்கை கட்யவலம்பிதத்தில் காணப்படுகிறது. இடப்புறம் இருக்கும் திருமேனியின் வலமுன்கை கட்யவலம் பிதமாக இடமுன்கை அழைத்து வழங்கும் அருட்கையாக உள்ளது. இச் சந்திரசேகர வடிவங்கள் இங்குள்ள கல் வெட்டிலும் குறிக்கப்பட்டிருப்பது சிறப்புக்குரிய செய்தி யாகும்.

மகா மண்டபத்தில் தென்புறம் பார்த்தபடி இறைவியின் திருமுன் அமைந்துள்ளது. மங்கலநாயகி என்ற திருப் பெயருடன் விளங்கும் இத் தேவியின் திருமுன் மங்களமாய் இல்லாக் கொடுமைக்கு யாரை நோவது? குப்பை கூளங்கள் நிறைந்திருக்கும் இக்கருவறை மனித வாசனை கண்டு வெகு நாளாகியிருக்கும் போல் தோன்றுகிறது. இதே மகா மண்டபத்தில் கதிரவன், நாகர், முருகன், பிள்ளையார் முதலிய தெய்வத் திருமேனிகள் வழிபாட்டுக்கு வழியின்றி, இருட்டிலும் தனிமையிலும் தவிக்கும் தேவிக்கும், இறைவனுக்கும் துணையாக நிற்கின்றன.

மகா மண்டபத்தையும், உள் மண்டபத்தையும் சிறு இடை நடையொன்று இணைக்கிறது. உள் மண்டபவாயிலின் இரு புறமும் பக்கத்திற்கொருவராக வாயிற்காப்போர், ஆந்தைக் குண்டலமும், பனையோலைக் குண்டலமும் செவி களை அழகு செய்ய, இராசேந்திரன் காலத்துச் சிற்பக் கலையின் சிறப்புச் சான்றுகளாய் நிற்கின்றனர். இறைவன் ராமநாதசாமி என்ற புதுப்பெயருடன் கருவறையில்இலிங்கத் திருமேனியராய் எழுந்தருளியுள்ளார். இடை நடையில் காணப்படும் சிங்கத் தூண் மிக அற்புதமான கலைப் படைப் பாகும். ஒரு காலை மடித்துத் தூக்கியபடி குத்துக் காலிட்டு அமர்ந்திருக்கும் சிங்கத்தின் தலை மீது தூண் எழும்புகிறது. பழுவூரையும், பல்லவ இராசசிம்மன் கோயில்களையும்

நினைவுபடுத்தும் இத் தூண் இங்குத் தனித்து நிற்பதன் அதிசயம்தான் விளங்கவேயில்லை.

கருவறை, உள் மண்டபம் இவற்றின் புறச்சுவர்களில் தேவ கோட்டங்கள் அமைந்துள்ளன. இந்தத் தேவ கோட்டங்களில் மேல் மகர தோரணங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. உள் மண்டபத்துப் புறச்சுவரின் தென்புறத்தில் மூன்று கோட்டங்களும், வடபுறத்தில் மூன்று கோட்டங்களும் உள்ளன. தென்புறத்தில் முதல் கோட்டம் வெறுமையாக உள்ளது. அடுத்த இரண்டு கோட்டங்களில் பிச்சையுகக்கும் பெம்மானும், பிள்ளையாரும் காணப்படுகின்றனர். பிச்சையுகக்கும் பெம்மானின் சிற்பம் இராசேந்திரன் காலத்துச் சிற்பக் கலையின் சிகரம் எனலாம். இறைவனின் வல முன்கை மானுக்குப் புல் தருவது போல் காட்டப்பட்டுள்ளது. வலப்பின்கை உடுக்கை ஏந்தியுள்ளது. இடமுன்கையில் தலையோடும், பின்கையில் சாமரமும் காணப்படுகின்றன. இறைவனின் இடப்புறம் குள்ளச் சிறு பூதம் ஒன்று தலையில் சட்டியைச் சுமந்தபடி நிற்கிறது. பாம்பை இடுப்பணியாய்க் கொண்டிருக்கும் இப் பிச்சையுகக்கும் பெம்மானின் அழகுத் திருக்கோலம், கச்சிதமான உடலமைப்பும், சிரிப்பு சிந்தும் சிங்கார முகமுமாய்க் கல்லில் வடித்த கவிதையாய் நிற்கிறது.

புறச்சுவரின் வடபுறத்தில் கொற்றவை, அம்மையப்பர், கங்கையை யேற்ற அண்ணல் முதலிய தெய்வத் திருமேனிகள் காணப்படுகின்றன. எல்லாமே அழகிய சிற்பக் கோலங்கள். கொற்றவைத் தேவி ஆறு கைகளுடன் அழகரசியாய்க் காட்டப்பட்டுள்ளார். வலமுன்கை காக்கும் கையாக, வலப்பின் கரங்களில் வாளும், சக்கரமும் கொண்டு, இடமுன்கை கட்ய வலம்பிதமாக, இடப்பின் கைகளில் கேடயமும், சங்கும் கொண்டு அருள் பொங்கும் அமுதப் பார்வையில் கருணை மலர நிற்கும் இத் தேவியின் இடமுன்கை மணிக்கட்டில் கிளியொன்று காட்டப்பட்டுள்ளது.

கருவறையின் புறச்சுவர்களில் தென்புறம் ஆலமர் அண்ணலும், மேற்கில் லிங்கோத்பவரும், வடபுறம் நான்முக

னும் உள்ளனர். துணைத்தளம், தாங்கு தளம், யாளி வரி மானம், கொடுங்கை அனைத்துமே கூர்மையான, வடிப்புத் திறனுடன் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும், அழிவின் பேயாட்டத்திலும் அப்படியே நிற்கும் சிறப்பு வியப்பூட்டு கிறது. கொடுங்கை வரை கருங்கல்லால் ஆன இதன் மேல் தளம் செங்கல்லால் ஆனது. விமானத்தின் உச்சி திராவிட சிகரமாக இருந்தாலும், சற்றுப் புதுமையான அமைப்பில், முடி கவிழ்த்தாற் போல் கட்டப்பட்டிருக்கும் அழகு நெஞ்சில் நிறைகிறது. கீர்த்தி முகங்களை விமான தேவதைகள் அழகு செய்கின்றன.

மையக் கோயிலின் வடபுறத் திருச்சுற்றில் சண்டேசு வரர் திருமுன், குடந்தையில் ஒரு பைசா கோபுரம் இருப்பதை நினைவுபடுத்துவது போல் சாய்ந்த கோயிலாய்ச் சரிந்து நிற்கிறது. உலகஅதிசயங்களுள் ஒன்றான பைசா கோபுரத்தைப் பார்க்க இனி இத்தாலி போக வேண்டாம்; பழையா றைக்கு வந்து இந்தச் சண்டேசுவரர் கோயிலைப் பாருங்கள் போதும்! பைசா கோபுரத்தினும் அதிசயிக்கத்தக்க விதத்தில் சாய்ந்துகொண்டிருக்கிறது. இத் திரு முன்னைச் செடி கொடியினங்கள் தீராக் காதலோடு தழுவிக் கொண்டிருப்ப தைப் பார்த்தால், இன்னும் எத்தனை நாளைக்கு இந்தத் தமிழகத்துப் பைசா தாங்குமென்பது தெரியவில்லை.

கோயிலின் திருச்சுற்று முழுவதும் முட்செடிகளும், புற்களின் கோரமான வளர்ச்சியும்தான். தென்புறத் திருச் சுற்றின் மையத்தில் செடி கொடிகளால் மூடப்பட்ட நிலை யில் திறந்த கிணறு ஒன்று தூர்ந்து போய், யானை பிடிக்க அமைந்த பள்ளமாய்க் காத்துக்கொண்டிருக்கிறது. தப்பித் தவறிக் கலை ஆர்வலர்கள் யாரேனும் இக் கோயிலுக்குள் நுழைந்து, சிற்பங்களை ரசித்தபடி, இதைக் கவனியாது காலை வைப்பார்களேயானால் சிவபதம் நிச்சயம்.

மையக் கோயிலில் தாங்குதளத்தின் முப்புறமும் கல்வெட் டொன்று காணப்படுகிறது.[3] மிக நீளமான இக் கல்வெட்டு முதலாம் இராசேந்திரனின் ஏழாம் ஆட்சியாண்டில் வெட்டப்

பட்டுள்ளது. 'திரு மன்னி வளர' என்னும் இராசேந்திரனின் மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் இக் கல்வெட்டு வரலாற்றுக் கடலுக்கோர் கலங்கரை விளக்கமாய் அமைந்துள்ளது.

இக் கோயிலிருக்கும் இடம் கல்வெட்டில்; க்ஷத்திரிய சிகாமணிவளநாட்டு, திருநறையூர் நாட்டுப், பழையாறையான முடிகொண்ட சோழபுரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 'பள்ளிப்படையான பஞ்சவன் மாதேவிசுவரத்து மகாதேவர்' என்ற வரியில் பள்ளிப்படை என்னும் சொல் அழிக்கப்பட்டிருக்கிறது. இது எந்த மகாநுபவரின் வேலையோ தெரியவில்லை ! இக் கோயில் இறைவனுக்கும், இக் கோயிலில் பணியாற்றும் பல்வேறு அலுவலர்க்கும் வழங்கப்பட்ட நிவந்தங்களை இக் கல்வெட்டு வரிசைப்படுத்துகிறது. இச் செய்தியைக் கல்லில் வெட்டச் சொன்னவராய் உய்யக் கொண்டார் வளநாட்டு, வெண்ணாட்டுக், கேரளாந்தக சதுப்பேதிமங்கலத்து மாராயன் அருள்மொழியான உத்தமசோழ பிரும்மமாராயன் என்பார் பெயரும், இக் கொடையைக் கண்காணிக்கும் பொறுப்பாளர்களாய்ச் சேற்றூர்க் கூற்றத்து மருதத்தூர் உடையான் வெண்காடன் கோவந்தை, மடபதி லகுளீசுவர பண்டிதர் என்பார் பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளன.

இக் கோயில் மகாதேவர்க்கு மூன்று சந்திக்கும் திரு அமுது, நெய்யமுது, மிளகு, உப்புடன் கூடிய கறியமுது, தயிரமுது, அடைக்காய் அமுது (வெற்றிலை பாக்கு) ஆகியவையும், பிற தெய்வங்களான கணபதி, சந்திரசேகரர், உமா சகிதர் ஆகியோர்க்கு ஒரு சந்திக்கு மட்டும் திரு அமுது நெய்யமுது, கறியமுது, தயிரமுது, அடைக்காய் அமுது முதலியவையும் படைக்க நெல் ஒதுக்கப்பட்டிருப்பதையும், மூன்று நந்தா விளக்குகளும், சிறு காலைப் போதில் எட்டு, உச்சம் போதில் எட்டு, இராப் போதில் பதினாறு எனச் சந்தி விளக்குகள் முப்பத்திரண்டும், திருப்பலிக்கு மூன்று சந்தியும் கை விளக்குகள் எட்டும், இரவுப் பந்த விளக்குகள் இரண்டும், எரிப்பதற்கு நெய் வழங்க நெல் தந்து வகை செய்யப்பட்டி

ருப்பதையும் பார்க்கும் போது வியப்பால் விழிகள் மலர்கின்றன. இத்தோடு நில்லாமல் திருமஞ்சனபாடு, திருமெய்ப்பூச்சு இவற்றுக்கும் சந்தனம், குங்கிலியம் முதலியன பலம் இவ்வளவு என்ற கணக்குடன் ஒதுக்கப்பட்டுள்ளன, சங்கராந்தியன்றும், இராசேந்திரசோழ தேவரின் திருநட்சத்திரமான திருவாதிரைத் திருநாளிலும், அவனது தேவியாரின் திருநட்சத்திரமான ரேவதித் திருநாளிலும் இறைவனுக்குப் படையல்களிட நெல் அளவிடப்பட்டுள்ளது. இங்கிருந்த ஐந்து ஓதுவார்க்கும், மடாதிபதியான லகுளீசுவர பண்டிதருக்கும், திருவாதிரை விழா எடுக்கும் பிடாரனுக்கும், சிவ பிராமணருக்கும், கணக்கெழுதுவார்க்கும், பண்டாரத்தைக் காக்கும் வெண்காடனுக்கும், திருமெய்க்காவல் செய்த பொன்னம்பலனுக்கும், மேளம் கொட்டும் அறுவர்க்கும், திரு அலகு, திரு மெழுகு இட்டவர்க்கும் என்று கோயிலைக் காத்தவர், கோயிலில் பணி செய்தவர் அனைவர்க்கும் ஊதிய வகைகள் முறையாகத் திட்டமிடப்பட்டுள்ளன.

கோயிலை எடுப்பித்தால் மட்டும் போதாது, அங்கு நடக்கும் வழிபாடு, படையல் இவற்றோடு, அக் கோயிலை நிர்வகிக்கும் பொறுப்பாளர்களின் ஊதியம், வாழ்க்கை வசதிகள் இவற்றையும் திட்டமிட்டுத் தொலைநோக்குப் பார்வையுடன், கோயிலை எழுப்பும் பெரியவர்கள் நிரந்தரமான பண ஒதுக்கீடுகள் செய்ய வேண்டும் என்பதை இந் நீண்ட கல்வெட்டு மிக அழகாக உணர்த்துகிறது. கோனேரிராசபுரத்துச் செம்பியன் மாதேவிக் கல்வெட்டுடன்[4] ஒப்பிடக் கூடிய அளவுக்குக் கோயில் நிர்வாகம் பற்றிப் பல செய்திகளை உள்ளடக்கியிருக்கும் இராசேந்திரனின் இக் கல்வெட்டு வரலாற்றறிஞர்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும்.

எத்தனையோ முன்னேற்பாடுகளுடன் எவ்வளவோ கனவுகளுடன் திட்டம் தீட்டியும், இராசேந்திரனின் இந்த பாசக்கோயில் காலத்தின் கரங்களில் சின்னாபின்னமாகிக் கொண்டிருப்பதைப் பார்க்கும் போது கண்கள் ஈரமாவதைத் தவிர்க்க முடியவில்லை. ஆக்ராவில் ஷாஜகான் தன் மனைவி

மேல் கொண்ட மையலுக்காக எடுத்த தாஜ்மகாலை இந்தத் தரணியே போற்றுகிறது; ஒரு பெண்ணுக்காக, அவளின் காதலுக்காக ஒரு மன்னன் எடுத்த மகத்தான மாளிகை யல்லவா என்று மூக்கின் மேல் விரலை வைக்கிறது, இந்த தாஜ்மகால் எழுவதற்கு ஏறத்தாழ அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் பாசத்தில் தோய்ந்து, கனிவான அன்னையின் மீது தான் கொண்ட மறையாத நேயத்தின் தாங்க முடியாத தவிப்பால், அப் பெருமாட்டியைப் பள்ளிப்படுத்திய இடத்தில் ஓர் அற்புதமான கலைக் கோயிலைத் தமிழ் மன்னன் ஒருவன் எழுப்பியிருக்கும் செய் தியை எத்தனை பேர் அறிவர்? தமிழகத்தில் ஒரு மகன் தன் அன்புத் தாய்க்கு அவளுடைய அழியாத நினைவுகளைப் போற்றி எழுப்பித், தாய்க்கொரு தாலாட்டாய் அமைத்த ஒரே பள்ளிப்படைக் கோயில் இதுதான்! எப்படிப்பட்ட அருஞ்சொத்தாய் இக் கோயிலைப் போற்றிக் காத்திருக்க வேண்டும்? எத்தனை பெருமைக்குரிய திருத்தலமாக இதை மாற்றியிருக்க வேண்டும்? ஏன் செய்யவில்லை? கடையோரக் கண்ணீரைத்தான் பதிலாகத் தர வேண்டியுள்ளது. சாரி சாரியாய் மக்கள் வெள்ளத்தைக் கண்டு மகிழ வேண்டிய இந்த அன்புக் கோயில், சுடுகாட்டு அமைதியுடன், சுற்றிலும் வயல்கள் சூழ, ஒதுக்கப்பட்ட நிலையில், யாருக்கும் அக்கறை யில்லாமல் போனதால், மதில்கள் சிதறி, மாடங்கள் இடிந்து, கட்டடம் கீறல் விட்டுச், சிற்பங்கள் அழிந்து, புயலடித்து விட்டுப் போன பெருநகர் போல அழிவின் அரவணைப்பில் அலமந்து நிற்கிறது. பாழடைந்து, பழுதுபட்டுக், காடாய் மண்டியுள்ள செடி கொடிகளின் அசுரத்தனமான அரவணைப் பில் கலங்கிப் போய், நல்ல தொரு விடியல் நாளைக்காவது வராதா என்று நாளும் தவித்தபடி நலிந்து நிற்கும் இந்தக் கலைப் பொலிவு நிறைந்த கோயிலைக் காப்பாற்றும் முயற்சி கள் எப்போது தொடங்கப்படுமோ தெரியவில்லை?

———

1. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், 1966, பக். 397.

2. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், சோழர் கலைப்பாணி, 1966, பக். 125.

3. இக்கல்வெட்டு முழுமையாகப் பதிப்பிக்கப்படாமையால், 1985 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள், டாக்டர் மா. இராச மாணிக்கனார் வரலாற்றுப் பேரவையால் பார்வைப்படி எடுக்கப் பட்டது.

4. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், 1966, பக். 339-341.

# துணைநூற்பட்டியல்


**தமிழ் இலக்கியங்கள்**

1. முதலாம் திருமுறை, தருமபுர ஆதீனவெளியீடு, 1953.

2. மூன்றாம் திருமுறை, தருமபுர ஆதீனவெளியீடு, 1955.

3. ஐந்தாம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1961.

4. ஆறாம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1963.

5. ஏழாம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1964.

6. பதினோராம் திருமுறை, கழகப்பதிப்பு, 1971.

7. திருத்தொண்டர் புராணம், திருப்பனந்தாள் காசிமட வெளியீடு, 1982.

8. நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திருவேங்கடத்தான் திருமன்றப் பதிப்பு, சென்னை, 1973.

9. தக்கயாகப் பரணி, உ. வே. சாமிநாதய்யர் உரை, கேஸரி அச்சுக்கூடம், சென்னை, 1930.

10. புறநானூறு, உ. வே. சாமிநாதய்யர் உரை, ஸ்ரீதியாகராச விலாச வெளியீடு, 1956.

11. சிலப்பதிகாரம் மூலமும், நாவலர். ந. மு. வேங்கடசாமி நாட்டார் உரையும், கழக வெளியீடு, 1959.

12. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, கழக வெளியீடு, 1956.

13. புறப்பொருள் வெண்பா மாலை, சோமசுந்தரனார் உரை, கழக வெளியீடு, 1978.

**தமிழ்நூல்கள்**

1. புலவர் அரசு, பெரியபுராண வசனம், கழகவெளியீடு, 1979.

2. தி. இராசமாணிக்கம், இந்து சமயக் கடவுள்களின் திருவுருவங்கள், கழக வெளியீடு, 1982.

3. டாக்டர். மா. இராசமாணிக்கனார், கல்வெட்டு களில் அரசியல், சமயம், சமுதாயம், சேகர் பதிப்பகம், சென்னை, 1977.

4. டாக்டர் மா. இராசமாணிக்கனார், சைவ சமய வளர்ச்சி, பாரி நிலையம், சென்னை, 1972.

5. டாக்டர் மா. இராசமாணிக்கனார், பல்லவர் வரலாறு, கழக வெளியீடு, 1977.

6. டாக்டர். மா. இராசமாணிக்கனார், பெரியபுராண ஆராய்ச்சி, பாரி நிலையம், சென்னை, 1978.

7. சு. அ. இராமசாமிப் புலவர், கந்தபுராணம் வசனம், கழகப் பதிப்பு, 1982.

8. எஸ். இராமச்சந்திரன், திருமழபாடி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1978.

9. வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், 1978.

10. டாக்டர். இரா. கலைக்கோவன், கலை வளர்த்த திருக்கோயில்கள், கழக வெளியீடு, 1984.

11. டாக்டர் இரா. கலைக்கோவன், காட்டுக்குள் ஒரு கலைக்கோயில், கழக வெளியீடு, 1986.

12. கழகப் புலவர் குழு, சிவப்பதிகள் வரலாறு, கழக வெளியீடு, 1980.

13. நடன காசிநாதன், கு. தாமோதரன், கல்வெட்டு ஓர் அறிமுகம், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1980.

14. நடன காசிநாதன், முத்தரையர், சேகர் பதிப்பகம், 1976.

15. காசியப சிற்ப சாத்திரம், தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு, 1960.

16. கிருஷ்ணசாமி அய்யங்கார், கோயிலொழுகு, ஸ்ரீனிவாசன் பிரஸ், திருச்சி, 1976.

*17. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச்சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, 1974

18. ஆ. சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி ஏஷியன் எடுகேஷனல் சர்வீசஸ், தில்லி, 1982.

19. சோமலெ, திருநெல்வேலி மாவட்டம், பாரி நிலையம், சென்னை, 1965.

20. தண்டபாணிதேசிகர், ஆடல்வல்லான், திருவாவடு துறை ஆதீன வெளியீடு, 1967.

21. துர்காதாஸ் எஸ். கே. சாமி, சிவ மகாபுராணம், மூன்றாம் பாகம், பிரேமா பிரசுரம், சென்னை, 1982.

22. நடராஜதாசன், சித்தியருளும் சக்தி வழிபாடு, நர்மதா பதிப்பகம், சென்னை, 1984.

23. எஸ். நரசிம்ம அய்யங்கார், உறையூர் கமலவல்லித் தாயார் சந்நிதி வைபவம், சாது அச்சுக்கூட்டம், சென்னை, 1941.

24. டாக்டர் இரா. நாகசாமி, இராஜராஜன், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1978.

25. டாக்டர் இரா. நாகசாமி, நடன காசிநாதன், கு. தாமோதரன், ச. ஹரிஹரன், கல்வெட்டியல், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1980.

26. டாக்டர் இரா. நாகசாமி, தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள், முதல் தொகுதி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1969.

27. டாக்டர் பத்மா சுப்பிரமணியம், பரதக்கலைக் கோட்பாடு, வானதி பதிப்பகம், 1985.

28. தி. பட்டுச்சாமி ஓதுவார், திருவாசி என்னும் திருப்பாச்சிலாச்சிராமக்கோயில் வரலாறு, தேவஸ்தான வெளியீடு, 1971.

29. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், சோழர் கலைப் பாணி, பாரி நிலையம், சென்னை, 1966.

30. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1966.

31. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், வேங்கடம் முதல்குமரிவரை, பாலாற்றின் மருங்கிலே, S. R. சுப்பிரமணிய பிள்ளை, திருநெல்வேலி, 1964.

32. டாக்டர் கே. கே. பிள்ளை, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1977.

33. செ. போசு, திருப்பரங்குன்றம், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1981.

34. மயிலை சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், பாரி நிலையம், சென்னை, 1969.

35. ஸ்ரீவேணுகோபாலன், திருவரங்கன் உலா, தினமணி கதிர்த் தொடர், 1976.

## தமிழ்க்கட்டுரைகள்

1. டாக்டர் இரா. கலைக்கோவன், ஆடல் காணீரோ, தினமணிகதிர், 28-7-1985.

2. டாக்டர் இரா. கலைக்கோவன், எழில் கொஞ்சும் எறும்பியூர், செந்தமிழ்ச்செல்வி, அக்டோபர் 1986-சனவரி 1987.

3. டாக்டர் இரா. கலைக்கோவன், கோச்செங்கணான் யார்?, செந்தமிழ்ச் செல்வி, நவம்பர் 1982-May 1983.

4. டாக்டர் இரா. கலைக்கோவன், சதுர தாண்டவப் பெருமான், தினமணிகதிர், 6-5-1984.

5. டாக்டர் இரா. கலைக்கோவன், திரு அம்பர்ப் பெருந் திருக்கோயில், செந்தமிழ்ச் செல்வி, செப்படம்பர் 1982

6. டாக்டர் இரா. கலைக்கோவன், திருப்பரங்குன்றத்துப் பேரழகன், நுண்கலை, சனவரி 1985.

7. டாக்டர் இரா. கலைக்கோவன், பூவார் அடிச்சுவடு, கலைமகள், சனவரி 1985.

8. டாக்டர் இரா. கலைக்கோவன், முள்ளிக்கரும்பூர் ஒரு வரலாற்று விடியல், செந்தமிழ்ச் செல்வி, செப்டம்பர் 1985-பிப்ருவரி 1986.

9. சாந்தலிங்கம், சதாசிவத் திருவுரு, தொல்பொருள் தொழில்நுட்பப் பணியாளர் பண்பாட்டுக் கழக அஞ்சல் வழிக் கருத்தரங்கு கட்டுரை எண். 4, 1986.

கல்வெட்டுத் தொகுப்புகள்

1. Annual Report on South Indian Epigraphy Volumes 1891, 1892, 1901, 1914, 1918, 1924-25, 1928-29, 1936, 1972-73, 1973-74.

2. South Indian Inscriptions Volumes—III, VII, VIII, XIII, XXIV.

ஆங்கில நூல்கள்

1. S. R. Balasubramanyam, Early Chola Art, Part I, Asia publishing House, Delhi, 1966.

2. S. R. Balaubramanyam, Middle chola Temples, Thomson press (India) Ltd, Faridabad, 1977.

3. Census of India, volume IX, 1961;

4. T. A. Gopinatha Rao, Elements of Hindu Iconography, Sechnd edition, Motilal Banarsidass, Delhi, 1985

5. Dr. Kapila vatsayana, The Dance Sculpture in Sarangapani Temple, SAHER, Madras, 1982.

6. Dr. Mano Mohan Gosh, The Natya Şastra, English Translation, Second edition, 1967.

7. Natana Kasinathan, Hero-stones in Tamilnadu, Arun publication, Madras, 1978.

8. Dr. V. Premalatha, Music through the Ages, Sundeep prakashan, Delhi, 1985.

9. C. Sivaramamurti, Nataraja in Art, Thought and Literature, National Museum, Delhi, 1974.

10. N. Sethuraman, Early Cholas, 1980.

11. Venkata Narayanaswami Naidu and others, Tandava Laksanam, Munshiram Manoharlal publishers, new Delhi, 1980.

ஆங்கிலக் கட்டுரைகள்

1. Dr. R. Kalaikkovan, At the Lotus feet, Indian Express, 23-11-1985.

2. Dr. R. Kalaikkovan, Archaeological Discoveries at Azhundur, Indian Express, 1-3-1986.

3. Dr. . Kalikkovan, Dakshayani, Indian. Express, 1-6-1985.

நாளிதழ்கள்

1. தினமணி 4-9-1985

2. தினமலர் 18-9-1985

3. மாலைமலர் 13-11-1987

4. மாலைமுரசு 9-7-1986, 7-8-1937

5. The Hindu 16-5-1986, 18-7-1986, 9-1-1987

6. Indian Express 28-6-1986, 13-7-1986, 9-3-1987, 16-5-1987, 15-11-1987

தாளிகைகள்

1. வை. கணபதி ஸ்தபதி, சிற்பக் கைகள், உலகத்தமிழ் மாநாட்டுக் கண்காட்சிக் கையேடு, 1968

2. டாக்டர் இரா. கலைக்கோவன், கண்வழி கவிதைகள் பருகிட, 35th Madras State ophthalmic Conference Souvenir, Erode, 1987

3. டாக்டர் இரா. கலைக்கோவன், வாருங்கள் வலம் வருவோம், 34th Tamilnadu State Medical Conference Souvenir, Tiruchi, 1985

ஆய்வேடுகள்

1. M. Nalini, Thiru Erumbiyur Thirukkoil, Dissertation Submitted to Bharathidasan University, 1986

2. N. Saraswathi, Arulmigu Varagunisvara Temple at Azhundur, Dissertation Submitted to Bharathidasan University, 1986.

3. C. Vani, Mullikkurumbur, Dissertation Submitted to Bharathidasan University, 1985

தலைமை நிலையம் :

154, டி. டி. கே. சாலை,

ஆள்வார்பேட்டை, சென்னை-18.

கிளை நிலையங்கள் :

79, பிரகாசம் சாலை (பிராடுவே),

சென்னை-108.

திருநெல்வேலி-6. மதுரை-1.

கோயமுத்தூர்-1. கும்பகோணம்-1.

திருச்சிராப்பள்ளி-2. சேலம்-1.